15ம் ஆண்டு சிறப்பிதழ்



புது எழுத்து

pudhuezuthu@gmail.com

புது எழுத்து வெளியீடுகள்











பதினைந்தாம் ஆண்டு சிறப்பிதழ்

புது எழுத்து

நவீன படைப்பிலக்கியத்திற்கான சிறுபத்திரிகை

ஆசிரியர்

மனோன்மணி

பதிப்பாசிரியர்

இரா. சுகவனம்



அனைத்து தொடர்புகளுக்கும்


புது எழுத்து
2/205, அண்ணா நகர், காவேரிப்பட்டிணம் - 635 112.
கிருஷ்ணகிரி மாவட்டம்.
செல் 98426 47101, 90421 58667
மின்னஞ்சல் : **pudhuezuthu@gmail.com**

மொழிபெயர்ப்பு இணைப்பு இதழுடன்
Rs.200/-

குமாரநந்தன் கவிதைகள்

பென்னம் பெரிய பறவைகளின் கதை

இறக்கைகள் இருந்தாலும் அந்தப் பெரியபறவை
எந்த யுகத்திலோ தன் பறத்தலை இழந்திருந்தது
உணவு உணவெனத் திரிந்து
உணவாகவே ஆகிவிட்ட அந்தப்பறவை
சிலசமயம் தினவு கொண்டுவிடுகிறது
ஆர்ப்பாட்டமாகப் பறந்து கூரைமேல் ஏறிவிடுகிறது
அளவற்ற கர்வத்தோடு
தரையில் இருப்பவைகளைப் பார்த்து
உலகமே இதை கவனிக்க வேண்டும் என்று
பெருங்குரலெடுத்துக் கூவுகிறது
வானத்தில் சுற்றித்திரியும் சிறிய பறவைகளை
எப்போதும் அது நிமிர்ந்து பார்ப்பதில்லை
வானத்துப் பறவைகள் இதையெல்லாம்
கண்டு கொள்வதில்லை





மௌனத்தின் குரல்

ஜன்னல் அருகே சோபாவில்
அமர்ந்திருக்கிறேன்.
வெகுதூரம்வரை திறந்திருக்கிறது ஜன்னல்
இந்த இடத்துக்கு சம்மந்தமில்லாத
ஒன்றைச் செய்யவேண்டுமென விரும்புகிறேன்
கதவைத் திறந்து கொண்டு பலகணி வழியே குதிக்கலாம்
ரோட்டைப் பார்த்து ஓவெனக் கத்தலாம்
அச்சம் தரும் அளவுக்கு சிதறி இருக்கிறேன்.
ஆகவே நிச்சயமாக சாலையைப் பார்த்துக் கத்தமாட்டேன்
இன்னும் சிலவிநாடிகளில் நான் ஏதாவது செய்துவிடுவேன்
கடவுளே இந்த வாழ்க்கையை மாற்ற
முடியுமா முடியாதா
கடைசியாக முடிவாகக் கேட்டேன்
சிலவிநாடிகள் மௌனத்தை ஆழ்ந்து பார்க்கிறேன்
பிறகு கதவைத் திறக்கிறேன்
இங்கே யார்யாரைக் கொல்லப் போகிறார்கள்
உள்ளிருந்து குரல்
தெளிவாகக் கேட்டது
மெல்ல ஆடிக்கொண்டிருக்கின்றன
ஜன்னல் கதவுகள்

உரையாடல்

வெறுமையையும் ஒட்டுதலின் மையையும்
இருவருமே உணர்ந்திருக்கிறோம்
மிகுந்த பிணைப்போடு ஏன் பேசிக் கொண்டிருக்கிறோம்
தெரியவில்லை ஆனால்
அந்த மேகத்தைக் காற்று எங்கோ கொண்டு போய்விட்டது
நம்மில் நிரம்பி வழிகின்றன
நம்முடைய சூரியன்கள்
வெறும் சத்தங்களாக இருந்த சொற்கள்
மாறிக்கொண்டிருக்கின்றன
நாம் அதைக் கவனிக்கவில்லை
நாம் மாறிக் கொண்டிருக்கிறோம்
நாம் அதைக் கவனித்து விட்டோம்
உள்ளுக்குள் பலசித்திரங்கள்
அழிந்து புதியசித்திரங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்றன
உன் ரத்தத்தின் வாசனையும்
சதைத்திரட்சியின் உயிர்ப்பும் வெடித்து
வெள்ளரிப்பழம் போல எவ்வளவு அழகாக இருக்கிறது?
ஏழுகடல்களின் அடியாழத்தில் மறைத்து வைத்திருக்கும்
என்னுடைய
ரகசியத்தை நீ எளிதாகக் கண்டுபிடித்து விட்டாய்
இறுதியாக நாம் கைகுலுக்கும் போது
நம் அனைத்து ரத்தநாளங்களும்
ஒன்றிணைக்கப்பட்டுவிடும்
என்கிற அச்சத்திலும் மகிழ்ச்சியிலும்
துடித்துக் கொண்டிருக்கும் நம்கைகள்



லோதியைத் தெரிந்து கொள்ளுதல்

லோதியைப் பற்றி கவிதை எழுதுவது
அத்தனை சுலபமல்ல
லோதியைப் பற்றி கதை எழுதுவதும் கூட
ஒன்றும் சாதாரணமானதல்ல
லோதியைப் பற்றிப் பேசிக்கொண்டிருப்பது கூட
அத்தனை எளிதல்ல
லோதியை வெறுமனே பார்த்துக்
கொண்டிருப்பது கூட சரியல்ல
அது நமக்குத் தவறான புரிதல்களை ஏற்படுத்திவிடும்
லோதியை ஆழ்ந்து கவனித்துக் கொண்டிருந்தால்
நாம் குழம்பி விடுவோம்
உலகின் ஒவ்வொரு அசைவையும்
கவனித்துக் கொண்டிருந்தால் ஒருவேளை
லோதியைப் பற்றி ஏதேனும்
தெரிந்து கொள்ளலாம்
கடவுளால் நாம் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறோம்
ஒரேகனவை நாம் கண்டுகொண்டிருக்கிறோம்
நீர்நிறைந்த கண்களோடு வாழ்ந்து வருகிறோம்
நம்வீட்டினருகே ஒரு செம்பருத்தி
நம்மகிழ்ச்சியை
பைத்தியக்காரத்தனமாக
அந்தப் பூக்களிலிருந்து பெறுகிறோம்
தினந்தோறும் காலைப்பொழுது
அபத்தமாக விடிகிறது
செம்பருத்திப்பூக்கள்
அர்த்தமின்றி மலர்கின்றன
நமக்கென்று எதுவுமில்லை என
பேசிக்கொண்டிருக்கிறோம்
வாழ்க்கை என்று எதுவுமில்லை என
யாரோ சொன்னார்கள்
நாம் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறோம்
வானத்தின் நீலநிறம்
நமக்கு வெகுதூரத்தில்
நம்மால் தொடவே முடியாத தூரத்தில் இருக்கிறது
அல்லது நாம் நீலத்தில் அமிழ்ந்து கிடப்பதாக தெரிகிறது.

இரண்டு வாக்கியங்களுக்கிடையே
நாம் ஏதோ ஒரு அர்த்தத்தைத் தேடிக் கொண்டிருக்கிறோம்
அந்த வார்த்தைகள் எதையோ சொல்லிவிட்டு
மௌனமாகக் கிடக்கின்றன
நாம் அதன் சத்தத்தைப் பின்தொடர்ந்து
சென்று கொண்டிருக்கிறோம்
அதை ஒலியாய் மாற்றினோம்
அதை சித்திரமாய் மாற்றினோம்
அதை சலனப்படமாய் மாற்றினோம்
அதை உணர்வுகளாய் மாற்றினோம்
காலம்தோறும் அதை
ஏதாவதொன்றாய் மாற்றிக் கொண்டேதான்
இருக்கிறோம்
இப்படியே ஏராளமாய் குவித்து வைத்துக்கொண்டு
பிறகு நாம் அதில் காணாமல் போகிறோம்



வானம் முழுக்கப் படர்ந்திருந்தது
ஒரு வெற்றுமேகம்
நிழலிட்டிருந்த வெளியில்
நாங்கள் கடுமையாக உழைத்தோம்
எங்கள் வியர்வையின் ஆவிநீர்த்துளிகளாய்
அந்த மேகத்தில் படிந்துகறுத்தது
பிறகு மெல்ல வீசிய காற்று
எங்கள் ரோமக்கால்களுக்கு
ஒத்தடம் கொடுத்தது
குளிர்ந்த காற்றில் நாங்கள்
திளைத்துக் களித்திருந்தபோதே
எங்கள் வியர்வையின் மேகம்
மெல்ல நகர்ந்து சென்றது
நாங்கள் அதை வெறுமனே பார்க்கவே முடிந்தது.



ந. பெரியசாமி கவிதைகள்

1.

தூய்மை ராஜாவின் வாத்துகள்

தன் வல்லமைகளை
அறிந்தே மௌனித்திருக்கும் வாத்துகளை
குளம் மிதக்கும் தாமரையின்
உருவம் பொறித்த குடுவையினுள்
நுழையச் செய்திட்டனர்.

தூசுகள் படிந்து பரணில் கிடந்த
செங்கல்நிற பழந்துணியால்
அதன் வாயை இறுகக் கட்டினர்

தன் உளறல்களைக் காட்சியாக்கி
அற்புதம் நிறைந்ததென
மிருதங்கத்தில் பெருமிதம் இசைத்தனர்.

குணமாக்கப்படாத அவஸ்தைகளோடு
தன் வங்கிக் கணக்கெண்ணை
மனனம் செய்தபடி வாத்துகள்

உலகம் மெச்சிக்கொண்டிருக்கிறது
தூய்மை ராஜாவை

2.

மழை வெய்யில்

வானின் துண்டாகக் கிடக்கும் மொட்டைமாடியில்
நானும் நீயும்
இத்தருணத்திற்கான காத்திருப்பின்
காலங்களை அறியாய்

மிட்டாய்களின் நிறங்களை ரசிக்கும்
சிறுவனாகிறேன்
மேலும் சின்னஞ்சிறுவனாவேன்
உன் ஸ்தனங்கள்
அருந்தக் கிடைக்குமெனில்
அற்புதங்கள் கனவுகளுக்கானவை
விட்டுவிடலாம்

சீம்பால் துண்டுகளாக
உன்னுடனான சம்பவங்களின் நினைவுகள்
விழுங்கி விழுங்கி
உலகைத் தித்திப்பாக்குகிறேன்

உண்மைதான் அன்பே
இறுகத் தழுவி முத்தமிடு
நாளை உலகத்தார்
சிறுவர் சிறுமிகளாவர்
வெய்யிலும் மழையும் கலந்து பெய்யும்

நாம் மட்டும் அறிவோம்
வெய்யில் நீ மழை நான் என்பதை.



பெருந்தேவி கவிதைகள்

கவிதை எழுத வேண்டுமானால்

ஒரு போதும்
கவிதை பற்றிக் கவிதை எழுதாதே
சிலகோடிக் கவிதைகளின் பாடுபொருளாக
நீ இருந்தாலொழிய
ஒருபோதும்
காதலில் தோற்றதை தோற்கடிக்கப்பட்டதை
இடையில் தின்னப்பட்டதை எழுதாதே
சிலகோடிப் பேர்களை காதலுக்காக
நீ சாகடித்திருந்தாலொழிய
சிலகோடிப் பேர்களாவது உன்னைக்
கொல்லத் தேடிக் கொண்டிருந்தாலொழிய
ஒருபோதும் ·
மழையை பூவை குழந்தையைப் பற்றி எழுதாதே
மொழி நடைக்கு அலங்காரமாகும்
பெரும்பொறுப்பில் அவற்றை ஆழ்த்தாதே
ஒருபோதும்
சொந்தக்கதையை எழுதாதே
உன் வாழ்க்கையை உன் கண்களிலிருந்து
நீ பார்க்கும் போதே
கண்டங்களுக்கப்பால்
அந்நியப்படுத்திவிடும் கவிதை
ஒருபோதும்
அரசியல் சரிக்காககவிதை எழுதாதே
பாலுறவை வென்றெடுக்க கவிதை எழுதாதே
தினசரிக் கடமையாக கவிதை எழுதாதே
கவிதையாக உருக்கொள்ளாத கவிதை
அரசியல் சரித்தன்மையைக் கோமாளித்தனமாக்கிவிடும்
வென்றபால் துணையைப் பிசாசாக மாற்றிவிடும்
மேலும் கடமையில் ஒருநாள் தவறிவிட்டால்
மனச்சிக்கலில் தற்கொலை செய்து கொள்வாய்
ஒருபோதும்
கவிதை எழுதாதே
கவிதை எழுத நினைத்துக் கொண்டு
அல்லது எழுதுவதாக நினைத்துக் கொண்டு

பிடிச்சாம்பலிலிருந்து
எழும்பும் ஒருதடம்
பிடியற்ற ஒருகூர்
சாம்பலாகும்முன்.

இருப்பின் நிகழ்தகவு

சிறிய அகல்
அதனிலும் சிறிய அதன் சுடர்
பெருங்காற்று
இன்னும் பெரிய அதன் இரைச்சல்
என்ன நடந்திருக்கலாம்
என்பதற்கும்
என்ன நடந்திருக்க வேண்டும்
என்பதற்கும் இடையே
அல்லோலகல்லோலப்படுகிறது.

செயல்முறைப் போதனைகள்

(வகை: வாணலி, கழுவுதல், உறவு)

அவனுக்கு அவளைப் பிடித்திருக்கிறது நான்-ஸ்டிக் வாணலிக்கு வசதியான கைப்பிடி அது காதலாகவும் இருக்கலாம் 375.ரூ ஒட்டியும் ஒட்டாது கழுவ வசதியான பாத்திரம் மென்மையினும் மிருதுக்காதல் அபாரமான வழுக்கிச் செல்லுகிற பரப்புகறைகளை நீக்கும் ஒரு சொட்டுத்தான் என்னமாய்க் கரைந்து போய்க்கொண்டே இன்னமும் காலத்தில் நின்று பரஸ்பரம் என்கிற பஞ்சைக் கொண்டு தினமும் அல்லது அடிக்கடி

'உன்னைக் காதலிக்கிறேன்'

'நானும்தான்'

'பார்த்துக்கொள்'

'நீயும் கூட'

'நீ என்னவள் பேபி'

'நீங்களும்தான் ஹனி'

'எனக்கு நன்றியெதற்கு?'

'டிட்டோ'

'இப்போது என்முறை'

'டிட்டோ'


'உன்னைத் தின்பதில் மகிழ்கிறேன்'

டிட்டோ என்றாலும் கவனமாக மிகக் கவனமாக கண்ணாடியைக் கழுவுவது போல் கீறல் அதிகம் விழாதவகையில் பழுதுறாதபடி கழுவ வேண்டும். ஆரம்பக் காலங்களிலாவது உபயோகித்தபின்.

பாரதிநிவேதன்

பகுதி இரண்டு

சூலி: மூட்டமும் பின்னமும்



மூளைச் சாம்பலில் மின்னூட்டம் இருளின் அடர்த்தியை இளக்குவதில் மின்சார விளக்குகள் போராடுகின்றன. சாலையின் இப்பக்கமும் அப்பக்கமும் குளிரின் எடை நிரம்பிய வாசனை, மிளகாய் பஜ்ஜி, கோழி வருவல் சடப்பை அசைத்துப் பார்ப்பவை. மது வாசனைமிக்க கடப்புகளில் உறுத்தாததை காலில் இடரும் யூசன்த்ரோ டம்ளர்கள் செய்கின்றன. நா என் சொல்ல வர்றேன்னா அவரு நம்மாளு தான் தூக்கி வச்சுத் துவைக்கணும் இவ்வளவு பெரிசு ஆச்சா த்தூ அந்தப் பக்கம் விநோதமான ஹாரன் சென்னைக்கா டீலக்ஸ் பஸ் வெளியில கிலோ பத்து ரூவா போபோ போய்கிட்டே இரு சூடா ச்சாயே இரவினைத் துடிக்க வைக்கும் குரல்களுள் கவனப்படுத்தக் கூடிய நடுக்கத்துடன் கஞ்சாவை அடைத்துக் கொண்டிருக்கும் பார்வையும் பதற்றமும் வட்டமான ஒரு டயர் எரிகிற போது வெகுவாக குளிர் நசுங்கிப் போயிருக்கிறது. இன்னும் மேலதிகமாக அவன் நடக்கக் கூடும். இடைவெளியை அலகமாக்கியபடி இன்மையாகிவிடும் சூழல் ஒளியைத் தாண்டி அது கூடிவிடாது. சுவரொட்டிகளையும் பசை வாளியினையும் காலின் பின் வைத்துக் கொண்டு கைகளை காய்த்துக் கொண்டிருப்பவன் தீயைத் திருட வந்தவனாக அவனை முறைப்பது சரியல்ல. அவன் வீட்டிற்கு சீக்கிரம்

திரும்ப வேண்டும். வீட்டில் குளியலறை கழிவறை சேர்ந்து ஒன்று சமையலறை படுக்கையறை தனித்தனி. சமையலறையின் தனி வாசம் காலியான மது போத்தலின் புளிப்பால் இருக்கலாம். படுக்கையறையில் புத்தகங்களும் கம்பளிப் போர்வையுடன் ஒட்டிய பெட் ஷீட்டும் ரெயின் கோட்டும் கம்பி முறிந்த குடை யொன்றும் உள்ளன. அவளுக்கும் அது தெரியும். தவிர்க்க இயலாமல் வாரியடிக்கும் மழை இரவில் வாசம் புரிந்திருக்கிறாள். ஒருவர் கட்டிலிலேயே இறுகத் தூங்கியிருக்கிறான். சத்தியம் செய்து சாளரத்தைத் திறந்து காட்டிய போதுதான் அவன் வீட்டில் மின்சாரம் இல்லாததற்கு அவன் காரணமில்லை என்று மழை குளிரை தன் ஆடைகளைந்து ஏற்றி அவனையும் தொற்றிக் கொள்ளச் சொன்னாள். பிறகு ஏன் இப்படியெல்லாம் நடந்துவிட்டது என்பதை இந்த மதுபோத்தலும் விரிப்பும் கனவும் நினைவும் முனைந்து விடுமா என்ன.

பசிய மஞ்சளுக்குப் பிறகு சன் லயலட் உமிழும் முட்டை விளக்கின் ஒளி வீட்டுச் சுவரை இன்று வேறொன்றாக்கியிருக்கிறது. அல்லது இப்போதுதான் அதைப் பார்க்கிறான். சிதைந்த வீட்டில் நாய் குடியேறிய தைரியத்தில் குப்பைத் தொட்டியாகவும் சிறுநீர் கழிக்கவுமாக மாறிவிட்டது. அதிலிருந்து நீளும் சுவர் தான் அவனது வீட்டு முகப்பு. மேலேறும் படிகட்டுகள் பின்பு தெருவிற்கு தலைகாட்டும் அவனது அறைகள். தெருவிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக அவனது வீட்டுக் கதவிலும் அசையும் கரிக்கோடுகள் ஒரு தனி மனிதனின் கைவரிசையாக முடியாது. அரசியல் தலைவர்கள் மட்டுமின்றி பூர்த்தியடையாத உறுப்புகளும் கச்சிதமான கதைகளைப் பேசுபவை மேய்ப்பனற்ற ஆட்டுக்குட்டிகள் திரண்ட பெண் மார்பு கருட்டு ஆலயமணி முள்ளெலி பாம்பு பலாப்பழம் இச்சைக்கும் மேலதிகமாக பேசக் கூடும். அந்த பிச்சைக்காரன் அல்லது அந்த மனநோயாளி பிடிதர வேண்டும். பேச இந்த வீடுமில்லாமல் அடுத்த வீடுமல்லாமல் கம்பளியைப் போர்த்தியுறங்கும் அலுமினியத் தட்டின் அருகில் இன்று கரித்துண்டுகள் இல்லை. சாராயத்தினால் ஆழமாகத் தூங்கும் அவனுக்கு மேலே தொங்கும் சிலந்தி வலை ஏதாவது பாதுகாப்புத் தரக்கூடும். தேங்கியிருக்கும் சாக்கடை நெடியும் அவனது போதையை உறிஞ்சி கரைத்துக் கிடக்கிறது. குளிர் தாங்காமல் இருமி சுள்ளிகளை எடுத்துப் போட்டு தீ மூட்டி விடியலை ஆசீர்வதித்துக் கொண்டிருக்கும் சித்துக்காரன்.

வீட்டிற்குள் நுழைவதும் தலைபாரமாகத் தொடங்குவதும் ஒன்றாக நிகழ்கிறது அவனுக்கு இவ்விரவும் தூக்கமும் பிரச்சினையாக மாறுவதை முன்விரிக்கின்றது. படிந்துள்ள கனவின் நிழல்கள் சிதறிக்கிடக்கும் பொருட்களின் நிழல்களுக்குள் பாம்பின்வால் உள்ளிழுக்கப்படுவதைப் பெரிதுப்படுத்தக் கூடாது. நீர்தெளித்து உருண்டைப் பிடிக்க முடியுமானால் இந்த அறை கனவாகவும் அதற்குள் பாத்திரமாகவும் செல்லுபடியாக்கிக் கொள்ள முடியும். அதனால் தானோ என்னவோ உள்ளற்று பொம்மையாக அவனது உடல். ஆனால் கூடுவதற்காக சமிக்ஞை சமையலறை மதுபோத்தலின் வழி நம்பக்

கடவுகிறது. உறக்கமில்லாத படுக்கை பிணம் புரள்வதென்பது அவனது கண்டுபிடிப்பு. இருப்பினும் கண்ணாடியில் கலைந்து சீட்டுக்களிலிருந்து அருவமான ரம்மியாக வெளிவருவது இப்போது அவன் பக்கத்தில் அவனும் அதுவும் மெழுகின் பாலைகளின் மேல் மஞ்சளைத் தடவுவது போலத்தான். ஆமாம் அவ்வளவு நேரம் இன்மையைத் துலக்கிக் கொண்டிருந்த வீதியில் பெரும் தும்மலாக நிகழ்கிறான். சாலையில் வாகனங்களும் மனிதத் தலைகளும் குறைந்தபாடில்லை. வாகனத்திலிருந்து இறங்கிவிட்டான். வாகனம் ஓடிக் கொண்டிருக்கிறது. இது சரியான தருணம். தன் முகக்கண்ணாடியை விலக்குகிறான் கைகளை மார்பினை கால்களை இறுக்கினான். கட்டையான பலகைகளும் சிறிய ஆணிகளும் மதுபோத்தலின் சாக்கில் தோல் வழண்டு எங்கோ பொத்துக் கொண்ட பார்க்கிறது. தோள் மூட்டுகளைப் பிரிந்து அழகிய ரம்மி வெளிவந்தது. அவ்வளவு தான் வெளிச்சத்தின் நீரும் அது முகத்தில் அப்பிய குளிரும் அதற்கு மேல் நிகழ்வதை ஒற்றறிந்து அறுத்துவிட்டன. அறைவாசல் மூக்கின் நுனியின் குழப்பத்தில் தேவையானதை அவன் நழுவவிட்டான். இப்போதும் ரம்மியும் கண்ணாடியும் தோளும் வேறுவேறு என்றாலும் கண்ணாடி முன் நிற்பது தகாது.

கீறல்கள் விழுந்த கண்ணாடியை மாற்றியிருக்க வேண்டும். அதே சமயம் கீறல்கள் கண்ணாடியாக முடியும் என்பது அவன் கண்டுபிடிப்பு. எனவே இன்றைய இரவில் ஏதாவது செய்யப்பட நேரத்தைக் கடத்தியாக வேண்டும். கிறுகிறு என்று வரும் நாளையப் பகலை அப்போது எதிர்கொள்வது தான் சிரமமானது. இப்போது இமையை மூடவைத்து மூளைக்குள் மின்னூட்டம் செய்யும் காந்தப் புலத்தை தவிர்த்தாக வேண்டும். இது அவனுடைய எந்த அருவத்தினைச் சாத்தியப்படுமென்பதை அவன் தான் கண்டுபிடிக்க வேண்டும். இது ஏன் அவனுக்கு நினைவில்லை. சீட்டுக்களைப் பெட்டிக்குள் அடைப்பதன் மூலம் அறியப்படலாம். அவனைப் போலவே அதைத் தனியாக ஆடிக் கொண்டிருக்க அனுமதிக்கலாகாது. முதலில் கழிவறையைச் சுத்தம் செய்ய வேண்டும். மஞ்சளைக் காவிவரை விடக்கூடாது. வாளியில் நீர்ப்பிடித்து பிரஸ்ஸை எடுத்த போது அவனது தோள் ரம்மியாகிவிட்டது. சில்லிட்ட கால் கையின் வழி கறை அரிப்பானோடு கலக்கும் போது தான் பீங்கான் தொட்டி வெள்ளையாகிறது என்பது அவன் கண்டுபிடிப்பு. காப்பானின் உணர்கொம்பின் மீது தனது துருவம் சர்க்கப்படுவதையொட்டி கழிவறையை விட்டு வெளியேறுகிறான். நிகழ்வு வலுவூட்டப்படுவதால் குலிக்கு தான் பொறுப்பல்ல பாதையைப் பிடிக்கிறான் வசமாக பாதை கிடைக்கவில்லை அது இடைச்செருகல் போலிருக்கிறது.

எனவே இலை எரியும் பகை வாசம் மணி பாப்பா வெந்நீர் போடுகிறாள். நடுஇரவில் குளிக்கிறாள். மலக்குழியில் இறங்கி விஷவாயு தாக்கச் செத்துப் போனவன் அவள் அப்பன். தாலி தந்தவன் வயிற்றை ஊதவிட்டு ஓடிப்போய்விட்டான். கலைத்துக் கொண்ட செப்புச் சிலை இப்போது நீராடுகிறது. வெறும்படியின் நீள அகலம் சார்ந்து தான் அவளது

குளிகைகள் என்பது அவன் கண்டுபிடிப்பு. தன்னிடம் குளிகையற்று அவள் நேர்ந்தது ஒரு நேர்ச்சை என்பதும் அவன் கண்டுபிடிப்பு மஞ்சளைக் குங்குமத்தை அவனின். அதன் மீது ஈசிச் சிரித்தச் சிரிப்பில் அவன் கட்டிலுக்கடியில் ஒடுங்காமல் தப்பிடித்தது மட்டும் இன்று வரை அவனுக்குப் புரியாத ஒன்று. அன்று அதிகாலையில் பால்காரனின் மணிச்சத்தம் கேட்டு இங்கேயிருக்கும் பாத்திரத்தை எடுத்துப் போனவள் அதற்கு பின்பு இப்படியேறவில்லை. இங்கும் தகையவில்லை என்பது வேறு. அங்கேயிருந்து ஒரு சிரிப்பு அது கிடக்கட்டும் இருளிலும் நிதானப்படும் செடி கொடிகளின் அசைவு. அசைவு இங்கே வருவதற்கு பத்து நிமிடம் ஆகலாம். அதற்கு பெயர் அடித்துப் போடும் கானல்



திருத்தமான முகத்தையும் அகப்படாது போல் தூண்டிலாகும் அகாலத்தையும் பத் பிசிறுகளைத் துவ்விக்கும் குரல்களையும் படைப்பான எழுத்துக்களையும் இறுக்கிவிடும் கானல் மனக் கண்ணில் கானல் பூப்பதும் நகத்தில் பூப்பதும் வேறு வேறு அவன் அறிவான். மீண்டும் புல் வளர்வதை அந்த தேவாலயத்தை இறுக்கத்து வீட்டை படிகளை வளைந்த சாலைகளைப் பச்சையைப் பிதுக்கும் மலைகளை குளிர் நீராக மாறுவதை மாறுவதை வதை.

கில்லட்டின் இயந்திரத்தால் வெட்டுப்பட்டுவிட்டதாகக் காலத்தின் குழல் வடிவுக்குள் தான் எறியப்பட்டிருப்பதைக் கண்டு கொண்டான். குழலுக்குள் துளைகள் வேகமாகக் கழிய கழிய தன்னை யாரும் கீறி எடுத்துவிடக் கூடாது என்று முழுதாக நினைப்பதற்குள் ஒரு பிரதேசத்தில் அவன் தள்ளப்பட்டிருந்தான். அவனிடமிருந்து வேர்களின் ஊசலாட்டம் அவனை நிலைப்படுத்தவே விடவில்லை. அவனுடைய பார்வை பதியப்பட்ட இடத்திலிருந்து வேர்கள் அற ஆரம்பித்து விட்டன. எதிரே மிகவும் உயரமான சிலைகளின் சிதிலங்களுக்குள் ரேகைப்பிடித்து ஓடுவது இரத்தமென்பதற்கான தடயங்கள் உடல் முழுக்கக் கருஞ்சிவப்பான எறும்புகள் காட்டிக் கொடுக்கின்றன. எதிரே நினைவுகளை மீட்டெடுக்கும்படி வற்றாத கயிறகல சுனை வழியடித்துச் செல்கிறது. சூரியனில்லாத மூட்ட வெளிச்சம் ஏதோ ஒன்றின் அடியில் பாதுகாப்பாக இருத்தி வைப்பதற்கான அனுகூலம். அவன் மேற்படி எறும்பின் தடத்தையோ சுனையின் தடத்தையோ பற்றிக் கொள்ள

வேண்டும். பிரகாச எச்சரிக்கைகளை வாவலழுக்கும் போது தொலைதூர காக்கை தன்காலை இறகோடு இருக்கு வெட்டிக் கொண்ட உடல் நெறிவ [illegible] கொள்ள வேண்டிய கட்டாயத்தில் அதிர்ந்த படியால் தன்னை [illegible] காகித கார்டுக்களிலிருந்துத் தேவைப்பட்டத் கைப்பைக்குள் இருந்த [illegible] அச்செழுத்திற்குள் கனை எறி ஊறிவிட தாளொன்றை உருவினான். [illegible] நீர் மேல் தன் முகத்தைப் புதைத்த அதன் நெளிநெளிப்பால் அரித்து [illegible] எழுத்துகளெல்லாம் கனைக்குள் படிவிட்டன. கவனமாக [illegible] விழுந்துவிட்டன. தலைக்குக்கான் ருமக்குப் போதலின் பலகீனம் கூட தலைதூ இரண்டு விரல்களுக்குப் போதுமான கனையில் வைவிட்டு எழுத்துக்களைப் பிடிக்க முயற்சிக்க கனைக்கு எதுமேல் எதுகீழ் என்றறிய இயலாதபடி காலை தாங்கி அமர்ந்தான். மனரகத்தில் எறும்புகள் கனைக்குள் விழுந்துவிடுகவை. பொருள் அறிந்து கொள்ள முடியவில்லை. சூரியன் விழுந்து [illegible] போதுமான விலக்கம் இருக்கப் போவதில்லை என்பதைக்கேற்ப புரிந்து கொள்ள அவன் குறைந்த அளவு சாப்பிட வேண்டும். முக்கியமாக வயிற்று உபாதையை தவிர்க்க வேண்டும். அதுபாட்டுக்கு எழும்பும் குறியை மறைக்கக் கொஞ்சம் துணி சமவைப்பட்ட கொஞ்சம் இடம் நிழல். வேறென்ன [illegible] அவனுக்கு ஆனால் மீண்டும் படபடப்பிற்குள் தான் சென்றாக வேண்டியிருக்க ஒருவேளை வேறு எதேனும் திறக்கப்படலாம். நேரம் கழியக்கழிய தான் கொலையுறப் பட்டிருக்கலாம் எனும் சந்தேகத்தை அழித்துவிட்டு பற்றிக் கொள்வதற்கான வழி அவனது நகங்களில் வெள்ளைப் பூக்கள் அச்சாவது முயன்றவனா தாங் கடக்கிடம் கழுகுகள் இல்லாத மண்ணில் இன்னும் அண்ணாந்திருப்பது தேவையற்றது.

தொலைவில் யாரோ தென்படுவது பூசித்துக் கொண்டான். தான் தப்பிப்பதற்கான மனிதர்களை இங்கே எப்படி உருவாக்குவது தான் எங்கிருந்து வந்தோம் என்பதைவிட இங்கிருந்து என்ன செய்ய போகிறோம் என்பதை அவனுக்குள் யாரோ ஊதிவிட்டுப் பெருக்குகின்றனர். ஒரு நொடிக்கும் அதன் அடுத்த நொடிக்கும் இடையில் அவனால் என்னென்ன நினைக்க முடியும். குறிப்பெடுத்து ஒரு மதிப்பீட்டிற்கு கொண்டு வராமல் எதையும் செய்ய முடியாது. அதை அந்த கனத்தின் விளிம்பில் எண்ணியவன் ஒரு கனத்தின் பாரத்தை இவ்வாறு சமக்கும் போது அது பூமியை விட பதினாறு மடங்குக் கூடுதலாக இருக்க அதைத் தன்னுடைய எடையைக் கழித்துப் பார்த்துச் சொல்ல வேண்டுமா அல்லது சேர்த்து பார்த்துச் சொல்ல வேண்டுமா என்பதை விளிம்புக்கு அடுத்து எண்ணியவன் இப்போது விளிம்பின் விளிம்பிலா நின்று யோசிக்கிறோம் என்று சந்தேகம் கிளம்ப அது சரியாய் போயிற்று. ஆமாம் தனியாக ஆடும் சீட்டுகள் நம்பியற்று சுழன்று கொண்டிருந்தன. ஒன்று அதைக் கட்டி மூலையில் போட வேண்டும். இல்லையென்றால் கிளம்ப வேண்டும். அந்த கனத்தில் மழை பிடித்தது உட்தொடர்ச்சியற்றும் ஒரு காரண காரியம் இருக்குமென்பது அவன் கண்டுபிடிப்பு.

மழையானது தூசி மண்டபத்தின் மந்தத்தைக் கலைத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் கண்ணுக்கெட்டும் தொலைவில் தேவாலயம் தன் பளிங்கை இப்படி புலனுறுத்தி இருக்க முடியாது. விடாத மழையில் தேவாலயத்திற்குச் செல்லுவதொன்றே தான் தப்பிப்பதற்கான வழியாக இருக்க வேண்டும் சாளரத்திலிருந்து மழையைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் மழைக்குள் இவனிருப்பதை அறிந்துக் கொண்டிருந்தார்கள். எப்படியோ மழை தங்காத மேட்டுப்பகுதி தேவாலயத்திற்குள் அவன் வந்துவிட்டான். மழையில் குளிக்கிற தேவாலயத்தின் வாசனை மெழுகு எரிவதோடு வந்து சேர்கிறது. நெடிதுயர்ந்த அதன் கோபுரத்திற்கு தக தகக்கும் நெடிய அகலமான கதவின் முன் தன் மழைக்கோட்டை கழற்றிவிட்டு பாந்தமான முகத்துடன் உள்ளே அவன் பார்க்கிறான். தேவாலயத்தின் உள்ளிருந்த அமைதியுடன் புறாக்களின் அணைத்தல் மிகவும் லாவகமாக அவனைச் சூழ்கிறது. அவனோடு தொடர்பு கொள்ளும் சூட்சுமத்தை இப்போது செலுத்துவது உசிதமாயிருக்க வண்ணத்திகள் கனத்த மழையைச் சிதறடித்து அவனோடு புகலளிக்க அமைதிக்குள் வடிய புறாக்களின் அணைத்தலான காந்தபுலம் தங்களது இறகினை எரியூட்டிவிடும் அச்சத்தால் திரும்புகின்றன. இவை எவை குறித்துமில்லாமல் மாதாவின் முகத்தையும் அவள் தன் மடியில் வைத்திருக்கும் இரத்தம் சிந்திய தன் தந்தையை மட்டுமே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். தன் தந்தை போதையால் கழிந்த குடலையும் புகையால் கரிந்த நுரையீரலையும் எப்படி தன் அன்னைக்கு வெளிப்படுத்தி விடாத வண்ணம் தனது இறப்பை அவள் மடியில் விட்டெறிகிறார் என்பதையே பார்த்துக் கொண்டிருந்தான். புனித நீரைத் தலைக்குச் சாட்சியாக்கி விரிப்புக் கம்பளத்தில் நடக்கத் துவங்கியவன் நட்சத்திரங்களைத் தின்னும் ஆடுகள் அதற்கான கசையடிகளைப் பெறுவதுடன் தானாகச் சாய்ந்து செல்லும் சிலுவையின் மீது கல்லெறிகளைக் கண்டதுடன் மரச்சட்டங்கள் கடதடவென ஒருபக்கம் சரிய திராட்சை ரசத்தையும் அப்பத்தையும் விழுங்க முடியாமல் தவிக்கும் உடல்களைப் பார்க்காதது போல பாவித்து எரியும் மெழுகுவர்த்தியொன்றை ஏந்திக் கொண்டான். சீட்டுகள் எதைக் காட்டிக் கொடுக்க நினைத்ததோ அவன் மீது யாரோ முத்தமிட்டதாக இருந்தது. புறாவின் அணைத்தலிலிருந்து தன்னைப் பெயர்த்துக் கொள்ள அவன் ஏதாவது செய்தாக வேண்டும். பாவமன்னிப்புக் கூடாரத்தில் அவனுடைய விசும்பலை நியாயமற்றதாகக் கருதி அவன் தலையைச் சுற்றி வந்தன சீட்டுகள். காவலாளி தனது சுருட்டு வாசனையுள்ள கரத்தால் ஆரத்தழுவி முகவரியை ஞாபகமூட்டி அவனை மழைக்குள் விடுகிறார். கல்லோடு பிணைந்துவிட்ட காந்தபுலத்தின் மீது மழைத்துளி சிதறச் சுருள்கம்பியைத் தட்டிவிட்ட ரீங்காரம் தாறுமாறாகக் குதிக்கிறது. மழைக்கோட்டு மெழுகுவர்த்தியாக மாறிப்போயிருப்பதை அறியாமல் சகோதரர்கள் அவனைப் பகடி செய்ய ஏதோ ஓர் மூலையில் தனித்துவிட்ட நீலத்தை மழையினுள் உணரத் தொடங்குகிறது. மழை நின்று தேவாலயம் மங்குவதை வீட்டிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவன் தன்னைத் தொலைத்தாலும் பரவாயில்லையென தேவாலயம் நோக்கி ஓட

ஆரம்பித்தான். அவன் கையில் கருப்புக் கயிறாக சீட்டுக்கட்டு மாறியிருந்ததை இக்கதை அவனுக்கு சொல்ல விரும்பவில்லை. மீவுயர்ந்த தேவாலயச் சுவர் விரிசல் கண்டு இற்று வீழ்கிறது. எறும்புகளும் பாம்பு குட்டிகளும் கடும் கோபத்துடன் இவனை நோக்கில் நீரில் கலக்கின்றன. இன்னும் ஐம்பது படிகள் ஏறிவிட்டால் அவன் தேவாலயத்தைப் பிடித்துவிடுவான். அவன் நெற்றியிலிருந்த வளனாரின் சுட்டுவிரலும் விலாவிலிருந்து அந்தோணியரின் சுட்டுவிரலும் கொப்புழிவிலிருந்து தோமையரின் சுட்டுவிரலும் மின்சாரம் இழந்த கணத்தை அவன் தேடிக் கொண்டிருக்கிறான். அவர்களுடைய அங்கிகள் காக்கைகளின் எச்சத்தால் கணத்து போய்விட்டன. தேவாலயத்தை அதன் முகப்பை அதன் கதவை அங்கே இன்னும் அடித்துப் பெய்யும் மழையைப் பிடித்து விட்டான். தன் முள்கிரீடத்தைப் பெயர்த்துக் கொண்டு புறாக்களை வேட்டையாட அவன் முயற்சித்தால் காகிதக் கட்டுகள் அனைத்தும் ஒரே ஒரு பளீரிப்பு மிகுந்த கூர்மையான வாளாக மாற காவலாளியைத் தேடினான். அலைவரிகளின் மாற்றத்தை கிஞ்சித்தும் பொருட்படுத்தாமல் தன்னைத் துரத்தியப் பாம்புக் குட்டிகளை எறும்புகளைக் கொல்லும் நோக்கில் துழாவினான். அவை இவனைத் துரத்திப் பிடிக்க வீட்டையும் மெழுகுவர்த்தியும் சகோதரர்களையும் சூழ்ந்துவிட்டிருந்தன. வீடு மங்கிக் கொண்டிருந்தது. வாள் சூழல ஆரம்பிக்கிறது. தன் மீது எகிறிவிடுமோ அது என பயப்படுகிறான். சுனை கடலாக உள்ளிழுத்துக் கொள்ளும் தருணம் கூடுகிறது. இந்த கடலுக்குள் அவன் வீடும் அவனுமே உள்ளிழுக்கப்பட்டு விடுவதில் தன்னைத் தானே பார்த்துக் கொள்ளும் இரண்டு காலமும் எவ்வாறு ஒரு காலமாக முடியும். குழம்புகின்றார். தன்னை வேட்டையாட எதுவும் இல்லாதிருப்பதையும் நீருக்கு மேலே மழை விழுந்து கொண்டிருப்பதையும் ஆழத்தில் தேவாலயத்தில் மெழுகுவர்த்தி தன் வீட்டை ஒளிர்ப்பதையும் கண்ணுற்று முறுவல் கொள்கிறான். தனது தோள் பை சிலுவையில் தொங்கி கிடக்க தானும் தனது தந்தையுமானவன் ஆலயத்தில் இருந்து மிக இயல்பாக நீச்சலடித்த படி வெளிவந்து பைக்குள் கைவிட்டு துழாவி சேமித்து வைத்திருந்த காலத்தை எடுத்து போகிறான். மிதப்பில் விரிகிற சிவப்பு மண்டலம் எதனால் ஆனது என்பதை வலிமிகுந்த புன்னகையுடன் எதிர்கொள்வதுடன் அம்மண்டலத்தை மேலும் கணப்படுத்த தனது கொலை வாள் தன்னை குறுக்கு வெட்டி பாய்வதை காலம் முன்னறிவிக்கும் வியப்புடன் தன் இரத்தத்தை தொட்டு கையெழுத்து இடுகிறான். அழகன் குமரன்.

பால்காரன் அடிக்கும் மணிச்சத்தம் உடம்பிலிருந்து ஒரு காலச்சுமை வெளியேறிய நிம்மதி. சாளரத்தை திறந்துவிட்டு படுத்தபடி பார்த்தான். குளிர்காற்று அறைந்தது. எதிரே மணிபாப்பா பாத்திரத்துடன் நின்றிருக்கிறாள். அவளிப்போது உயரம் கூடியது போலிருக்கிறது. கழுத்துச் செயினில் மினுக்கும் டாலர் என்ன வடிவம் என்று தெரியவில்லை. பின்னுக்குத் தட்டாது பால்காரன் போகிறான். புட்ட துருவங்களைத் தட்டி நடுவில் விழுகிறது அவளின் தடித்த சடைசேவலின் கொண்டையாகக் கூரையின் உச்சியில் விழுந்திருக்கிறது வெயில்.

எவ்வளவு அழுத்தாலும் உறைக்காதது. தெளிந்து கிடக்கிறது வானம். குறைந்தது இரண்டு மணி நேரத்திற்கு மழை இருக்காது. சுவெட்டரில் டயர் எரிந்து அவிந்த வாசனை. இரண்டு நிமிடங்கள் தான் அங்கு நின்றிருப்பான். துவைத்தால் மூன்று நாள் ஆனாலும் காயாது. பக்கத்து வீட்டில் விறகு அடுப்பு புகை தள்ளிய வாசனை. ஈர விறகு சுண்டி எறியும் வாசனை. அந்த விறகை தள்ளிவிட்டால் பழுப்பு புகை திரவம். கைகளிலும் ஒட்டிக்கொள்ளும். அந்த வாசனை சோற்றிலும் பருப்பிலும் இருக்கும். வாசலின் முன் மணிபாப்பா வெந்நீர் வைக்க வந்துவிட்டாள். யூகலிப்ட்ஸ் இலைகளை அடுப்பிற்குள் திணிக்கிறாள். இனி புகையில் யூகலிப்ட்ஸ் வாசனை விறகு அடுப்பு வெந்நீரில் குளிப்பது சுகம். இரண்டு வருடங்களாக பச்சை தண்ணீரில் குளிக்க பழகக் கொண்டான். அது ஐயப்ப சுவாமியின் திருவிளையாடல். நோன்பிருக்க பழகியது நபிகள் திருவிளையாடல் பச்சைத் தண்ணீரின் வினை முதுகுத் தண்டின் கீழ் மின்னல் வெட்டுகிற வலி. குறுக்குப் பிடித்துக் கொள்வதுமுண்டு. மிளகுடன் ராவாக இரண்டு ரவுண்ட் மங்க். வலியை இரண்டு நாள் ஒத்திப்போடும். மணிபாப்பா சிரிக்கிறாள். சமையலறையில் ஏதோ ஒரு போத்தலின் மிடறு மிச்சமிருக்கிறது. நடுயிரவில் அது தன்னைத் தளும்பிச் சொல்வதைக் கேட்டது போல் நினைப்பு சில மிடறுகளும் இக்காலையும் என்னவாகும் என்பதைப் பார்க்கத் தயாராகலாம் அவன்.

பயணம் இன்றைக்கு ஆகிவிட்டது. வெயிலுக்குள் நுழைந்து சென்றாலும் ஈரத்தைச் சேமிக்கிறவள் தான் பிசுபிசுப்புள்ள புடைக்காத கைப்பிடிக்குள் அடங்கக் கூடியதாக வைத்திருந்தாள். மோப்பம் மிக்க ஜந்துக்கள் சூழ்ந்துவிடாமல் துடிக்கும் கடிகாரமாக மாற்றுவதென்பது கற்றுக் கொண்டது. எரிச்சலான காய்ப்புகள் மீது பனியைச் செதுக்கி வைப்பதும் அவளால் ஆகிறது. இன்று ஏனோ நிற்க முடியாத சாய்தளம் இதழ்கள் இறுகி கடிகாரம் நின்றுவிடலாம். ரோமங்கள் குத்திடுகின்றன. சிறுநீர் பாதை திறந்துவிடலாம். நடந்துதான் ஆக வேண்டும். கடிகாரத்தைத் தட்டிவிட்டபடி இருந்தாள். நிழலைவிட இப்போது அவளுக்கு கடிகாரத்தின் ஒலி முக்கியம். சட்டக வெயில் கழுத்தை இறுக்கப் பார்த்தது. மனது ஒன்றி பிராத்தித்தாள்.



தேவதைக்ள் குழலிசைக்கும் மேகங்கள் தென்படுவது மனப்பிம்பம் ஆகலாம். தம் வீட்டுப் பெண்களை உள்ளே தள்ளியதுடன் சரளமான வசவுகள் அவளை நோக்கிப் பாய்ந்த வண்ணம் இருந்தன. கடிகார ஒலி இப்போது பாதங்களின் வழி தெருவிலும் இறங்க பிச்சையாளர்கள் தட்டினைக் குலுக்குவதை நிறுத்தினர்.

ஏற்கனவே நிகழ்ந்துவிட்ட ஒன்றில் மீண்டும் நடப்பது அலுப்பூட்டக்கூடியது. இப்போது நடப்பதின் காரணம் இதை கடந்தே விடுதல். கடப்புகள் சுழலானது அல்ல. வேறு வழியில்லை. ஏதேச்சையான மரணம் நிகழ்ந்துவிட்டாலும் வரவேற்கக் கூடியது தான். கழிப்பறை கரிக்கோடுகளில் நகர்கிறவளென்றாலும் தனிப்பட்ட வீடுகளின் படுக்கையிலும் அவளது பெயர் உதிர்ந்துவிட்ட பிறகு காய்கறி வாங்குவதிலும் பிரச்சனைகள். சுருண்டு போன ஒருவன் தர்பூசணியை இரண்டாகப் பிளப்பது போல் துணிந்திருந்தான். நல்ல வேளையாக நல்ல பாம்பொன்று அப்பக்கமாக தலையை அழுத்த வாலை உள்ளிழுத்து ஒரு மண்டலம் படமெடுத்துக்காட்டியது. அவள் கண்களிலிருந்து ஈசல் பறக்க ஆரம்பித்துவிட்டது. மேகங்கள் விரைவாக பனியை மழையைக் கொண்டு வருகின்றன. அவளுடைய வாசத்தின் உப்புச் சுவை நீர்க்கிறது. சென்றுவிட்டால் தலைதப்பும் இப்படி ஆரம்பித்தது தான் கடிகாரத்தைத் தட்டிக் கொடுத்தல்.

வெயில் நழுவி மலைக்குப் பின்னே ஒளிந்ததில் கைகால் முகம் விரைத்தது. இரவு மூடுவதற்குள் ஒரு வீடு பிடித்தாக வேண்டும். பணமும் நகைகளும் கொஞ்சமிருந்தன. கடிகாரம் வேகமாகிவிட்டது. தலைசாயச் சொல்கிறது. மரத்தக் கால்களுக்கு கீழ பாதை கழிந்தபடிதான் இருந்தது. பேருந்து நின்று போகிற இடத்தில் நாலைந்து பேர் இருந்தார்கள். தள்ளுவண்டியில் மணலுக்குள் வேர்க்கடலையை வறுப்பவனிடம் பேச்சுக் கொடுத்தாள். அவனது கணமான கம்பளிக் கோட்டின் மீது பனி பூத்து ஈரம் பரவிக்கிடந்தது. அவன் காட்டிய திசையில் மஞ்சள் ஒரு பொட்டாகத் தெரிந்தது. இரும்பு வாணலியைக் கரண்டியால் தட்டி எதிர் திசையில் வண்டியைத் தள்ளினான் மரத்துப் பறவைகள் காது கிழியப் பேசிக் கொண்டிருந்தன. மலை மீது ஏறியது நடைக்கான பாதை. யூகலிப்ட்ஸ் சைப்ரஸ் நேர்த்தியில்லாமல் வளர்ந்து நின்று பயத்தைக் கிளைத்தது. கொழுந்து பறிப்பு கைகழுவப்பட்ட தேயிலைச் செடிகள் அவளது சேலையைப் பற்றி இழுத்தன. மஞ்சள் பொட்டுப் பெரிதாகிக் கொண்டிருந்தது. உறைபனி சுற்றிய வேலிக்குள் அந்த வீடு சப்தமில்லாமல் இருந்தது. தெருவில் தனித்து ஒதுங்கிய பெருமை. பூசிய இருளுக்குள் தெரியவில்லை. கதவில் மஞ்சள் பல்லைக்காட்டிய திரிவிளக்கு பனியைத் திறந்து உள்ளே சென்றவள் அதிர்ச்சியில் நின்றாள். கடலைக்காரன் வாளியில் நீர்பிடித்து உள்ளே செல்ல திரும்பிய போது இவளைப் பார்த்தான்.

விளக்கு திரியை நன்றாகத் திருத்திவிட்டு தைலத்தை நெற்றியில் தேய்த்து முரட்டுத் துணிகள் தடித்தக் கட்டிலில் உட்கார்ந்தாள். பாலிட

தேநீரை சூடாகக் கொண்டு வந்து நான்கு ரொட்டித் துண்டுகளைத் தட்டில் வைத்தவன் விளக்கு திரியை குறைத்து வைத்து கரி படியும் என்றான். இப்போது பார்க்கிறாள். அவனுடைய மீசையும், தாடியும் புருவம் பழுப்பு நிறம். தலையில் அடர்நீல உல்லன் குல்லாய், கனத்தப் போர்வையை உதறிப் போட்டவன் தூங்கும் போது விளக்கை அணைக்குமாறு செய்கை செய்தான். ரொட்டியுடன் தேநீர் இதமாக தொண்டையி இறங்கும் போது கடிகாரத்திற்குக் கொட்டாவி வந்துவிட்டது.

தண்ணெனும் அருவி தேமேவெனும் மரம் இரண்டையும் இணைக்கும் சாம்பல் குருவி சாரல் மழைக்காலத்து மஞ்சளும் கருப்பும் பழுப்புமான வண்ணத்திகள் அலை பாய்ச்சல் மலைப்பாதையின் இடுக்குகள் சலசலப்புள்ளவை. மழைக்காலத்தில் உருட்டுக்கல் தவசிகள் காணாமலாகிவிடுவர். சப்பைக்கல் தான் எப்போதும் ஒரு பிடி இருப்பு. அந்தக் கல்லில் குத்துக்காலிட்டு துவைத்து வேறு பக்கம் குளிக்கப் போய்விட்டான். கேரட் முட்டைகள் ஏற்றுவதற்கு செல்ல வேண்டும் என்றிருந்தான். கொஞ்ச நேரத்தில் அவன் இருக்கிறானா சென்றுவிட்டானா தெரியவில்லை. தேக்க நீரின் மேலேடு கண்ணாடி சரிவான எதிர்மலையில் மேகங்கள் இறங்குகின்றன. அந்த பருத்திக் கணக்கில் துவைக்க முடியாது. வாளிக்குள் அவன் துவைத்துப் போட்டத் துணிகள் முறுங்கிக் கிடந்தன. கண்ணாடியின் சில்லிப்பில் இவளுக்குக் குளிக்க முடியாமலிருந்தது. மார்பு வரை இறுக்கியப் பாவாடையுடன் சில்லிப்பின் மீது கால்களை வைப்பதும் எடுப்பதுமாக இருந்தாள்.இனியும் முடியுமென்று தோன்றவில்லை. கணவன் வெந்நீர் விளாவுவது ஞாபகத்திற்கு வந்தது. எதற்கு கட்டிவைத்தார்கள். அழுகை முட்டியது. மளிகைக் கடைக்காரன் வசூலுக்கென்று அவளை அவள் வீட்டிலேயே கைவைத்த போது அவனால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவனுடைய வளைவு நெளிவுகள் அவளுடைய புரிபாட்டிற்கு வந்த போது அவன் காலில் விழுந்துவிட்டான். மளிகைக் கடைக்கானோடுக் கட்டிலில் கிடக்கும் போது சாளரத்தின் வழியாக அவனிருப்பதை இவர்கள் சட்டை செய்தது கிடையாது. வியாபார விருத்தி அடைய புதுமுகங்களை அறிமுகப்படுத்தினான் கடைக்காரன். இவள் குதித் காலையும் தள்ளிய கைகளையும் வேட்டியால் முடைந்து படுத்துப் போனவர்கள் நெளிவுக்காரனை அடித்தே விரட்டியிருந்தார்கள். அடத்தை விட்டு குடிக்கக் கற்றுக் கொண்டாள். வலியைத் தாண்டி வளைந்து கொடுக்க முட்டக்குடித்தாள். சரி சரி வெந்நீர் போட்டுக்கலாம் என்ற குரலில் கண்ணாடியை உதைத்துவிட்டாள். அவளது மார்பில் ஒரு திருக்கம் வாளியைத் தூக்கி இடுப்பில் வைத்தவள் துண்டை மார்புக்கு போட்டுக் கொண்டாள்.

ஆடாத விளக்கின் ஒளி சோர்வுற்ற இமைகள் ஒட்டிக் கொண்டன. வெயில் கரைமணலாக அவளைப் புதைத்துக் கொண்டிருந்தது. உப்புத் துகள்கள் ஏறி நரம்புகள் முறுங்கின. மூளையின் பின் பாகத்தை பெயர்த்து விடும்படி கடிகாரம் அதிர்ந்தது. நாலைந்துபேர் ஒன்றாக அவளுடைய

மாமிசத்தை சுவைத்துக் கொண்டிருந்தார்கள். ஒருவள் அவளது வாயில் ம்மை ஊற்றினான். கீறிறந்த வேகம் இரண்டு அக்குளிலும் மார்பின் நடுவிலும் இருந்தது. உள்ளே இத்தனைப் பேர் இருந்தாலும் சாளரத்துப் பக்கம் எந்த நிழலுமில்லாதது அவளுக்கு ஒரு நிம்மதி. நரம்புகள் அறுந்து விட்டன. சதையைக் கூட்டித் துளையைச் செய்கிறார்கள். உடலைவிட்டு பறக்க வேண்டும். கடிகாரம் பல துருவங்களிலும் பயணப்பட வேண்டும். மூளை அகாலம் திறந்தது. முகத்தை வழித்து நொடிக்கும் அம்மா, புத்தகப் பையை தலையில் மாட்டி தெருவீல் இறங்கி கையசைக்கும் தங்கை வயிறு புடைத்துத் தொட்டியில் உறங்கும் தம்பி தள்ளாடி வாசலில் விழுந்துகிடக்கும் அப்பாவின் பினாத்தல். நடக்கும் போதே இவளைத் திருடிப் பறக்கும் காக்கைகள் அவள் மீதேறி திராட்சைகளைத் தின்ன நினைக்கும் ஆடுகள். தனியறையில் அவளைத் திறந்துவிட்ட அவன். அவன் அல்லது மரிக்கொழுந்து மரிக்கொழுந்து மரிக்கொழுந்து ஒரேயிடத்தில் அசைந்து நிற்க இருந்த முட்களால் விழித்துக் கொண்டாள். உள்நாக்கின் உலர்வு இருளை வறட்சியாக்கியது. போர்வை சிராய்ப்பாக இருக்கிறது. தலையணைக் கல்லில் தலை விண்ணென்று தெரிகிறது. இருளைக் கொஞ்சம் போலத் தின்றிருந்தன. சுவர்கள் ஆடும் உடலை நிறுத்தி சாய்விலிருந்து நேராக்கினாள். ஞாபகத்தை திரட்டி கதவுப் பக்கம் சென்றாள். ஒருக்களித்து சாத்தியிருந்ததில் சிறிய வெளிச்சம் கதவை மெதுவாகத் திறந்து பார்த்ததாள். முழுக்கக் கம்பளியைச் சுற்றிக் கொண்டு விடுவிடுவென அவன் நடந்து போவது தெரிந்தது. தாழிட்டுக் கட்டிலில் சாய்ந்தாள் பொருள்படுத்த முடியாத எண்ணங்கள் மெதுவாக வடிந்து பொருளற்ற மௌனத்தில் இமைகளைத் தைத்தது. கடிகார முட்கள் துவங்கியிருந்தன. பாம்புகள் பின்னிய வீட்டிற்குள் அவள் இருந்தாள். எல்லா நஞ்சும் இவளிடம் ஏறிவிட்டதில் ஒரு கனியாக மாறிக் கொண்டிருந்தாள். முன்னொரு காலத்தில் தேவதை ஒருத்தி அரக்கனுக்கு பயந்து மலையருவி ஒன்றில் தன்னுடைய கனியை ஒளித்து வைத்துப் போனதே அவள் என்று அவளுக்குப் பலரும் சொன்னார்கள். நாளாக நாளாக அவள் ஒளி கசிக்க ஆரம்பித்துவிட்டாள். அப்போது பார்த்து ஒரு நாள் நள்ளிரவில் பாம்பு நிலவை விழுங்கும் கொடுங்காலத்தை நிமித்திகன் உரைத்தான். ஊரே ஒடுங்கிவிட்டது. பலபேருக்கு தாயத்துக்கள் கட்டியும் காய்ச்சல் போகவில்லை. சிலபேர் பேதியில் மாண்டுபோனார்கள். நடுங்கி போன ஊர் கருவிலிருக்கும் தசையைப் பலி கொடுக்கச் சொன்னது. ஊரின் எல்லையில் நேரம் குறிக்கப்பட்டது. பிள்ளத்தாச்சி அழுகாமலிருக்க மந்திரம் தரித்தார்கள். இவள் ஓடிபோய் பாம்பு வீட்டில் அடைந்தாள். பாம்புகள் நெளிந்தன. அவள் உடல் பிரகாசித்தது. அவள் மேல் விழுந்த பாம்பொன்று கருகுகிறது. அவள் புரிந்து கொண்டாள். ஆடையை முழுக்க உரித்து வீசினாள். பளிரீக்கும் நிலா பிறந்தது. அக்கா என்று விம்மி அவளுடைய தங்கை கட்டிப்பிடித்துக் கொண்டாள். தங்கையின் வயிற்றில் பிள்ளை சுகமாய் புரண்டது. விலுக்கென்று விழித்தாள். நெற்றி வியர்த்திருந்தது. கதவில் லேசான வெளிச்சம். உடல் இப்போது அதிகமாகத் தள்ளாடியது. கதவைத் திறந்தாள். வெளிச்சம் விட்டிருந்த

காலை. கம்பளியைத் தலைக்கும் போர்த்தி திண்ணையில் அவன் உறங்கியிருந்தான். தன் ஆசைக்குக் கட்டுப்பட்டு மதுபோத்தலை வாங்கி வைச்சொல்லுவதன் மூலம் அவனுடைய காலம் மிகவும் கூர்மையாகத் தன்னுடைய காலத்தைத் துளைத்துவிடுமோ யோசிப்பில் ஒரு பச்சைக்கிளி குறுக்காக வெட்டிப்போனது.

சடலங்கள் எரியூட்டப்படுவதில் வியர்க்கிற நகரத்தின் மேல் பரந்த நீலம். கடற் பிரதேசங்களில் அழுத்தமான நீலம். பூப்பிற்கு முன்னும் பின்னும் அவளுடைய தகைமை அப்படிப்பட்டது தான். அவளுக்கு முதல் தம்பி அப்பன் வழியிலும் பிறகு இருவர் தாயின் வழியிலும் கிடைத்தவர்கள். இசையின் வெளி அவளுக்குப் புதியது என்றாலும் அவளால் தலைசாய்த்து குத்துக்காலிட்டு தன்னை மறக்க முடிகிறது. கடந்து செல்லவும் இருந்து கழிக்கவும் அவளுடன் கோப்பைகளும் உண்டு. ரசவாதம் மிக்கது. அது உடலை உறிஞ்சி வீசிவிட்டுச் சென்ற பிறகு அலையடங்கியக் கரையில் மெல்ல ஏறி வருவாள். மறுபடியும் மரப்பாச்சியை வைத்துக் கொள்வதிலிருந்து துவங்குவாள்.

ஊரின் தலையில் புழுக்கூட்டினை ஏற்றிவிட்டு உயர்ந்தரக இலைகளை ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலைகளின் இருள்நேரத் தரகுகளைப் படம் பிடிப்பதற்காக அவள் பணிக்கப்பட்டிருந்தாள். இந்த சவால் மிக்க பணியின் பின்னணியைச் சொல்வதற்காக அவள் அழைக்கவில்லை. அவன் நம்பியது வேறு. அதை உருவகப்படுத்த முயன்றால் அவளின் கொடியக் காட்டுக்கள் அவளின் கிளைப்பக்கவாட்டில் அவனும் முளைத்திருந்ததை அவள் பார்க்கவில்லை என்பதாக அவனே ஒப்புக் கொள்வதாகச் சுருக்கமாக முடித்துக் கொள்வான். இது ஒருவகையில் முன்னறிவிப்பு அவளுடைய தொலைபேசி எண்களைப் பெட்டிக்கடை ஒன்றில் அழுத்திக் கொண்டிருந்த பொழுது பக்கத்தில் இருந்தவனை எங்கோ பார்த்திருக்கிறான். ஆமாம் அவன் அவனது பால்ய சிநேகிதன். வாழைப்பழத்தை நிதானமாக விழுங்கிக் கொண்டிருந்தான். வெளியூரில் தொலைத்துக் கொண்டவன். அவர்களின் ஒருவன் இறந்த போதும் அவன் வந்திருக்கவில்லை. தொலைபேசியைத் தொங்கப் போட்டு அவனை நெருங்கினேன். திடகாத்திரமான தோற்றம் இப்போது தொளதொளப்பாக இருந்தது. அவனிடம் சிலந்தி நசுங்கிய வாசனை நிதானமாக அவனைப் பார்க்கையில் அலட்டலில்லாமல் மேலும் ஒரு பழத்தை விழுங்கி சொல்லு இங்கேயே தான் இருக்கியா என்றான். சற்றைய நேரத்தில் அவனது முகவரியுடன் கடந்தான். மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அவனைப் பார்க்க வருவதாகச் சொன்னான்.

முரட்டுக் கற்களும் வறண்ட புல்லும் இருக்கக் கூடிய அவள் வீட்டின் வெளியிலேயே தேயிலை நீரை வடிகட்டி சிறிது எலுமிச்சம் பிழிந்து அவனுக்கும் ஒரு டம்ளர் தந்தாள். உற்சாகம் என்ற சொல்லுக்கு பொருள் அவள் முகம் என்றிருக்க வேண்டும். மூன்று நான்கு பேர் தனது நடவடிக்கைகளை கண்காணிப்பது இப்போது பேசுவது தகுமா என்பதில்

அவள் இருந்தாள். தெருவில் டயரை ஓட்டிக் கொண்டிருந்த சிறார்களுக்கு [illegible]. சிறுமிகள் டயரை விரட்ட முடியாத குழப்பத்தில் [illegible] பார்த்து [illegible] தனது ஓட்டு வீட்டினுள் புகும் [illegible] குரலில் விளிக்கிறாள். மேற்கூரையின் [illegible] கூட்டமாகக் கலைந்து அடங்கியது. பள்ளத்தில் பன்றியை விரட்டிக் கொண்டு ஒருவன் ஓடினான். நம்ப முடியவில்லை என்ற சொல்லின் அர்த்தத்தை அது தன்னைச் சுழித்துக் காட்டும் தருணம் மட்டுமில்லை அதற்குள் வன்முறையும் நுண்ணலகும் இருப்பதை இப்போது வெகு தெளிவாகப் புரிகிற அளவுக்கு எதுவும் நடக்கவில்லை என்றாலும் அச்சொல்லைப் பற்றியதான அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமகியும் தன்னை நிலை குலைய வைக்கின்றது என்பதிலிருந்து அவன் பேசத் துவங்கக் கூடும்.


நேரம் கடந்திருக்க வேண்டும். அவனது இருப்பில் சிறிய அசைவு ஏற்பட்டதை விசுக்கென்று உணர்ந்த போது வேறெங்கோ பார்த்தாள். அவளிடம் பேசி விட்டேனா என்ற குழப்பம் அவனுக்குப் பிடித்தது. எந்த வாசனையுமில்லை. மாலை வெயிலின் முடிவில் குளிர் காத்திருப்பதை உணர்கிறான். தனது தொண்டையைச் செருமிக் கொண்டாள். நல்ல வேளையாக அப்படிச் செய்தாளென்றிருக்கிறது. அவளது உலகில் நுழைவதற்கான பதாகை அவனுடைய தோளில் இல்லை பால் இருக்கிறது. அவள் அயர்ச்சியோடு பெருமூச்செறிந்தாள். அவன் துயரத்துடன் வெளியேறிச் செல்ல வேண்டிய தருணம் அது. கூரையின் அடியில் படபடப்பும் புழுதியும் அங்கிருந்து நெருங்கும் நுரையுமான பாதையில் எகிறி எகிறி நடந்தான். வீதியில் முளைத்துக் கொண்டிருந்த இருள் ஓரளவு அவனுக்குப் பாதுகாப்பானது எழுதியவற்றை அவளிடம் கொடுத்தது ஞாபகம் இருக்கிறது. அது அவன் கைகளில் வந்தது ஞாபகமில்லை. நடையிலேயே பிரித்துப் பார்த்தான். [illegible] என்று அவள் கைப்பட கலைப்பிட்டிருந்தாள். அவன் ஆசையோடு [illegible] வாணலி என்பதைத்தான். இவள் எந்த நிலையில் நுழைந்தாள் என்று யூகிப்ப காற்றுக்குள் கடலையை வறுக்கத. அவன் கைகள் நிற்கவில்லை. [illegible] காற்றோடு கலந்துவிட்டது. ஆமென்.



எச்.முஜீப் ரஹ்மான்

சரந்தீபில் மஹாவம்சம் தேடி

(இலங்கை பயணத்தை முன்வைத்து)



I

இலங்கை பயணம் என்னில் பல மாற்றங்களை உருவாக்கியுள்ளது. பயண அனுபவம் படைபூக்கத்துக்கு உந்து சக்தியாய் இருக்கும் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஜெயமோகன், கோணங்கி, விக்கிரமாதித்தன், கைலாஷ் சிவன் முதலானோரை பார்க்கிற போது இந்த கருத்து ஊர்ஜிதமாகிறது.பயணம் சிந்தனையே புரட்டிப்போடும் வல்லமை உள்ளது என்பதை நானும் சொல்லவேண்டியிருக்கிறது. பத்து நாள் இலங்கைப் பயணம் அரபியில் வஹ்ம் என்று சொல்லும் பேதபுத்தியை தெளிவுப்படுத்தியுள்ளது. இது காலம் வரை சொல்லப்பட்ட வரலாறுகளும், கதைகளும் எல்லாம் கற்பிதங்களை அடிப்படையாக கொண்டவை என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்து கொண்டேன்.

நான் குமரி மாவட்டத்தில் பிறந்தவன் என்ற திமிர் எனக்கு உண்டு. ஏனெனில் வரலாற்றில் எந்த ஆட்சியும் குமரியை அடிமைப்படுத்தியதில்லை. பல ஆண்டுகளுக்கு முன்பு நண்பர் செல்வேவிஸ் கொம்பியே என்ற கவிதை தொகுப்பு ஒன்றை

வெளியிட்டிருந்தார். அதில் அவர் கூறும் போது மலைத்தமிழ் என்ற சொல்லாடலை பயன்படுத்தி இந்த மொழி மலையாளமும் இல்லை தமிழும் இல்லை. இது ஆதி மொழி என்று சொல்லிச் சென்றது எனது நினைவு பரப்பில் இருக்கிறது. குமரிக்கண்டம் குறித்த பல விசயங்களும் தமிழ் போன்றதொரு ஆதிமொழியை சொல்கின்றன. இன்று விளங்கோட்டி காலகாலிலும் இலங்கையில் போகும் தமிழ் மொழிக்கும் ஏதோ ஒரு தொடர்பு இருக்கிறது. வழக்காற்றுகள், சொல்லாடல்கள், பழமொழிகள் மட்டுமல்லாது பண்பாட்டு ஊடாட்டமும் இருக்கிறது. இந்த ஆதிமொழியில் இருந்து தான் தமிழ், மலையாளம், ஆரிய, பாரசீகம், தெலுங்கு போன்ற மொழிகள் தோன்றி உள்ளன. திராவிட மொழிகள் பிற்பாடு தனி மொழிக்குடும்பமாகவும் செமித்திய மொழிகள் பிற்பாடு தனி மொழிக்குடும்பமாகவும் மாறினாலும் ஆதிமொழி குமரிக்கண்டத்தில் தான் இருந்தது. அங்கு உருவாகி பரந்தது. இன்னும் அந்த மொழியின் எச்சங்கள் இருக்கின்றன.

இலங்கையை பொறுத்தவரையில் தமிழர், சிங்களர், முஸ்லிம் என மூன்று இனங்கள் இருப்பதாக வரலாறு சொல்கிறது. ஆனால் தமிழர்களும், முஸ்லிம்களும் தமிழ் மொழி பேசுகிறார் என்று தான் நானும் நம்பினேன். ஆனால் இனப்பிரச்சனை இலங்கையில் எழுந்தபோது தமிழர்களிடம் இருந்து வேறுபட்ட நிலைப்பாட்டை கொண்டவர்களாக முஸ்லிம்கள் இருந்து வருகின்றனர். இது ஏன் என்று விளங்காமலே இருந்தது. யாழ்பாணத்தில் இருந்து எல்லா முஸ்லிம்களை வெளியேறுமாறு போராளிகள் சொல்லி வெளியேற்றிய துயர சம்பவம் வரலாற்றில் சர்ச்சை செய்யப்படாமலே போனது. தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமான உறவை பிரித்தாளும் சூழ்ச்சியால் அரசு பிரித்திருக்கலாம் என்று நானும் முன்பு நம்பினேன். முஸ்லிம்களுக்கு எதிராக படுகொலைகளை தமிழ்போராளிகள் நடத்தியதன் நோக்கம் இன்னும் எனக்கு விளங்காமலே இருக்கிறது. போர் முடிந்த சூழலில் அகதி முகாம்களில் எதிலிகளாக சிறைப்பட்டிருக்கும் தமிழ் மக்களை பார்க்கவேண்டும் என்ற உணர்வு எனக்குள் இருந்தது. இரத்தினகிரியில் இருக்கும் பாவா ஆதம் சுவடையும் என்னால் தரிசிக்க இயலாமல் போனது. அந்த மலையை கண்டு சென்றாலும் அங்கு போய் காலடிச்சுவடை என்னால் பார்க்க இயலவில்லையே என்ற ஆதங்கம் எழுந்துள்ளது. இந்த பயண அனுபவம் என்னில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றத்துக்கு பாவா ஆதம் மலை முக்கிய இடம் வகிக்கிறது.

குமரிக்கண்டத்தை லெமூரியா கண்டம் என்று அழைப்பார்கள். லெ என்றால் தி என ஆங்கிலத்தில் வரும் மூர்+எரியா = மூரியா என்றால் மூர்களின் இடம் என்று பொருள்வரும். மூர் என்பது யாரை குறிக்கிறது? மூர் என்பது

மூலவிடங்களை குறிக்கிறது என்று வரலாற்றாசிரியர்கள் சொல்கிறார்கள். இந்த மூரகளை தான் சோனகர்கள் என்று அழைக்கிறார்கள்.

எழுத்தாளர் கலையரசன் தமிழர்கள் ஆப்ரிக்காவில் இருந்து புலம் பெயர்ந்து தென்னிந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்ததாக சொல்கிறார். இதில் சில உண்மைகளும் உள்ளன. இன்னும் சிலர் குமரிக்கண்டத்தில் மனித இனம் தோன்றியிருக்கலாம் என்கின்றனர்.



சோனகர்களுடைய நம்பிக்கைப்படி ஆதிமனிதன் ஆதம் இந்த மலைபகுதியில் தான் சொர்க்கத்தில் இருந்து விரட்டப்பட்டதாகவும் அவர் தரைமார்க்கமாகவே நடந்து அரபியாவுக்கு சென்று அவரது மனைவி ஹவ்வாவை கண்டு அவர்களோடு குடும்பம் நடத்தி தான் இந்த மலைப்பகுதிக்கு நாற்பது தடவை வந்து சென்றதாகவும் அவரது இரண்டு மகன்கள் இராமேஸ்வரம் பகுதியில் அடக்கம் செய்யப்பட்டதாகவும் அரபு நூல்கள் தெரிவிக்கிறது. பிற்காலத்தில் ஆதமின் சந்ததியர் குமரிக்கண்டத்தில் இருந்ததாகவும் அவர்களை சந்திக்கவும் ஆதம் மலையை தரிசிக்கவும் புனித பயணம் ஆதமின் மத்தியதரைகடல், ஆப்ரிக்க பகுதி மக்கள் வந்ததாகவும் பின்னர் அதுவே வணிகமாக மாறியது என்றும் குறிப்புகள் உள்ளன. உலகின் முதல் நாகரீகமான சுமேரியர்கள் தான் ஆதத்தின் சந்ததியினரில் எழுத்துமொழியை கண்டடைந்ததாகவும் அவர்களே குமரிக்கண்டத்தில் தமிழ் போன்ற சோனக மொழியை பேசினார்கள். இந்த மொழியில் இருந்து தான் தமிழ் தோன்றி இருக்கிறது மத்திய கிழக்கு ஆசிய

நாடுகளின் வழித்தோன்றல்களாக சோனகர்கள் இருக்கிறார்கள். இவர்களது மொழியும், பண்பாடும், இனவியல் கூறுகளும், சமூக அமைப்புகளும், வரலாற்று தகவல்களும் சோனகர்களை தனி இனமாக தான் சுட்டிசெல்கிறது. இலங்கை சூழலில் தமிழர், சோனகர், சிங்களர் என்ற மூன்று இனக்குழுக்களின் இருந்தல் நடவடிக்கைகள், அரசுருவாக்க சிந்தனைகள், ஆட்சிகள் தனித்தனியாக தனி இனங்களாக அங்கீகரித்திருக்கிறது.

2

எனக்கு தொலைபேசி வாயிலாக இலங்கை நண்பர்கள் பயண ஏற்பாடுகளை செய்துள்ளதாக சொன்னபோது இலங்கை குறித்த எந்த முன்முடிவுகளும் இல்லாமல் இலங்கையில் என்ன மாதிரியாக பயணங்கள், நிகழ்ச்சிகள், கூடுகைகள், சந்திப்புகள் இருக்கவேண்டும் என்று மனதளவில் ஒரு சித்திரம் வடித்தேன். அக்டோபர் 16 முதல் அக்டோபர் 26 வரை பத்து நாள்கள் இலங்கையில் இருக்கவேண்டும் என்று விசா, விமான டிக்கெட்டுகள் தயாராயின. விமான பயணங்களோ கடல்கடந்து செல்லுதலோ என்னைப் பொறுத்தவரையில் புதிதில்லை தான். வளைகுடா நாடுகளில் பணிநிமித்தமாக பல வருடங்கள் அங்கே இருந்ததால் வருடம் தோறும் இந்தியாவுக்கு விடுப்பில் வந்து செல்வது வழக்கம். இலங்கை பயணம் குறித்து நிறைய நண்பர் எழுதவேண்டும் என்று அழுத்தம் தந்ததால் தான் இப்படி என்னால் எழுத முடிகிறது. ஆனால் வளைகுடா வாழ்க்கை குறித்து நான் இதுவரை எழுதவில்லை என்பது உண்மையாகும். சில சிறுகதைகளில் குறிப்புகளாக அந்த அனுபவங்கள் இருக்குமே அன்றி முழுமையாக எழுதவில்லை. ஆனால் தற்சமயம் பெருநிலம் என்ற நாவல் மூலமாக வளைகுடா அனுபவங்களை எழுதிக் கொண்டிருக்கிறேன்.

பயண அனுபவங்களை படிப்பதோடு நான் முடித்துக் கொள்கிறேனேயன்றி அதை எழுதுவதும் புதிய அனுபவமே. இலங்கையில் சிறுபான்மை சமூகமாக இருக்கும் சோனகர்களின் அரசியல் நடவடிக்கைகள் குறித்து நான் அவதானித்துக்கொண்டு தான் இருக்கிறேன். ஶ்ரீலங்காவானது பல்லின, பல் மத, பல் மொழி கொண்ட ஒரு பன்மைத்துவ சமூகம் அதில் சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பேகர்கள் என்போருடன் ஏனையோரும் அருகருகே நாடுதழுவிய ரீதியில் அளவில் செறிந்தும், பரந்தும் வாழ்ந்து வருகின்ற போதிலும் ஒருவொருக்கொருவர் புரிந்துணர்வு குறைபாட்டில் திளைத்துள்ளனர். ஒருவர் மேல் மற்றவரின் ஆதிக்க பயமும், தப்பபிப்பிராயங்களும், ஓரங்கட்டுதல்களும், சந்தேக உணர்வும் சமூகங்களுக் கிடையிலான சாந்தமான வாழ்க்கைக்கு பயமுறுத்துவதாக இருக்கின்றன. 40 வருட அரசியல் ரீதியான சுதந்திரமென்பது சமூகங்களுக்கிடையே அமைதியையும்,

இணக்கத்தையும் மேன்மை படுத்துவதற்குப் பதிலாக பிரச்சினைகள் ஒன்று குவிக்கப்பட்ட நிலையில் இருந்து வருகின்றன. இத்தகைய தன்மை சமூகங்களின் ஒரு பகுதியினர் பிரிந்து செல்வதற்கான தேவையை ஏற்படுத்தியுள்ளது போல தெரிகிறது. இருந்தபோதிலும் இலங்கை முஸ்லீம் காங்கிரஸானது இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டையும், அதன் இறையாண்மையையும், அங்கே ஐக்கியத்தையும் நிலை நாட்ட திடசங்கட்பம் பூண்டுள்ள அதே நேரத்தில் இலங்கையர் என்ற அடையாளத்தையும் கட்டியெழுப்புவதில் தன்னை அர்ப்பணிக்கின்றது. இவற்றுக்கெல்லாம் மேலாக இலங்கையின் அமைதிக்கும், அபிவிருத்திக்கும் மக்களின் ஒழுக்க, ஆன்மீகமும் வளர்ச்சி மிக முக்கியமானது என்ற அடிப்படையில் அது தொடர்பாக இலங்கை முஸ்லீம் காங்கிரஸானது மிகவும் உறுதிபாட்டுடன் இருகின்றது. ஒரு பகுதியினரின் மற்றவர் தொடர்பான மேலாதிக்க பயமானது சமூகங்களுக்கிடையேயான பொருள் செறிந்த அதிகார பகிர்வின் மூலம் நிவர்த்தி செய்யப்படலாம். இது பிராந்தியங்களின் ஐக்கியத்தை அவசியப்படுத்தியுள்ளதோடு அதனூடாக அதிகாரங்கள் மிக நேர்தியாக பரவலாக்கப்படலாம்.

இலங்கை நாட்டு பெரும்பான்மை மக்களைப் பொறுத்தவரை அவர்கள் “இலங்கையர்” என்ற ஆரம்ப நிலையில் இருந்து “சிங்களவர்” என்ற நிலைக்கு வந்து இப்போது “பௌத்தர்” என்று தங்களின் மத அடையாளத்தை முதன்மைப்படுத்தி இந்த நாடு சிங்கள பௌத்தருக்கானது என்ற புதிய நிலையை எடுக்கின்றனர். அதே நேரத்தில் சோனகர் இதுவரை “முஸ்லீம்கள்” என்ற நிலையில் இருந்து இப்போது “இலங்கையர்” என்ற நிலைக்கு திரும்ப முயற்சிப்பதை அவர்கள் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்றனர். அதாவது சோனகரின் புதிய நிலைப்பாட்டானது செயற்கையானது என்றும், ஏதோ ஒன்றை நிறைவேற்ற நாம் போடும் வேஷம் என்றும் கருதுகின்றனர். ஆகவே அவர்களின் கூற்றோடு ஒத்து செல்லுவது போல் சோனகர் நடவடிக்கைகளை முஸ்லிம்கள் அமைத்துக் கொள்வதென்பது சோனக சமூகம் நோக்கியதும் ஒட்டுமொத்த நாடு தொடர்பானதுமான பொறுப்பை தட்டிக் கழிக்க முனையும் செயலாகும்.

இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவர் மர்ஹூம் அஸ்ரப் அவர்கள் பல ஆளுமைகளைக் கொண்டவர், சமூகத்தின் பால் அதிக அக்கறை கொண்டவர், அதன் பிரதிபலிப்பாக நாட்டின் சிறுபான்மையினரின் உரிமைக்காக குரல் கொடுத்தவர், வாதத் திறமை கொண்ட ஒரு சட்டமேதை, கவிஞர், மேடை பேச்சாளர் இப்படி அவரின் திறமைகளை அடுக்கிக் கொண்டே

போகலாம். எனினும் முஸ்லீம்களுக்கென்று தனித்துவமான ஒரு கட்சி அமைத்து (கிழக்கு) முஸ்லீம்களை அரசியல் விழிப்புணர்ச்சி பெறச்செய்தவர் என்பதினாலேயே இலங்கை முஸ்லீம்களின் மனதில் அவர் அழியாத இடம் பிடித்துள்ளார்.

சோனகர்களுக்கென்று கட்சி ஒன்றை உருவாக்கினார், நாட்டின் அரசியல் சூழ் நிலை அவர்களுக்கு சாதகமாக இருந்ததினால் அக்கட்சியூடாக பேரம் பேசினார், நல்ல பல விசயங்களை செய்து முடித்தார். இது (துறைமுகத்தில்) வேலை வாய்ப்பளித்தல் என்ற சராசரி விசயத்தில் இருந்து கிழக்கிலே துறைமுகமமைத்தல், பல்கலைக் கழகம் நிறுவுதல் என்ற பெரிய விசயங்கள் வரை சென்றது. அவரின் இத்தகைய செயல்பாடுகளை கண்டு இவர் உயிரோடு இருந்திருந்தால் முஸ்லிம் சமூகத்துக்காக இன்னும் ஏதேதோ செய்திருப்பார், அதிலும் முக்கியமாக முஸ்லீம்களுக்கு சிக்கல் நிறைந்த காலப்பகுதியில் பாதுகாப்பு சம்பந்தமாக தீர்க்கமான முடிவோடு செயல்பட்டு பாதுகாப்பை உறுதி செய்திருப்பார் என்று முஸ்லீம்கள் இன்றும் நம்புகின்றனர். அதில் உண்மை இல்லாமலும் இல்லை. ஆனால் அவரினால் முன்னெடுக்கப்பட்ட அரசியலினால் அத்தகைய நிலைமைகளை அடைய முடிந்திருக்குமா என்றால் அதற்கு இல்லை என்ற சாதரண பதில் ஒன்றை கூறிவிடலாம். இந்த முடிவுக்கான காரணங்களாக இலங்கையின் அரசியல் போக்கும் அதிலே பெரும்பான்மை இனத்து அரசியல்வாதிகளின் மனநிலையும், சிறுபான்மையினரின் அரசியல் தெளிவின்மையும் அதனால் ஏற்பட்ட அசாதாரண நிலையும் என்ற சிலவற்றையாவது தெளிவாகக் காணக் கூடியதாக இருகின்றது.

மர்ஹூம் அஸ்ரப் அவர்கள் கிழக்கின் (சாதாரண) முஸ்லீம்களுக்கு மத்தியிலே அரசியல் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார் என்றால் அது அவரின் தமிழ் அரசியலுடனான நீண்டகால தொடர்பின் பிரதிபலிப்பாகத்தான் அமைந்தது. அஸ்ரப் அவர்கள் இலங்கை முஸ்லீம் காங்கிரஸை உருவாக்க முன் உண்டாக்கிய அரசியல் களம் முஸ்லீம் ஐக்கிய முன்னணி (Muslim United Front) என்பதே. அந்த காலகட்டத்தில் இலங்கையின் பன்மைத்துவ அரசியலில் பங்குபற்றி அதனூடாக தம்மினத்தின் (சோனகர்) நலன் காத்தல் என்ற நிலைப்பாட்டுக்கு பதிலாக, தமிழ் அரசியலின் மாதிரியை பின்பற்றி மத அடையாளத்துடான (இனத்துவ) அரசியலை முன்வைத்ததும், அன்றைய நாட்டின் அரசியல் சூழ் நிலை இந்த நிலைப்பாட்டின் நீண்டகால சாதக பாதகங்களை அடையாளங் காணக்கூடிய சந்தர்ப்பத்தினை அவருக்கோ அல்லது அவரின் உள்வட்ட (inner circle) நபர்களுக்கோ அளிக்கவிலை என்பதாலும் தம் அன்றைய அரசியல் நிலைப்பாடு முழு நாட்டு முஸ்லீம்களின் மேம்பாட்டுக்கான, பாதுகாப்புக்கான நிலைப்பாடாக

அர்த்தப்படுத்திக் கொள்ள காரணமாகியதும் ஒரு முக்கிய அரசியல் தவறாகும்.


இந்த முதல் தவறினால் சோனக சமூகத்தின் அரசியல் முன்னோடிகள், ஜிஸி ஜாயா, சர் ராசீக் பரீத், பிற்காலத்தில் கலாநிதி பதியுதீன் முஹம்மத், பாகீர்மாக்கார், ஏ.சீ எஸ்.ஹமீத், எம்.எச் முஹம்மத் போன்றோரின் அசைக்க முடியாத , தீர்க்கதரிசனமான அரசியல் நிலைப்பாடான ஐக்கியத்தை வலியுறுத்தும், அதிலே நேரடி பங்கு கொள்ளும் முகமாக நாட்டின் பிரதான தேசிய அரசியல் கட்சிகளுக்கூடாக அரசியலில் பங்கெடுத்தல் என்ற நிலையை புறந்தள்ளியதோடு மாத்திரமல்ல, சிங்கள அரசியல்வாதிகளால் புறந்தள்ளப்பட, மறக்கப்பட்ட சிங்கள மக்களும் இருக்கிறார்கள் என்பதையும் மறந்து, தனித்துவ (இன) மத அடையாள அரசியலில் மூழ்கி முஸ்லீம்களை தேசிய அரசியலில் இருந்து தனிமைப்படுத்தும் நிகழ்ச்சியே அனேகமாக நடந்து முடிந்ததுள்ளது எனலாம்.

அநுராதபுர சியாரம் உடைப்புடன் ஆரம்பமாகிய முஸ்லீம்களுக்கு எதிரான இன,மத குரோத நடவடிக்கைகள் இன்று வரை அங்கொன்று இங்கொன்றாக நடந்தேவருகின்றன. இத்தகைய அடாவடித்தனங்கள் தேவைப்படும் காலங்களில் மாத்திரம் சற்று ஓய்வெடுப்பதை ஆபத்தின் நிரந்தர மௌனிப்பாக நாம் அர்த்தப்படுத்திவிடக்கூடாது. அவர்களை நோக்கிய ஆபத்து முற்றாக அகலவில்லை என்பது மாத்திரமல்ல தேவைப்படும் பொழுது அது முழு வேகமாக செயல்பட ஆயத்த நிலையில் உள்ளதையும் மறத்தலாகாது.

உதாரணமாக பர்மாவின் கசாப்புக் கடைக்காரன் (Butcher of Burma) என வர்ணிக்கப்படும் அஸின் விராத்துவின் இலங்கை விஜயம் பர்மாவின் 969 இயக்கம், இலங்கையின் BBS இயக்கங்களின் பார்வையில் வரலாற்று சம்பவம் ஒன்று இனிதே நிறைவேறிய அம்சமாகும். விராத்துவின் பயணத்தை தடுக்க, அவரின் பயணத்துக்கு எதிராக குரல் கொடுக்க சோனகர் கட்சி தலைமைகளால் முடியவில்லை என்ற நிலையில் அதை கையில் எடுக்க முனைந்த முஸ்லீம் சமூக, சமய நிறுவனங்களின் மீது கரி பூசும் விதத்தில் சக்தியுள்ள சம்பந்தப்பட்டோர் அனைவரும் எவரின் வேண்டுதலையும் சட்டை செய்யவில்லை. இது அமைதியை விரும்பும் இலங்கையர் அனைவரையும் வெட்கித் தலை குனியவைத்துள்ளது.

விராத்துவின் வருகையை ஒன்றில் முஸ்லிம் சமூக, சமய நிறுவனங்கள் பெரிது படுத்தி இருக்கக் கூடாது. அப்படி பெரிதுபடுத்தி இருக்காவிட்டால் வந்தார், ஏதோ உளறினார், சென்றார் என்று இருந்தார்கள் என்ற ஒரு திருப்தியான பதிலாக அது அமைந்திருக்கும். அல்லது பழத்தட்டில் வைத்து நுனியால்

போர்த்தி கொடுக்கப்பட்ட "பாதுகாப்பு வேண்டுகோளு"க்கு பதிலாக முழு அளவிலான எதிர்ப்பார்பாட்டம் ஒன்றை செய்திருக்கலாம். அத்தகைய ஜனநாயக ரீதியிலான ஆர்பாட்டம் ஒரு குற்ற நடவடிக்கையல்ல, இலங்கை அரசாங்கத்தின் விஷேச அனுமதி தேவைப்படும் ஒரு விஷயமுமல்ல. போட்டிபோட்டு பிற மதத்தவருக்கு "இப்தார்" கொடுக்க முன்வந்த முஸ்லிம் சமய அமைப்புக்கள் பிற மதத்தவரை, குறிப்பாக பௌத்தரை சேர்த்து இத்தகைய ஆர்ப்பாடம் ஒன்றை செய்யமுடியுமா என்று ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. அப்படி ஓர் ஆர்ப்பாட்டம் செய்திருந்தால் அது உலகத்தின் கவனத்தை எட்டியிருக்கும். நாட்டின் ஐக்கியத்தில் முஸ்லிகளுக்கு இருக்கும் சிரத்தையை அது காட்டியிருக்கும் என்பதோடு ஏற்படப்போகும் பிற்கால ஆபத்தை முழு உலகத்துக்கும் அப்போதே தெரியப்படுத்தலாக அதை அமைத்திருக்கலாம்.



இப்படியாக சோனக சமூக, சமய நிறுவனங்கள் தமது கடமைகளை மறந்து அரசியல் நடவடிக்கைகளில் இறங்கி மூக்குடைபடுவதும், முஸ்லீம்களை பிரதி நிதித்துவப்படுத்துவதாக சொல்லும் அரசியல் கட்சிகள் சமூகம் குறித்த தமது முக்கிய பொறுப்புகளை இலகுவாக இந்த சமூக, சமய நிறுவங்களிடம் தள்ளிவிடுமளவுக்கு அக்கட்சிகளின் முக்கியஸ்தர்களும் அரசியல் ரீதியில் செல்லாக் காசாக இருப்பதும் கவலைக்குரிய விசயங்களாகும். வெறும் முழு, அரை மந்திரி பதவிகள் மூலம் இவர்களின் சமூக அக்கறையை மழுங்கடிக்கலாம் என்பதை ஆளும் வர்க்கம் சரியாக அடையாளம் கண்டு தமது திட்டங்களை வகுப்பதும், நடைமுறைப்படுத்துவதும் அதை அறிந்தும் தமது சமூகம் தொடர்பான பொறுப்புகளை இந்த உயர் பதவிகளுடன் முஸ்லீம் அரசியல் வாதிகள் சமரசம் செய்து கொள்வதும் சோனக சமூகத்தை இன்னும் கீழ் நிலைக்கே கொண்டு செல்கின்றது.

சாதாரண முஸ்லீம் குடிமக்களைப் பொறுத்தவரை இது சிறுபான்மை மீதான பெரும்பான்மையின் கபடதனத்தினூடான மேலாதிக்கம். சிங்கள பௌத்த அரசியல்வாதிகளைப்

பொறுத்தவரை அவர்களின் இருப்புக் குறித்த (காரணமற்ற) பயத்தின் காரணமாக உடனடியாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள். இந்த இருவகை நிலைப்பாட்டுக் கிடையேயும் ஒரு சமநிலை பேணப்படாதவரை இத்தகைய விசயங்கள் தொடரவே செய்யும். ஆகவே இதை சரியாக புரிந்து கொள்ளலும், அதிலிருந்து அவர்களை பாதுகாத்துக் கொள்ளலும் என்ற விடயத்தில் சோனகர் எடுக்கும் முடிவுகள் மிக முக்கியமானவை. சிறுபான்மை இனத்தின் மீதான பெரும்பான்மை இனத்தின் இப்படியான நிலைப்பாட்டுக்கான காரணம் என்ன? சிறுபான்மை முஸ்லீம்களின் பங்கு எந்தளவு இந்த விசயத்தை கூர்மைப் படுத்தியுள்ளது, இதிலிருந்து மீள அவர்கள் செய்ய வேண்டிய அல்லது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எவை? என்பதை இத்தருணத்தில் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

3

இலங்கைக்கு மதுரை சர்வதேசவிமான நிலையத்தில் இருந்து ஒரு மணிநேரம் கூட ஆகவில்லை. கொழும்பு விமான நிலையத்தில் இறங்கி எமிக்கிரேசன் பார்மால்டிகளை முடித்து வெளியே வந்த போது சிறிய அட்டையில் பேராசிரியர் முஜீப் ரஹ்மான் என்று எழுதி உயர்த்தி பிடித்திருந்த இடத்துக்கு வந்தபோது நண்பர்கள் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார்கள். என்ன நாம் அரசியல்வாதி ஆகிவிட்டது போல் தெரிகிறதே என்று மனதுக்குள் நினைத்தவாறு காருக்குள் நுழைந்தேன். நான்கைந்து பேர் இருந்தார்கள். விசாரிப்புகள், குசலம், விருந்தோம்பல் என்று அரைமணி நேரத்தில் வீடொன்றின் முன் கார் நின்றது. அங்கிருந்து இன்னும் பல நண்பர்கள் புடைசூழ பயண விசாரிப்புகளுடனும், கைகுலுக்கல்களுடனும் வீட்டுக்குள் நுழைந்தேன். மணி மதியம் இரண்டை தாண்டியிருந்தது. கலகலப்பான பேச்சுகளுக்கு நடுவே மாபெரும் விருந்து உபசரணை நடந்தது.நிறைய பேர் போட்டோ எடுத்துக்கொண்டார்கள். சற்று நேரத்தில் இலங்கை அமைச்சர் (பெயர் வேண்டாம் என்று நினைக்கிறேன்) அலுவலகத்தில் இருந்து வந்திருந்த நண்பர் ஒருவருக்கு அழைப்பு வர அவர் கைபேசியை என்னிடம் தந்தார். இலங்கைக்கு வந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைவதாக தெரிவித்த அவர் எனது போக்குவரத்துக்காக டயோட்டா பிராவோ கார் ஒன்றை ஓட்டுநருடன் பத்து நாளைக்கு பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். மிகப்பெரிய பிரச்சனையான பயண போக்குவரத்து கிடைத்தமையால் இலங்கை முழுவதும் பயணம் மேற்கொள்ள முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது.

மதிய விருந்து முடிந்து மாலை 4 மணி அளவில் நண்பர் ஒருவரின் வீட்டில் முதல் கூடுகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுமார் இருபது பேர் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். தற்காலத்தின் தமிழ் இலக்கிய போக்குகள் என்ற விசயம் குறித்து ஒரு மணி நேரம் பேசினேன். பின்னர் அரைமணி நேரம் கலந்துரையாடல் நடந்தது. பின்னர் இரவு விருந்து நண்பர் ஒருவரின் வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அன்றைய தினம் கலகலப்பாக சென்றது. நானும் ஓய்வு எடுத்துக்கொண்டேன். அடுத்த தினம் கொழும்பு பல்கலைகழகத்தில் ஒரு கூடுகைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக நண்பர் தெரிவித்தார. காலையில் குளித்து முடித்து டிபன் சாப்பிட்டுவிட்டு கொழும்பு மாநகரை வாகனத்தில் சுற்றிப்பார்த்துக்கொண்டு பதினொரு மணியளவில் பல்கலைகழக பேராசிரியர்கள் சண்முக லிங்கன், ஏனாதிதாசன், கந்தையா, ஞானசேகரன் போன்றோர்களை கண்டு கலந்துரையாடிவிட்டு உடனே சுமார் ஐம்பது பேர் அமரும் மீட்டிங்ஹாலில் எனது உரை தொடங்கியது. விமர்சன முறையியலும், கோட்பாடுகளும் என்ற தலைப்பில் ஒரு மணிநேரம் உரையாற்றினேன். பின்னர் மாணவர்களுடன் ஒரு மணி நேரம் கலந்துரையாடிவிட்டு மதிய விருந்துக்கு கொழும்பு ஹோட்டல் ஒன்றுக்கு செல்ல தயாரானேன். மவுண்ட் பேலஸ் ஹோட்டலில் சில நண்பர்கள் ஒன்று கூடி எனக்கு விருந்தளித்தனர். அதன் பின்னர் இஸ்லாமிய நண்பர்கள் அழைப்பின் பேரில் (றவூப், நளீம், அஸ்மத், மஜீத் இன்னும் சிலர்) ஒரு கூடுகைக்கு சென்றேன். இஸ்லாமியர்கள் சந்திக்கும் நெருக்கடிகள் என்ற தலைப்பில் உரையாற்றிவிட்டு அன்றைய தினத்தை வேறு கூட்டம் வேண்டாம் என்று சொல்லி ஓய்வெடுத்துக் கொண்டேன்.அன்று கலந்துரையாடல் சம்பந்தமான இஸ்லாமியரின் நிலை குறித்த விசயம் என்னை பாதித்தது.

இலங்கை முஸ்லிம்கள் 1400 வருட கால வரலாற்றைக் கொண்டுள்ளனர். அவர்களில் யாழ்ப்பாண முஸ்லிம்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலத்திலேயே மாநகரில் கடல் வணிகம் சம்பந்தப்பட்ட குடியிருப்பொன்றை உருவாக்கியிருந்தனர். முஹம்மது நபி (ஸல்) அவர்கள் மன்னர்களுக்கு இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளுமாறு அனுப்பிய கடிதங்களில் ஒன்று அனுராதபுரத்திலிருந்த இலங்கை மன்னருக்கும் அனுப்பப்பட்டிருக்கலாம். காலவோட்டத்தில் இலங்கையின் வடபகுதியில் வாழ்ந்த புராதன குடிகளாகிய நாகர்களில் அனேகர் இஸ்லாத்தை ஏற்றுள்ளனர். இதனால்தான் 9ஆம் நூற்றாண்டு முதல் 13ஆம் நூற்றாண்டு வரை முஸ்லிம்களின் பெரும் குடியிருப்புகள் அராலி முதல் மாதகல் வரை காணப்பட்டதாக வரலாற்றாசிரியர் அலக்ஸாண்டர் ஜோன்சன் குறிப்பிட்டுள்ளார். அதே வேளை இலங்கையின் கிழக்கு மாகாணத் தமிழர்கள் 9ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற சோழர் படையெடுப்புடன் கிழக்கு மாகாணங்களில் குறிப்பாக பொலநறுவ

திருகோணமலைப் பிரதேசங்களில் குடியேறியிருந்தனர். யாழ்ப்பாணத் தமிழர்களோ 1270களுக்கு பின்னர் தான் யாழ்ப்பாணத்தில் குடியேறியுள்ளனர். இவர்கள் தாம் தான் வடக்கு கிழக்கின் பூர்வீகக் குடிகள் என்று போலியான பிரச்சாரத்தை மேற்கொண்டு தமக்கென ஒரு தனிநாடு வேண்டுமென்று போராடினர். இவர்களை விட பூர்வீகம் உடையவர்களாகவும் 1400 வருட கால வரலாற்றைக் கொண்டவர்களாகவும் முஸ்லிம்கள் காணப்பட்டதால் முஸ்லிம்களை வடக்கு கிழக்கிலிருந்து அப்புறப்படுத்தி விட்டால் தமது கோரிக்கை வலுப்பெறும் என்று உணர்ந்தனர். அதனால் தான் 1985இல் யாழ் மத்திய கல்லூரியில் இடம் பெற்ற புலிகளின் கூட்டமொன்றில் முஸ்லிம்களைப் பற்றி கேள்வி ஒன்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த புலிகளின் யாழ் தளபதி மறைந்த கிட்டு 'முஸ்லிம்கள் எப்படி வந்தார்களோ அப்படியே செல்வார்கள்' என்று கூறியிருந்தார். வடக்கிலிருந்து முஸ்லிம்களை வேரறுக்க வேண்டுமென்று காலாகாலாமாக சில சாதித் தமிழர்களிடையே காணப்பட்ட சிந்தனை தான் 1990இல் செயல் வடிவம் கொடுக்கப்பட்டது.

கருப்பு செப்டம்பர் பற்றி அதிகமானவர்கள் அறிந்திருப்பீர்கள். 1971இல் ஜோர்தானில் பதாயீன் பதாஹ் பலஸ்தீன் விடுதலை இயக்கங்கள் செயற்பட்ட காலத்தில் அவர்களுக்கெதிராக தடையொன்று மன்னர் ஹுஸைனால் கொண்டு வரப்பட்டது. இதையடுத்து ஜோர்தான் இராணுவமும் பலஸ்தீன் போராளிகளும் பரஸ்பரம் மோதிக் கொண்டனர். இரண்டு பக்கமும் இழப்புகள் ஏற்பட்டது. இரு பகுதியினரும் முஸ்லிம்கள். இது ஒரு சகோதரப் படுகொலையாக அன்று விளங்கியது. இதனால் பலஸ்தீன் விடுதலை இயக்கங்கள் அங்கிருந்து வெளியேறி லெபனானுக்குச் சென்றன.

கருப்பு அக்டோபரும் ஒரு சகோதரப் படுகொலையின் ஞாபகார்த்தமாகவே இலங்கையில் அனுஷ்டிக்கப்படுகிறது. தமிழர்கள் முஸ்லிம்களை எவ்வாறு கருதுகிறார்கள் என்பது அவர்களுக்குத் தான் வெளிச்சம். ஆனால் முஸ்லிம்களை பொருத்தமட்டில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒரே மொழியைப் பேசும் இருவேறு இனத்தவர்களாக இருந்தாலும் தமிழர்கள் சகோதரர்களாக கருதப்பட்டார்கள். அவ்வாறு கூறித்தான் ஒவ்வொரு முஸ்லிம் உம்மாவும் 1990 வரை தமது பிள்ளைகளை வளர்த்தெடுந்தனர். அதனால் தான் புலிகள் முஸ்லிம்களை கொன்று குவித்த போதெல்லாம் சகோதர நல்லெண்ணத்துடன் முஸ்லிம்கள் நடந்து கொண்டார்கள். இறுதியில் பள்ளிவாசல்களும் கொலைக் களமாக்கப்பட்ட பின்னர் முஸ்லிம்களும் தமது பொறுமையை இழந்து செயற்படும் நிலைமை உருவானது.

இலங்கையில் கறுப்பு அக்டோபர் என்பது சகோதர இனப்படுகொலை இனச்சுத்திகரிப்பு அடக்குமுறை என்பவற்றுக்கு எதிரான ஒரு கண்டன நோக்குடன் முன்வைக்கப்பட்ட ஒரு போராட்டமாகும். கறுப்பு ஜூலை என்பது ஆண்டாண்டு காலம் மோதல் நிலவிய இரண்டு மொழி பேசும் வெவ்வேறு இனங்களுக்கிடையிலான மோதலையும் இழப்புகளையும் ஞாபகப்படுத்தும் ஒரு மாதமாகும். கறுப்பு ஜூலை யுத்தப்பிரகடனம் செய்த இரண்டு இனங்களுக்கிடையிலான இழப்புகளையும் கறுப்பு அக்டோபர் நிராயுதபாணியான அப்பாவிகளுக்கு எதிராக யுத்தப்பிரகடனம் செய்யப்படாமல் எதிர் பாராத விதமாக தாக்குதல்களை நடத்தி அவர்களை இனவழிப்புக்கும் இனச் சுத்திகரிப்புக்கும் உட்படுத்தியதையும் குறித்து நிற்கும். இனி கறுப்பு அக்டோபருக்கான காரணங்கள் என்ன? எவ்வாறு அது செயற்படுத்தப்பட்டது என்பவற்றைப் பார்ப்போம்.

1990 ஆம் ஆண்டு இந்திய இராணுவம் வெளியேறிதன் பின்னர் புலிகள் நகர்ப் பிரதேசங்களுக்குள் ஊடுருவினர். அவ்வாறு வந்த புலிகள் பல்வேறு பட்ட வரிகளை பொருட்கள் மீது விதித்தனர். செல்வந்தர்கள் கப்பம் பெறுவதற்காக கடத்தப்பட்டனர். இந்நிலையில் கப்பம் செலுத்த மறுத்த முஸ்லிம்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கிழக்கில் புலிகள் பல்வேறு அடாவடித்தனங்களில் ஈடுபட்டிருந்தனர். 1990 ஜூன் 11 அன்று மீண்டும் யுத்தம் ஆரம்பமான கட்டத்தில் சரணடைந்த 200 முஸ்லிம் போலீஸ்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கிழக்கில் முஸ்லிம்கள் அதிகமாக போலிஸில் இணைவதை சந்தேகக் கண்ணுடன் நோக்கிய புலிகள் அதனால் தமது இருப்புக்கும் ஆபத்து வருமென்று கருதினர். இதனால் தான் சரணடைந்த முஸ்லிம் போலிஸார் எல்லோரையும் சுட்டுக் கொன்றதுடன் தமது இயக்கத்திலிருந்த நூற்றுக்கணக்கான முஸ்லிம் புலி உறுப்பினர்களையும் கொன்றிருந்தனர். அதைத் தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் ஆத்திரமுற்றிருந்தனர். இது இவ்வாறிருக்க 1990.07.16 அன்று ஹஜ் சென்று திரும்பிய ஹாஜிகளும் அவர்களின் குடும்பத்தினருமாக 68 பேர் மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் வைத்து புலிகளால் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர் இதனால் ஆத்திரமுற்ற கிழக்கு முஸ்லிம்களில் சிலர் இராணுவத்துடன் சேர்ந்து புலிகளுக்கெதிரான தாக்குதல்களில் ஈடுபட்டனர்.

அதைத் தொடர்ந்து 03.08. 1990. ஆம் தேதியன்று இரவு இஷா தொழுகையில் ஈடுபட்டிருந்த 104 முஸ்லிம்கள் காத்தான்குடி மீரா ஜும்ஆப் பள்ளி மற்றும் ஹுசைனியா பள்ளி போன்றவற்றில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதலில் 6 வயதுக்கும் 14 வயதுக்குமிடைப்பட்ட 25 சிறுவர்கள் கொல்லப்பட்டிருந்தனர். இதனால் ஆத்திரமுற்ற முஸ்லிம்கள் சில தமிழ்ப் பகுதிகளிலும் தாக்குதல்களை நடாத்தியிருந்தனர். இப்படியான தாக்குதல்கள் ஆரம்பத்தில் புலிகளின் முஸ்லிம்களுக்கெதிரான செயற்பாடுகளை கட்டுப்படுத்தவில்லை. அதனால் மீண்டுமொரு தாக்குதலுக்கு புலிகள் திட்டமிட்டனர். அதன் பிரகாரம் 11.08.1990 அன்று ஏறாவூர் சதாமியாபுரம் காட்டுப்பள்ளி போன்ற பிரதேசங்கள் குறிவைக்கப்பட்டது. இரவு வேளையில் இப்பிரதேசங்களுக்குள் ஊடுருவிய புலிகள் பள்ளிவாசல் ஒலிபெருக்கியை எடுத்து புலிகள் ஊரைச் சூழ்ந்துள்ளார்கள்; எல்லோரும் பள்ளிவாசலுக்கு ஓடி வாருங்கள் என்று அழைப்பு விடுத்தனர். சூழ்ச்சியை அறியாத முஸ்லிம்கள் தமது பிள்ளை குட்டிகளுடன் பள்ளிவாசலை நோக்கி ஓடி வந்தனர். ஏற்கனவே மரங்களுக்குள் ஒழித்து நின்ற புலிகள் நிராயுதபாணியான பொதுமக்கள் மீது சுடத்தொடங்கினர். இறுதியில் 122 பேர் அநியாயமாகப் பலியாகினர். 65இக்கும் மேற்பட்டோர் காயமடைந்திருந்தனர். கர்ப்பிணி பெண்ணொருவரின் வயிறு கிழிக்கப்பட்டு சிசு வெளியே எடுக்கப்பட்டு சுவற்றில் அடித்துக் கொல்லப்பட்டது. அதைச் செய்தது பெண் புலி உறுப்பினர் ஒருத்திதான். பதிலுக்கு ஏறாவூர் முஸ்லிம்களும் தாக்குதலில் ஈடுபட்டதால் புலிகளின் தலைவர்களெல்லாம் கிழக்கு மாகாணத்திலிருந்து பின்வாங்கி யாழ்ப்பாணத்துக்கு தப்பிச் சென்றிருந்தனர்.

இந்நிலையில் யாழ் சென்ற கிழக்குப்புலிகள் வடமாகாண முஸ்லிம்களை அழிக்க வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர். இந்நிலையில் யாழ் கோட்டை இராணுவ முகாம் மீது தொடர்ச்சியான தாக்குதல்கள் இடம்பெற்று வந்ததால் புலிகள் முஸ்லிம்களை எதுவும் செய்யவில்லை. 1990 செப்டம்பர் 26 அன்று இராணுவம் கோட்டையிலிருந்து பின்வாங்கி மண்டதீவுக்குச் சென்றது. இராணுவ முகாம் மீதான தாக்குதல்கள் இல்லாத நிலையில் விமானத்தாக்குதல்களும் குறைவடைந்திருந்தது. இந்நிலையில் மீண்டும் முஸ்லிம்களை அழிக்க வேண்டுமென்ற கோரிக்கை புலிகள் மத்தியில் எழுந்தது. முஸ்லிம்களை வெளியேற்ற முன் அவர்களில் செல்வந்தர்களிடமிருந்து கப்பம் பெறவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதையடுத்து புலிகள் முஸ்லிம் செல்வந்தர்கள் 22 பேரையும் வாலிபர்கள் 25 பேரையும் கடத்திச் சென்றிருந்தனர். செல்வந்தர்களில் ஒருவரான அப்துல் காதர் சித்திரவதையினால் கொல்லப்பட்டார். ஏனைய 21 செல்வந்தர்களும் பெருந்தொகைப் பணத்தை கப்பமாக செலுத்திய பின்னர் ஒன்றரை வருடத்தின் பின் விடுவிக்கப்பட்டனர். வாலிபர்கள் எல்லோரும் கொல்லப்பட்டனர். இவ்வாறு

அபாயமான ஒரு சூழ்நிலையை உருவாக்கிய பின்னர் முஸ்லிம்களை படிப்படியாக வெளியேற்றும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

முதல் கட்டமாக சாவகச்சேரியில் 800 ஆண்டுகளுக்கு மேல் வாழ்ந்த முஸ்லிம்கள் 18.10.1990ல் வெளியேற்றப்பட்டனர். அதைத் தொடர்ந்து மன்னாரிலிருந்து முஸ்லிம்கள் 23.10.1990 அன்று 48 மணிநேர அவகாசம் வழங்கப்பட்டு வெளியேற்றப்பட்டனர். 26.10.1990 அன்று முல்லைத்தீவு மாவட்ட முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டனர். இறுதியாக 1380 ஆண்டுகளுக்கு மேல் வடக்கில் வாழ்ந்துவந்த யாழ்ப்பாண முஸ்லிம்கள் 30.10.1990 அன்று இரண்டு மணிநேர அவகாசத்தில் வெளியேற்றப்பட்டனர். வவுனியாவில் சாலம்பைக்குளம் ஆடுவெந்தபுளவு மற்றும் பாவற்குளம் முஸ்லிம்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டதையடுத்து வெளியேறியிருந்தனர். மொத்தமாக ஏறக்குறைய 85 ஆயிரம் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தனர்.

இவ்வாறு புலிகள் முஸலிம்களுக்கெதிரான இனச்சுத்திகரிப்பை செய்து முடித்தனர். மன்னாரில் இரண்டு பைத்தியம் பிடித்தவர்கள் கைவிடப்பட்டிருந்தனர். யாழில் 47 பேர் கைதியாக பிடித்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களைத் தவிர வேறு எந்த முஸ்லிமும் வடமாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இருக்கவில்லை. வடக்கிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டதால் கிழக்குப் புலிகள் சந்தோஷமடைந்திருந்தனர். இதனால் 1991 இல் பாரிய இனப்படுகொலை எதுவும் முஸ்லிம்களுக்கெதிராக இடம்பெறவில்லை. அதேவேளை கிழக்கு முழுவதும் முஸ்லிம்கள் கிளர்ந்தெழுந்து புலிகளுக்கெதிரான ஜிகாதில் ஈடுபட்டிருந்தனர். இதனால் தனிப்பட்ட சிறியளவிலான கொலைகளே முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில் 1991 ஜூலை 10 ஆம் திகதி ஆனையிறவு படைத்தளம் மீதான தாக்குதலை புலிகள் ஆரம்பித்திருந்தனர். முப்பத்தொரு நாற்கள் நடைபெற்ற இச்சண்டையில் 575க்கு மேற்பட்ட புலிகள் கொல்லப்பட்டிருந்தனர். ஏறக்குறைய 1500 பேர் காயமடைந்திருந்தனர். இப்பெருமிழப்பினால் தமிழீழ கோரிக்கையை வலுப்படுத்த மாற்று நடவடிக்கைகள் பற்றி பல மாதங்களாக புலிகள் ஆராய்ந்தனர். அதனடிப்படையில் 29.04.1992 அன்று பொலனறுவை மாவட்டத்திலுள்ள அழிஞ்சிபொத்தான கிராமம் தாக்கப்பட்டது. இத்தாக்குதலில் 56 முஸ்லிம் ஆண் பெண்கள் குழந்தைகள் ஆகியோர் கொல்லப்பட்டிருந்தனர். 15 பேர் காயமடைந்திருந்தனர். முஸ்லிம்களை பெருமளவில் கொல்வதன் மூலம் கொழும்பு முஸ்லிம்களை தமிழர்களுக்கெதிராக தாக்குதல்களை நடாத்தி விட்டு அதன்

மூலம் உயிரிழப்புகளை ஏற்படுத்தி இலங்கை தமிழர்களுக்கு பாதுகாப்பற்ற நாடு என்று உலகநாடுகளுக்கு காட்டி தமிழீழத்தை சர்வதேச தலையீட்டுடன் பெற்றுக்கொள்வது திட்டமாக இருந்தது. கொழும்பு தமிழர்களின் பிணங்களின் மீது தமிழீழத்தை கட்டியெழுப்பும் திட்டம் வெற்றிபெறவில்லை. முஸ்லிம்களும் பெரிதாக எதையும் செய்ய முன்வரவில்லை. வழக்கம் போல் முஸ்லிம் அரசியல்வாதிகள் கண்டன அறிக்கைகளை வெளியிட்டனர். ஆனால் புலிகளின் கொலைவெறியை அது அடக்கவில்லை.

இதனால் மீண்டுமொரு தாக்குதலை முஸ்லிம்கள் மீது மேற்கொள்ள திட்டமிடப்பட்டு 15.10.1992 அன்று பொலநறுவையிலுள்ள நான்கு முஸ்லிம் கிராமங்கள் குறி வைக்கப்பட்டன. பள்ளியகொடல்ல அக்போபுர அஹமட்புரம் பம்புரான போன்ற கிராமங்களில் நடுநிசியில் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல்களில் 171 முஸ்லிம்களும் 12 படையினரும் கொல்லப்பட்டனர். 83 பேர் காயமடைந்திருந்தனர். இச்செய்தியை கேள்விப்பட்ட கொழும்பு முஸ்லிம்கள் கொதித்தெழுந்தனர். அதேவேளை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்த ஒரு மாணவன் இதற்கெதிராக ஏதாவது செய்ய வேண்டுமென திட்டமிட்டு சகமாணவர்களின் உதவியை நாடினான். இறுதியில் அன்று பின்நேரம் இடம்பெற்ற கூட்டத்தில் ஆர்ப்பாட்டமொன்று செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. உடனடியான மாணவர்கள் தம்மாலான பணத்தை வழங்கினர். போஸ்டர்கள் பதாகைகள் தயாராகின. அக்டோபர் 18 அன்று ஆர்ப்பாட்டம் கொழும்பு பல்கலைக்கழக வளாகத்தில் இடம் பெற்றது. இவ்வார்ப்பாட்டத்தில் தமிழ் மற்றும் சிங்கள மாணவர்களும் கலந்து கொண்டதால் 2000 பேருக்கு மேற்பட்ட மாணவர் கூட்டம் நிறைந்திருந்தது. ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் பி.பி.சி, சி.என்.என் போன்ற செய்தித் ஸ்தாபனங்களும் கலந்து கொண்டிருந்தன.



எல்.ரி.ரி.ஈ. யின் இனப்படுகொலைக்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம் என்ற தலையங்கத்துடன் அவர்களுடைய தொலைக்காட்சி செய்தி ஒலி—ஒளிபரப்பாகியது. அதனால் மனித உரிமை அமைப்புகள் புலிகளின் சர்வதேச தொடர்பாளர்களை கேள்வி கேட்டு பின்னியிருந்தன.

இத்தகைய ஒரு நெருக்குதலின் பின்னணியில் இவ்வாறான கொலைகள் தொடரும் பட்சத்தில் தமது ஆதரவை இழக்க நேரிடும் என்று புலிகளுக்கு அந்நிறுவனங்கள் எச்சரிக்கை விடுத்திருந்தன. இதனால் முஸ்லிம்களை பாரியளவிலும் சிறிதளவிலும் கொல்லும் நடவடிக்கைகளை புலிகள் நிறுத்த வேண்டியேற்பட்டது. 1990 ஆம் ஆண்டு ஆகஸ்டிலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்படும் வரை புலிகள் பெரிதாக எதையும் செய்ய துணியவில்லை. ஆனால் உடன்படிக்கை கைவிடப்பட்டு 2002 ஆம் ஆண்டு வாழைச்சேனையில் வைத்து பத்து முஸ்லிம்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

புலிகளுக்கெதிரான இந்த வெற்றிகரமான ஆர்ப்பாட்டம் ஒரு அக்டோபர் மாதத்திலேயே இடம்பெற்றிருந்தது. வடமாகாண முஸ்லிம்களின் வெளியேற்றமும் அக்டோபர் மாதத்தின் இறுதி வாரத்திலேயே இடம் பெற்றிருந்தது. அதே வேளை பல்கலைக் கழக ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்த அதே நபர் தான் இலங்கையின் சில இடங்களில் 'கருப்பு அக்டோபரை' அனுஷ்டிக்குமாறு முஸ்லிம்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்ததாக நம்பப்படுகிறது. ஆர்ப்பாட்டம் அதையடுத்து கருப்பு அக்டோபர் அழைப்பு இதனை அவதானித்த அப்போதைய முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களும் இதற்கு ஆதரவு வழங்குமாறு இலங்கை முஸ்லிம்களை கேட்டிருந்தார். அதனால் 1992 அக்டோபர் 30 அன்று இலங்கை முழுவதும் முஸ்லிம்கள் கடைகளை பூட்டி பூரண ஹர்த்தாலை அனுஷ்டித்தனர். அன்றிலிருந்து தான் வடக்கு முஸ்லிம்களின் வெளியேற்றம் கருப்பு அக்டோபராக ஞாபகப்படுத்தப்படுகிறது.

*

திடீரென்று பயண ஏற்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு காத்தான்குடியில் ஞானப்பிதா அப்துர் ரவூப் மிஸ்பாஹி அவர்கள் ஏற்பாடு செய்துள்ள இஸ்லாமிய மெய்ஞ்ஞான ஆன்மீக மாநாட்டுக்கு அன்றிரவே காரில் புறப்பட்டுச் சென்றேன். காத்தான்குடியில் பிரமாண்டமான வரவேற்பு எனக்கு அளிக்கப்பட்டது. அரசாங்க அதிகாரிகளும், இராணுவ உயர் அதிகாரிகளும், பொலிஸ் உயர் அதிகாரிகளும், அமைச்சர் ஒருவரும், மாநகராட்சி மன்ற தலைவரும் அந்த அரங்கில் இருந்தனர். எனது உரை ஸூபிசமே உயர்ந்த நெறி என்ற தலைப்பில் அமைந்தது. உரை லைவாக இணையத்தில் ஒலிபரப்பப் பட்டது.

அன்றைய தினம் முழுவதும் பிரமாண்டமான பல விருந்துகளிலும் கலந்து கொண்டேன்.

அடுத்தநாள் காகம் இலக்கிய அமைப்பினர் கிழக்கு பல்கலைகழகத்துக்கு காலையில் வருமாறு கைபேசியில் பணித்தனர். அடுத்தநாள் முதல் கிழக்கு மாகாணத்தில் எனது பயணம் தொடங்கியது. கிழக்கு பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கூடுகையில் பேரா.செ.யோகராசா, பேரா.அம்மன்கிளி முருகதாஸ், பேரா.வலன்ரைன் பிரான்சிஸ் மற்றும் காகம் அமைப்பாளர்களாகிய இம்தாதும், இத்ரிசும் இருந்தார்கள். உலகமயமாக்கலில் தற்கால சூழல் என்ற தலைப்பில் உரையாற்றினேன். அதன் பின்னர் மாணவர்களுடன் கலந்துரையாடினேன். அதன் பின்னர் விரிவுரையாளர்கள் ஜெகநாதன், வடிவேல் இன்ப மோகன், றிஸ்வி, ஜாபர் முதலானோர்களிடம் கலந்துரையாடிக்கொண்டு ஓட்டமாவடியை நோக்கிச் சென்றோம்.

ஓட்டமாவடியில் இம்தாத் வீட்டில் மாலை நான்கு மணிக்கு ஒரு கூடுகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த கூட்டத்தில் எச்.எம்.எம். இஸ்மாயில், மாஞ்சோலை கலீலுர் ரஹ்மான், ஹனீபா சார், ஏ.பி.எம்.இர்பான், ஐயூப் மவுலவி உள்ளிட்ட இருபது பேருக்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர் இலக்கியம் ஏன்? எதற்கு என்ற தலைப்பில் உரையாற்றினேன். அன்றைய தினம் மிகச்சிறப்பாக அமைந்திருந்தது. இரவு முழுக்க நாங்கள் பேசிக்கொண்டிருந்தோம். 1948ல் இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து நீறுபூத்த நெருப்பாய் இருந்து வந்த இன அடக்குமுறையும் அதற்கெதிரான போராட்டமும் 1983இல் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. இரண்டு தசாப்தங்கள் தாண்டி இந்த இனப்பிரச்சினைத் தீ அணைந்து போகப் பலரும் பல வழிகளிலும் முன்னின்றுழைப்பது மகிழ்ச்சி தருவதாய் இருந்தாலும் இனப்பிரச்சினையின் உச்சகட்ட காலங்களில் ஆங்காங்கே முளைவிட்ட ஒரு கேள்வி இப்போது மரமாகிக் கிளை பரப்பியுள்ளது. இது பெரு விருட்சமாகி புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்காமல் இருக்க தேவைக்கேற்ப அழகாய், அளவாய் கத்தரித்து பராமரித்து வளர்க்கப்பட வேண்டுமா என்ற கேள்வியும் மிகத் தெளிவான குரலில் ஓங்கி ஒலிக்கின்றது.

பல்லின மக்களைக்கொண்ட இலங்கைத் தீவில் இனப்பிரச்சினையைத் தீர்க்க சிங்கள இனத்தின் சார்பில் இலங்கை அரசும் (ஜனாதிபதி நீங்கலாக) தமிழினத்தின் சார்பில் தமிழீழ விடுதலைப்புலிகளும் (வேறு யாரும் சேர்க்கப்படாமல்) பிரதிநிதிகளாகச் செயற்படுவதால் இலங்கையில் இரண்டு இனங்கள் மட்டும் தான் உள்ளன என்பதோ அல்லது வேறு

இனங்களுக்கு அரசியலை அடியொட்டியதான பிரச்சினைகள் இல்லை என்பதோ பொருளல்ல. தவிர, போரிட்ட இரண்டு இனங்களும் ஏதோவொரு தீர்வை அடைந்தால் அது எல்லா இனங்களையும் திருப்திப்படுத்தும் என்ற உத்தரவாதமுமாகாது. ஏனெனில் இலங்கையின் இன்னுமொரு சிறுபான்மையினம் தொடர்பான அதன் அடையாளப் பிரச்சினையில் சில சிக்கல்கள் இருப்பதால் இப்பிரச்சினை தொடர்பாக அதன் பங்களிப்பு கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

"இலங்கை முஸ்லிம்கள்" என்போரே இந்தப் புதிய பிரச்சினையின் கருப்பொருளாகும். 1990இல் நடந்த இரண்டு முக்கிய வரலாற்றுச் சம்பவங்கள் இந்தப் புதிய பிரச்சினைக்கான தீர்வொன்றின் தேவையை உணர்த்தியது. இதில் 1வது, கிழக்கிலங்கையில் தொழுகை நேரத்தின்போது வயது பேதமின்றி, சிறியோர் முதல் தள்ளாடும் வயதினர்வரை நூற்றுக்கு மேற்பட்டோர் பள்ளிக்குள் வைத்து புலிகளால் ஒரே நேரத்தில் காரணமின்றிச் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம். 2வது அதே ஆண்டில் யாழ். மன்னார், முல்லைத்தீவு ஆகிய தமிழ் — முஸ்லீம் பூர்வீக பகுதிகளிலிருந்து பலாத்காரமாக ஒரு சில மணிநேரத்தில் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை. மேற்படி இரண்டு சம்பவங்களில் இருந்தும் எழும்பிய புதிய கேள்விகள் அடிப்படைப் பிரச்சினையாகிய "சிறுபான்மையினம்" என்ற பதப்பிரயோகத்தின சரியான விளக்கமொன்றின் தேவையை உணர்த்தி நிற்கின்றது.

இந்த "முஸ்லிம்களை" விடுதலைப்புலிகள் "தமிழ் பேசும் மக்கள்" என்ற பதப்பிரயோகத்தின் கீழ் அடக்கித் தாம் இப்பிரச்சினை விவகாரத்தில் "தமிழ் பேசுவோரின்" பிரதிநிதிகள் என்றும், தமிழர்களுக்கும் சிங்களவருக்கும் இடையில் ஏற்படும் தீர்வும் உடன்பாடும் "தமிழ் பேசுவோர் எல்லோருக்குமான தீர்வே" என்ற நிலைப்பாட்டையும் கொண்டுள்ளனர். புலிகளின் இந்த நிலைப்பாட்டிற்கு வலிமை சேர்ப்பது போல் இலண்டனில் மையம் கொண்டுள்ள தமிழ் வானொலிகளும் பத்திரிகைகளும் இலங்கை முஸ்லிம்கள் தொடர்பாக எந்தவித விளக்கமுமின்றி "இஸ்லாமியத் தமிழர்" என்றும் "தமிழ் பேசும் முஸ்லீம்கள்" என்றும் இந்த இனத்தை அடையாளப்படுத்துகின்றனர். ஒரு இனம் தொடர்பான மேற்படி அனைத்து பதப்பிரயோகங்களும் அரசியல்ரீதியில் தெளிவை ஏற்படுத்தாதது மாத்திரமின்றி பிற்காலத்தில் புதிய பல பிரச்சினைகளையும் தோற்றுவிக்கக் கூடியதாகவே உள்ளன.

விடுதலைப்புலிகளின் "தமிழ் பேசும் மக்கள்" என்ற பதம் இனபேதமின்றி தமிழ் பேசும் மக்கள் எல்லோரினதும் நலன்களையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதாக அமைந்திருக்க வேண்டும். அப்படியானால் 1990இல் நடந்த துயரச் சம்பவங்களும் இதுபோன்ற சிறிய அளவிலான குரங்கு பாஞ்சான், ஏறாவூர்,

மூதூர் போன்ற இடங்களில் நடந்த சம்பவங்களுக்கும் விடுதலைப்புலிகளின் சார்பில் சராசரி மனிதர்தானும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விளக்கங்கள், நியாயங்கள், உத்தரவாதங்கள் எதுவுமே இல்லை.

எனவே "தமிழ்பேசுவோர்" என்ற சொற்பிரயோகம் நடைமுறையில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லிம்களைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை என்பது மிகத்தெளிவு. மேலும் "தமிழ் பேசுவோரின்" பிரதிநிதிகள் தான் புலிகள் என்றால் இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) உடனான ஒப்பந்தம் ஏன் செய்யப்பட்டது? அது எதுகுறித்துச் செய்யப்பட்டது என்ற கேள்விகளுக்கப்பால் அப்படியொரு உடன்படிக்கை தேவையும் இல்லாதது. (ஒப்பந்தத்தின் உள்ளடக்கம் தெளிவாகப் பகிரங்கப் படுத்தப்படவில்லை). ஆகவே தமிழரும் முஸ்லீம்களும் அரசியல்ரீதியிலும் வேறுபட்டவர்கள் என்பது மிகத்தெளிவு.

மறுபுறத்தில் பொதுசனத் தொடர்பு சாதனங்கள் கூறும் "இஸ்லாமியத் தமிழர்", தமிழ் பேசும் முஸ்லீம்கள், என்ற பதப் பிரயோகங்களும், மயக்கம் தரும் பண்புகளையே கொண்டுள்ளன. ஏனெனில் தமிழ் இனத்தில் உள்ளவர்கள் "சைவத் தமிழர்" என்றோ, "கிறிஸ்தவத் தமிழர்" என்றோ மதரீதியில் அடையாளம் காணப்படுவது இல்லை. தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சைவர்களும் கிறிஸ்தவர்களும் (அதன் உட்பிரிவினரும்) இனரீதியில் தமிழரென்றே கொள்ளப்படுகின்றனர். தமிழ் பேசும் சைவர், தமிழ் பேசும் கிறிஸ்தவர் என்று யாரும் அழைக்கப்படாத நேரத்தில் தமிழ் பேசும் முஸ்லீம்கள் என்று மாத்திரம் வரையறைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளதைக் காணலாம். இதிலிருந்து தமிழ்பேசும் முஸ்லீம்கள் என்போர் இனத்தால் தமிழர் அல்லர் என்பதோடு மாத்திரம் அல்லாமல் சிங்களம் பேசும் முஸ்லீம்கள் என்போரின் இருப்பையும் உறுதி செய்கின்றது. இது ஒருவகையில் சிங்களம் பேசும் கிறிஸ்தவரின் நிலைபோன்றது.

சிங்களம் பேசும் கிறிஸ்தவரை தமிழ் இனம் உள்வாங்க முடியாது. காரணம் அவர்கள் இனத்தால் சிங்களவர். அதேபோல் தமிழ்க் கிறிஸ்தவர் மதத்தால் சிங்களவர் போன்று கிறிஸ்தவராயினும் இனத்தால் தமிழராகவே இருக்கின்றனர். (இது பேசும் மொழியை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது போல் காணப்பட்டாலும் இது முழுக்க முழுக்க சாரும் இனத்தை அடிப்படையாகக் கொண்டது.) எனவே இங்கு சிங்களம் பேசும் முஸ்லீமை எவ்வாறு சிங்களவர் எனக் கருதக் கூடாதோ, கருத முடியாதோ, அதேபோல் தமிழைப் பேசுவதால் மட்டும் தமிழ் பேசும் முஸ்லீம்களை தமிழர் என்று வரையறுத்துவிட முடியாது. இந்த இடத்தில் கவனிக்கப்படவேண்டிய இன்னுமொரு விசயம்,

புதிதாகச் சமயம் மாறுவோர், சமயம் மாறி முஸ்லிமாகவரும் தமிழரும், சிங்களவரும் சமயத்தால் முஸ்லீம் என்பவரே தவிர அவர் இனத்தால் இன்னும் தமிழரும் சிங்களவருமே.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியில் பௌத்தம் செழிப்புற்றிருந்ததை வரலாறு கூறுகின்றது. அப்போது பௌத்தத்தைப் பின்பற்றிய தமிழர் சமயத்தால் பௌத்தர் என்று இனங் காணப்பட்டதால், அவர்களின் இனம் சிங்களம் என்றாகி விடவில்லை. அவர் அன்றும் இன்றும் என்றும் தமிழரே. அதேபோல் சமயத்தால் முஸ்லிமாக இருக்குமொருவர் சைவராகவோ கிறிஸ்தவராகவோ பௌத்தராகவோ சமயத்தை மாற்றிக்கொண்டாரென்றால் அவர் சைவர், கிறிஸ்தவர் அல்லது பௌத்தரே தவிர அவரின் இனஅடையாளம் தமிழர் என்றோ அல்லது சிங்களவரென்றோ மாறிவிடப் போவதில்லை. அப்படியானால் இங்கு எழும் நியாயமான கேள்வி இந்த இலங்கை முஸ்லீம் என்போர் இனரீதியில் யார் என்பதே.இதற்கான பதில் என்பது இனப்பிரச்சினைக்கான தீர்வுநோக்கி முன்னேறும் இந்த முக்கியமான வரலாற்றுக் கட்டத்தில் எடுக்கப்பட வேண்டிய நியாயமானதும் அரசியல் ரீதியில் மிக முக்கியமானதுமான **(Politically crucial)** விடயம் முஸ்லீம்கள் பற்றிய நிலைப்பாடு ஆகும். இக்கட்டத்தில் தெரிந்தோ தெரியாமலோ செய்யப்படும் தவறுகளும் செய்யத் தவறும் விடயங்களும் நாளைய அமைதியான ஒன்றுபட்ட இலங்கையில் அல்லது சிங்களவர் தமிழர் சுயாட்சிப் பிரதேசங்கள் என்ற அமைப்புக்குள் அல்லது ஸ்ரீலங்கா, தமிழீழம் என்ற இரண்டு இறைமையுள்ள நாடுகளில் இன்னுமொரு ஆயுதப் போராட்டத்தை தோற்றுவிக்கும்.

இன்று சிங்கள பேரினவாதம் (மறைமுக) தமிழ்ப் பேரினவாதம் என்பவை மாத்திரமல்ல வளர்ந்து வரும் தனி பௌத்த மதவாதமும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. உலகின் முதல் பிக்குகளாட்சி **(Theocracy)** ஆட்சிக்கான நாடிப் பிடிப்புகளையும் இந்த இடத்தில் மறுப்பதற்கில்லை. (ஆனால் தமிழரிடையே மதவாதம் வெளிப்படுவதற்கான அறிகுறி அரிதிலும் அரிதாகவே காணப்படுகின்றது).

இலங்கை முஸ்லீம்கள் இன அடையாளம் இல்லாமல் மத அடையாளத்திலேயே தமது அரசியலை நடத்த விரும்பினால் பல இனங்கள் வாழும் நாட்டில் மாறுபட்ட சூழலிலுள்ள ஒரு நாட்டில் அதிலும் நாம் சிறுபான்மையினரிலும் சிறுபான்மையாய் வாழும் நாட்டில் சர்வதேசங்களின் கவனம் அதிகரித்து வரும் ஒரு நாட்டில் அது தமது இருப்பையே கேள்விக்குறியாக்கிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

உதாரணமாக விடுதலைப் புலிகளின் முஸ்லீம்கள் தொடர்பான நிலைப்பாட்டை நோக்கும் போது அதில்

சந்தர்ப்பவாதம் இழையோடுவதை இலகுவாகக் காணலாம். அவர்களில் தமிழ் பேசும் மக்கள் என்ற நிலையை விடுத்து இப்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் முஸ்லீம்களை ஒரு கலாச்சாரக் குழுவாக ஏற்றுக் கொள்வதாகக் முன்பு கூறினார்.

இந்தக் கலாச்சாரக் குழு என்ற சொற் பிரயோகம், தமிழ் பேசும் மக்கள் என்பதை விடவும் குறைவான நிலை. ஒரு மக்கள் கூட்டத்தில் பல வகையான கலாச்சாரங்கள் பின்பற்றப்படலாம். ஒருவன் உணவு உண்ணும் முறையிலிருந்து நாட்டை நிர்வகிக்கும் விடயங்கள் வரை பலவிதமான கலாச்சாரப் போக்குகளை கடைப்பிடிக்கலாம். இனம் என்ற பரந்த பரப்புக்குள் கலாச்சாரம் என்பது ஒரு சிறு பகுதியே. சரி ஒரு பேச்சுக்காக கலாச்சாரக் குழு என்பதை ஏற்றுக் கொண்டாலும் அக் குழுவின் நிலை என்ன, உரிமைகள் என்ன என்பதற்கு இன்னும் விடை கொடுக்கப்படவில்லை.

இதைவிடவும் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இலங்கை முஸ்லிம்கள் ஒன்றுபட்டு ஒரு தலைமையின் கீழ் வரவேண்டும் அதன் பிறகு அவர்கள் தனியான குழுவாக **(Entity)** பேச்சு வார்த்தை மேசைக்கு வரலாமா என்பது பற்றித் தீர்மானிக்கலாம் என்று கூறியது மிகவும் சிந்தனைக்குரியது. ஆலோசகர் பாலசிங்கத்தின் அரசியல், கூட்டல் கழித்தல் படி 'இலங்கை முஸ்லீம்கள் பரம்பரை பரம்பரையாக ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்ந்த அரசியல் நடத்தியவர்கள். 1990களில் துடிப்போடு முன்னேறிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் **(SLMC)** அதன் ஸ்தாபக தலைவர் மறைந்த அஷ்ரஃப்பின் திட்டமிட்ட கொலையின்பின் துண்டு துண்டாகி முஸ்லிம்களின் அரசியல் குரல் அஸ்தமிக்க ஆரம்பித்து விட்டது' என்பதாகும். 'இலங்கை முஸ்லிம்கள் தனியான பிரிவினர் எனவே நாட்டின் இனப்பிரச்சினை தொடர்பான சமாதான முன்னெடுப்புகளில் அவர்கள் பங்குகொள்ள வேண்டியது அவசியம். அதை விடுதலைப் புலிகளாகிய நாங்கள் உத்தரவாதப்படுத்துகிறோம். ஆகவே முஸ்லிம்கள் அதற்கான அதிகாரத்தை அவர்கள் விரும்பும் தலைமைக்கு அல்லது கட்சிக்குக் கொடுக்கலாம்' என்று பாலசிங்கம் கூறி இருந்தால் அதில் சந்தேகிக்க எந்த விடயமும் இல்லை. இதைவிடுத்து முஸ்லிம்கள் முதலில் ஒன்றுபடுங்கள் (ஒன்றுபட மாட்டார்கள் என்பது அவரது எதிர்பார்ப்பு) அப்புறம் மீதியைப் பார்க்கலாம் என்பது இனப்பிரச்சினையின் சமாதானத் தீர்வு பேச்சுவார்த்தைகளில் முஸ்லீம்களுக்குத் தனியிடம் இல்லை என்பதற்கான முன் அறிவிப்பாகும்.

இந்த இடத்தில் கலாநிதி சித்தீக்கின் கூற்றொன்றும் சாலப்பொருந்தும். அதாவது முஸ்லிம்களை விட மிக அதிகமாக தமிழர்களே இன்று பிரிந்து காணப்படுகின்றனர். அவர்களின் பிரிவை பத்துக்கும் மேற்பட்டதாக அடையாளங் காணலாம் என்பதாகும். ஆக, இங்கு எத்தனையாக யார் பிரிந்துள்ளனர் என்பது பிரச்சினையல்ல. பேச்சுவார்த்தைக்கு யார் தகுதியான பிரிவினர் என்பதே முக்கியம். ஏனெனில், ஜனநாயக ரீதியில் விடுதலைப் புலிகளின் தலைமையின்கீழ், தமிழர் எல்லோரும் ஒன்றுபடுவதென்பது நடக்க முடியாத விசயம்.

இலங்கையில் முஸ்லிம் என்ற சமயவழிப் பதப்பிரயோகம் இலங்கையின் எதிர்கால அரசியலில் அவர்களை ஒரு தேசிய இனத்தின் அந்தஸ்திலிருந்து கீழிறக்கிவிடும். ஆகவே அவர்கள் தமது இனத்தின் பெயரை தூசுதட்ட வேண்டும்.இலங்கை முஸ்லீம்கள் சமய அடையாளத்தினூடே அரசியலில் செயற்பட விரும்பினால் நாளை சிங்கள இனத்தின் கிறிஸ்தவர்களும் தமிழினத்தின் கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களின் சிறுசிறு சமயப் பிரிவினரும் **(Cult)**, ஏன் முஸ்லீம்களின் உட்பிரிவினரும் கூட தங்கள் இருப்புக்கான சட்ட அங்கீகாரம் கோரலாம். இலங்கையின இன்றைய கிறிஸ்தவர், சிங்கள பௌத்தர்களின் உன்னிப்பான அவதானிப்புக்கு உட்படுத்தப்பட்டு உள்ளனர். சமயரீதியான நெருக்குவாரங்கள் கிறிஸ்தவர்களுக்கு அதிகரிக்கும்போது அதற்கான நிவாரணமாக முஸ்லீம்களுக்கான பிரத்தியேக ஏற்பாட்டை கிறிஸ்தவர்களும் கோரலாம்.

விடுதலைப் புலிகளும் கூட முஸ்லிம்களின் நியாயமான கோரிக்கைகளைத் தட்டிக் கழிக்க தமிழ் கிறிஸ்தவர்களைக் காரணம் காட்டி தமதாட்சியில் ஒரு சமயப் பிரிவினருக்கு மாத்திரம் பிரத்தியேக சலுகை நரஇயலாது என்றிருந்திருக்கலாம். நிலைமையை தங்களது அடக்குமுறைக்குச் சாதகமாகவும் பயன்படுத்தியிருக்கலாம்.

இதையெல்லாம் விட மிகப் பயங்கரமான விசயம், விடுதலை புலிகள் முஸ்லிம்களுக்கு எதிரான வெளிநாட்டு சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்திருக்கலாம். அதிலும் விஷேசமாக அமெரிக்காவுடனோ அல்லது இஸ்ரேலுடனோ அல்லது இரண்டு நாடுகளோடும் சேர்ந்து இலங்கை முஸ்லீம்களை இஸ்லாமியப் பயங்கரவாதிகள் என்று பெயரிட்டு மிக இலகுவாக ஓரங்கட்டி விட்டிருக்கலாம். இது அதீத கற்பனை அல்ல. ஏகாதிபத்தியவாதிகளினதும் பேரினவாதிகளினதும் கைவந்த கலை. விடுதலைப் போராட்டம், பயங்கரவாதம், நாட்டு நிர்மாணம், உலக ஒழுங்கு, நாகரீக உலகு என்ற பதப்பிரயோகங்கள் அவரவர்களின் நலன் கருதியே பொருள் வழங்கப்படும்.ஆகவே முஸ்லிம் தமது இனப்பெயரில் அரசியல் நடத்துவதே அரசியல் சாணக்கியமாகும்

(Political manoeuvring). தமது இனத்தின் பெயர் தமது பிறப்புச் சாட்சிப் பத்திரத்தில் மிகத்தெளிவாகத் தெரியப்படுத்தப்பட்டு உள்ளது. சிங்களத்தில் "யோனக்க" என்றும், தமிழில் "சோனகர்" என்றும் ஆங்கிலத்தில் "மூர் **(MOOR)**" என்றும் எழுதப்பட்டு உள்ளது. இது இழுக்கல்ல. இது ஒரு காரணப் பெயர். எந்த இனமும் தூய்மையான இனமல்ல. அதனால் மாசுபட்டவர் என்ற பொருளல்ல.

இந்தச் சோனகர் என்போர் இலங்கையில் மாத்திரம் அல்ல, மொரோக்கோ, தமிழ்நாட்டின் சில பகுதிகள் பிலிப்பைன்ஸ் ஆகிய இடங்களிலும் வாழ்வதால் இலங்கையில் உள்ளோர் இலங்கைச் சோனகர் **(Ceylon Moor)** என அழைக்கப்படுகின்றனர். இலங்கைச் சோனகர்களின் இருப்பு, இஸ்லாம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்படும் முன்பு அல்லது அதன் சமகாலத்தில் ஏற்பட்டது என்பது வரலாறு. ஆக, சோனகர் என்பதை இஸ்லாத்துடன் முழுக்க முழுக்கத் தொடர்புபடுத்தி தமிழரில் இருந்தும் சிங்களவரில் இருந்தும் மதமாற்றம் பெற்றோர் எனச் சில இலண்டன் வானொலிகளும் தமிழ்ப் புத்திஜீவிகளும் கூறிவருவது நிரூபிக்கப்பட முடியாத வரலாற்றுப் பிழை. இலங்கைச் சோனகரின் தோற்றமும் வாழ்வும், அதன் மொழி, கலாச்சாரத் தாக்கங்கள், ஐரோபபியப் படையெடுப்புக் காலங்களில் அந்த இனம் நாட்டுக்கு ஆற்றிய சேவை என்பன எல்லாம் நீண்ட வரலாறு ஆகும்.

ஆக, இலங்கைச் சோனகர் என்போர் தனித்தவொரு இனம். அவர்கள் ஒரு தேசியம் **(Nation)**. அந்தத் தேசியம் தனது விவகாரங்களைத் தானே கவனிக்கும் சுயநிர்ணய உரிமை **(Right to Self Determination)** அதற்குண்டு. தேவைப்படின், நிபந்தனைகளுடன் கூட்டுச் சேரவும் தனியே பிரிந்து செல்லவும் அதற்கு உரிமையுண்டு.

இந்த உரிமையைத்தான் இதுவரை காலமும் இலங்கையின் பேரினவாத அரசுகள் சிறுபான்மையினருக்கு, குறிப்பாக இலங்கைத் தமிழருக்கு கொடுக்க மறுத்து வந்தனர். இப்போதும் மறுக்க முயல்கின்றனர். சுயநிர்ணய உரிமையை தமிழர் தரப்பு சோனகர்களுக்குத் தரமறுத்தால் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை நியாயமற்றதாகிவிடும். அது அவர்களுடைய போராட்டத்தினை போலியாக்கிவிடும்.

மேலும் ஏதாவது ஒரு இடத்தில் இனசுத்திகரிப்பு **(Ethnic Cleancing)** என்றால் சற்று நின்று உலக நாடுகள் அப்படியா என்று கேட்கின்றன. அதற்கு எதிராக ஏதாவது செய்ய வேண்டுமென முன்வருகின்றன. புயல் என்றால் வெள்ளம் என்றால் பூகம்பம் என்றால் நோய் என்றால் உதவ முன்வரும் நாடுகள் கூட ஒரு

சமயத்தவருக்கு பிரச்சினை என்றால் அடிப்படைவாதிகளாக இருக்க வேண்டும் அல்லது பயங்கரவாதிகளாக இருக்க வேண்டும் என்ற ரீதியில் உதவ முன்வருவதில்லை. மாறாக பாதிக்கப்பட்ட மதத்தவருக்கு எதிரானவருக்கு கை கொடுத்து உதவுகின்றன. இதில் உள்நாடு வெளிநாடு என்ற பேதமெல்லாம் கிடையாது.

இவை அனைத்தையும் நாம் கவனத்தில் கொண்டால், உலகின் சமகாலப் போக்குக்கேற்பவே எமது உரிமைகளைப் பெறவும் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவும் முடியும். சமயம் என்ற போர்வைக்குள் தமது அரசியலுக்கு பலம் சேர்க்க முயலலாம். ஆனால் இனம் என்ற வலுவான அடித்தளத்தில் இருந்து தமது கோரிக்கைகள் பிறக்க வேண்டும் என்பது எனது வாதம். இதில் நியாயமும் இருக்கிறது.சோனகர் தேசியம் மேலெழுமா என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

5

அடுத்த நாள் வாழைச்சேனையில் நளிமியா கலாசாலையில் கல்லூரி மாணவர்கள் முன்பாக நுகர்வு கலாச்சாரம் என்ற தலைப்பில் உரையாற்றினேன். நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் முதல்வர் இப்னு பலாஹ் மற்றும் விரிவுரையாளர்கள் கலந்து கொண்டனர். அன்றைய தினம் தென்னிலங்கை பல்கலைகழகத்தில் தமிழ் துறை மாணவர்களை சந்திக்கவும் அவர்களிடையே புதிய கோட்பாடுகளும் கலை இலக்கிய இயக்கங்களும் என்ற தலைப்பில் உரையாற்றவும் வாய்ப்பு கிடைத்தது.அன்று மாலை மட்டக்களப்பில் மறுகா ஆசிரியர் மலர்செல்வன், எழுத்தாளர் கௌரிபாலன். இளங்கோ மற்றும் பல்கலைகழக மாணவர்கள் பங்கெடுத்த நிகழ்வு ஒன்று பேராசிரியர் ஒருவர் வீட்டில் வைத்து ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கே பின்நவீனதமிழ் இலக்கியம் என்ற தலைப்பில் உரையாற்றினேன். அதன் பின்னர் மாணவர்கள் என்னிடம் சில கேட்விகளை கேட்டு விளக்கங்களை பெற்றுக்கொண்டனர். இலங்கையில் எழுத்தாளர்களுக்கு நன்கு மரியாதை இருப்பதை புரிந்து கொள்ள முடிகிறது. மீண்டும் யாழ்பாண முஸ்லிம்கள் குறித்த நிலை என்னிடம் விளக்கப்பட்டது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பில் அவர்களது நலனில் முஸ்லிம் அரசியல் தலைமைகள் அக்கறை கொள்வதில்லை என்பதுடன்,அம்மக்களது அகதி வாழ்வினை அரசியல் மூலதனமாக கொண்டு செயற்படுவதாக கிழக்கு மாகாணத்தில் உள்ள அமைப்பின அங்கத்தவர் அப்துர் ரஹ்மான் என்பவரால் மன்னாரில் கூட்டப்பட்ட கூட்டமொன்றில் தெரிவித்த கருத்து தொடர்பில் கவனம் செலுத்துவது காலத்தின் தேவையாகும்.

ஜனநாயக நாடொன்றில் தமது கருத்தை சுதந்திரமாக தெரிவிப்பதற்கு முழுமையான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேவேளை தான் தெரிவிக்கும் கருத்து எவ்வளவு தூரம் உண்மைத்தன்மை கொண்டவை அதுவும் ஒரு இஸ்லாமியன் என்ற வகையில் அதனது தற்பரியம் என்ன என்பதை புரிந்து கொண்டு பேசுவது தான் சிறந்ததாகும்.

வடக்கில் 1990 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் புலிகளினால் பலவந்தமாக பச்சிளம் பாலகர் தொடக்கம் முதியோர் வரை வெளியேற்றப்பட்ட வரலாறு இலங்கையினை பொருத்த வரையில் ஒரு கறைபடிந்த சரித்திரத்துடன் இதன் மூலம் முஸ்லிம்கள் கற்றுக் கொள்ளக் கூடிய படிப்பினைகள் ஏராளம் உள்ளது. இந்த வெளியேற்றத்தினால் ஏற்பட்டவலிகளும், வேதனைகளும், இழக்கப்பட்ட உயிர்களும், சொத்துக்களின் மதிப்பீடுகளும் இன்னும் முற்றுப் பெறாத ஒன்றாக இருக்கின்றது என்பதில் முழுமையான உடன்பாட்டை எட்ட முடியும். ஆனால் இந்த அகதி முகாம் வாழ்வு, அதனது பின்னரான சிறியதொரு முன்னேற்றம், மீள்குடியேற்றம் தொடர்பில் அப்துர ரஹ்மான் தெரிவித்துள்ள கருத்து இந்த நாட்டில் இருந்த மர்ஹூம் அஸ்ரப் முதல் பாராளுமன்ற உறுப்பினர் ஹூனைஸ் பாருக், அதனையும் தாண்டி பிரதேச சபையின் தவிசாளர்கள் எதனையும் செய்யாது கண்மூடி பொம்மைகளாக இருந்தார்கள், நாங்கள் தான் எல்லாவற்றையும் செய்கின்றோம் என்று மார்தட்டிக் கொள்ளும் ஒரு வகையான பெருமைத் தன்மையினை அவரது உரையில் தொனிப்பதையும் இங்கு சுட்டிக்காட்டி ஆக வேண்டும்.

1990 ல் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்ட போது ஆட்சியில் இருந்த அரசு தொடர்பில் விமர்சனங்கள் வரலாம், அப்போதைய ஆட்சியின் பங்காளியாக இருந்த கட்சிகள் யார் என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். அதன் பிற்பாடு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தில் சந்திரிக்கா அரசில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சர் அஸ்ரப் தலைமையில் ஆற்றிய பணிகள் என்ன அப்போது அக்கட்சியின் இரு வடக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர் எஸ்.எஸ்.எம்.அபூபக்கர், டாக்டர் இல்யாஸ் ஆகியோர் இடம் பெயர்ந்த மற்றும் உள்ளூர் மக்களுக்கு ஆற்றிய பணிகள் தொடர்பில் சகோதரர் அப்துர் ரஹ்மான் தகவல்களை பெற்றுக் கொள்ள மறந்திருப்பது ஏன் என புரியவில்லை. தேவையான தகவல்கள் புத்தளம் மற்றும் மன்னார் மாவட்ட செயலகத்தின் காப்பகத்தில் இருக்கின்றது.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு 25 வருடங்கள் கழிந்த நிலையில் சில அமைப்புக்கள் புதிதாக வடக்கு முஸ்லிம்களின் பிரச்சினைகளை நாங்களே தீர்த்து வைக்கப்

அடிக்கின்றோம் என்று கிணறு வெட்ட பூதம் கிளம்பிய கதை போன்று ஊடகங்களுக்கு கருத்துரைத்து வருகின்றனர். இந்த கூட்டத்தில் உரையாற்றிய சகோதரர் அப்துர் ரஹ்மான் முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு வந்து புத்தளம் கற்பிட்டியில் அமைக்கப்பட்டிருந்த அகதி முகாமில் சில தினங்கள் தங்கியிருந்து இம்மக்களின் துன்பியல் வாழ்வை அனுபவித்ததாக கூறியிருந்தார். இது வரவேற்கக் கூடியதொன்று இருந்த போதும் 20 வருடங்களின் பின்னர் இம்மக்கள் குறித்து அதிக கரிசனை தோன்றியுள்ளதன் பின்னணி என்ன என்பதை பார்க்கவும் வேண்டியுள்ளது.

வடக்கில் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டதன் பிற்பாடு இடம் பெற்ற மீள்குடியேற்றம் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் கள ஆய்வொன்றினை அப்துர் ரஹ்மான் செய்ய தவறியதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் அரசியல் கிளையாக பரிணாமித்துள்ள கிழக்கினை மையமாக கொண்டு செயற்படும் நல்லாட்சிக்கான அமைப்பு என்ற இயக்கத்தின் தாவுகளின் அடிப்படையில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் முஸ்லிம் தமிழ் விரோத சக்தியாக காண்பிக்க எடுக்கப்பட்டுள்ள எடுகோளாக இந்த மன்னார் விழா அமைந்துள்ளதை இங்கு தெளிவாக பார்க்க முடிகின்றது. வடக்கில் முஸ்லிம்கள் வாழக் கூடாது அவர்களது அடிச்சுவடுகள் மண்ணிலிருந்து அழிக்கப்பட வேண்டும் என்று செயற்பட்ட புலிகளின் மற்றொரு முகமான தமிழ் தேசிய கூட்டமைப்பு இவ்வளவு காலமும் வடக்கில் இருக்கும் முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்கு எதிராக போர்க்கொடி. அனைத்து முயற்சிகளும் தோற்கடிக்கப்பட்டதுடன், சதிகளும் முறியடிக்கப்பட்ட நிலையில் வடக்கு முஸ்லிம்களுக்கு இழப்புக்களை பெற்றுக் கொடுக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவு செய்து போட்ட பிச்சை தான் வடமாகாண சபை உறுப்பினர் கௌரவத்துக்குரிய நண்பர் அஸ்மின் அய்யூப் என்பதை மக்கள் புரியாமலில்லை. இதனை வைத்துக் கொண்டு செயற்படும் கிழக்கின் அமைப்பான இந்த அமைப்பு மன்னாரில் வந்து மீள்குடியேற்றம் திட்டமிடுவோம். முஸ்லிம் அரசியல் தலைமைகளை காட்டிக் கொடுப்போம் நாங்கள் தான் மக்கள் சேவகர்கள் என்று முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர்.

இன்று வடக்கில் குறிப்பாக மன்னார், வவுனியா, முல்லை மாவட்டங்களில் முஸ்லிம்கள் கணிசமாக மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். இன்னும் சில பகுதிகளில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளனர். அன்று அமைச்சராக இருந்த [illegible]. தற்போதைய அமைச்சராக இருக்கின்ற ரிசாத். மற்றும் இதர அரசியல் தலைமைகள் இந்த மீள்குடியேற்றத்திற்காக ஆற்றியுள்ள பணிகளையும்,



சேவைகளையும் மறந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலில் செயற்படும் அமைப்பினர் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பற்றி முரண்பாடுகளை தோற்றுவிக்கும் அறிக்கைகளை விடுவதும்,வாய் கிழிய கத்துவதும் வேடிக்கையான விசயம் என்பதை நாம் உள்வாங்கியாக வேண்டும்.

இன்று வடக்கின் ஆட்சியினை கொண்டுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பின் பங்காளி என்று கூறும் நல்லாட்சிக்கான அமைப்பும் அதனது உறுப்பினரும், முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்று முஸ்லிம்கள் கேட்கிறார்கள். இதனை அவர்களது பார்வையில் ஸீரோ என்று தான் சொல்ல வேண்டும். மன்னார் நானாட்டானில் அமைந்துள்ள பூவரசங்குளம் கிராமத்தில் முஸ்லிம்கள் தமது காணிகளில் (நிலங்களில்) மீள்குடியேற்றத்துக்கு சென்ற போது (அங்கு முஸ்லிம்களின் மையவாடிகள் இருக்கின்றது) இதே தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாகாண சபை அமைச்சர்களும், உறுப்பினர்களும் அங்குள்ள தமிழ் மக்களை தூண்டி முஸ்லிம்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இதன் பின்னர் இந்த பிரச்சினை பொலீஸ் நிலையம் மற்றும் நீதிமன்றம் வரை சென்றது. அதன் பின்னர் அந்த முஸ்லிம்கள் தமது உயிர் போனாலும் பரவாயில்லை தமது வாழ்விடத்தை விட்டு இனியும் அகதிகளாக இடம் பெயர முடியாது என்ற உறுதியுடன், வன்னி மாவட்ட அபிவிருத்தி குழுவின் தலைவர், அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் மற்றும் மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் ஆகியோர் இந்த விசயம் தொடர்பில் பல சுற்று பேச்சுக்களை முரண்பாடுகளுடன் இருந்த

மக்களுடன் நடத்தினர். அங்கிருந்த பிரதேச செயலாளர் சந்திர அய்யா அவர்கள் இந்த காணிகள் முஸ்லிம்களது என்பதை உறுதிப்படுத்தும் ஆவணங்களை சமர்பித்த போதும்,அவருக்கும் எதிராக இனச சாயம் பூசி அவரது செயலக அலுவலகத்தை சேதப்படுத்தியதை இந்த நல்லாட்சி அமைப்பு மறந்து பேசுகின்றது என்ற ஐயம் உள்ளது.

இது போல் மன்னார் மாவட்டத்தில் மட்டுமல்லாது வவுனியாயவில் புலித்தறித்த புளியங்குளம், சூடுவேந்தபுளவு வவுனியா மன்னார் வீதியில் சாளம்பைக்குளம் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் மீள்குடியேற்றத்திற்கு வந்த போது அந்தக் கிராமங்களும் தமிழ் கிராமம் என்று சோபாள புளியங்குளம் என்று பெயரை மாற்றி தமிழ் தேசிய கூட்டமைப்பு மேற்கொண்ட அசிங்கத்தமான செயற்பாடுகளை இந்த அமைப்பு மறந்துவிட்டு செயற்படுகின்றதா? இது போல் இந்திய அரசாங்கமும், ஏனைய நிறுவனங்களும் இந்த மக்களுக்கு அன்பளிப்பு செய்த வீடுகளை கூட நிர்மாணிக்க விடாது தமிழ் தேசிய கூட்டமைப்பு தடுத்ததை இந்த அப்துர் ரஹ்மான் தலைமையிலான நல்லாட்சிக்கான அமைப்பு மறைத்துக் கொண்டு இந்த மக்களை இன்னும் 20 வருடங்களுக்கு இந்த வீடுகளை நிர்மாணிக்க விடாது தடுக்கும் அநியாயத்தை செய்ய வந்துள்ளனரா? இவ்வாறான நிலையில் அமைச்சர் றிசாத் தனிமையில் நின்று பாதிக்கப்பட்ட மக்களுடன் குரல் கொடுத்த போது அவருக்கு உதவியாக இந்த மக்களுக்கு ஆதரவாக ஒரு அனுதாப அறிக்கையினைவிடுவதற்கு இந்த நல்லாட்சிக்கான அமைப்புக்கு மனம் வரவில்லையே? அது மட்டுமல்லாமல் அரச நியமனங்களை வழங்க முற்பட்ட போது அதிலும் முஸ்லிம்கள் பாதிக்கப்படும் அளவுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முயற்சிகளை செய்தன. 22 வருடங்களின் பின்னர் தமது சொந்த மண்ணுக்கு வந்த முஸ்லிம்கள் தகுதியான இளைஞர்கள் அரச நியமனங்களுக்குள் உள்வாங்கப்பட்ட போது அதற்கு எதிராக எத்தனை ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. குறைந்த நியமனங்கள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டன. தமிழ்களும், சிங்களவர்களும் தமது நியாயமான நியமனங்களை எவ்வித அநியாயமும் இன்றி பெற்றுக் கொண்டனர். அப்போதாவது இந்த நல்லாட்சிக்கான அமைப்பு பங்களிப்பினை வழங்கியதா? என்று மக்கள் கேட்கிறார்கள்.

இதே போல் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தமது பிரதேசங்களுக்கு வ்த போது அவர்களது காணிகள் அபகரிக்கப்பட்டிருந்தன.அதற்கு மாற்றீடாக அரச அதிபர், பிரதேச செயலாளர், காணி அமைச்சின் அதிகாரிகள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், பிரதேச பள்ளிவாசல் தலைமைகள், மக்கள் பிரதிநிதிகள் என பலரும் பல முறை

கலந்துரையாடி முள்ளியாவளை பகுதியில் அடையாளப் படுத்தப்பட்ட அரசகாணியினை வழங்க நடவடிக்கையெடுத்த போது, அதனை தடுத்து நிறுத்திய பெருமை தமிழ் தேசிய கூட்டமைப்பினையே சாரும்,இவ்வாறு முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கு எதிராக தொடராக செயற்பட்டுவரும் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் கிளையான நல்லாட்சிக்கான அமைப்பு இன்று வந்து வடக்கு முஸ்லிம்களை தமது அரசியல் லாபங்களுக்காக முஸ்லிம் தலைமைகள் பயன்படுத்துவதாக கூறுவதை எவ்வாறு தன்மானமுள்ள வடக்கினை சேர்ந்த ஒருவரால் சகித்துக்கொண்டிருக்க முடியும். இது இவ்வாறு இருக்கட்டும் என்று விட்டுவிடுவோம், அண்மைக் காலமாக மன்னார் மறிச்சுகட்டி தொடக்கம் முசலி எல்லை வரை முஸ்லிம்கள் மீள்குடியேற்றம் தொடர்பில் எடுக்கப்படும் முயற்சிகளுக்கு எதிராக பேசுபவர்கள் யார், தமிழ் தேசிய கூட்டமைப்பினை தமது கையில் வைத்து சுழற்றும் மதவாதிகள் என்பதை மறந்து விட்டு இன்று இந்த அமைப்பு அவர்களது ஆடைகளை அணிந்து கொண்டு அவர்களது வாகனத்தில் ஏறி வந்து,வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் திட்டமிடப்பட வேண்டும் என்று அ முதல் ஆரம்பிக்க எடுக்கும் வேலையின் பின்னணி என்னவென்று சோனக மக்கள் தெரிவிந்து கொள்ள வேண்டும். ஏமாறும் கூட்டம் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத் தான் செய்வார்கள், மக்களுக்கு பணி செய்பவர்கள் ஒரு போதும் மக்களை ஏமாற்ற மாட்டார்கள் என்பது நிதர்சனம். எதுவும் செய்யாதவர்கள் இன்று பசுந்தோலினை புலியின் மீள் போர்த்திக் கொண்டு காட்டிக் கொடுப்புக்களுக்கான அடித்தளத்தினை இடுவது வேதனை தருகின்றது.

இன்று வடக்கில் வாழும் முஸ்லிம்கள் இந்த அரசாங்கத்தின் மூலம் நன்மைகளை பெறுகின்றனர். அது முஸ்லிம்களாக இருந்தால் என்ன வேறு சமூகத்தை சார்ந்தவர்களாக இருந்தால் என்ன? இது தான் யதார்த்தம். அரசாங்கத்தில் வடக்கினை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளில் ஒன்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், தமிழ் தேசிய கூட்டமைப்பினை பொறுத்த வரையில் அபிவிருத்தியினை புறக்கணித்து செயற்படும் ஒரு கட்சி என்பதை நன்கு அறிவார்கள். பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்காக உதயமான கட்சி என்றால் அம்மக்களது தேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கு விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும். மத்தியில் 'மஹிந்தவின் ஆட்சி இருக்கின்ற போது மத்திய அரசாங்கத்தின் ஒதுக்கீடுகளை ஒதுக்கிவிட்டு, மஹிந்த அரசு தமிழர்களுக்கு எதுவும் செய்வதில்லை என்று போலியான விசமத்தான பிராச்சாரங்களை உலக நாடுகளில் கூறி வருகின்றனர். இந்த நிலையில் வடக்கில் குறிப்பாக முஸ்லிம்களின் நலன்

தொடர்பான தேவை விடயங்களை திட்டமிடுகின்ற பொறுப்பும் தலைமைத்துவமும், முஸ்லிம் தலைமைகளுக்கே வழங்கபட வேண்டும். முஸ்லிம்கள் விரட்டியடிக்கப்பட்ட போதும், அதன் பின்னர் தற்போது மீள்குடியேற்றத்துக்கு வருகின்ற போது திட்டமிட்டு அதற்கு எதிரான மாயைகளையும்,பொய்களையும் தமது வாழ்மையாக கொண்டு செயற்படும் இந்த தமிழ் தேசிய கூட்டமைப்பினரின் ஏஜெண்டாக பல பெயர்களில் வன்னிக்குள் முகம் புதைந்திருக்கும் இந்த நல்லாட்சிக்கான அமைப்பு எமது மக்களுக்கு அழிவினையும்,இழப்பினையும், என் காட்டிக் கொடுப்பினையுமே பரிசாக கொடுக்கும் ஒன்று என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள்.

6

மருதமுனையில் கவிஞர் ஜெமீல் அவர்களுடைய வீட்டில் நடைபெற்ற கூடுகையில் நியாஸ் குரானா, கவிஞர் அலறி, அம்ரிதா.ஏ.எம்., உமா வரதராஜன் உள்ளிட்ட பதினைந்துக்கு மேற்பட்ட நண்பர்கள் மத்தியில் தற்கால கவிதை என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினேன். தற்கால தமிழக எழுத்து சூழல் குறித்தும் விவாதிக்கப்பட்டது. அன்றைய தினம் சாய்ந்தமருதுவில் எழுத்தாளர், கவிதாயினி அனார் அவர்களை சந்தித்து உரையாடினேன். அனாரின் கணவர் அஸீமும், எனது நண்பர்களும் உடனிருந்தனர். சுமார் ஐந்து மணிநேரம் அங்கே அளவளாவிக் கொண்டு உடனடியாக பேராதனா பல்கலைகழகத்தை நோக்கி பயணமானேன். சுமார் நான்கைந்து மணிநேர யாத்திரைக்கு பின்னர் மாத்தளைக்கு சென்று அங்கு ஒரு நண்பருடன் சந்தித்து விட்டு நேராக பேராதனை பல்கலைகழகத்துக்கே வந்து சேர்ந்தேன். மாலை மூன்று மணிக்கு பேராசிரியர் அனஸ் அவர்களை சந்தித்து பேராதனாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூடுகையில் உரையாற்றினேன். தமிழ் துறை,மொழியியல் துறை, தத்துவ துறை மாணவர்கள் கலந்து கொண்ட அந்த நிகழ்வில் பல்துறை நோக்கு ஆய்வு முறையியல் என்ற தலைப்பில் உரையாற்றி கலந்துரையாடினேன். பின்னர் அனஸ் வீட்டில் டீபார்ட்டி முடிந்து கனமழையில் வேறெங்கும் போக இயலாத சூழலில் கொழும்புவை நோக்கி பயணமானேன். இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பான விரிவான சிந்தனைகள் சமூக மட்டத்தில் பகிரப்பட்டும் அலசப்பட்டும் வருவதைக் காண இயலுகிறது. இலங்கைத் தீவில் இன்றைய காலத்தில் “முஸ்லிம்கள்” என அறிமுகப்படுத்திக் கொள்ளும் சோனகர் சமூகம் தமக்கிருக்கும் பாரம்பரிய பூர்வீகம் தொடர்பான அறிவையும் தேவையையும் 9ம் நூற்றாண்டோடு மட்டுப்படுத்திக் கொள்வதையும் அதற்கு முன்னர் ஓரிறைக் கொள்கையாளர்களாக உள்நாட்டவர்களும், வெளிநாட்டிலிருந்து குறிப்பாக மத்திய கிழக்கிலிருந்தும் வந்து கலந்து கொண்டவர்கள் தொடர்பான

தெளிவான ஆய்வினை மேற்கொள்ள மறுப்பது தொடர்பிலும் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு குறித்தும் ஆய்வுகள் நடக்கிறது. நவீன காலத்தில் முஸ்லிம் சமூகம் தமது மார்க்க அடையாளத்தையே விரும்பியதாலும் "முஸ்லிம்" என்று அழைக்கப்படும் போது அதன் மூலம் மலேயர்கள், போராக்கள் உட்பட்ட இலங்கையில் வாழும் ஏனைய சமூகங்களும் இணைந்த சமூகமாகத் தம்மை வெளிக்காட்டிக்கொள்ளலாம் எனும் நல்லெண்ணத்தாலும் கூட தமது இன அடையாளத்தை ஏறத்தாழ மறந்தே வாழ்கிறது.

அதிலும் குறிப்பாக 1960 களுக்குப் பிந்திய வெளிநாட்டுத் தொடர்பின் அதிகரிப்பினாலும் கலாச்சாரக் கலப்பினாலும், கொள்கை அமைப்புகளின் பெருக்கத்தினாலும் தமது இன அடையாளம் தொடர்பான தேவையை இலங்கை முஸ்லிம் சமூகம் மறந்திருக்கிறது.

ஆனாலும் இலங்கையின் சனத்தொகைக கணிப்பீடு என்று எப்போது வெளியாகினாலும் இன ரீதியான கணக்கெடுப்பின் போது "சிங்களவர்கள்", "தமிழர்கள்", "சோனகர்கள்" எனும் மூன்று பிரதான இனங்களே அடையாளப்படுத்தப்படுகின்றன. இது தொடர்பான அறிவைப் பெற்றுக்கொள்ள தற்போது குடிசன மதிப்பீட்டுப் பிரிவுக்கென ஒரு இணையத்தளம் இருப்பதால் வாசகர்கள் அங்கு சென்று நேரடியாகவே உறுதி செய்து கொள்ளலாம்.

எனினும் 20ம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியிலும் தொடரும் காலத்திலும் முஸ்லிம்களை "தமிழர்கள்" எனும் மொழி ரீதியான அடையாளத்துக்குள் (இந்தியா போன்று) வகைப்படுத்துவதற்கான முயற்சிகளும் இடம்பெற்று வந்ததையும் அதை இலங்கை முஸ்லிம் முன்னோடிகள் மறுத்துரைத்து "சோனக" சமுதாயத்திற்கான அரசியல் பலத்தினை நிறுவப் போராடிய வரலாறுகளும் அலசப்பட்ட விசயங்களாகும்.

இவ்வாறு போராடி நிரூபிக்கப்பட்ட வரலாற்றின் ஆழமான வெற்றியின் பயனாகவே இன்று வரை இலங்கை அரசியற் சட்டத்திற்கமைய இலங்கையில் சோனகர் என ஒரு இனம் இருப்பதாகவும் அவர்கள் முஸ்லிம்களாக தம்மை மத ரீதியான அடையாளத்திற்குட்படுத்திக்கொண்டு வாழ்கிறார்கள் என்பதை இலங்கையின் ஆட்சியாளர்கள் தொடர்ந்து புரிந்துணர்வுடன் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

எனினும், அரச தஸ்தாவேஜுக்களில், குறிப்பாக பிறப்புச் சான்றிதழ்களில், இனம் எனும் இடத்தில் எப்போதுமே சோனகர்கள் (Sri Lankan Moors / Moors) என்றே குறிப்பிடப்பட்டிருக்கும். சில இடங்களில் கரையோர சோனகர்கள்

எனும் பதம் பெரும்பாலும் கிழக்கிலங்கை பிறப்புச் சான்றிதழ்களில் ஒரு சில வேளைகளில் பாவிக்கப்பட்டிருப்பதற்கான சான்றுகள் உள்ளன. அதற்கான காரணம் 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை சோனக சமூகம் தொடர்பான வரலாற்று ஆதாரங்களை மழுங்கடிக்க முனைந்த பொன். இராமநாதன் இச்சமூகத்தை இரண்டாகப் பிரித்து பெரும்பாலும் சோனகர்கள் இந்தியாவில் இருந்து வருகை தந்தவர்களே எனவே இலங்கையர்களே இல்லையெனும் அளவிற்கு வாதாடி கரையோரச் சோனகர்கள் எனும் பிரிவை உருவாக்க முனைந்ததாகும்.

ஆயினும், சோனக சமூகம் எப்போதுமே இலங்கை மண்ணில் தனித்துவத்துடன் வாழ்ந்த சமூகம் மாத்திரமன்றி தமக்கென ஒரு தனித்துவமான கலாச்சாரப் போக்கையும் கொண்டிருந்தமையை அந்நிய ஆக்கிரமிப்புக்கு முந்திய கால கட்டங்களிலேயே சிங்கள மன்னர்கள் கூட ஏற்றுக் கொண்டிருந்தார்கள் என்பதற்கான சான்றுகளும் பல நூல்களிலும் எடுத்துரைக்கப்பட்டிருக்கிறது.

சோனக சமூகம் தொடர்பாக மேலதிகமாக வாதிக்க வரும் மேலும் சிலர் அரேபியர்கள் வரும்போது தனியாக வந்ததாகவும் அவர்கள் தமிழ், சிங்கள பெண்களை மணமுடித்த காரணத்தினால் அவர்கள் தாய் மொழி சிங்களமானது, தமிழானது எனவும் வாதிக்க முன்வருவர்.

எனினும், காலப்பிறழ்ச்சியின்றி வரலாறுகளை ஆராய்வின் இலங்கைத் தீவில் சோனக சமூகம் முஸ்லிம்களாக அடையாளப்பட்ட பின்பு கூட 15ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தை மிகப் பிரபலமான சீனக் கடலோடி **Zheng He** பாரசீக மொழிகொண்டு விளித்திருந்த சம்பவங்கள் முஸ்லிம் சமூகத்தின் பாரம்பரியம் தொடர்பான வேறு ஆதாரங்களை பறைசாற்றி நிற்கும். எனவே, சிங்கள — தமிழ் எனும் இரு மொழியடையாளங்களுக்குப் புறம்பாக இலங்கை வரலாற்றில் எப்போதுமே "சோனகர்" எனும் இனம் தனித்துவத்துடன் காணப்பட்டிருக்கிறது என்பதிலிருந்தே இந்த இனத்திற்குத் தனியான அடையாளத்தினை இலங்கை வரலாறு கொண்டிருப்பதை ஏற்றுக்கொள்ள முடியும்.

அந்த தனித்துவத்தின் பின்னணி மற்றும் அதன் வளர்ச்சி தொடர்பில் இவ்வரலாற்று ஆய்வின் முதற் தொகுதி பல பதிவுகளில் விரிவாக ஆராய்ந்து ஆதாரங்களை முன் வைத்திருக்கிறது. சங்க கால தமிழ் இலக்கியங்கள் கூட "சோனகர்" எனும் பிரிவினர் தொடர்பான தனியான பார்வை கொண்டிருக்கும் பதிவுகள் காணக்கிடைக்கிறது.

இலங்கை பாடத்திட்டங்களிலோ பாசறைகளிலோ மத்திய கிழக்கு வரலாறு போதிக்கப்படும் அளவுக்கு இலங்கையில்

முஸ்லிம்களின் வரலாறு தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாத காரணத்தினால் இலங்கையில் “இஸ்லாம்” அறிமுகமாவதற்கு முன்னராக வரலாற்று ஆசிரியர்கள், கடலோடிகள் மற்றும் இலக்கியங்கள் விளித்து நிற்கும் சோனக சமூகம் பற்றிய விழிப்புணர்வும் அவர்கள் யார்? எவ்வாறு வாழ்ந்தார்கள்? எவ்வாறான இறை கொள்கை கொண்டவர்களாக இருந்தார்கள்? அவர்களோடு யார் கலந்தார்கள் அல்லது அவர்கள் யாரோடு கலந்தார்கள் போன்ற விசயங்களை இஸ்லாமிய சமுதாயம் தேடி ஆராய மறுத்து வந்துள்ளது.

சிங்கள மன்னர்களிடம் சோனக சமுதாயம் பெற்று வந்த சலுகைகளை இன்று வரை அனுபவிக்கும் இலங்கை (சோனக) முஸ்லிம் சமூகம் இந்தப் பட்டயங்களின் பின்னணி தொடர்பில் போதிய விளக்கத்தினை எதிர்கால சந்ததியினருக்கு விட்டுச் செல்ல மறுப்பதற்கான ஆளுமையை இன்றைய வாழ்க்கை முறையும் கலாச்சாரமும் உருவாக்குகிறது.

எனவே ஏறத்தாழ ஆறு நூற்றாண்டுகளுக்கு முன்பதாக தமக்கென ஒரு மொழியுடன், அரசியல் ஆளுமையுடன் தனிக் கலாச்சாரத்துடன் வாழ்ந்த சோனக சமூகம் போர்த்துக்கீய ஆக்கிரமிப்பின் போது வலுவிழந்து தம் இலக்கியம், வாழ்க்கை மற்றும் வணிக ஆளுமையையும் இழந்ததைக் கூட மறந்த நிலையில் உலகின் வேறு பாகங்கள் மீதான மோகத்தோடு வரையறுக்கப்பட்ட சிந்தனைகளினால் சுய வரலாற்றை மறந்த சமூகமாக இலங்கை முஸ்லிம் சமூகத்தின் எதிர்கால சந்ததியினர் மாறிச்செல்லும் அபாயம் இருப்பதை உணரக் கடமைப்படுகிறோம். இத்தீவின் வரலாறு அறியப்பட்ட காலம் முதல் சோனக சமூகத்தின் தனித்துவம் பற்றிய பதிவுகள் ஆங்காங்கு இருந்து வந்திருக்கிறது. தாலமி முதல் இப்னு பதூதா, **Zheng He** வரை அன்றைய உலக வரலாற்றைப் பதிவாக்கிய கடலோடிகள் தமது பதிவுகளின் போது இச்சமூகத்தின் தனித்துவம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதையும் காணலாம்.

இதில் இஸ்லாத்திற்கு முன்னைய மற்றும் இஸ்லாம் இலங்கையில் அறிமுகமான பின்னரான இரு காலத்திற்குமான ஆதாரங்கள் இருக்கின்றன. ஆயினும், இலங்கை சோனகர்களின் ஆதி மூலத்தை அறிந்து கொள்வதில் பலருக்கு ஆர்வமிருக்கிறது.

இதற்கான தேடலை உலகில் வேறு எங்கு கலாச்சார, பழக்க வழக்க ரீதியில் இலங்கை சோனகர்களுடன் ஒத்துப் போகக் கூடியவர்கள் இருக்கிறார்கள் எனும் வெளிப்படையான தேடலைக் கொண்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளத் தயாரானவர்களுக்காகக் கூட “பத்வியுன்களுக்கும்” இலங்கை சோனகர்களுக்குமான தொடர்புகள் பற்றிய ஆராய்வு மற்றும் மேற்கு ஆபிரிக்க சமூகங்கள் அவர்களுடனான பழக்க வழக்க ஒற்றுமைகள் போன்ற

விசயங்களும் கடந்த காலங்களில் ஆராயப்பட்டுள்ள விசயங்களாகும்.

எனவே, இலங்கை சோனக சமூகம் தமது சொந்த வரலாறு தொடர்பில் சொந்த நாட்டில் அறிந்து கொள்ள வேண்டிய பல விசயங்கள் மற்றும் சமய, பண்பாட்டு தொடர்புகள் ஊடான வெளியுலகத் தொடர்புகள் குறித்த மேலும் விரிவான சில விபரங்களை இணைத்துக்கொள்வதோடு சோனக சமூகத்தின் இஸ்லாத்திற்கு முன்னான வாழ்க்கை மற்றும் கலாச்சாரம், சிங்கள மக்களுடனான அன்யோன்யம், ஆளுமை மற்றும் சமூகக் கட்டமைப்பு, வணிகம், வாழ்வியல் போன்ற பல பிரிவுள் ஊடாகவும் சிங்கள இலக்கியங்கள், வரலாற்றுப் பதிவுகள் மற்றும் தொல்லியல் சான்றுகள் ஊடாக சோனக சமூகத்தின் இருப்பு குறித்த பார்வைகளையும் ஆராயவேண்டும்.

7

எனது இலங்கை பயணத்தின் கடைசி நாள் கொழும்புவில் பல சந்திப்புகளாக கழிந்தது. கொழும்புவில் மேமன்கவி அவர்களை சந்தித்து அவரது வீட்டில் சற்று நேரம் அளவளாவிக்கொண்டு கொழும்பு தமிழ்சங்கத்துக்கு சென்றேன். அங்கே கொழும்பு தமிழ் சங்க தலைவர் ஆ.இரகுபதி பாலசிறீதரன், இலக்கிய குழு செயலாளர் ஆழ்வார்பிள்ளை கந்தசாமி, செயர்குழு உறுப்பினர் கே.ஜி,மகாதேவா, நண்பர் தெ.மதுசூதன், முன்னாள் தலைவர் திரு.கதிர்காமநாதன் ஆகியோரை சந்தித்து உரையாடினேன். பின்னர் கொழும்பு தமிழ் சங்கம் ஏற்பாடு செய்த கூடுகையில் ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆர்வலர்கள் மத்தியில் புது இலக்கிய கோட்பாடுகள் குறித்து உரையாற்றினேன். அவர்கள் நூலகத்துக்கு அழைத்து சென்றார்கள் தமிழ்சங்கத்தின் செயல்பாடுகளை கண்டு பூரித்து போனேன்.

அதன் பின்னர் பூபாலசிங்கம் புத்தக நிறுவனத்துக்கு சென்று அதன் அதிபர் சிறீதரசிங்குடன் உரையாடினேன். மீண்டும் அங்கிருந்து கிளம்பி தினக்குரல் தமிழ் நாளிதழ் அலுவலகத்துக்கு சென்றேன். சீப் எடிட்டர் தனபாலசிங்கத்தை கண்டு உரையாடினேன். தினக்குரல் சார்பாக ஒரு நேர்காணலை என்னிடம் நடத்தினார்கள். அதன் பின்னர் வசந்தம் தொலைக்காட்சி அலுவலகத்துக்கு சென்று அங்கு ஒரு நேர்காணலை செய்தியாளர் எடுத்தார். இரவு கொழும்புவில் நண்பர் வீட்டுக்கு வரும் போது ஒன்பது ஆகியது. அடுத்த நாள் மதியம் 12.45க்கு விமானத்தில் மதுரைக்கு செல்ல வேண்டும். களைப்புடன் தூங்கச் சென்றேன்.

இதுகாறும் உருவாக்கப்பட்ட வரலாறுகள் ஆதிக்க சக்திகளின் வரலாறாகவே, ஆதிக்க சக்திகளை நியாயப்படுத்தும்

வரலாறாகவே, ஆதிக்க சக்திகளைப் பெருமைப்படுத்தும் வரலாறாகவே இருக்கின்றன. இன்றுவரை ஆதிக்க சக்திகளின் கருவியாகவே வரலாறு பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வரலாறு ஆதிக்க சக்திகளின் வரலாறாக இருப்பதால்தான் மன்னர்களின் போர்களும் ஆடம்பரங்களும் இரக்கமற்ற செயல்களும் பட்டியலிடப்படுகின்றன. மன்னர்களின் சாதனைகளும் வீரப் பிரதாபங்களையும் பட்டியலிடும் வரலாற்று நூல்கள் வரலாற்றுக்குப் பயன்படும் சில செய்திகளைக் கொண்டிருந்தாலும் அவற்றை முழுமையான வரலாறாக அப்படியே ஏற்க முடியாது.

புகழ்ந்துரைப்பது, பெருமைப்படுத்துவது போன்ற நோக்கங்களுக்காக எழுதப்பட்ட இந்நூல்களில் யாரைப் பெருமைப்படுத்த எழுதினார்களோ அவர்களை அண்டியே அவர்களது தயவில் வாழ்க்கை நடத்தும் அந்த எழுத்தாளர்களுக்கு குறைநிறைகளை ஒளிக்காமல் தெட்டத்தெளிவாக எடுத்துரைக்கும் துணிச்சல் அல்லது வரலாற்றுப் பார்வை இருப்பதில்லை. அவ்வாறே எந்தக் கல்வெட்டும் அதைச் செதுக்கிய மன்னனின் தோல்விகளையும் தவறுகளையும் பட்டியலிடுவதில்லை. அதாவது நற்பெருமைகள் வரலாறாவதில்லை. அது சரியான, நேர்மையான வரலாறாகக் கதைக்கப்படுவதுமில்லை.

வெறும் புகழுரைகளை மையமாக வைத்து வரலாறு படைக்கும் போக்கிலிருந்து அல் குர்ஆன் வித்தியாசப்படுகிறது. அது எந்த மன்னரையும் புகழ்நிலையில் வைத்துப் பேசுவதில்லை. வரலாற்றிற்கான ஆதாரங்கள், அதற்கான சான்றுகள் அனைத்துமே ஆதிக்க சக்திகளின் கருவிகளாக இருக்கும்போது ஒடுக்கப்பட்ட மக்களின், மண்ணின், பூர்வீகக் குடிகளின் அல்லது ஆதிக்க சக்திகளுக்கு எதிராகப் போராடுகின்ற மக்களின் வரலாறுகளைப் படைப்பதும் பார்ப்பதும் எவ்வாறு சாத்தியமாகும்? ஆளப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் என்போரை மையமாகக் கொண்ட வரலாற்றை உருவாக்கும் சாத்தியக்கூறு உண்டா?

“வரலாற்றை விளக்குபவன்தான் வரலாற்றை உருவாக்குகிறான். நிகழ்வுகளைப் பட்டியலிடுவது மட்டும் வரலாறாகிவிடமாட்டாது. அவற்றை விளக்குவதில்தான் வரலாறு இருக்கிறது” என்று பேராசிரியர் முஹம்மத் குதுப் கூறுகின்றார்.

உண்மையில் விளக்குவதில்தான் வரலாறு இருக்கிறது. எதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்று ஆர்வம் காட்டுகிறோமோ அதை விளக்குவதில்தான் வரலாறு இருக்கிறது. ஆகவே, தமது அக்கறைகளின், ஆர்வங்களின் நோக்கங்களின் அடிப்படையில்தான் நிகழ்வுகளைத் தேர்வு செய்வதும் அவற்றை

விளக்குவதும் ஒவ்வொன்றாகத் தொடர்புபடுத்தி தத்துவத் தெளிவு பெறுவதும் அமைகின்றது.

ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட, ஆளப்பட்டவர்கள், உழைத்து வாழ்பவர்கள், உரிமைகளை இழந்தவர்கள் மீது நமது அக்கறை இருப்பின், நமது வரலாற்றுப் பார்வை அவர்களைப் பற்றிய உண்மைகளை அறிவதிலும் அவர்களின் மறைமுகமான போராட்டங்களைப் புரிந்து கொள்வதிலும் மனித குலம் நாகரிகத்தின் முழுமையை நோக்கிச் செல்வதில் அவர்களது பங்களிப்பை உரிய முறையில் உணர்ந்து வெளிப்படுத்துவதற்குமாக நமது வரலாற்றுப்பார்வை கூர்மையடைய வேண்டும்.

வரலாற்று மூலங்களாக உள்ளவை எல்லாம் ஆதிக்க சக்திகளால் ஆதிக்க சக்திகளுக்கு சாதகமாக அவர்களை நியாயப்படுத்தும் வகையில் இருந்தாலும் பூர்வீகக் குடிகளின் வரலாற்றை அறிவதற்குப் போதுமான தடங்கள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றைத் தேடித்தெரிந்து கொள்ளவும் வரலாற்றுக்குப் பயன்படுத்தவும் அடிப்படையான தகுதியும் கருவியும்தான் விமர்சனப்பார்வை ஆகும். அதாவது சரியான வரலாற்றுப் பார்வை, சரியான வரலாற்றுணர்வு, அறிவு நாணயத்துடனான விமரிசனப்பார்வை. இவை ஆதிக்குடிகளின் இலங்கை மண்ணில் வேரோடி அழிக்க முடியாதவாறு ஆகிவிட்ட இஸ்லாமிய மக்களின் வரலாற்றை அறிய அடிப்படைகளாக அமைகின்றன.

வரலாறு கண்ட முதல் நிலம் இலங்கை. ஆனால் இலங்கை முஸ்லிம்கள் அந்த வரலாற்றைத் தம்மகத்தில் சுமந்திருந்தும் உரத்துச் சொல்ல முடியாதவர்களாக தயங்கிக் கொண்டிருந்தனர். அது உலகின் எல்லாத் தேசங்களுக்கும் நாடுகளுக்கும் முற்பட்ட எல்லா நாடுகளையும் விட நீடித்த தொடர்ச்சியான வரலாறாகும். ஆனால், வரலாற்றெழுதியல் தொடங்கிய காலத்துக்கு முன்பிருந்தே அவர்கள் உயர்ந்த பண்பாடும் நாகரிகமும் கொண்டவர்களாக விளங்கினர். இயற்கை அனர்த்தங்களாலும் வரலாற்றின் பல்வேறு கட்டங்களில் ஆதிக்க சக்திகளால் அழிக்கப்பட்டும் கபளீகரம் செய்யப்பட்டும் இன்றுவரை அவர்கள் வாழ்ந்துவருவது இறைவனின் பெருங் கருணையாகும்.

முகவுரையாகத் தந்த இந்த வரலாற்று நோக்கு நிலையிலிருந்து முகிழ்த்த நூல்தான் அ.வா. முஹ்சீன் எழுதிய "இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகம்" என்ற வரலாற்றுப் பொக்கிஷமாகும்.

சுமார் 210 பக்கங்களைக் கொண்ட இந்நூல் வரலாற்றுத் துறை சார்ந்தவர்களுக்கு மட்டுமல்ல, நமது வரலாற்றை அறிய விரும்புகின்ற யாருக்கும் அதிர்வையும் ஆச்சரியத்தையும்

ஏற்படுத்தாமல் இருக்கப் போவதில்லை. எந்த வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு இனச்சுத்திகரிப்பையும் இன அழிப்பையும் நியாயப்படுத்தினார்களோ அந்த வரலாற்றுக்கு ஓர் எதிர் வரலாற்று எடுத்துரைப்பாக, எதிர்க் கதையாடலாக இந்நூல் அமைகிறது.

புத்தரே பிறக்காத ஒரு நாட்டை புத்தரின் தேசம் (மே புதுன்கே தேஷய) எனக் கட்டமைப்பவர்களுக்கு இந்நூல் ஒரு சாட்டையடியாகும். சுமார் ஒரு நூற்றாண்டுக்கு முன் சர். பொன். இராமநாதனுக்கு ஐ.எல்.எம் அப்துல் அஸீஸ் கொடுத்த சாட்டையடியை விட இந்நூல் பல படிகள் தாண்டிவிட்டதென்றே தோன்றுகிறது.

அராபிய ஆண்வழித்தோன்றல் என்ற நூறு வருட கதையாடலுக்கு முற்றுப்புள்ளி வைத்து, இந்நூல் முதன் முதலில் இந்நாட்டில் பாதச் சுவட்டைப் பதித்த ஆதி பிதா ஆதம் நபியின் நேரடி வாரிசுகளே இலங்கை முஸ்லிம்கள் என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்கின்றது. கி.பி 8 ஆம் நூற்றாண்டில்தான் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடங்குகிறது என்ற கதையாடல் இதன் மூலம் தகர்க்கப்படுகிறது.

இலங்கை முஸ்லிம்கள் அரபுக்களின் வழித்தோன்றல்கள் / வந்தேறு குடிகள் / இலங்கை முஸ்லிம்கள் இனரீதியாகத் தமிழர்கள் / இலங்கை முஸ்லிம்கள் தமிழர்களாக இருந்து மதம் மாறியவர்கள் என்று இதுகாறும் கூறப்பட்டு வந்த மொழிபுகள் எல்லாம் இலங்கை முஸ்லிம்களின் தனித்துவ அடையாளத்தை நிறுவ உதவவில்லை. யாத்திரிகர்களும் தேசாதிபதிகளாலும் காலனித்துவ உத்தியோகத்தர்களாலும் எழுதப்படும் வரலாறு முழுமையானதல்ல. அல்குர்ஆனின் அடிப்படையிலான வரலாற்று அணுகுமுறை தேவை என்பதை இந்நூல் வலியுறுத்துகின்றது. இன்று இலங்கை எதிர்கொள்ளும் இனச்சங்காரத்திலிருந்து விடுபட்டு "சகஜீவனம்" என்ற சிந்தனையை நோக்கி நகர்வதற்கான புதிய திசை வழிகளையும் இந்நூல் கோடிகாட்டிச் செல்கிறது.

ஐந்து இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ள இந்த நூல், முதலாம் இயலில் அறிவு குறித்த கோட்பாட்டுப் பரிசிலனையை மேற்கொள்கிறது. அனுபவம், விஞ்ஞானம், கணிதம், வரலாறு, தர்க்கம், தத்துவம், பகுத்தறிவு போன்ற அறிவின் பன்முகக் கூறுகளை விளக்கும் இவ்வியல், நம்பிக்கையை அறிவின் ஒரு வடிவமாகப் பார்க்கச் சொல்கிறது. இவ்வகை அறிவுகள் அனைத்தும் தம்மளவில் தனித்தன்மை கொண்டவையாகவும் மனித வாழ்க்கையுடன் பின்னிப் பிணைந்து தமக்குரிய முக்கியத்துவங்களைக் கொண்டவையாகவும் இருக்கின்றன. ஒரு அறிவு வகையை முதன்மைப் படுத்துவதோ அல்லது

உயர்நிலைப்படுத்துவதோ இறுதியில் அறிவியல்ரீதியான அதிகாரப் படிநிலையை உருவாக்குவதாகவே அமையும். நவீனத்துவம் வழங்கிய பிரதிகூலங்களில் இவ்வதிகாரப் படிநிலையும் ஒன்றாகும்.

கிறிஸ்தவ மத அதிகாரத்தை எதிர்க்கப் புறப்பட்ட அறிவொளிக்காலப் புத்திஜீவிகள் ஒட்டுமொத்த மானுட நம்பிக்கைகளையும் அறிவியல் துறையிலிருந்து புறமொதுக்கி துடக்கு மனப்பான்மையுடன் அணுகினர். ஆனால் இந்நிலை இன்று மாறி வருகிறது. பின் நவீனச் சிந்தனைகள் நம்பிக்கையையும் அறிவாக நோக்கும் நிலையையும் தோற்றுவித்துள்ளன. எல்லாவற்றையும் விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்க வேண்டும் என்ற வற்புறுத்தல் இதன் மூலம் தகர்க்கப்படுகின்றது.

பிற சமூகங்கள் மீதான ஆக்கிரமிப்பு, சுரண்டல், கொலை, கொள்ளை, கட்டுப்பாடு, நிர்ப்பந்தம் போன்ற வழிமுறைகளினூடாக தமக்குரிய அறிதல் முறையாக விஞ்ஞானத்தை வளர்த்து வந்திருக்கின்ற இன்றைய மேற்கத்திய சமூகங்களின் அத்தகைய வாய்ப்புகளையும் அறிதல் முறைகளையும் கொண்டிராத சமூகங்களின் அனுபவ அறிவு, நம்பிக்கைள் போன்றவற்றை ஒதுக்கித்தள்ளி, அந்த சமூகங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றன.

இந்நிலையில் தமது வரலாற்றைப் புதிதாய் எழுதவேண்டிய அவசியத்தில் உள்ள சமூகங்கள் அறிவின் பல்வேறு வடிவங்களைப் புரிந்து கொள்வதோடு அவை ஒவ்வொன்றும் கொண்டிருக்கின்ற முக்கியத்துவத்தையும் சமத்துவத்தையும் வலியுறுத்துவது அவசியமாகிறது என்று ஆசிரியர் கூறுகின்றார்.

இது கிழவிகளின் கதை, கர்ண பரம்பரைக் கதை, கட்டுக்கதை என்பதெல்லாம் நவீனத்துவவாதிகளின் வாயிலிருந்து வருகின்ற அபாயகரமான வார்த்தைகள் என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும்.அடுத்து, படைப்புக் கொள்கையின் அடிப்படையில் மனிதத் தோற்றத்தை விளக்குகிறார்.

“தட்டினால் ஓசை தரக்கூடிய மாற்றத்திற்குரிய கறுப்பு நிறக் களிமண்ணினால் நிச்சமாக நாம் ஆதத்தைப் படைத்தோம்” (15:26) என்ற அல்குர்ஆன் வசனத்தை வைத்து தொடக்க மனிதர்கள் கறுப்பானவர்கள் என்ற அண்மைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்போடு தொடர்புபடுத்தி ஆராய்கின்றார்.

முதல் மனிதனின் நாடு, பாதச்சுவடுகளும் கபுறடிகளும் மனிதத்துவக்கத்தின் மறையா அடையாளங்கள் என்ற தலைப்புகளின் கீழ் இலங்கையின் புவியில் அமைப்பு, இலங்கையின் காலநிலை சுவனத்திற்கு ஏற்ற மற்றொரு சுவனத்திற்குப் பொருத்தமாக அமைந்துள்ளதாகக் குறிப்பிடுகிறார்.

“இலங்கையின் பூர்வீகக் குடிகள்” என்ற தலைப்பின் கீழ் நாகருக்கும் சோனகருக்குமிடையிலான தொடர்பு பற்றி விளக்கப்படுகிறது. இலங்கையின் ஆதிக்குடிகள் வாழ்ந்ததாக அடையாளம் காணப்பட்டிருக்கின்ற பல பிரதேசங்களில் முஸ்லிம்களே பாரம்பரியமாகவும் செறிவாகவும் வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவ்விரு இனங்களுக்குமிடையிலான அத்தியந்த உறவு பற்றி ஏழு வகையான ஆதாரங்களைக் காட்டி நிரூபித்திருக்கிறார். பின், சோனகர் யவனர்களிலிருந்து வந்தவர்கள் அல்லர். யவனர் என்ற சொல் கையாளப்படுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சோனகர் என்ற பதம் வரலாற்றில் பிரயோகிக்கப்பட்டுள்ளது என்பதை தொலமியின் இலங்கை இட விளக்கப்படத்தின் மூலம் நரூபித்திருக்கிறார்.

“இலங்கையில் நபிமார்கள்” என்ற தலைப்பின் கீழ் அவ்வையார் — ஹவ்வா, முருகன் — ஹிழ்ர் ஒப்பீடு செய்யப்படுகிறது. இந்த வகையில் இலங்கையிலும் இந்தியாவிலும் வாழ்கின்ற சமூகங்கள் மத்தியில் நிலவுகின்ற வேறுபட்ட ஆயிரக்கணக்கான கடவுள் பற்றிய நம்பிக்கைகளும் வழிபாடுகளும் வெவ்வேறு நபிமார்களை கடவுளாக்கியதன் விளைவாக ஏற்பட்டிருக்கக்கூடிய சாத்தியப்பாட்டை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று ஆசிரியர் கேட்டுக் கொள்கிறார்.

இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் நிலவும் குடிமரபு தமிழர்களிடமிருந்து வந்த பண்பாடல்ல. அது முஸ்லிம்களிடமிருந்தே ஏனைய சமூகங்களுக்குச் சென்றது என்பதாகக் கூறுகின்றார். “இஸ்லாமானவர்கள்” என்ற பதம் மதம் மாறியவர் என்ற கருத்திலல்லாமல் முன்னைய தூதுத்துவங்களை ஏற்று வாழ்ந்த சோனகர் இறுதியாக வந்த தூதையும் எவ்வாறு ஏற்று முழுமைப்படுத்திக் கொண்டனர் என்பதை விளக்குகிறார்.

இலங்கைச் சோனகர் உலகின் முதன் மனிதக் குடிகள் என்றால் தமிழர்களின் சாதிப் படிநிலையில் உள்ள கீழ்வகுப்பினர் இஸ்லாத்தை ஏற்றதால் ஏற்பட்டதல்ல. அராபிய ஆண்வழித் தோன்றல் என்ற கருத்தாக்கத்தையும் இவ்வியலில் மறுதலிக்கின்றார்.

சோனக மொழியை உலகின் முதல் மொழியாகக் குறிப்பிடும் மொழி குறித்த மிகக் கூர்மையான கோட்பாட்டுப் பரிசிலனையை மேற்கொள்கின்றார் ஆசிரியர். டார்வினின் உயிரியல் ரீதியான பரிணாமவாதம் சமூகவியலில் மொழியியல் அணுகுமுறைகளில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை ஆசிரியர் மொழிகள் இறைவனின் அத்தாட்சிகள்; அல்லாஹ் ஒவ்வொரு சமூகத்திற்கும் மொழியையும் பண்பாட்டையும் எவ்வாறு வழங்கியுள்ளான் என்பதை

நிரூபிக்கின்றார். மொழியின் பரிணாமம் உண்மையென்றால் மொழிகளுக்கிடையில் ஒற்றுமை வந்திருக்கவே முடியாது என்று கூறுகின்றார். மொழியியல் குறித்த இத்தகைய அணுகுமுறை தமிழுக்கு மிகவும் புதியதாகும்.

சோனக மொழி தமிழ், மலையாளம், தெலுங்கு, துளு, சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதையும் பட்டியல் போட்டு விபரித்துள்ளார். இவ்வியல் தனியான நூலை பல்வேறு கிளை ஆய்வுகளைச் செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளமை இந்நூலின் மற்றோர் சிறப்பம்சமாகும். மொழி பற்றிய இயலின் இறுதி அம்சமாக சோனகருக்கான வரிவடிவம் பற்றியும் பேசப்படுகின்றது.

இறுதியில் "ஒரு வரலாற்று மறதி" என்ற இறுதி இயலில் இருட்குகையிலிருந்து ஒளியை நோக்கி நம்மை ஆசிரியர் அழைத்துச் செல்கிறார்.

8

கொழும்பு விமான நிலையத்துக்கு சென்று விமானத்தில் ஏறி மதுரைக்கு செல்வது வரை என் மனத்திரையில் இலங்கை வரைபடத்தின் கோடுகள் அழிக்க முடியா சந்திப்புகளை உருவாக்கியதை நினைத்துப்பார்க்கிறேன்.

இலங்கையில் மூண்ட போரில் வடகிழக்கு முஸ்லிம்களும் கணிசமான அளவில் பாதிக்கப்பட்டவர்களாவர். புலிகளின் ஆக்கிரமிப்புக்கள், சூறையாடல், இனச்சுத்திகரிப்பு நடவடிக்கைகள், கொலை மற்றும் கொள்ளை போன்ற இன்னோரன்ன



செயல்களால் பாதிக்கப்பட்டு இன்னமும் சுமூக வாழ்க்கைக்குள் நுழைய முடியாமல் தவிக்கும் நிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இலங்கையில் இன்று பொதுவாக காணப்படும் நிலைமையையும் முக்கியமாக வடக்கு கிழக்கு மாகாணத்தில் முஸ்லீகள் விசயத்தில் நிலவும் குறிப்பிடத்தக்கதான களநிலைமைகளை நாம் அனைவரும் தெறிந்து கொள்வதோடு, ஊடாக வாயிலாகவும் ஏனைய தகவல் நகர்த்திகள் மூலமாகவும் இலங்கை அரசுக்கும் ஏனைய நாட்டு அரசாங்களுக்கும் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளுக்கும் தெரியப்படுத்த வேண்டிய தார்மீக கடமையும் பொறுப்பும் இருக்கின்றது.

இலங்கை அரசும் வெளிநாட்டு என்.ஜி. ஓக்களும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களின் அபிவிருத்தி மீள்குடியேற்றம் மற்றும் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களின் நிலை என்பவை தொடர்பான விசயங்களில் முன்னேற்ற கரமான பெரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு செல்கின்றன. இது வரவேற்த்தக்க விசயமாகும். ஆனால் இந்த மீள் சீரமைப்பு நடவடிக்கைகள் அனைத்தும் முஸ்லீம்கள் தவிர்ந்த தமிழ்மக்களுக்கு மட்டும் முடுக்கிவிடப்பட்டிருப்பதை காணமுடிகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டளைக்கு அடிபணிந்து காலத்துக்கு காலம் இடம்பெயர்ந்து சென்ற முஸ்லீம்கள் சகல உடைமைகளையும் இழந்து அவர்கள் பரம ஏழைகளாக மாறியுள்ளனர்.

யுத்தத்தின் காரணமாக இடம் பெயர்ந்தோரில் பத்து வீதத்திற்கு மேற்பட்டோர் ஏதோவொரு வகையில் உளரீதியாக பாதிக்கப்பட்டுகள்ளனர்,. இதனை விட மேலும் பல கோடானுகோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் ஆயிரக்கணக்கான அப்பாவி மக்களின் உயிர்களும் கூட யுத்த சமயத்தில் அநியாயமாக இழக்க நேர்ந்துள்ளன.

அரசாங்கம் செயற்படும் முறையை கவனிக்கும் போது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் எந்தளவுக்கு விரைவாக சுமூக நிலையை தோற்றுவிக்க முடியுமென்பது சந்தேகத்துக்குரியதாகும். வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அநியாயமான முறையில் பாதிக்கப்பட்ட முஸ்லீம்களது இயல்பு நிலையை மீள நிலை நிறுத்துவதில் அரசாங்கத்திற்கு உண்மையான கரிசனை இருக்குமெனில் அபிவிருத்தி, மற்றும் புனர்வாழ்வு போன்ற விசயங்களில் அரசு கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இதன் பயனாகப் பாரபட்சம், பயம், பாதுகாப்பின்மை போன்ற எத்தகைய மனநிலைகளுக்கும் உட்படாது முஸ்லீம்களது பூர்வீகக் நிலங்களில் மீளக்குடியேற்றத்திற்கு சாத்தியமாக இருக்கும். இதற்காக அரசாங்கத்திற்கு ஆலோசனைகள் வழங்குவது தொடர்பான தார்மீகக் கடமை நன்கொடை வழங்கும் நாடுகளுக்கு இருக்கின்றது.

ஏனைய விசயங்களைவிட முதன்மையானதும் முன்னுரிமையளிக்க வேண்டியதுமான முதல் விசயம் யாதெனில் அரை நூற்றாண்டுக்கு மேலாக நிலவும் இனப்பிரச்சனைக்கு சகல மக்களும் ஏற்றுக்கொள்ளும் ஓர் தீர்வை காண வேண்டும். அதே நேரம் இலங்கையின் பிரஜைகள் என்ற வகையில் இலங்கையில் வாழும் ஏனையோர் பெறக் கூடிய இட ஒதுக்கீடு முதல் கல்வித்தகமை வரை விகிதாசார அடிப்படையில் இலங்கை முஸ்லீம்களும் பெற வேண்டும்.

வடக்கு கிழக்கு வாழ் முஸ்லீம்கள் தாம் ஏற்கனவே கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக உட்பட்டிருந்த அகதி வாழ்க்கையை மேலும் தொடர தயாரில்லை. அவர்கள் இதற்குப் பின்னும் அடிமைகளாக ஒதுக்கப்பட்டு வாழ்வதை விரும்பவில்லை. அதேநேரம் வடக்கு கிழக்கு பிரதேசங்களில் முஸ்லீம்களது நிலங்களில் இராணுவத்தின் உதவியோடு சிங்களக் குடியேற்றம் மற்றும் குடி இட ஆக்கிரமிப்புக்கள் நடைபெறுகின்றன. இது எவ்விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. மட்டுமன்றி இந் நடவடிக்கை மிகக்கண்டிக்கப்பட வேண்டியதொன்று. பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டதாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ள நிலையில் இராணுவத்தின் உதவியோடு முஸ்லீம்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதும், தங்களது சொந்த நிலங்களில் குடியேறுபவர்களை பலவந்தமாக வெளியேற்றி அவர்களது குடிசைகளை தீவைப்பதானது இன்னுமொரு பெரிய இனமோதலுக்கு அடித்தளமிடும் செயலாகும் .இச் செயல் எதிர்மறை விளைவுகளை தோற்றுவிக்கும். எதிர்பார்த்த பயன் கிட்டாது போகும்.

உள் நாட்டில் இடம் பெயர்ந்த ஒவ்வொரு நபரும் உரிமை கோரும் அவரவரது நிலங்களுக்குள் உட்செல்ல அனுமதிக்கப்பட வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட நபர்கள் ஒரே நிலத்துக்கு உரிமைகோரும் பிரச்சினைகள் எழும்போது மட்டுமே அதிகாரிகள் தலையிட்டு தீர்வு காணலாம். இச்செயல்முறை தற்போது உயர் பாதுகாப்பு வலயங்களாக கருதப்படும் இராணுவத்தினரின் ஆதிக்கத்திற்குட்பட்ட காணிகளுக்கும் மேலும் தமிழீழ விடுதலைப் புலிகளால் பலாத்காரமாக கொடுப்பனவு செய்து அல்லது கொடுப்பனவு செய்யாது தமது அதிகாரத்திற்குட்படுத்திய காணிகளுக்கும் பொருந்தக்கூடியதாய் இருக்க வேண்டும்.

இராணுவத்தினரும், ஏனைய படையினரும் முஸ்லீம்களது காணிகளில் இருந்து விலகி வேறு இடங்களுக்கு அவர்களது படைத்தளங்களையும், முகாம்களையும் நகர்த்தி மக்களின் சுமூக வாழ்வுக்கும், அவர்களது மீளபிவிருத்திக்கும் இடமளிக்க முன்வரவேண்டும்.

யுத்தத்தின் போது முழுமையாக அழிக்கப்பட்ட வீடுகளை மீளமைத்து கொடுப்பதுடன் தாமாகவே முன்வந்து தமது வீடுகளைக் கட்ட விரும்புவர்களுக்கு நிதி உதவியும் அத்தோடு கட்டிட நிர்மாண பொருள்களையும் வழங்க முடியும். இராணுவத்திற்கு ஏற்கனவே நிர்மாணித்த வீடுகளை உள்நாட்டில் இடம்பெயர்நத மக்களின் வீடுகளை மீளக்கட்டி முடியும் காலம்வரை அம் மக்களின் இடைத்தங்கல் முகாம்களாக பயன்படுத்தலாம்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தலுக்குப் பயந்து தமது காணிகளை அவர்களுக்கு விற்ற அல்லது வழங்கிய காணி உரிமையாளர்களை அரசாங்கம் தண்டிக்கக்கூடாது. கிண்ணியா முதல் கிளிநொச்சி வரை மக்களின் (குறிப்பாக முஸ்லிம்களின்) காணிகளில் முட்கம்பி வேலியடைத்து இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருக்கும் சகல இடங்களையும் அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும். இல்லையேல் மக்கள் இதனை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

முஸ்லீம்களது ஆயிரக்கணக்கான வாகனங்கள் லாறிகள், கார்கள், உழவு இயந்திரங்கள், இழுவைப் பெட்டிகள், முச்சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் என்பன திருத்த முடியாதபடி அழிக்கப்பட்டுவிட்டன. பல காணாமற் போயுள்ளன. புதிய வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு அல்லது அதற்கான நட்டஈடு வழங்குவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும்.

தற்போது அபிவிருத்தி நடவடிக்கைகளில் உள்ளூர் பொதுமக்களின் பங்களிப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளில் உள்ளூர் மக்களின் பங்களிப்பு ஓர் நிபந்தனையாக பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் காலத்தில் மாவட்ட நிர்வாகம் மற்றும் ஏனைய தொண்டர் நிறுவனங்களில் முக்கிய பதவி வகித்த பலர் அதே பதவி நிலையில் தொடர்ந்து இருப்பதன் விளைவாக நன்கொடை வழங்கும் நாடுகளிடமிருந்து கிடைக்கும் உதவிகள் ஒழுங்கீனமான முறையில் பகிர்ந்தளிக்கும் நிலை ஏற்படுகின்றது. எனவே இதில் நன்கொடையாளர்கள் தலையிடுவதற்கான உரிமை

இருக்க வேண்டும். அரசாங்கம் தமிழ் மக்களின் காணிகளுக்கு உறுதி வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஆனால் முஸ்லிம்களுக்கு வழங்கியதாகத் தெரியவில்லை). மக்கள் எவ்வித உறுதிகளையும் வழங்கியதாகத் தெரியவில்லை). மக்கள் தமது சொந்த வீடுகளில் இன்னமும் குடியமர்த்தப்படாத நிலையில் உறுதிகளை வழங்குவது மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்தும். உறுதிகள் வழங்க வேண்டுமாயின் உரிமையானவர்கள் தத்தமது காணிகளை அடையாளம் காட்டி அதில் மீளக்குடியேறும் வரை அரசாங்கம் பொறுத்திருக்க வேண்டும்.

இனங்காண முடியாத நபர்களுக்கு பெறுமதிமிக்க காணிகள் மனம் போனவாறு வழங்கப்படுகின்றன. இதன் நோக்கம் தெரியவில்லையென்பதால் இவை வெளிப்படையானதாக இருக்க வேண்டும். வடக்கு கிழக்கிலுள்ள பெறுமதிமிக்க காணிகள் பல நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பல குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இது உள்ளூர் மக்களுடன் புதிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும் என்பதால் இந் நடைமுறை ஓர் ஒழுங்கற்ற செயலாக கருதி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

யுத்தத்தின் காரணமாக உள்நாட்டில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் இழந்த உயிர்களுக்கும் சொத்துக்களுக்கும் நட்டஈடு வழங்குவதற்கான திட்டம் வகுக்கப்படவேண்டும். பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக ஏற்பட்ட இழப்புக்களுக்கு நட்டஈடு வழங்கப்படுமென்ற உறுதிமொழியை இலங்கை ஜனாதிபதி ஏற்கனவே வழங்கியுள்ளார். (இது முஸ்லிம்களுக்கா அல்லது முஸ்லிமல்லாத தமிழர்களுக்கு மட்டுமா என்பது கேள்விக் குறியாகவே உள்ளது!?).

பாதிக்கப்பட்ட வடகிழக்கு முஸ்லீம்களின் பரிதாப நிலையை அவதானித்து, அம்மக்களின் வாழ்வில் சகஜ நிலை ஏற்பட வேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு இவற்றை முன்மொழிகின்றோம்.

மீளக்குடியேறிய மக்களுக்காக மட்டுமல்லாமல், கால்நூற்றாண்டுக்கு மேல் அமைதியான. சமாதான வாழ்விற்காக ஏங்கித்தவிக்கும் இந்நாட்டின் சகல மக்களின் விடிவிற்காக இவ்வேண்டுகோள் விடுக்கப்படுகின்றதேயன்றி யாரையேனும் புண்படுத்துவதற்காகவோ அன்றேல் சங்கடப்படுத்துவதற்காகவோ அல்ல என்பதை பணிவுடன் அறியத் தருகின்றோம். இயல்பு வாழ்க்கை மீண்டும் ஏற்படுவதற்கு முன்னர் அரசாங்கம் தனது நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்த முயற்சிப்பதன் மூலம் மக்களை குழப்பத்தில் ஆழ்த்தக் கூடாது என்பதை இலங்கை அரசின் மனதில் பதிய வைக்க வேண்டுமென்று மிக நேர்மையான முறையில் கேட்டுக் கொள்கின்றோம்.

மக்கள் பார்க்குமிடம் எங்கும் அந்நியர்களும் புதிய சுற்றாடலும் அமைந்த புதிய பிரதேசத்திலுள்ள அந்நியர் நிலத்தில் வாழ்கின்றோம் என்றில்லாது தாம் இடம் பெயர் வதற்கு முன்னர் வாழ்ந்த அதே இடங்களுக்கு எவ்வித அமைப்பு மாற்றமுமின்றி தமது சொந்த நிலங்களுக்கு மீண்டும் வந்துள்ளோமென்ற உணர்வு அவர்களுக்கு ஏற்பட வேண்டும்.

இவை சரியாக நடைமுறைக்கு வரும் பட்சத்தில் இலங்கையில் எழுச்சியும், மலர்ச்சியும் துள்ளி விளையாட பரவசத்துடன் வாழ்க்கைக்குள் நுளையும் மக்களைத்தான் நம் நாட்டில் பார்க்க முடியும் மாறாக கவனக்குறைவுடன் இருந்தால் மீண்டும் இருள் சூழ்ந்து கொள்வது மிகத் தொலைவில் இல்லை!!



நாவல் விலை அஞ்சல் /
கூரியர் செலவு உட்பட
ரூ.80/- மட்டுமே



ஜெம்சித் - ஸமான்

நகரத்தை விழுங்கும் நிலைக்கண்ணாடி

நகரத்தின்
முடிவிடக் கடையில்
கொளுவி வைக்கப்பட்டிருந்த
நிலைக் கண்ணாடி
நடு மதியப் பசியில்
அந்த நகரத்தை விழுங்கி முடிந்திருந்த
நேரம் பார்த்து
கடைக்காரன்
எனக்கு விற்றுவிட்டான்
நிலைக் கண்ணாடியுடன் சேர்த்து
அந்த நகரத்தையும்
எனது நகரத்திற்கு
கொண்டு சென்று கொண்டிருக்கிறேன்
எனது நகரத்தைவிட பெரிதான
இந்த நகரத்தை இப்போது
எங்கே இறக்கி வைப்பேன்.

பொழுதுபோக்கு

கல்லெறிந்து விளையாட வசதியாய்
நதியை சிறிது தூரம் நகர்த்தி
வைத்துவிட்டு
கரைக்கல்லில் ஏறி அமர்ந்தேன்
சட்டைப்பையில்
சேகரித்துக் கொண்டு வந்த
திரளைக் கற்கள் பாரித்தது
ஒவ்வொன்றாய் வெளியில் எடுத்து
நதிக்குள் எறிந்தேன்
ஆய் என்று உடலைத் துள்ளி
வேதனை வளையங்களை வியாபிக்கவிட்டு என்னை அது களிப்பூட்டியது
பின்னந்தி கரையக் கரைய
கல்லெறிவதில் எனக்கு விருப்பம்
அதிகரித்தது
தீர்ந்து போன கற்களை
மறுபடியும் சேகரித்துக் கொண்டு
இருப்பிடம் திரும்பினேன்
நதி வடிந்தோடிவிட்டது
வேறு வழியின்றி
என் நிழலை அவ்விடம்
நகர்த்தி வைத்துவிட்டு
அதன் மீது கல்லெறிந்தேன்.



பொய் உண்ணிப் பொய்கள்

பொய்யுண்ணி மனிதர்களின் பசிதீரா வயிறென
பற்றி எரிகிறது கடல்
பழ உண்ணிகளும்
ஊண் உண்ணிகளும்
பொய் உண்ணப் பழகியதால்
பொய் உணவுக்கு உலகெங்கும்
மா பெரும் போட்டி
புராதன சந்தைகளில் தொடங்கி
நவீன சந்தைவரை
பொய் கூவி பொய் விற்கும் வியாபாரிகள் அதிகம்
நானும் ஒரு பொய் வாங்க வேண்டும்
உபசரிப்பு மேசைகளில்
உண்மை நிரம்பிய
என்னுடைய தட்டுக்கள்
ஓரங்களுக்கு ஒதுக்கப்படுகின்றன
சூ கால்களின் கீழே மிதிபடுகின்றன
கூட்டமற்ற வியாபார சந்தையில்

நான் உண்மைகளை விற்பவன்
உறுதிமிகு அழகான சீனத்து
மட்பாண்டங்கள்
என் சந்தையில்தான் விற்கின்றன
ஆனால் பூசி மெழுகிய பொய்மையின்
உரோம கண்களில்தான் அதீத மழை
மலிவு ரக மட்பாண்டங்களில்
சீனத்து கைவேலை
அறியாமை சந்தைக்குத்தான்
வாடிக்கையாளர்கள் அதிகம்
இனியும் நான் உண்மைகளை விற்பதில்
நியாயமில்லை
வலுவான பொய்மை சாட்டைகளின் முன்னால்
வலுவிழந்த உண்மை சாட்டையை
சுழற்ற முடிவதில்லை
லட்சோப லட்சம் பொய்கள் ஒன்றிணைந்து
உண்மையின் உடல் பாகங்களை
ஒவ்வொன்றாய் உண்கின்றன
தீராபசி மலையில் ஏறி நின்று
கடவுளும் இரங்கும்படி
கேவி கேவி அழுகின்றன
கடவுளும் நம்பிவிட்டார்
உண்மையாய் இருந்ததற்காய்
வேலையையும் இழந்தாயிற்று
இனி இழப்பதற்கு ஒன்றுமில்லை
தேகம் மெலிந்துவிட்டது
முகம் உப்பிவிட்டது
இனியும் தாமதிக்க முடியாது
நானும் ஒரு பொய் வாங்கவேண்டும்
இம்மாபெரும் சந்தை கூட்டத்தில்
ஒரே ஒரு பொய்யை எப்படி கொள்வனவு செய்வது
எங்கிருந்தோ கடவுள் பேசினார்

வரிசையில் உன் பின்னால் நின்றவர்
எப்படி பொய் சொல்லிவிட்டு
முன் நகர்ந்தாரோ
அவரை போல பொய் சொல்ல வேண்டும்

அசரீரி அடங்கியதும்
பின்னால் திரும்பிப் பார்த்தேன்
ஒருவருமில்லை
முன்னால் நீண்ட க்யூ...

நிறமழிந்த காற்று

கருப்பைக்குள் உருத்திரளாக் குருதிக் கட்டியென
உறுவமற்று திரிந்த காற்றை
ஓவிய அறைக்குள் அழைத்துவந்து
கலப்புநிற வர்ணக் குடுவைக்குள்
அடைத்து வைத்திருந்தேன்
மின் விசிறியற்ற அறையில்
அதிகமாக உடல் வியர்த்தபடியால்
மேல் மூடியை கொஞ்சம் அவதானமாக திறந்தேன்
நிறமூறிய காற்று ஜன்னலால் பறிந்து சென்று
பூமரக் கிளையில் அமர்ந்துவிட்டது
சட்டென பருவ காலங்கள் மாறின
கீழ்த்திசையில் குளிர்காலத்தை அறிவித்தது
அயல் மரங்கள்
நீல நிற வானத்தில்
மழை மேகங்களை யாரோ
பயிரிட்டிருந்தனர்
பெய்யவிருக்கும் இம்மழையில்
நிறமழிந்து காற்று கரைந்துவிடலாம்
அதற்குள் மறுபடியும் ஓவிய அறைக்குள்
காற்றை அழைத்துவர வேண்டும்
குளிரூட்டியில் பதனிட்டு வைத்திருந்த
தந்திரமான வார்த்தைகளை
உதடுகளில் நிரப்பிக்கொண்டு வாசலுக்கு வந்தேன் மழை தூறியது
இதயத்தின் அடியாழத்தில்
ஒழித்து வைத்திருந்த இரும்பு முகமூடிகளை உருக்கி
மழைவரும் துளைகளை அடைத்துவிட்டு
கண்களை கழற்றி
அவ்விடம் பொருத்தியிருக்கின்றேன்
இனி நான் விரும்பும்போது மட்டும்தான்
மழை பெய்யும்.

பாட்டி சுட்ட வரலாற்று சிறப்பு மிக்க வடை

1

[illegible]

2

[illegible]

3

[illegible]

மறுநாளிலிருந்து
வடை ஒவ்வொரு சிறு துண்டுகளாக
குறைவடைந்து பின்பு
தன்னுடைய பசி போல் வளர்வதாகவும்
நரி ஒரு பத்திரிக்கை பேட்டியில்
குறிப்பிட்டிருந்தது

எலிகளை தேடி பூனைகள்
வந்திருக்க வேண்டும்
அதன் காலடித் தடங்கள்
வானத்து வீதியில் ஒவ்வொரு நாளும்
மிகத் தெளிவாக பள பளக்கின்றன.

மினுங்கும் பூனையின் ஒரு ஜோடி கால் தடங்கள்
தன் காதலின் கண்களைப் போல இருப்பதாக
ஒரு கவிஞன் உவமித்து எழுதியிருந்தான்

மாதத்தில் ஒரு நாள்
பாட்டி சுட்ட
வரலாற்று சிறப்புமிக்க வடை
கருகி விடுகின்றது.

வானத்தை பார்த்துக் கொண்டிருக்கும்
நடுவர்கள் வடை விழுந்துவிட்டதாகவும்
அதை நரி புசித்துவிட்டதாகவும் பார்வையாளர்களுக்கு
அறிவித்துவிட்டார்கள்
பின்பு பல தடவைகள்
தவறான தீர்வுக்காக
பார்வையாளர்களிடம்
மன்னிப்பு கோரியிருக்கிறார்கள்

பின்பு வெளியிடும் முடிவில்
வடை வானத்திலேயே இருப்பதாகவும்
தன் முன் வளர்ந்து நிற்கும்
பசி மலையில் நரி ஏறி நிற்பதாகவும்
தங்களுடைய சரியான முடிவுகளை
அறிவித்திருக்கிறார்கள்

கம கமத்து மணக்கும்
வடையைப் பார்த்து
நரி இன்னும் சொல்லவில்லை
சீச் சீ இந்த வடை புளிக்குமென்று.

சர்வம் சூன்யதா:

மனோ.மோகனின் பைத்தியக்காரியின் பட்டாம்பூச்சி கவிதைத் தொகுப்புடனான எனது புரிதல்கள்

கண்டராதித்தன்



புதுச்சேரியிலிருந்து என்னளவில் பிரபஞ்சன், பிரேம்—ரமேஷ், மாலதி மைத்ரி ஆகியோருக்குப் பிறகு குறிப்பிடத்தகுந்த ஆளுமையாக மனோ.மோகன் உருவாகியிருப்பதை இந்தொகுப்பின் வாயிலாகவும், அவருடனான உரையாடல்களின் வழியாகவும் உணர்கிறேன்.

என்னதான் பொதுவான நிலமெனினும், நில உணர்வுகளும், எண்ணவோட்டங்களும் தமிழகத்திற்கும் புதுவைக்கும் மெலிதான மாற்றமுடையதுதான். ஆனால் மொழியின் மீதான வேட்கையில் நிலத்தை, மொழியை, பண்பாட்டை தனித்தனியாக கருதாமல் பொதுவான பார்வையிருப்பவனால் மட்டுமே பிரதேசத்தை மீறியும் வெளியே வர முடியும். அதற்காக வட்டார வழக்கினுள் அழகும், செழுமையும், அனுபவமும் இல்லை என்பதாக அர்த்தமில்லை. பிரபஞ்சன் மற்றும் பிரேம்—ரமேஷ், மாலதி போன்றோர் வரிசையில் நான் வகைப்படுத்துவதும், அவர்களைப்போன்று மொத்த தமிழ் படைப்பியக்கத்திற்கும் அறியப்படுபவராக தன்னை தயார்படுத்திக்கொண்டதையும் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். மனோ.மோகன் தனது முதல் கவிதைத்தொகுப்பு வெளியானதற்கு சரியாக ஒருவருடத்திற்குப் பிறகு இந்த அமர்வு நடக்கிறது. முதலில் இந்த கையடக்கத்தொகுப்பினுள் உள்ள கவிதைகளின் நேரடித்தன்மைக்கு வருகிறேன். கவிதைத்தொகுப்பின் முழுவதிலும் எளிய சொற்களும், கவிதைக்கேயுரிய பெரியளவிலான பூடக மொழியினை கைக்கொள்ளாமல், தன்னளவிலான மொழியை நம்பி இதனை ஒப்படைத்திருக்கிறார். புத்தனில் தொடங்கி புத்தனில் முடியும் கவிதைகள் அடங்கிய தொகுப்பின் அடிநாதமாக கவிஞனின் தேடல் மனோபாவத்தையும் அங்கிருந்து மாற்றத்தையும் காண விழையும் மனத்தையும் புரிந்துகொள்ள முடிகிறது.

‘தந்தம் முளைத்த கதை’ என்ற கவிதையில்...
போதிசத்துவன் தொழிற்சாலையை கட்டிவிட்டான்
அதை யார் வேண்டுமானாலும் இடிக்கலாம்
என்று உயிலும் எழுதி வைத்துவிட்டான்
அதன் கிளைகள் நாடெங்கும் திறக்கப்பட்டன
‘ஞானத்தின் விளக்க க் கையேட்டின்
பக்கங்கள் வெடித்துச் சிதறிய இலவம் பஞ்சென
ஒவ்வொரு கதவிலும் ஒட்டியிருந்தன
பாதரசம் போலும் திரவத்தன்மை கொண்ட
உலோகத்தைத்தான் அவன் கண்டு பிடித்தான்
தொழிற்சாலை இயந்திரத்தால்
வடிவமைக்கப்பட்ட போது
அது பிளாஸ்டிக் குடமாக மாறிவிட்டிருந்தது

என ஞான மார்க்கத்தின் பிறப்பிடமாக கருதிக்கொள்ளும் தேசத்திலிருந்து பிந்தைய சமூகம் புத்தன் போன்ற ஞானவான்களிடமிருந்து எந்த வகையான ஞானத்தை அடைய முடியும் என்பதை இவ்வாறு கவிஞர் சொல்வதாக கருதலாம்.

மனோ.மோகன் கவிதைகளில் நேரடி அரசியல் தன்மை இல்லை என்பது ஆறுதலான விஷயம். ஆனால் ஒரு கலகத்தை மனதில் கொண்டோ அல்லது இந்தவிதமான புனைவுகளில் சற்று கோஷங்களின் சாயம் ஏறுவது தவிர்க்க முடியாதது. இது கவிதையில் பலத்தை சிதைக்கக் கூடும்.

குறிப்பாக காட்சி அழகியலை நம்பாத, எந்த தீர்மானத்தையும் வெளிக்காட்டாத, அதே நேரத்தில் சுயபுலம்பல்களும் இல்லாத ஒரு நடையில் கவனமாக நடைபோட்டிருக்கிறார். இதுவே இவரது வெற்றியாக நான் கருதுகிறேன்.

‘நிராயுதபாணிகளின் கூட்டுக்கனவு’ கவிதையில்
தப்பிக்க சாத்தியமில்லை
நாம் சபிக்கப்பட்டவர்கள்
நம்மைச் சுற்றி வளைத்த நீர்வெளி
நீந்தித் தப்பிக்கும் திட்டம்
வெகசிலருக்கே இருக்கிறது. — என்றும்

‘நரசிம்மனின் கடைசிப்பொழுது’ கவிதையில்
தனித்தீவில் ஒற்றை மிருகமாய்
பசித்தலைகிறான் நரசிம்மன்
வயிறு கிழித்து பசியாற
மனிதர்களில்லத தேசமிது —என்றும்

'அகாலம்' கவிதையில்
பசி மிகும் போது
தானீன்ற குட்டிகளையே புசிக்கும்
நாகமொரு அரசியல் விலங்கு — என்றும் எழுதியிருப்பதை இன்றய பொதுவாழ்விலும், தனி நபர் அறத்திலும், கூட்டு அறத்திலும் பொருத்திப்பார்க்கலாம்.

இத்தொகுப்பின் மிகச்சிறந்த கவிதைகளில் ஒன்று 'மாட்டுக்கால் சூப்'.

இக்கவிதை முதலில் ஆட்டுக்கால் சூப் சாப்பிடும் ஆணின் குரலில் பல்வேறு சூழ்நிலைகள், காலங்கள், நபர்கள் பல்வேறான தன்மையை கொண்டிருப்பது. இதே நிலத்தின் மாலையை உணர்ந்தவர்களுக்கு இக்கவிதையின் தாத்பர்யம் புரியக்கூடும். (உம்; மாலையா, இரவா, சலீம் பாய், பால்கோவாவின் பதத்தில் வேகவைக்கப்பட கால், லியர்னடோ டாவின்சியின் ஓவியப்பெண் மற்றும் தொல்லியல் நிலமான அரிக்க மேடு, சங்கராபரணி ஆறு, சீர்வரிசைத் தட்டு என தொடர்ச்சியான சொல்லாடல்கள் ஏனைய கவிதைகளில் காணப்படாதவை.).

'பித்தேறிய காமுகனின் ஆசைகள்' கவிதையில் (விதைப்பை நீக்கப்பட்ட பன்றியென) 'தூண்டில்காரன் கதை'யில் (ஏதும் சொல்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறது ஆறு/ இணை மீனை வசியம் செய்யும் வார்த்தைகளை சேகரித்தபடியே/ மௌனமாய் நீந்துகிறது ஆண் மீன்) அங்கங்கே சப்தமில்லாத தெறிப்புகளும் உண்டு.

நாகர்ஜுனன் என்ற அரூப பாத்திரத்தின் வழி பல தளங்களில் கேள்வியெழுப்பி கடப்பதும் புதியதாக உள்ளது.

மேலைத் தத்துவயியலில் ஈடுபாடு கொண்ட மனோ.மோகன், அதற்கிணையான அரசியல் அறிவும், அது சார்ந்த விடுபடல்களும் (படைப்பின் வழி தம்மை ஒப்பு கொடுக்காமை) தமது படைப்பின் வழியாக கடந்துவிடுவதை பார்க்கிறோம்.


பல கவிஞர்கள் தனது முதல் கவிதைத்தொகுப்பை தயவு செய்து மறந்துவிடுமாறு கேட்டுக்கொள்வதுண்டு. அதுவொன்றும் குறையில்லை; பயிற்சியின் வழி அதைத் தண்டக்கூடிய பலம் இருப்பதை உணர்ந்தவர்கள் அவர்கள். ஆனால் சில பேருக்கு அந்த வாய்ப்பு கிட்டுவதில்லை.

தான் எழுதும் மொழியைக் கண்டுகொண்டு கால அவகாசத்துடன் எழுதவந்தவர் மனோ.மோகன். மனோ.மோகனை அறியாதவர்கள் கூட தொடர்ச்சியான அவரின் அடுத்த படைப்புகளின் வழி அவரைப் புரிந்துகொள்ளக்கூடும். கச்சிதமான மொழியாற்றல் புதிதாக இன்னும் பல பரிசோதனை முயற்சிகளுக்கு வழி வகுக்கக்கூடும். அதை பின்னர் மனோ.மோகனும் செய்யக் கூடும். என்ன மோகன்?

ஞானப்பிரகாசம் ஸ்தபதி

தமிழ் நவீன ஓவியத்தின் அடையாளப் பிரதி

யாழன் ஆதி



மேற்கு வானத்தின் இளஞ்சிவப்பு நிறத்தைத் தோற்கடித்து நீலம் நீர்வண்ணம், தாளில் பரவுவதைப் போலப் பரவுகிறது. அதன் ஆளுகையில் வானம் பெரிய ஓவியப்பரப்பாகத் திரள, மேகங்கள் தங்கள் ஓவியங்களை நிர்மாணம் செய்ய ஆரம்பிகிக்கின்றன. தன்னுள்ளத்திலோ அல்லது அருகிலிருக்கும் அம்மாவிடத்திலோ அந்தக் குழந்தை மேகத்தின் தன்னிலை ஓவியத்தைப் பார்த்து அதற்குத் தெரிந்த உருவத்தின் ஞாபகத்தில் ஒன்றைச் சொல்ல அந்தக் குழந்தைக்கு ஓவியம் அறிமுகமாகிவிடுகிறது.

ஓவியங்களை மனித மனத்தில் இயற்கையின் கைகளே முதலில் வரைகின்றன. மாறும் வானத்தின் வண்ணங்களும், பூக்களின் வண்ணங்களும், இயற்கையின் பேராற்றலால் தோன்றும் வடிவங்களும் ஓவியங்களின் முன்மாதிரிகள் என்ற நிலையில் ஓவியம் இயற்கையானது என்பதும் அதனால்தான் அந்தக் காலத்தில் எழுத்துக்கள் ஓவியங்களாக இருந்தன என்றும் நாம் அறியலாம். ஆக எழுத்துக்கு முந்திய ஒரு இயற்கைக் கலை வடிவ வெளிப்பாடு ஓவியம்.

ஒரு படைப்பாளனுக்குத் தன் படைப்பின்மீது குவிகிற கண்களும் அந்த கண்களின் வழி வழிகிற தன் ஓவியங்களும் மிகவும் முக்கியமானவை. அது ஒரு எழுத்தாளனுக்கு நேரக்கிடைக்காத அம்சம். ஓர் ஓவியம் தன்னளவில் ஆற்றக்கூடிய வேதியியல் மாற்றத்தை வேறு எந்தக் கலைவடிவமும் ஆற்றிவிட முடியாது.. அத்தகைய வலிமை வாய்ந்த அந்த வடிவத்தைக் கையாளும் படைப்பாளியின் நுணுக்கமானப் பார்வையும் அவர் கடத்துகிற நுண்ணரசியலும் மிகவும் ஆற்றலுற்றவை. ஒவ்வொரு நாட்டிலும் அத்தகைய ஓவியக்கலைஞர்கள் தங்கள்



படைப்புலகத்தை ஒரு கலகச் செயல்பாடாக மாற்றியிருப்பதை வரலாற்றின் வழிநெடுக நாம் காணலாம்.

தமிழிலும் அப்படியொரு பட்டியல் உண்டு. ஓவியத்தில் தீவிரமாக இயங்கக் கூடிய படைப்பாளிகள் காட்டும் உலகம் அவர்களின் பார்வையைத் தாண்டியதாக நிகழும் அரசியல் வெளிகளைத் தன்னுள் வாங்கி அதுதரும் வண்ணங்களின் வெளியில் தன்னை நிகழ்த்தும் கலைஞர்கள் தமிழுலகத்திலும் காலத்திற்கேற்ப வந்து கொண்டே இருக்கிறார்கள்.

தமிழ்ச்சூழலில் சிறுபத்திரிகைகள் நகர்ந்து வெகுஜன அமைப்பையும் அடக்கத்தினையும் கொண்டு நடுத்தன்மை **(Middle)** என்ற நிலையை அடைந்திருக்கும் இச்சூழலில் வெளிவரும் ஒரு சில சிறந்த இதழ்களில் தன் வெளிப்பாட்டை ஓவியங்களாக ஆற்றிக்கொண்டிருக்கிறார் ஞானப்பிரகாசம் ஸ்தபதி.

ஞானப்பிரகாசம் ஸ்தபதி ஓவியங்கள் ஒவ்வொன்றும் பல நிலைகளில் பார்வையாளரை அவரளவில் மீள் உருவாக்கம் செய்து படைப்பாளித் தன்மயுடன் மாற்ற வல்லவையாக இருக்கின்றன. உயிர்மை, போன்ற இதழ்களின் வெளிப்படும் அவரின் கலையாக்கங்கள் மிகவும் உன்னதமாக தமிழ் ஓவியப்பரப்பில் அடுத்தக் கட்ட பாய்ச்சலுக்கான பலங்கள் மிகுந்ததாக மாறிக்கொண்டிருக்கின்றன.

ஒரு கதைக்கோ அல்லது கவிதைக்கோ அந்தந்தப் படைப்பாளிகளால் உருவாக்கப்பட்ட பாத்திரங்களையோ அல்லது கருவினையோ நேரிடையான ஓவியங்களாக மாற்றிவிடும் தன்மையுடன் ஞானப்பிரகாசம் ஸ்தபதி ஓவியங்கள் அமைவதில்லை என்பது அவரின் தனித்தன்மை. அந்தக் கதையை அல்லது கவிதையை உள்வாங்கிக் கொண்டு ஓவியமாக வெளிப்படும் தன் சிந்தனைகளை அவர் தன் விரல்கள் வழியே வழியவிட நமக்குக் கிடைக்கும் பிரதிகள் தனித்தன்மையாக மாறிவிடுகின்றன. யதார்த்தவாதக் கதைச்சொல்லலுக்குக் கூட ஞானப்பிரகாசம் ஸ்தபதி ஓவியம் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்றிவிடும் ஆற்றல் கொண்டதாக உள்ளது.

அவரின் படைப்புகள் பெரும்பாலானவை கோடுகளால் உதிர்க்கப்படுகின்றன. தன் உடலின்மீது அவருக்கு இருக்கும் வேட்கையின் அளவுகளாக அவர் ஓவியங்கள் இருக்கின்றன.





மனிதர்களையும் மிருகங்களையும் இணைத்து அவர் காட்டும் ஓவிய வெளிக பார்வையாளரை அதிர்ச்சிக்குள்ளாக்கும் தன்மை கொண்டவையாக இருக்கின்றன. ஓவியப்பிரத்தியின் எந்த இடத்திலும் தொடங்கிவிடும் மனித உருவம் அது காட்டும் தன்மையின்மூலமாக அந்த உடலில் எழும் வாசனையேயா கவிச்சியோ அல்லது காமமோ ஆன்மீகமோ ஓவியத்தின் மீதிப்பகுதியில் வந்து சேர்ந்துவிடுகிற லாவகம் ஞானப்பிரகாசம் ஸ்தபதி ஓவிய வலிமையாக மாறிவிடுகின்றன. கருப்பு வெள்ளைப் பகுதிகளாக அவரின் ஓவியங்கள் சில இருண்மைகளைப் பொதித்துக் கொண்டு பார்வையாளருக்குக் காட்டும் காட்சிகள், கோட்டின் அடர்த்தியும் மெலிவும் சிலநேரங்களின் நிகழ்த்தும் கலவைகள் மனதிற்குள் சென்று பார்வையாளரை கிறங்க அடிக்காமல் அவரை மீண்டும் ஓவியத்தைப் பார்க்க வைக்கின்ற கோரலை அவர் ஆக்கம் செய்துவிடுகிறது.

நீக்ரோ மக்கள் தங்கள் விடுதலைக்கு அவர்கள் உடல்களையே ஆயுதமாகப் பயன்படுத்தியதைப் போல, பெண்கள் தங்கள் உடலை வைத்து விடுதலை அரசியலைப் பேசுவதைப் போல ஞானப்பிரகாசம் ஸ்தபதி ஓவியங்கள் எங்காவது ஓரிடத்தில் மனித உடலைக் கொண்டு இயங்கக்கூடியனவாக இருப்பது அவருடைய தனிப்பான்மை. மனித உடல்மூலம் அவர் வெளிப்படுத்தும் அவலங்கள் அல்லது வேட்கைகள் பார்வையாளனுக்கு அதுவரை கிடைத்திராத அனுபவத்தைத் தரக்கூடியன.

படம் எடுக்கும் பாம்பின் உருவத்தோடு சற்றுப் பொருந்துகிற முக அமைப்பும் கழுத்து பாம்புன் வாலாகவும்



[illegible] ஆனால்
இரண்டு [illegible] காலங்கள் உணர்த்திடுகின்றதாகவும்
[illegible] ஓர் ஓவியம் [illegible] மிக முக்கியச்
[illegible] கொண்டது. இந்த உருவம் காட்டுகின்றது
[illegible] ஒரு கன்னியின் [illegible] சொல்ல முடியாததாக அந்த
[illegible] [illegible] மிக்கதாக ஓவியத்தில்
வெளிப்படுத்துகின்றது. ஆனால் இந்த ஓவியத்தை ஒரு
[illegible] எதிர்நோக்காமல் அவருடைய
மனநிலையை ஓர் [illegible] தான். இத்தகைய
ஓவியம் [illegible] அவர் [illegible] அமைந்து அவருடைய
இயல்பானதாக அமைந்து அவர் [illegible]
அமைதியாக நினைவு [illegible] சாத்தியமாக
அமைகின்றன. அவை போல் கொண்ட உருவ அமைப்பு உலகின்
[illegible] ஆழமாக வெளிப்படும் [illegible] சுதந்திரமான
[illegible] வாழும் [illegible] சமூகத்தின் இருப்பாகவும்
[illegible] மக்களையும் [illegible] அவர் வைத்திருப்பது ஆகிவிட
இயல்பாக இருக்கின்ற [illegible] மனிதர்கள் தொடர்ந்த
[illegible] இருக்கின்ற சிந்தனைகளும் செயல்களும் கட்டப்பட்ட
ஓர் ஆலயத்தின் வெளிப்பாடாக அந்த ஓவியம்
அமைந்திருக்கின்றது.

[illegible] பின்னணியில் ஒரு ஆதிகாலப் போல ஓவியம்
போல இந்த [illegible] முகமாக இருக்கின்றான். அவனே
ஆதிகாலத்து [illegible] அவனே [illegible]
[illegible] [illegible] இருந்திருக்கின்றான்.
ஆனால் காலத்தின் [illegible] அவன் இந்தச் சமூகத்தில்
[illegible] நிலையில் இருக்கிறான் என்பதை மிகவும் தத்ரூபமாகக்
காட்டும் ஓவியம் அது. அந்த ஓவியத்தில் இருக்கும் பெண்ணின்
[illegible] உருவ அமைப்பும் பின்னணியிலிருக்கும் [illegible]
[illegible] [illegible] [illegible] [illegible]
காலத்தில் [illegible] இருக்கின்றது. [illegible]
[illegible] போன்றவர் நிலையை இந்த ஓவியம் தன்
[illegible] [illegible] தனை வடித்துத் தந்த நிலை. [illegible]
அந்த ஆதித்தாயின் வீரத்தினூடே [illegible] வீரமும்
[illegible] நிறைந்த போல சித்திரம் [illegible]
இருக்கிறது. இந்த ஓவியம் ஓர் [illegible]
[illegible] அதில் இருக்கும் [illegible]
இடங்களும் [illegible] இடங்களும் [illegible]
நிலையில் அந்த ஓவியம் அற்புதமான இடத்தை அடைந்திருக்கிறது.
[illegible] ஓவியங்கள் நாம் காணவேண்டிய மிக
[illegible] மக்களை அவர் [illegible]
[illegible] மிகவும் [illegible] இருக்கின்றன. ஒரு
ஓவியத்தில் [illegible] நிலத்தில் [illegible] போன்ற

வலிமையுடன் ஓவியம் மிக அருகில் (Close up) இருந்து தொடங்கி அந்தக் கை ஓர் உருவமாக மாறியிருக்கும். இந்தக் கையும் அது ஊன்ற எத்தனிக்கும் நிலமும் பேசும் நுண்ணுணர்சியலை எப்படி வேண்டுமானாலும் விளங்கிக்கொள்ள முடியும். இந்தக் கைய வலிமை உள்ள கை ஊன்றுவதற்கு நிலமற்ற தேசத்தில் அந்தக் கையின் உடலும் மற்றவைகளும் அருபமாய் மாறிவிடுவது ஓவியத்திற்குள் அவர் வைத்திருக்கும் ஒரு போராட்டத்தின் வெளிப்பாடாகவே பார்க்க முடிகிறது.

ஒரு ஓவியம் காலின் வலையைக் காட்டுவதாக அமைந்திருக்கிறது. அந்தக் காலே ஒரு மனித உருவமாக மாறி, அதன் வயிறு வெடித்து அந்தத் திசையிலிருந்து குழந்தைப் போன்ற ஓர் உருவம் தோன்றி அந்த ஓவியம் நிகழ்த்துகிற கலைவெளிப்பாடு அற்புதமானது. கால்களும் ஞானப்பிரகாசம் ஸ்தபதி ஓவியங்களில் அதிகமாக இடம்பெறுகின்றன. நிலத்தில் பதிந்த ஒற்றைக்காலை அதற்குமேல் இரு உடல்கள் இணைந்திருக்கும் ஓவியம் புலப்படுத்தும் பிரதிமைகள் கற்பனையின் மீநிலையில் இருக்கின்றன.

ஒரு மானும் ஒரு மனிதனும் இருக்கிற ஓவியம் சிறந்த ஒன்று. கோடுகள் ஓர் ஓவியத்திற்கானக் கூறுகளைக் கொண்டிருக்க, அதற்குள் அவர் பயன்படுத்தும் நிழல் பிரதேசங்கள் இன்னொரு ஓவியத்திற்கானக் கூறுகளோடு இயங்குகிறது. ஞானப்பிரகாசம் கருமையைப் பயன்படுத்துகிற விதம் அவரின் ஓவியங்களை மேலும் வலிவுள்ளதாக மாற்றுகின்றன. அதே நேரத்தில் நவீன ஓவியபாணியில் ஒரு முக்கியமான இடத்தையும் அவருக்குத் தருகின்றன. ஒரு பெண் கோட்டுருவம். மிக எளிமையாகக் கோடுகளைக் கொண்டது. அதற்கு பின்னால் கருமையில் ஒரு மனித உருவம் தோன்றும். அதற்குக் கீழே ஆணுடைய முகம். மூக்கின் வழியாகச் செல்லும் கோடு வளர்ந்து ஓர் ஓவியமாகி முன்னிருக்குமிரு உருவங்களையும் அது கண்காணிக்கும் ஒரு உருவமாய் மிதக்கும். இந்த ஓவியம் மனசாட்சியின் வரைபடமாகக் காட்சியளிக்கிறது. மனிதர்கள் இந்த வாழ்வில் அடைய வேண்டிய அமைதி, அமைதியின்மை. வறுமை செல்வம். பிறப்பு இறப்பு என்னும் இருமையில் வாழ்வெ அங்கிங்கு என்று அல்லாடும் சூழலில் கொஞ்சம் கோடுகளையும் கருமையயும் வைத்து அதைக் கூறிவிடுவது மிக அருமையான ஓவியமாகத்தான் இருக்கும்.

சிவபெருமானை அவதானிக்கும் ஞானப்பிரகாசம் ஸ்தபதி உணர்வுநிலை ஓவியங்கள் குறிப்பிடத்தக்கன. ஆண்பெண் உடல்களடங்கிய சிவநாதன் ஓவியங்கள் சிவனின் ஆன்மீகத் தன்மையை மீறி, இந்த உலகம் இயங்கும் முரண் அமைப்புகளைப் பேசுவதாகவும், ஆண் வயிற்றிலிருந்து பெண் வயிற்றிற்கு உயிரணுக்களைத் துப்பும் படைப்பின் அதிர்வும் ஞானப்பிரகாசம்



ஸ்தபதி ஓவியங்களை அடுத்தக் கட்டத்திற்கு நகர்த்துகின்றன. இன்மை இருப்பு என்னும் தன்மைகளில் இன்மைகளை கருப்பாகவும் இருப்பை கோடுகளாகவும் காட்டும் அவரின் கூர்தன்மையனவாக வாய்த்திருக்கின்றன.

ஞானப்பிரகாசம் ஸ்தபதி ஓவியங்கள் அனைத்தும் அவரின் உணர்வுநிலையிலிருந்து உருவாக்கப்படுவையாக நம்மால் கணிக்க முடியும். கதை, கவிதை என எல்லாவற்றையும்விட ஓவியத்தை படைப்பின் மூலாதாரமாக மாற்றும் அவரின் தன்மை இன்றையத் தமிழ் சிறுபத்திரிகைகள் மட்டுமல்ல நவீனத்தினை வேண்டும் அனைத்து பத்திரிகைகளிலும் தொடர்ந்து வெளிவருவது என்பது மிகவும் நல்லதாகவே படுகிறது.

நுண்மை நிறைந்த அவரின் ஓவியங்கள் அவரின் முந்தையத் தலைமுறைக்கும் அவரின் பிந்தைய தலைமுறைக்கும் ஒரு தொடர்பினைக் கொண்டிருக்கின்றன. அவரின் கோடுகள் வேயும் கைகள் தமிழிலக்கிய புலத்தில் மட்டுமல்ல உலக அளவிலான ஓவியங்களின் வரிசையிலும் நிறுத்தப்பட வேண்டியவை என்பதனை அவரின் ஓவியங்கள் தொடர்ந்துப் பேசி வருகின்றன. ஞானப்பிரகாசம் ஸ்தபதி தமிழ் நவீன ஓவியத்தின் அடையாளம்.

பாரதி நிவேதன்
ரப்சர் அண்டு டார்ச்சர் அல்லது பஃறுளி நைன்ட்டி நைன்ட்டி

தோற்கின்ற இடம் மிகத் தெளிவானது
பஃறுளி இந்தக்குளத்தில் மீன்களைப் பார்க்காதே
கைப்பிடித்தழைக்கும் குளிர்மைக்குள்ளாகாதே
துணியும் சிந்தாத உண்ணுதல் பயிலாதே பஃறுளி
சிறு அன்பிற்காக நீயிழந்த தலைமுடி
அச்சிறு வீணைக்குள் சின்னமாகிவிட்டதுடன்
உன் படிக்கட்டுகளில் கைரேகை உடலின் வாசத்தை
உன் காந்தச் சுற்றலையை யிழைப்பது தகவலை பஃறுளி

பஃறுளி

ஆலோசனை அல்லது நலமேம்பாடு அல்லது
வெளியுறவுக்கொள்கை அல்லது உறவுகளைப் பார்க்க
அல்லது சொத்தைப்பதுக்க அல்லது சிகிச்சைக்காக
வேந்தனின் உதவியாளனாக இங்கிருந்து கடந்திடு பஃறுளி
தொடர்ந்து முட்டியவயிறுடன் சாலையில் திரிபவளின்
குழந்தை வளர்வதை
வெளியூர் பேருந்துநிலைய அலுமினிய குப்பை வாங்கியிலிருந்து
எச்சிலுண்பவனை
இந்த வரிகளில் கருணை இருப்பதாக
அனுமதிக்க ஏலாது பஃறுளி

பஃறுளி

எங்கே அந்த இசை விற்பன்னர்கள்
நானெழுதிய பாடல்களைப் பாடக்கூடாதா என்ன
அரண்மனை மையமண்டபத்தில் தீ வளர் பஃறுளி
ரகசிய அறைகளைத் திறந்துவிடு
அவை அந்தவழி செல்லட்டும்
நாய்களுக்கும் பேய்களுக்குமானதை ஒப்படை
சுவர்களின் தடிமன் குறையட்டும்
மனையற்றுத் தின்றவர்கள் பெருவெள்ளத்திலும் குஞ்சுபொரிப்பதை
அரண்மனை ஓவியனாக எழுதிமாட்டு பஃறுளி

பஃறுளி

தலைதட்டப்படாத படியின் நிறைக்குள்
பாசாங்கு நிறைந்த உப்புத்துகளளவு அன்பை
சீரணமாக்காத குடலால்
நாம் எத்தனைமுறை இறந்தோம்
ஆடையற்ற அரிசியும் பாலும்
சகதிக்கு ஒதுங்கக் கற்களின் மீது தாவுவதை
எவ்வளவு அழகாகப் பழக்கிவிட்டதில்லையா
பூவாசத்துடன் எலும்பும் சிவந்த குறியின்
செல்வாக்கைப் பின்னணி பாடும்போது
இழையாமல் பிசிறும் நம்குரல்
இந்தத் தலையில் இருக்கக்கூடாதில்லையா பஃறுளி
இரத்தம் துவள ஒருபடியையாவது தாண்டணும் பஃறுளி
ஆம் பஃறுளி ஊரும் காம்பறிந்து திருகி எடுத்து
லிங்கமாக்கிடணும் பஃறுளி தவிர
அவை தமது மொந்தையான உள்ளமைந்த குறிகளை
முட்டிக் கொண்டு நம்மை விறைப்பேற்றுவதை
வரவேற்கிறோம் இல்லையா பஃறுளி
இப்படித் திரும்பாதே நான் பேசியாக வேண்டும்
நேற்று என்னடியில் தீவைத்து நுனிவருடிய அதற்குமுன்
நீ வந்திருந்தால் களித்திருக்கலாம்
என்ன முனுகுகிறாய் பஃறுளி
மின்னூட்டமுள்ள புத்தன் உடையை
கிழட்டு நரிகள் தொடவிடுவதில்லையே பஃறுளி
குளிப்பாட்டப்பட்டிருக்கும் கருடன்களின்
ஒரு நகப்பல்லுக்குத் தாங்குவோமா
நமது வேலை தவளை சாம்பல் குருவிகளை
நீர்குடிக்க வெளிவரும் வனாந்திரங்களை
அடித்துப் போடுவதுதானே
வெயிலை எதிரொளிக்கும் கிரானைட் அடிவாரத்தில்
ஆளுயற அலையைப் பிடித்துத் தொங்கும்
மோர்ப்பானைக்காரியிடம்
காற்றூதி விரைத்ததைக் காட்டுவது
நமக்கிடப்பட்ட பணியும்கூட பிறகு
பாசாங்கில்லாத தான்தோன்றித்தனமான
குரங்குகளைப் பழக்கி
வேவுபார்க்க அமர்த்திவிட்டதில் எப்படித் தப்புவது பஃறுளி

பஃறுளி

இயந்திரத்தில் உள்ள ஓட்டைகளில்
அழகாகப் படிந்து விடுவதற்கு
துப்புமில்லாத நமக்கு பொச்செரிச்சல் எதற்கு
ஆட்சிகளின் உரையாடலைப் புரிவது கடினம் பஃறுளி
இத்தனைக்கும் வெற்றிடம் நிரம்பிய
நீண்ட கழியின் இருமுனைகளிலும்
வாளியை வைத்திருக்கிறதுகள்
மூளைச்சாவைத் தரக்கூடிய லார்வாக்கள்
பட்டுப்பட்டாகப் பறக்கின்றன அதில்
பாலம் இடிந்துவிட்டாலும் தாள்களை முகர்கிற
உரையாடலின் தேநீரிலோ
பாலியல் வல்லுறவில் கொல்லப்பட்டவளின் ஓலம்
ஆடை கட்டுவது
உரையாடலின் கனவுக்காட்சிப் பாடலுக்கு
வழியிருக்கிறதா வருந்துகிறதுகள் பஃறுளி
இதைப் புரியாமல் ஒன்பதாம் வகுப்பில்
பத்தாம் வகுப்பையும் பதினொன்றாம் வகுப்பில்
பனிரெண்டாம் வகுப்பையும் செருகியதை
எழுதுவதொன்றுதான் என்சாபம் எனக்கரித்து
எழுத்து எதைச் சாதிக்குமென
என் முன்னே கொலுவாகிய ஆலமர்செல்வியை
உனக்கு அறிமுகக்க மாட்டேன் பஃறுளி



பஃறுளி

பழக்கமானவரைப் பிடிக்காதது போல்
கடக்கும் இச்சொற்கள்
கஞ்சாத் தோட்டக்காரனை நண்பனாக்கியது
பிச்சைக்காரியோடு குளிர்விரட்டத்தான் என்பினும்
புகையில் கையகல தீபங்களுடன்
வேந்தன் மாளிகை செல்லத்தான் பஃறுளி
அந்தப்புரத்தை நீ பூட்டிவிடாதே பஃறுளி
பணிப்பெண்களின் நிர்வாண நடனத்திற்கு நேரமிருக்கிறது
கேள்வியற்றுப் படுத்துப்போன பெண்டிரின் வேதிமையில்
இந்த ஆண் சிலைகள் விறைப்பாக நிற்பதை
அழகழகாக நான் புகைப்படமெடுத்தாகனும் பஃறுளி
என் வயிறினை அதன் கிளைகளை நீ அறிந்தவனல்லோ
மூன்றுபங்கு பனிக்குடமும் ஒருபங்கு பாம்பும்
கலப்பதால் நீந்தும் என்னை
நிலமெறிகள் புழுதிக்கிளப்பி கொல்லவரும் முன்
இனி நீ பேசு பஃறுளி
என் காலடி ஓசை கேட்காதபோது
முடிவற்ற பேரமைதியடை
ஓடவிட்டுக் கொல்லும் துப்பாக்கிகள் வளர்ந்து வருவதில்
பட்டுவிடாதே பஃறுளி
ஆண்மையைப் பழக்கிய யோக்கியன்
சமைப்பதெல்லாம் முற்றத்தில் பழகிய புறாக்களையல்லவா
உப்பளத்தில் காகங்கள் நீர் பொறுக்கட்டும்
ஜந்துக்கள் மட்டும் வாழும் குடியிருப்பில்
பூக்களின் வாசனையை கழித்துக்கொண்டேயிரு
உறக்கத்தில் என்னிடம் சொல்லாமல்
யாரையோ தேடிக்கொண்டு போவதான
உன் கிண்ணத்தில் சில பனிக்கட்டிகள்
முலையளவு கருமை கொண்டிருந்ததே

போதும் பஃறுளி

1. எழுதி மாட்டியவை

வுட்டாலக்கடி கிரிகிரி
சைதாப்பேட்டை வடகறி
இஞ்டலக்கடி லாலாகுந்கரி
கோலா கொப்புற கொய்யா

2. முணகல்

உதிர்ந்து போன வெற்றிடத்தில் முறுகும் ஒரு வழக்கம்
குறையொன்றுமில்லை குழிதோண்டித் தேடப்படும்
ஒரு பிடி எலியும் ஒருமிடறு நீருமே
வாயாகிப் பேயாகி என் விழி பொத்துப் போகையில்
உன் உயிறு கிழிகையில்
அவனின் நா அதற்குள் இருந்தது

3. சசியின் பேச்சு

டிட் யூ நோ ரெயின் ரெயின் கோ அவே பட் ஐ திங்க்
மேரா நாம் தெட்ஸ் ஒய் கள்ளக்காதலி கொலை
ஆண்மைக்கு புறாக்குஞ்சு லேகியம் ஒல்லியைக்
கொண்டாடி பல்லியின் புணர்ச்சி பார் கையூட்டு ஜாப்
நவ் ரியாலிட்டி மாடர்னிட்டி தங்கம் பொங்கும் அங்கம்
விலையேறும்போது சந்தோசப்படுவீங்க கடைகளெல்லாம்
வழிசல் ஒய் ஆர் யூ கூவிங் வி ஆர் வறுமைக்
கோட்டுக்கும் டவுன் ஸி தெட் சில்ரன்ஸ் ஸ்ட்டி அவ்
ட்டு லிவ் மூன் டோண்ட் கிப் ட்டு மீ மாற்றிக்
கொள்ள உடுப்பில்லாத செண்பகம்ஸ்களை ரெட்லைட்
எதற்கிங்கு ஆண்மரே மழைக்குள்தான் உறக்கம் வரும்
காவலர் கோப்புகளைப் பார்த்தால்தான் கொட்டாவி வரும்
பணியாளர் பல்கலை கூட்டுறவு தாவர உதவிக்குழு ஒன்றிய
சதுர மேல கீழ மழைச்சகதியில் சிந்திய
பூக்களில் குழைந்த விந்துவாசம் வீதியைக் கமழ்த்த
நோக்காட்டில் ஏன் விழுந்தாய் இல்லத்தரசின்னு சொல்லுங்க
பறங்கியன் கொடுத்த யூகலிப்ட்ஸ் மரத்தை இங்க
பாருடா இவன் எதில் பீய்ச்சுகிறான் காய்ச்சலா
நடை நோய்க்குத் தடை பன்றிகோழி ஆடு மாடு
மூட்டுவலி தேடு கூடு நாடு பாடு சோடு வேடு
ஒன்றுமில்லை இச்சொல்லின் தொப்புளின்மேல்
ஆம்லெட் என் சிறப்பெனின் தேசிய சாதிய
கௌரவ தற்காலிக பொங்க சங்க முங்க நங்க
ஏ ஊ ஆ ஐய்யோ (வாய்த்தது கூட வரலாற்றிலிருந்து
வேரறுக்க வேண்டியிருப்பதால் இம்மூச்சின்மீது
பயன் வாய்ந்த மரம் வெட்டி வீழ்த்தக் கடவுவதாக.
அதிகாரம் 12, 12ஏ. 14)

தமிழ்ச் சிற்றிதழ்களில் 'சுற்றுச்சூழல்'
ஒரு பறவைப் பார்வை

ஏ.சண்முகானந்தம்

> பத்திரிகை என்பது, கூட்டுத்துவப் பிரச்சாரகாரனாகவும், கூட்டுத்துவக் கிளர்ச்சிக்காரனாகவும் இருப்பதோடு கூட்டுத்துவ ஒழுங்கமைப்பாளனாகவும் உள்ளது.
>
> — லெனின், என்ன செய்ய வேண்டும்.

வேட்டையாடி சமூக நிலையில் காட்டுயிர்கள், இயற்கைச் சீற்றங்களை அச்சத்துடன் அவதானித்தது மட்டுமல்லாது, மந்திர தந்திர செயல்கள், பூசாரிகளின் செயல்பாடுகள், மதங்களின் தாக்கம் என தொடர்ந்த சமூக குழுக்கள், கடந்த மூன்று நூற்றாண்டுகளில் தான், ஒருமுகப்படுத்தப்பட்ட அறிவியலாக பரிணமித்துள்ளது எனலாம்.

'சயின்ஸ்டிகா' என்றழைக்கப்படும் லத்தீன் சொல்லின் (**Science** — படித்தல், அறிதல்) பரந்த அளவிலான பொருள் கற்றல் அல்லது அறிவைப் பெறுதல் என்பதாக கொள்ளலாம். ஆங்கிலத்தில் **Science** என்னும் சொல் இயற்கை அறிவியல் (**Natural Science**) என்பதன் சுருங்கிய வடிவம் என்பதுடன், 'இயற்கை அறிவியலே உண்மையான அறிவியல்' என மார்க்சீய ஆசான் மார்க்ஸ் தெளிவுபடுத்துகிறார். 'அறிவியல் என்பது, இயற்கைச் செயல்களின் வரிசைப்படுத்தப்பட்ட அறிவு எனவும், இயற்கைச் செயல்களுக்கும், பகுத்தறியப்பட்ட கல்விக்கும் உள்ள தொடர்பு' என வரையறை செய்யலாம்.

அந்த வகையில், கி.பி.1609—இல் ஜெர்மனியில் வெளிவந்த 'ரிலேசன்' இதழே, சர்வதேச அளவிலான முதல் இதழாக அறியப்படுகிறது. இந்திய அளவில் 1780—இல் வெளியான 'பெங்கால் கெசட்' இதழும், சென்னையிலிருந்து 1785—இல் வெளிவந்த 'மெட்ராஸ் கூரியர்' தமிழகத்தின் முதல் இதழாகவும் கருதப்படுகிறது.

அதன் தொடர்ச்சியாக, உழைக்கும் மக்களுக்காகவும், சமூகத்தின் அடித்தளத்திலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் விழுமியங்களையும் எடுத்துரைக்கவும் 1893—இல் இரட்டைமலை சீனிவாசன் 'பறையன்' இதழை துவக்கினார். 1902—இல் அயோத்திதாச பண்டிதர் 'பைசாத் தமிழன்' இதழை எளிய மக்களின் நடையில் துவக்க, தொடர்ந்து, 1925—இல் தந்தை பெரியார் 'குடியரசு' இதழை துவக்கி, சாதி, மத, தீண்டாமை, பெண்ணிய ஒடுக்குமுறைகளுக்கெதிராக கலக மரபை தொடங்கி வைத்தார்.

சமூக முன்னோடிகள் துவக்கி வைத்த 'சிற்றிதழ்கள்' என அறியப்படும் சிறு பத்திரிகைகள் தமிழில் வெளிவரத் துவங்கி

நூறாண்டுகளை கடந்து விட்டன. தமிழனின் வாழ்வியல், பண்பாடு, கலை, இலக்கியங்களின் செழுமையான வெளிப்பாடுகளை சிறுபத்திரிகைகள் தொடர்ச்சியாக வெளியிட்டு வந்துள்ளன. தமிழின் நவீன எழுத்திற்கு 'சிற்றிதழ்களே' வித்திட்டன என்றால் மிகையல்ல. அந்த வரிசையில் மணிக்கொடி, எழுத்து, மன ஓசை, புதிய கலாச்சாரம், கலைக் கதிர், மக்கள் பண்பாடு, மனிதன், புதிய மனிதன், செந்தாரகை என கலை இலக்கிய, அறிவியல் தளத்தில் பல்வேறு சிற்றிதழ்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தன.

தமிழ்ச் சமூக வரலாற்றில் 'சிற்றிதழ்'களுக்கென ஒரு தனித்த வரலாறு இருக்கிறது.

தமிழில் இன்றளவும் காத்திரமான படைப்புகளோடு, தீவிர வாசிப்பிற்கான சிறுபத்திரிகைகளாக கொம்பு, மாற்றுவெளி, கருக்கல் விடியும், நாளை விடியும், புது எழுத்து, கல்குதிரை, குதிரைவீரன் பயணம், சிற்றேடு, வெயில் நதி, மணல் வீடு, அடவி, ஒப்புரவு, தளம், ஜீவநதி, எழுத்து, 361, வலசை, சிலேட், புது விசை, வனம், வல்லினம் என இன்னபிற சிற்றிதழ்கள் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. அணங்கு, பனிக்குடம் போன்ற சிற்றிதழ்கள் பெண்ணியத்தையும், தலித் முரசு, தலித் போன்ற சிற்றிதழ்கள் தலித்தியத்தையும் முன்னெடுத்து சிறப்பாக வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. அம்பேத்கரியம், பெரியாரியம், மார்க்சியம் சார்ந்தும் பல்வேறு சிற்றிதழ்கள் வெளிவந்துக் கொண்டிருக்கின்றன. தமிழகமும் அரசியல், பண்பாடு தளத்தில், ஒவ்வொரு பத்தாண்டிற்கும் ஒரு தன்னெழுச்சியை கண்டு வருவதை அவதானிக்க முடிகிறது. தலித்தியம், அம்பேத்கரியம், பெண்ணியம் என தொடர்ந்த எழுச்சி இன்று, 'சூழலிய'த்தில் மையம் கொண்டுள்ளது மட்டுமல்ல, பேசும் பொருளாகவும் மாறியுள்ளது. 90—களுக்குப் பிறகான உலகமயமாக்கல், தாராளமயமாக்கல் பின்புலத்தில், இயற்கை வளங்களின் சுரண்டல் உச்சத்தை எட்டியுள்ளது. தமிழகத்தை நோக்கி வரும் பன்னாட்டு, உள்நாட்டு பெரு நிறுவனங்கள் யாவும், இயற்கை வளங்களை கவர்வதிலேயே கவனம் செலுத்துகின்றன. அந்த வகையில், தாமிரவருணியும், திருப்பூர் நகரத்தின் தண்ணீர் சேவையும் மிகச்சிறந்த உதாரணங்களாக உள்ளன. ஆற்றில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கிறது, காடுகள் செழித்திருக்கிறது, மலைகள் பசுமையாக உள்ளது என்ற செழிப்பான நிலையில் இன்றைய தமிழகம் இல்லை. (மூன்றாம் உலக நாடுகளின் நிலையும் இதுவே.) இன்றைய 'இயற்கை வளங்களின்' சுரண்டலை விழிப்புணர்வற்ற நிலையில், அச்சத்துடன் மக்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், அடுத்த தலைமுறைக்கு இயற்கை வளங்களை கையளிக்க முடியுமா? என்ற ஏக்கம் மேலெழுகிறது. சமகாலச் சூழலில்,

இடிந்தகரை சர்வதேசப் பார்வையைப் பெற்றுள்ளது ஏன்? எதற்கு? எவ்வகை உதவியும் தங்கள் வாழ்வாதாரத்தைக் காவு கேட்கும் எந்த ஒரு 'வளர்ச்சி'யையும் மக்கள் விரும்பவில்லை என்பதே இடிந்தகரை நமக்கு தெரிவிக்கும் செய்தி

சமூகம், பண்பாடு, கலை, இலக்கியம், பொருளாதாரம், ஊடகம், சினிமா, பாரம்பரிய உணவு மட்டுமின்றி, அணு உலை, தாது மணல் கொள்ளை குறித்தும் விரிவாக பேசிய சிற்றிதழ்கள், மற்ற சுற்றுச்சூழல் சிக்கல்களுக்கு எதிராக 'மௌனம்' காப்பதன் இரகசியம் புரியவில்லை.

தமிழகத்தை மையம் கொண்டுள்ள, சமூக—அரசியல்—பொருளாதார சிக்கலாக மாறியுள்ள சூழலியல் சீர்கேடுகளான மீத்தேன் எரிவாயு திட்டம் குறித்தும், கார்பன் வணிகம், தனியார் அனல்மின் திட்டங்கள், கெயில் குழாய் பதிப்புத் திட்டம், நியூட்ரினோ ஆய்வுத் திட்டம், ஏற்றுமதியில் மறைமுகமாக சுரண்டப்படும் இயற்கை வளமான தண்ணீர் (Virtual Water), தண்ணீர் வணிகம், தண்ணீர் தனியார்மயம், நீர்நிலைகள் தனியாருக்கு கையளிக்கப்படல், விளை நிலங்கள் தொடர்ந்து வீட்டு மனைகளாக மாறுதல், ஆற்று மணல் கொள்ளை என எண்ணற்ற சூழல் பேரழிவுகளை தமிழகம் சந்தித்துக் கொண்டிருக்கின்றன.

தமிழகத்தின் இயற்கை வளங்கள் பேரழிவுக்குள்ளாகும் போது, பறவைகள், விலங்குகள், பூச்சிகள், கடல்வாழ் உயிரினங்கள், இரு வாழ்விகள் என அனைத்து காட்டுயிர்களின் வாழ்வும் கேள்விக்குறியாகியுள்ளது. இவற்றையும் தாண்டி 'நெகிழி' எனப்படும் பிளாஸ்டிக்கால் தமிழகம் எதிர்கொண்டுள்ள ஆபத்துகள், ஒரு முறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும் தண்ணீர் குடுவைகள் (Bottle), நெகிழிகளால் (Water Pocket) ஏற்பட்டுள்ள சிக்கல்கள், கணினி பயன்பாட்டில் வெளியிடப்படும் கதிர்வீச்சு ஆபத்து மிக்க கழிவுகள், அணு உலை கழிவுகள் என சிக்கல்களின் பட்டியல் நீண்டுக் கொண்டே செல்கிறது. இது குறித்து தமிழ்ச் சிற்றிதழ்கள் முறையாக விவாதிக்கின்றனவா? மூசம் கொடுக்கின்றனவா? என்பது தொடர் கேள்விகளாக எழுகின்றன. நிலத்தையும், இயற்கை வளங்களை இழந்து, சூழல் அகதிகளான பிறகு, கலை, இலக்கியத்தை யாருக்காக பேசுவது?

அந்தவகையில், சூழலுக்கென பூவுலகு, புதிய கல்வி, பசுமை தாயகம் என விரல்விட்டு எண்ணக்கூடிய இதழ்களும், காட்டுயிர்களுக்கென, சூழலியலாளர் ச.முகமது அலியை ஆசிரியராகக் கொண்டு 'காட்டுயிர்' என்ற ஒரே ஒரு இதழ் மட்டுமே தமிழில் வெளிவந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் இவைகளே அனைத்தையும் விவாதிக்க முடியாது என்ற அளவில் சூழல் சிக்கல்கள் வரிசை கட்டி நிற்கின்றன. நீண்டிருக்கும் சூழல்

பேரழிவுகளுக்கு, சிறு, இடை நிலை, பெரிய பத்திரிகைகள் இணைந்து கனமாற்றுவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.

அந்த வகையில், சூழல் குறித்த விவாதங்களை சில சிற்றிதழ்கள் தற்போது பேச துவங்கியிருப்பது ஆரோக்கியமான முன்னெடுப்பாக உள்ளது. 'கொம்பு' சிற்றிதழில், மனித—யானை மோதலில் துவக்கி, யானைகளின் அழிவை மிகை யதார்த்த வடிவில் பேசிய கணேசகுமாரனின், 'கொம்பன்' சிறுகதை குறிப்பிடத்தக்கதாக உள்ளது. 'கொம்பு' சிற்றிதழின் தலையங்கம் இன்றைய தமிழகத்தின் சூழல் சீர்கேடுகளுக்கெதிராக பேசுகிறது. அவ்விதழில் வெளிவந்த சில சூழல் கவிதைகளும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள்ளது.

'இளைஞர் முழக்கம்' சிற்றிதழ் கடந்த இரண்டாண்டுகளுக்கும் மேலாக, சூழலுக்கான பக்கங்களை ஒதுக்கி, பல விவாதங்களை துவக்கி வைத்துள்ளது. 'கருக்கல் விடியும்' தனது இதழ்களில் சூழல் கவிதைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து தொடர்ந்து வெளியிட்டு வருகிறது. காட்டுயிர்களின் அனுபவங்களை வெளிபபடுத்தக் கூடிய தொடர் கட்டுரை ஒன்றையும், 'கருககல் விடியும்' வெளியிடுகிறது. 'தளம்' சிற்றிதழில் வெளியான கவிதையொன்று, மனித—விலங்கு மோதலை பேசிச் செல்கிறது.

இவற்றிற்கு உச்சமாக, 'திசை எட்டும்' மொழியாக்கக் காலாண்டிதழ் தனது நாற்பத்தொன்றாவது இதழை 'சுற்றுச்சூழல் சிறப்பிதழாக (சனவரி—மார்ச்) வெளிக்கொண்டு வந்திருக்கிறது. காலபகாஸ் தீவு பேராமைகள், வண்ணத்துப் பூச்சிகளை பற்றிய ஆய்வை முதன்முதலாக முன்னெடுத்த மரியா என்கிற பெண் அறிவியலாளர் குறித்த கட்டுரை, சிறந்த ஆங்கில சூழல் நூல்கள் பற்றிய அறிமுகம், சூழலியல் மொழிபெயர்ப்புக் கவிதைகள், ஆப்பிரிக்க தொல்குடிக் வாய்மொழிக் கதைகள், சிறுகதைகள் என முதன்மையான படைப்புகளை உள்ளடக்கி வெளிவந்திருக்கும் 'திசை எட்டும்', தமிழ் சிறுபத்திரிகை உலகில் புதிய முன்னெடுப்பை எடுத்துள்ளது. இதனை மற்ற சிற்றிதழ்கள் பின்பற்றுமா?

சுற்றுச்சூழல், காட்டுயிர்கள் குறித்த விவாதங்களை, சிக்கல்களை உள்ளடக்கிய படைப்புகளை சிறுபத்திரிகைகள் அதிகளவில் வெளிக் கொண்டுவர வேண்டிய தேவையை காலம் உணர்த்துகிறது. காலத்தை உணர்ந்தவர்களாக நாம் இருக்கின்றோமா...? காத்திரமான கலை, இலக்கிய படைப்புகளோடு வெளிவந்துக் கொண்டிருக்கும் சிற்றிதழ்கள் சூழலுக்கான பக்கங்களை ஒதுக்கி, விவாதங்களை எழுப்புவது முதன்மையான பணியாகும். சுற்றுச்சூழல் சிக்கல், சூழலியலாளர்களுக்கானது மட்டுமன்று, மக்களுக்கானது என்பதை

சிற்றிதழாளர்கள் புரிந்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. அதிகாரத்தை எதிர்த்து கலகம் செய்ய தந்தை பெரியாருக்கு, 'குடியரசு' சிற்றிதழ் இருந்தது போல, சிறுபத்திரிகைகளுக்கென நீண்ட கலக மரபு உள்ளது. இன்று அந்த 'கலக மரபு' மெல்ல மறைந்து வருகிறது.

அதிகாரத்திற்கு எதிரான மௌனத்தை கலைத்து, கலகத்தை உயர்த்தி பிடிப்போம். இயற்கை வளங்களை காக்க சூழலியலாளர்கள் மட்டும் போதாது. 'சூழல் சீர்கேடுகள்' — அவர்களுக்கான பிரச்சனை மட்டுமன்று. இது மண்ணிற்கான, நிலத்திற்கான, வாழ்தலுக்கான பிரச்சினை. இடிந்தகரை மக்களுக்கு ஏற்பட்ட விழிப்புணர்வு போல, தமிழக மக்களுக்கு புரிதலை ஏற்படுத்த, சிறுபத்திரிகைகள் களமாற்ற வேண்டும்.

எமது நிலத்தைக்
காக்கும் இந்தப் போராட்டத்தில்
நாம் வென்றாக வேண்டும்
இல்லையேல்
நாம் கொல்லப்படுவோம்
ஏனெனில் தப்பியோடுவதற்கு
எமக்கு வேறு நிலங்களில்லை.

என்ற 'கென் சாரோ விவா' வார்த்தைகளை உணர்ந்து, பேரழிவுகள் தமிழினத்தைச் சூழ்ந்துள்ள நேரத்தில், களமாற்ற வேண்டிய தேவையை சூழலியலாளர்கள், சமூக இயக்கங்கள், முற்போக்கு, மாற்று சிந்தனையுடையோர்கள் கைகளில் காலம் கொடுத்துள்ளது. மக்களுக்கான அறிவாயுதமாக சிற்றிதழ்கள் களமாற்ற வேண்டிய தேவையை காலம் உணர்த்துகிறது.

நிலத்திற்கான, வாழ்தலுக்கான, இருத்தலுக்கான போராட்டத்தை மக்களுக்காக அறிவுத் தளத்தில் சிற்றிதழாளர்கள் தூக்கிப் பிடிப்பார்களா...?

கலை, இலக்கியம் மட்டுமல்ல சூழலும் மக்களுக்கே...! என்பதை உணர்ந்து, உணர வைப்போம்...!!!

தரவு நூல்கள்

01. அருள் எழிலன்.டி., அணு உலை எதிர்ப்பு ஒரு வர்க்கத்தின் பாடல் — பூவுலகு — செப். அக்., — 2012.
02. கொம்பு — இதழ் 1 — முல்லைப் பெரும்பொழுது — 2011.
03. முருகேச பாண்டியன்.ந., — சிறுபத்திரிகை மனோபாவமும் சிதிலமான போக்கும் — உயிர்மை — சனவரி 2014.
04. மக்கள் பண்பாடு இதழ் தொகுப்பு — தொகுப்பும், பதிப்பும் மணிகோ.பன்னீர்செல்வம் — இளங்குருத்து புத்தகச் சந்திப்பு — ஆகஸ்ட் 2011.

05. எம்.பாண்டியராஜன் — சமூக மாற்றமும் இதழ்களும், பெரியாரைத் துணைக்கோடல் — நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் — அக்டோபர் 2013.
06. வீ.அரசு — சிறுபத்திரிகை அரசியல் — பரிசல் வெளியீடு — டிசம்பர் 2006.
07. குமரன்தாசு — காட்சி அதிகாரம் அல்லது எழுத்ததிகாரத்தின் மரணம் — நாளை விடியும் — சூலை—திசம்பர் 2013.
08. பாவேந்தன்.இரா., — தமிழில் அறிவியல் இதழ்கள் — சாமுவேல் ஃபிஷ்கிறீன் பதிப்பகம் — ஆக்ஸ்டு 1998.
09. ஜார்ஜ் தாம்சன் — தமிழில் முனைவர் கோ.கேசவன் — மனித சமூக சாரம் — சரவணபாலு பதிப்பகம் — டிசம்பர் 2002.



இராகவன்

சிறுகதை

மறு வாக்கு

பள்ளிக்கூடம் இடம் மாறிப்போய் எங்களைவிட்டுத் தொலைவுக்குப் [illegible] பழக்கமானவர்களின் முகங்களை ஒவ்வொன்றாக கொண்டிருக்கிறது வகுப்பறைகளின் [illegible] இருக்கை மட்டும் என்னால உணர முடிகிறது. எங்கடை வகுப்பறை [illegible]கள் நெருக்கமாய் நிற்கிற வேலிக்குப் பக்கத்தில் இருந்தது. நாலஞ்சு வகுப்புகள் சின்ன பலகையடிச்ச ஸ்கிரீனுகளால் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு வகுப்பாக மாறிக்கொண்டிருந்தேன். (ஆமியைப் பற்றிய கதைகளைக் கேட்டுக் கொண்டே) நாலாம் வகுப்பு படிக்கேக்குள்ளை திரியாயிலிருந்து இடம் பெயர்ந்து வந்திருந்த கோணேஸ் எங்கடை வகுப்பில் சேர்ந்திருந்தான். அவனுக்கு எங்கடை வகுப்பு பொடியளில ஆரோ ஒருத்தன் (அநேகமாக சிசாந்தனாயிருக்கும்) திரியாய் என்டு பட்டப்பெயர் வைச்சிருந்தான். கோணேஸ்தான் எனக்கு முதல்ல ஆமியளைப் பற்றிச் சொன்னவன். திரியாய்க்குள்ளை ஆமிவந்ததால நாங்கள் இடம்பெயரவேண்டி வந்தது எனக்கோணேஸ் எப்பவும் சொல்லிக் கொண்டிருப்பான். அப்ப நாங்கள் ஆமியைக் கண்ணால காணாத காலம். ஆமியின்ரை உருவத்தை மனதில கீறிப்பார்க்கத் தொடங்கியிருந்தன். மனதில கீறிப்பார்த்ததுக்கும் நேரில பார்க்கிறதுக்கும் பெரிசாக வித்தியாசமேதும் இருக்கேல்லை.



அவங்கள் வரேக்குள்ளையே சுட்டுக் கொண்டுதான் வந்தவங்கள். நாங்கள் எல்லாம் வகுப்புக்குள்ளை குப்புற விழுந்து கிடந்தம். அவங்கள் வெளியால நிண்டுசுட்டுக் கொண்டிருந்தாங்கள் விடாமல். கொஞ்ச நேரத்தால சத்தமில்லாம் ஓய்ந்து போயிருந்ததை உணர்ந்தன். பிறகு யாரோ பெண்பிள்ளை கூச்சலிட்டுக்கத்தினதும் கேட்டது. அது மைதிலி ரீச்சரின்ரை குரல் போலிருந்தது. எனக்கு மூச்சுவிடவு பயமாயிருந்தது. ஒருவாத்திமாரின்ரை அசுகையுமில்லை. பிறகு வேறையொரு சத்தமுமில்லை. பயமான அமைதி நாய்கள் மோசமாய் குரைக்கிற சத்தம் மட்டும் கேட்டுக் கொண்டிருக்கு. தலை நிமிர்த்திப் பார்க்கிற துணிவுமில்லை. சீலிங் பலகையடிச்ச ஸ்கீரினெல்லாம் பாட்டத்தை விழுந்து போய்க்கிடக்க அதுக்குக் கீழையும் கனபேர் கிடக்குமாப் போலையிருக்குது. எனக்கென்றால் மூத்திரம் முட்டுது. கொஞ்ச நேரங்கழிய விழுந்து கிடந்தாக்களில சிலர் எழும்பித்தாறுமாறாக ஓடினம். அவையளுக்குப் பின்னால நானும் ஓடுறன். பனங்கூடலுக்குள்ளால ஓடிக் கோயிலடிக்கு வந்து சேர்வதற்குள் கண்டமேனிக்கு வெடிபறியத் தொடங்கிச்சுது. நான் தீர்மானமில்லாமல் ஓடிக்கொண்டிருக்கிறன்.

இப்போது ஒரு தலைக்கறுப்புமில்லாத தெருவில் நான் மட்டுந்தான் ஓடிக்கொண்டேயிருக்கிறன். எந்த பக்கத்தால் வெடி பறியுமோ என்பது தெரியாமல்.

வீட்டில் யாரப்பார்த்தாலும் பயமாகத்தானிருந்தது. எனக்குக் கண் திறக்கேலாமலிருக்கு. வெளிமுற்றத்தில் சிலர் கூடியிருந்து கதைக்கிற சத்தம் மட்டும் கேட்கிறது. பள்ளிக்கூடத்தில நடந்ததைப் பற்றியதாயிருக்கலாம். காதில் எதுவும் தெளிவாக விழவில்லை. திரியாய் கோணே கனவில் வந்து. எங்கடை இடத்தில ஆமி வந்து எல்லாரையும் சுட்டிடாங்கள் என்று அழுதழுது சொல்லிக்கொண்டிருக்கிறான். அவனைப் பார்த்தால் பாவமாயுமிருக்கு. போடா பைத்தியம். என விரட்டவேணும் போலவுமிருக்கு என்ர நெற்றியைத் தொட்டுப் பார்க்கிற கை அம்மாவுடையது போலும். அனலாக் கொதிக்குது அம்மாதான் யாரிடமோ சொல்வது போலவும் இருக்கு. எனக்கு மூடின கண்ணுக்குள்ளை பொறி பறக்குது. கண்மூடி முழிக்கிறதுக்கிடையில் எல்லாம் நடந்து முடிஞ்சிட்டுது. புத்தகப் பையையாவது தூக்கிக் கொண்டு ஓடி வந்திருக்கலாமென்றும் எண்ணுகிறேன். மைதிலி ரீச்சரைப் பற்றி யாரோ வெளிமுற்றத்தில இருந்து கதைக்கினம். கண்ணுக்குள்ளை குத்துறமாதிரி [illegible] அவளின்ரை தோற்றம்.

என்னைத் துரத்திக் கொண்டு பலபேர் ஓடி வருகினம். நான் மூச்சமுட்ட ஓடுகிறேன். பதுங்கிறதுக்கு ஓரிடமும் கண்ணில் தென்படவில்லை. நாளைக்கு பேப்பரில் நான் பிடிப்பட்டதாய் அல்லது சுடப்பட்டதாய் நியூஸ் வருமென்று நினைத்தப்படி ஓடுகிறேன். பிறகு பார்த்தால் எங்க்டை வீட்டில் வெங்காயப் பிடிகளைக் கட்டித் தூக்குகிற மால் தென்படுகிறது. மனதில தென்பு வந்து உள்ளே ஓடிபோய் கட்டிலுக்குக்கீழ பதுங்குகிறேன். அதுக்குள்ளே கடவுளே, மைதிலி ரீச்சர்

ரத்தம் தோஞ்சு போய்க்கிடக்கிறா - பள்ளிக்கூடத்துக்குக் கட்டிக் கொண்டுவாற அந்த மஞ்சட்பூச் சீலையோட தான் - புழுதியடிச்சுப் போயிருக்கு. தொப் தொப்பெண்டு அவங்கள் ஓடி வருகிற சத்தம் கேட்குது. பக்கத்தில் நெசவு சாலை திறந்திருக்கு. நெசவடிக்கிற சத்தங் கேட்கவில்லை. நெவடிக்கிற பெட்டையள் ஒருத்தியையும் காணவில்லை. நெசவுக்குள்ளையிருந்து யாரோ ஒருத்தி வீரிட்டு கத்துகிற சத்தம் கேட்குது. நாய்கள் இப்பவும் குரைச்சுக் கொண்டுதானிருக்கு. அவங்கள் என்னைப் பிடிச்சிடுவாங்கள் எண்டு நம்புறன். மைதிரி ரீச்சரில் எந்தவித அசைவுமில்லை. நான் அவவுக்குப் பின்னால ஒளிக்கிறன். அவங்கடை சப்பாத்துக் கால்களை பார்க்கக்கூடியதா இருக்கு. கீழே குனிந்து பார்ப்பாங்களா நான் துலையப்போறன் கடவுளே.

என்னைக் கொண்டுபோய் வைத்திருக்கமிடம் ஒரு பள்ளிக்கூடம் போல இருக்கு. சரியான இருட்டாகவுமிருக்கு. இடைக்கிடை சில முகங்கள் நெருங்கி வருகுது. திரியாய் - கோணேஸ் போலவும் கிரிசாந்தனைப் போலவுமிருக்கு. சரியாப் பார்க்கமுடியேல்ல. அவங்களிட்ட நாங்கள் எல்லாம் இயக்கப்பொடியள் என்று ஒப்புக்கொள்ள வேணுமாம். ஒருமுகம் சொல்லிக் கொண்டிருக்கு. ஒருத்தனை உழண்டியில் கட்டிக் கிணற்றுக்குள்ளை இறங்கிறாங்கன். அவன் முக்குளிக்கிற சத்தங்கேக்குது. பிறகு மேலை இழுத்துக் கேட்கிறாங்கள். நீ புலிதானே? அவன் மூச்சுப் பேச்சில்லாமல் தலை கீழாகத் தொங்குகிறான். திரும்பவும் இறக்கிறாங்கள். முக்குளிக்கிற சத்தம். எனக்கு அவன் தன்னைப் புலியென்று ஒப்புக் கொள்ளவேணும் போல இருக்கு. இதோட ஒரு பத்துத்தரம் உப்பிடிச் செய்து போட்டடங்கள். அவனும் பேயன் வாயைத்திறக்கிறானில்லை. எனப் பக்கத்திலிருந்து ஒருமுகம் கதைக்குது. அது கிரிசாந்தனின் குரல் போலவுமிருக்கு. என்னை இங்கை கொணடு வரமுதலே அவங்கள் அவனை உழண்டியிலை கட்டிக் கிணத்துக்குள்ளை இறக்கிறதைத் தொடங்கியிருப்பாங்கள் போல.

எங்கடை பள்ளிக்கூடத்தில தான் எங்களைக் கொண்டு வந்து வைச்சிருக்கிறாங்களோ? யாரையாவது கேட்க வேணும் போலிருக்க. மைதிலி ரீச்சர் என்ர வீட்டு மாலுக்கை கட்டிலுக்குக் கீழை ரத்தம் தோய்ந்து போய்கிடப்பதையும் யாருக்காவது சொல்ல வேணும் போலயும் இருக்கு ஆனால் எனக்கு மூச்சுவிடவும் பயமாய் இருக்கு.

ஐயோ என்ர ஐயோ யாருக்கோ கொதி தண்ணீர் ஊத்துறாங்களாக்கும். அல்லது நகம் புடுக்கிறாங்களாக்கும்.

வலை வீச்சுக்குப் போறாக்களின்ரை பொடியள், ஈசன், சர்வன், சங்கர், நேசன், அருமை, சிவராசா, எனக்கனபேர் பள்ளிக்கு வந்து போவாங்கள். அட்டை கிழிஞ்ச புத்தகங்களும் கொப்பியளுந்தான் அவங்கள் கொண்டு வருவாங்கள். இங்கலீஸ் பாடத்துக்கு அடி வாங்கிறதும் அவங்கள்தான். அநேகமாய் எல்லாரும் சளியை உறிஞ்சிக் கொண்டிருப்பாங்கள். வகுப்பில குப்பை கூட்டிக் கொளுத்துவதும்

அவங்கள்தான். ஒருத்தரின்ரை முகமும் ஞாபகத்துக்கு வரவில்லை. இதுக்குள்ளையும் சளி உறிஞ்சிற சத்தம் இடைக்கிடை கேக்குது. அவங்களும் பிடிப்பட்டிருப்பாங்களோ?

பொம்பிளையளைத் தலைமயிர்ப்பிடியில நிலத்தோடு தேய்ச்சு இழுத்துக் கொண்டு போறாங்கள அநியாயப்படுவார். நான் அநேகமாய் இன்டைக்குத் தொலைஞ்சன். எனக்குப் பக்கத்தில ஒருத்தரும் இருக்கிறதா அசுகையில்லை. எல்லாரையும் சத்தமில்லாமல் இழுத்துக் கொண்டு போட்டாங்களாகும். அடுத்தது நான்தான்.

யாரோ மிளகாய் வறுக்கினம். நாசி எரியுது. சரியான வேகரம். இருமினால் கொஞ்சம் சுகமாயிருக்கு மெண்டு நினைக்கிறன்.

நல்லவேளை நான் வெளிக்கிட்டதை அவங்கள் பார்க்கவில்லை. தலை தெறிக்க ஓடுறன். கிற வல்றோட விழுந்தெழும்பி ஓட வேண்டியிருக்கு. ரத்தமும் கசியத் தொடங்கியிட்டுது. நல்லவேளை அந்த வீட்டைக் கண்டேன். அங்கே ஒரு கிழவன் மட்டும் தானிருக்குதோ? ஒளிந்திருக்க வசதியான இடம். கிழவனிடம் போய்க் கேக்கிறன். கிழவன் பயப்பிடுகுது. ஓரேயொரு அறையிருக்கிறதென்றும், அதற்குள் போய் ஒளிந்திருக்கலாமென்றும் நடுக்கத்தோட கிழவன் சொல்லுது. நான் அந்த அறைக்குள்ளே நுழைந்ததும் கிழவன் வெளிப்பக்கம் பூட்டும் சத்தம் கேட்கிறது. அதுவும் நல்லதுக்கத்தான்.

அந்த அறைக்குள்ளே ஒருமணம் கிளம்புது. எங்கட வகுப்பறைக்குள்ளே மணக்கிற அதே மணம். இது எங்கட வகுப்பறையாக இருக்குமோ? அந்த அறைக்குள்ளை தாறுமாறாப் பலபேர் கிடக்கினம். எல்லாம் பிரேதங்கள் என்பது எனக்குப் பிறகுதான் தெரியும். பிரேதங்களோட கழிக்க வேண்டியிருந்த அந்த இரவு வெளியில் என்னைத் தேடித்திரியும் அவங்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள நான் சாமணத்தைச் சுவாசிக்க வேண்டியிருக்கு.

எங்களைக் கொண்டுபோய் அடைச்சு வெச்சிட்டு பகலில வடிவாக நோட்டம் பார்த்திட்டு இரவில் எல்லாத் திசையாலயும் ஆக்கள் ஓடிவந்தாங்கள். அகப்பட்ட எல்லாருக்கும் வெட்டு விழுந்தது. மண்டையள் பிளந்தது. என்னோட நெருக்கமாய் பழகின ஒருத்தனுக்கு பெயரை மறந்திட்டன். மண்டைபிளந்து என் முகத்தில் சுடுதண்ணி பட்ட மாதிரி ரத்தம் தெறிச்சு வழிந்தது. அவன் யாரையோ நினைத்து முனகிக் கொண்டிருந்தான். தாய் தகப்பனை? மனைவி பிள்ளைகளை? சகோதரர்களை? நான் தப்பியிருக்கிறேன். ரத்தமும் சதையும் நிறைந்த கனவுகளைக் காணக்கூடிய வகையில், சாமணத்தைத் நிதமும் உறிஞ்சக்கூடிய வகையில். எந்தத் திசையில் பார்த்தாலும் கூடப் படிச்சவங்களின்ரை ரத்தம் வழியுற முகங்கள் தான் தெரிகிறது. ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் கதைக்கிறேன். வகுப்பில் கூடப்படித்த திரியாய்க் கோணேஸ், கிரிசாந்தன், குகன், வேவி, வேலைவீச்சுக்குப் போறாக்களின்ரை பொடியள் எல்லோருடனும் பள்ளிக்கூடம் என்னைவிட்டுத் தொலைவாகிக் கொண்டிருக்கிறது. ஆனால் பாசி படர்ந்த




பள்ளிக்கூடத்தின் பின்புறம் அதே மணத்துடன் எனக்குள்ளேயே இருந்து கொண்டிருக்கிறது. கனவுகள் முடியும் போது அடிக்கடி தோன்றுவதும் அந்த இடந்தான். நான் ஓடிபோய் அந்த இடத்திலே நிற்பேன். மூத்திரம் முட்டிக் கொண்டு வரும். பிறகு நித்திரை விட்டெழுந்து பார்த்தால் போர்வை, பாய் என எல்லாம் நனைந்திருக்கும்.

அவர்களது தலைக்கவசங்கள் தென்படுவதுடன் தான் அநேகமாகக் கனவுகள் தொடங்கும். உழவு இயந்திரங்கள் போய்க் கொண்டிருப்பதும் கேட்கும். அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். நாய்கள் இடைவிடாமல் குரைத்துக் கொண்டும் பூவரஞ் சருகுகள் நொறுங்கிக் கொண்டுமிருக்கும் இரவு மரத்தில் ஏறியிருக்கும் வீட்டுக் கோழிகள் வெருள்கின்றன. மரநாய்கள் வருகையை உணர்ந்து கொண்டது போல் கொக்கரிக்கின்றன. எங்களது வகுப்பறை தீப்பிடித்தெரிய உள்ளே பலரும் அகப்பட்டிருக்கிறோம். புத்தகங்கள், நோட்டுகள், நாங்களே வரைந்து பிடித்தமான நிறங்களையெல்லாம் இட்டு நிரப்பிச் சுவர்களில் ஒட்டி வைத்த சித்திரங்கள் எல்லாம் கருகும். நாங்களே நட்டு வைத்த ஒவ்வொரு நாளும் நீரூற்றி வளர்த்த பூக்கன்றுகள் பெருமூச்செறிந்து கொண்டே பொசுங்கும். வகுப்பிலுள்ளவர்களுடன் சேர்ந்து நானும் தீய்ந்து கொண்டிருக்கிறேன். மயிர் கருகி மணக்கிறது. பொசுபொசுவென்று தோல் கருகியபடியே.. எப்படி கத்துவது? யாருமே குரலெழுப்பாத வகையில் உதடுகள் தையலிடப்பட்டுள்ளன. உழவு இயந்திரம் வேகமாக வருகிறது. அதிலிருந்து குதித்த எங்களை நோக்கி வருகின்றவர்களின் முகப்பாகம் வெறுமையாக இருக்கிறது. கைவிரல்களுக்குப் பதிலாகச் சற்றே நீண்டு நெருக்கமான பற்களுடன் குப்பை வாரி அலகுகள் பொருத்தப்பட்டுள்ளன. அவற்றினால் எங்களை வாரிக் கொண்டுபோய் நடுவீதியில் குவித்து உழவியந்திரப் பெட்டிக்குள் அள்ளி வீசிவிட்டு குதித்தேறி எங்கள் மீதமர்ந்து மூத்திரமடிக்கின்றனர். உழவு இயந்திரம் வேகமாகப் புறப்படுகிறது. நாங்கள் ஒருவரோடொருவர் மோதுபடுகிறோம். அவர்கள் கைகொட்டிச் சிரிக்கிறார்கள். சற்று நேரத்தின் பின் உழவியந்திரம் வேகந்தணிந்து நின்றுவிடுகிறது. எங்கள் மீதமர்ந்திருந்தவர்கள் மறைந்துவிடுகின்றனர். முன்னால் கடல் தெரிகிறது. உழவியந்திரப் பெட்டி மேலெழும்புகிறது. நாங்கள் சறுக்கிக் கொண்டுபோய் கடலுக்குள் விழுகிறோம்.

காலநிலை குழம்பியிருப்பதாகச் சம்பவிக்கும் கனவுகளில் நான் தேடிப் பார்ப்பதோ எல்லாம் வறுமை போலிருந்த வகுப்பறையையும் நாங்கள் ஆரவாரித்து விளையாடி மைதானத்தையுந்தான். ஆனால் எதிர்பாராத விதமாய் மழை பெய்யத் தொடங்குகிறது. நனைந்து கொண்டே போகிறேன் பள்ளிக்கூடம் நோக்கி. எங்கோ ஒரு வீட்டிலிருந்து அழுகுரல் கேட்கிறது. தொப்பலாக நனைந்து வகுப்பறைக்குள் நுழைகிறேன். எங்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கக்கூடிய குரல் வகுப்பறைக்குள்ளிருந்து ஒலிக்கிறது. குடைகளை எப்போதும் கையோடு கொண்டுவர வேண்டிய அவசியமேற்பட்டிருப்பதை ஒருத்தரும் உணரவில்லை. காலம் குறுகி வருகிறது. கூரை ஒழுகிக் கொண்டிருக்க நாங்கள் வகுப்பறைக்குள் கதிரை மேசைகளை ஒழுக்குவிழாத பகுதிகளுக்கு நகர்த்திக் கொண்டிருக்கிறோம். இதுதான் வகுப்பறையில் எங்களுக்கிருக்கும் வேலை. எங்களது கையெழுத்துக்கள் நிரம்பிய நோட்டுக்களை மழை நனைத்து மையைக் கரைத்துக் கொண்டிருக்கிறது. தொடர்ந்து பொழியும் மழையால் வெள்ளம் பெருகி வகுப்பறையை ஆக்கிரமித்து நோட்டுப் புத்தகங்களும், வரைபடங்களும் மிதக்க நாங்கள் கோழிக் குஞ்சுகளாக மூலைக்கு மூலை ஒதுங்குகிறோம்.

பிரியாய்க் கோணேஸ், கிரிசாந்தன், அசோ, வலைவீச்சுக்காரர்களின் பொறியுள் எனக் கூடப்படித்தவர்களெல்லாம் இயக்கத்திற்குப் போய்விட்டதாக யாரோ சொல்லிப்போக நான் மட்டும் தனித்துப் போய் விட்டதாக உணர்கிறேன். எனக்கு முன்னால் தெரிகிற ஒவ்வொரு பாதையும் மூடப்படுகிறது. அவர்கள் பல இடங்களிலும் குழிதோண்டி வைத்துள்ளனர். நான் பார்த்துக் கொண்டிருக்கவே பலரையும் நிலம் தேய்பட இழுத்துவந்து குழிகளுக்குள் விழுத்தி மூடி விட்டுச் சிரிக்கிறார்கள். குக்குறுப்பச்சான்கள் வெருண்டு கத்தியபடியே பறக்கின்றன. அடுத்துக் குழியில் விழுத்தப்படப் போவது நான்தான். இனிமேலும் தப்ப முடியாது. நான் மட்டும் தனித்துப் போய்விட்டேன். எனக்கு முன்னால் எந்த மார்க்கமுமில்லை. வீட்டிலுள்ளோர் என்னைத் தேடி அலையத் தொடங்கியிருப்பர். இருள் அடர்ந்து கொண்டிருக்கிறது. கவச வாகனத் தொடரணி இரைந்திரைந்து போகிறது. அவர்களால் மூடப்பட்ட குழிகளை இரவிரவாக நாய்கள் வந்து கிளறித் தள்ளுகின்றன. தூரத்தில் தெரியும் பனை வட்டுகள் தீப்பற்றி எரிகின்றன. இப்போதும் யாரோ மிளகாய் வறுக்கின்றனர். நாசி எரிகிறது. இருமினால் சற்றே ஆசுவாசப்படலாம். யாரோ பெண்கள் கத்திக் கூக்குரலிடுகின்றனர். மைதிரி ரீச்சரின் குரலும் அதே கலந்தொலிப்பதாகப் படுகிறது. ஆட்காட்டிகள் அலறியடித்துப் பறந்து வட்டமடித்துக் கத்துகின்றன. அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள் போலும். பள்ளிக்கூடம் தொலைவில் மிதக்கிறது. பின்னொரு நாளில் எவராவது வந்து இங்கே தோண்டினால் நிறைய எலும்புக்கூடுகள் வெளிவரலாம். அதில் என்னதும் ஒன்றாக இருக்கும். பத்திரிகைகளில் போட்டோக்களுடன் பரபரப்பாக செய்தியொன்று வந்திருக்கும். மறுநாள் பரபரப்பு அடங்கிவிடும். வீட்டிலுள்ளோர் மட்டும் என்னைத் தேடி அலைந்து கொண்டேயிருப்பர்.

தான்யாவின் சாகசக்காரி



வடலி வெளியீடு
8ஏ, அழகிரி நகர், 4வது தெரு,
லட்சுமிபுரம், வடபழனி, சென்னை.
ரூ.50/-

சமூக இயக்கத்தில் பெண்களின் பங்கை எந்தளவிற்கு உறவுக் கன்னிகளும்,குடும்ப அமைப்புகளும், அதனூடான உறவுகளும் சிதைத்து விழுங்கிச் செறிக்கிறது என்பதுதான் இதன் அடிநாதம் இதற்காகத்தான் இத்தனை கவிதைகள்,இத்தனை வருடங்கள், சுமார் 11ஆண்டுகால கவிதைகளைத்தாங்கி வந்துள்ள தான்யாவின் சாகசக்காரிகள் பற்றியவை தொகுப்பு தீவிரத்தொனியில் பெண்கள் பிச்சனைகளை அல்லது விடுதலையை பேசுபவையென கருதமுடியாது, ஆனால் அதன் அடிநாதம் அதுதான் வழக்கமாக பெண்கவிஞர்களின் மொழியில் ஒரு தீவிரத்தன்மை மேலோங்கியிருக்கும், எதிர்ப்புக்குரல் சற்றுக் கூடியிருக்கும், சமூகத்தின் மீதான தனது கோபத்தை கவனப்படுத்தியிருக்கும் அல்லது சமூகத்தை, உடலதிகாரத்தை ஒரு ஓங்கியறைவதற்கான சொற்கள்கூடியிருக்கும். ஆனால் தான்யாவின் கவிதைகளில் உள்ள சிறப்பு மேற்கண்ட யாவும் தங்கு தடையில்லாதவொரு சாந்தமான மொழிநடையில் சொல்லப்பட்டிருப்பதுதான். இது நமக்கு புதியதாகத் தோன்றலாம் தான்யா இதைத்தான் தனது மொழியென நம்பியிருக்கிறார். புலம்பெயர்ந்து கனடாவில் வசித்துவரும் இரண்டாவது தலைமுறைக் கவிஞரென அடையாளப்படுத்தப்படுகிறார்.மேலும் தான் வசிக்கும் நிலத்தில் உள்ள சமூகப்பிரச்சனைகளுக்கும் பொதுநலனுக்காகவும் இயங்க்கிவரும் தான்யாவின் முதல் தொகுப்பை வடலி, லிவிங் ஸ்மைல் வித்யாவின் நான்கு கோட்டோவியங்களுடன் வெளியிட்டிருக்கிறது.

பெரும்பாலான கவிதைகள் காதல் கவிதைகள் போலத்தான் உள்ளது. ஆனாலும் போகிறபோக்கில் இது சலிப்புறச்செய்யுமெனக்கூட கருத இடமிருக்கிறது. ஆனால் பத்தாண்டுகளுக்கும் மேலாக எழுதிக்கொண்டிருக்கும் கவிஞர் ஏன் காதல் கவிதைகளை தவிர்க்க முடியாமல் இருக்கிறார் என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. விஷயம் இது தான் இக் கவிதைகளில் மரபான விஷயங்களின் மூலம் தன்னை இச்சமூகம் கட்டுப்படுத்துவதாக நினைப்பதையும் இவர் இதே போக்கில் எழுதியிருப்பதாகத் தோன்றுகிறது. சில கவிதைகளில் வரும் உணர்ச்சி தருணத்தை பொத்தாம் பொதுவாக எழுதியிருந்தாலே அது வேறு அர்த்தங்களையும் தந்திருக்குமெனத் தோன்றுகிறது.

பக்கம்; 14ல் உள்ள கவிதையை எடுத்துக்கொள்வோம்,

நட்சத்திரங்களின்
வெளுப்பில் பார்த்துப்பேசி காதல்கொண்டு
பால்நிலவிற் சேர்ந்து கூடி
களிப்புற்று கூடுண்ட ராத்திரிகள்
கூடாதுபோன நம்பிக்கைகளும்
குலாவிச்சிதறிய நேசமும்
என்னோடு யுத்தமிட
என்னைத்தேடி வண்டுகள் வட்டமிட்டு
ரீங்கரித்துக்கொள்ள
மறுபடியும் ஒருமுறை புதியதாய் பரிசீலிக்க
குணங்கள் அறியாது வெட்டப்பட்டேன்
இப்போதெல்லாம் கனவில் கற்களே குவிந்துகொள்கின்றன
உடைக்க முடியாமல் வளர்ந்து
என்னைச்சூழ்ந்து
அவற்றுள் சிக்குண்டு
கல்லுக்குள் அடைபட்டு காணாமல் போனேன். —

இதில் முதல் நான்கு வரிகள் காதலைப்பாடுகின்றன. எனவே அடுத்த வரிகளும் அதனைத்தொடரும் வரிகளாகத்தான் வரும் என்பதில்லை, கூடாதுபோன நம்பிக்கைகளும் குலாவிச்சிதறிய நேசமும் என்னோடு யுத்தமிட என மீண்டும் மனச்சிக்கலை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. பிறகு அவையும் மீறி கனவில் கற்களே குவிந்து கொள்கின்றன எனத்தொடர்கிறது. பிறகு கல்லுக்குள் அடைபட்டு காணாமல் போனேன் என்று முடிகிறது. காதல் —பிறகு அதன்மூலம் ஆக்கிரமிப்பு பிறகு முடிவிலாத சிறை என மொத்த தன்னுணர்வும் எதன் வாயிலாக ஆக்கிரமிப்பாகிறது என்பதற்கு உதாரணமாக இக்கவிதையை எடுத்துக்கொள்ளலாம். துணையின்றி எழும் காலையின் முட்டுநீர் தனிமையில் —பக்,12

புதியதாய் உறவைப் புதுப்பித்துக்கொள்ள அடங்காமல் ஆழ்ந்து கொ(ல்)ள்ளும் தனிமை —பக்,24

முடிவுக்கு யார் தயார் படுத்தினும் சொட்டும் மழையிலும் தனிமையின் சாரலிலும் _பக்,26

எங்கு தேடினும் எதுவுமேயின்றி தனிமை நிலையிலொரு பிரமிப்பில் ஞாபகங்கள் உடைகின்றன — பக்,39

எனத் தனிமையை நேரடியாகவும் மறைமுகமாகவும் இத்தொகுப்பு முழுக்க பதிவாக்கியுள்ளார். இது எதேச்சையானதாக நிகழ்ந்ததாகத்தெரியவில்லை காதல் வயப்பட்ட மனது தனிமையை விரும்புமெனத் தெரியும். இதனை அதன் தொடர்ச்சியாகவே எடுத்துக் கொள்ளலாம்.

துயருற்று அழும் பொழுதுகளில் மெலிதான வார்த்தைகளை சின்ன வருடல்களை அதிகாரமற்ற அன்பை குழந்தையைப்போன்ற தொடுகையை எதிர்பார்த்து மீள்கிறேன் —பக்கம். 37.

வழி அனுப்பிவைக்கும் தைரியமின்றி காதலின் பெயரால் ஓர் ருத்ர தாண்டவம் நடந்து முடிகிறது —பக்கம்— 36. என தொகுப்பு முழுக்க அலங்காரமற்ற நடையுடன் கூடியதும், அதே சமயத்தில் பிரிவின் தாக்கத்தையும் அதன் மீதான கவனப்படுத்துதலையும் சொல்லிச்செல்கிறார். நாம் என்ன நினைக்க வேண்டியுள்ளதெனில் இத்தொகுப்பில் பெரும்பான்மைப் படுத்தப்படிருக்கும் ஒரு அடிப்படையான உணர்ச்சியை நம்மால் தவிர்க்க முடியாதுதான். ஆனால் அதைத்தாண்டியும் உள்ள உறவுச்சிக்கல்களை,அமைப்பு அதிகாரத்தை தான்யா தன் கவிதையில் கொண்டுவரவேண்டும். காலவோட்டமும் மொழியின் மீதான கவனமும் இதை அவருக்கு பெற்றுத்தரவேண்டும். இவற்றையெல்லாம் தாண்டி இத்தொகுப்பின் முடிவில் என்ற பகுதியில் இருக்கும் கவிதைகள் இதற்கு முந்தைய பகுதியில் இருக்கும் கவிதைகளை விட மொழியியல் ரீதியாகவும், சொல்லல் முறியிலும் சற்று பக்குவப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அதனையும் இவர் கவனத்தில் கொள்ள வேண்டும்

இத்தொகுப்பின் எனக்கு பிடித்த கவிதைகளாக 11.30, கர்வமும் இறுமாப்பும், வாழ்வை சிறகைப்போல, வறட்சியுற்ற தெருவில் எனத் தொடங்கும் கவிதைகளை சொல்லலாம். தன்னுடைய பதின்ம வயதுகளை ஒரு தேசத்திலும் அதன் பின்னான வாழ்வை மற்றொரு தேசத்திலும் வாழ்வாக பெறுவது மிகுந்த மன உளைச்சலையும், வாழ்வின் மீதான அவ நம்பிக்கையை கூட்டக்கூடும். இது பிழைப்பு தேடி மனைமக்களை வீட்டில் விட்டு அயலகம் செல்வது போலல்ல, தேவையில்லையெனில் வீடு திரும்பிவிட, ஒரு பெருவாழ்வை அதன் அத்தனை அர்த்தங்களோடும் பிடுங்கி நடுவதென்பது சாத்தியமில்லாத்துதான். அதனை சாத்தியப்படுத்ததான் பல்வேறு கலைகளையும் நாடியபடியிருக்கிறது மனது. அதில் ஒருவகை கவிதை தான்யா மொழியின் மூலம் இதனை கண்டடைய முயற்சி செய்கிறார் என்பதே யதார்த்தம்.

தான்யா இக்கவிதைகளின் தாக்கத்திலிருந்து விடுபட்டு வேறான பாடுதளத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும்.இதற்கு அலங்காரமற்ற மொழிநடை உதவக்கூடும்.

மேலும் தான்யா தனது செயற்பாடுகளின் மூலம் சமூக அக்கறைகொண்டவராகவும் அறியப்படுகிறார். 'இதே மனத்தோடு ஆன்மாவின் வெற்றிடங்களில் புதுப் பனியைப்போல நிறைகின்றது செயற்பாட்டிற்கான தேடல்கள்' என்ற அற்புத நிலையையும் அவர் பாதுகாக்க வேண்டும்.

—கண்டராதித்தன்.



ஆதன் எழினி

கோடாரிப் பூக்கள்

உங்கள் வனத்தில்
துளிர்க்கும் பறவைகளை
ஒற்றை இறகென
பின்தொடரப்படும்
கருணை மிகு நேரத்தில்

வேடனின் அம்புகள்
அதன் அலகில் முத்தமிடலாம்
அல்லது
குருதி ருசிக்கலாம்

அதனைப் பொறுத்தே
அதன் இறுதி சுவாசம்
முடிவாக்கப்படுகிறது

வனங்கள் மிகுந்த
அவ்விடத்தில்
மரங்கள் முறியும் சப்தமும்
கோடாரிகள் மழுங்கும் சப்தமும்
கேட்டுக் கொண்டேயிருக்கிறது

எனினும்,
பறவைகள் அற்ற
ஒரு மரம்
ஒரேயொரு மரம்
பூக்களை தூவிக் கொண்டிருக்கிறது

அந்த ஒற்றை இறகு
அவ்விடத்தில் தான் உயர்கிறது
வானமற்ற வெளியில்

குழந்தைகள் கூட்டல் கடவுள்கள்

கோவில்கள் அற்ற நகரமொன்றில்
தன் அம்மாக்களோடு
விளையாடிக் கொண்டிருக்கும்
குழந்தைகளிடம்

தன் சித்து விளையாட்டைக் காட்ட
சொர்க்கத்தில் இருந்து
புன்னகையோடு இறங்குகிறார் கடவுள்

நகரம் வந்ததும் சிறு பிள்ளையாய்
மாறுகிறார்
மனம் பிறழ்ந்த குழந்தைகளை
துணைக்கு அழைக்கிறார்

அம்மாக்களோடு விளையாடும்
குழந்தைகளை கிள்ளிக் கொடுக்கிறார்
கீழே தள்ளுகிறார்
காயம் செய்கிறார்

இவை அத்தனையும் அம்மாக்களின்
கண்களுக்கு மட்டும்
மற்ற பிள்ளைகளோடு விளையாடுவது போல்
காட்சியாகிறது

காயம் பட்ட குழந்தைகளை
கடவுள் தன் மடியில் அமர்த்தி
தின்பண்டம் தரவே
குழந்தைகள் அதை தூர எறிகின்றன

மீண்டும்
குழந்தைகளுக்கு கடவுள்
முத்தம் தர முயல்கிறார்
இப்போது குழந்தைகள் துள்ளித் துள்ளி
அழத் துவங்குகின்றன

அம்மாக்கள் இதை கண்டு
ஓடுகிறார்கள்
கடவுள் மறைகிறார்
குழந்தைகளை அழுகையை நிறுத்தி
சிரித்தபடி விளையாடத் துவங்குகின்றன

இப்பொழுது அவ்விடத்தில்
கோவில்கள் இல்லை
அது நகரம்
அல்லது கடவுள் தொலைந்த இடம்

ஆட்சிமொழி தொடர்புமொழி

செல்வு புவியரசன்

நெருப்பு, கடன், பகை இம்மூன்றிலும் மிச்சம் வைக்கக்கூடாது என்பது பழமொழி. இந்தப் பட்டியலில் அரசியல் உரிமைகள் என்பதையும் தயக்கமின்றி சேர்த்துக் கொள்ளலாம். அரசியல் சிக்கல்களை ஆறப்போட்டு அணைத்துவிட முடியாது. ஆனால் இந்தியை ஆட்சிமொழியாக்குவதில் நடுவண் அரசு கடைபிடித்து வரும் கொள்கை இதுதான்.

ஆட்சிமொழிப் பற்றிய விவாதங்கள் எழும்போதெல்லாம் இந்தியின் ஆதரவாளர்கள் ஒருமித்த குரலில் தெரிவிப்பது அந்தச் சிக்கலுக்கு அரசியல் சாசன அவையிலேயே முடிவு காணப்பட்டு உறுதி செய்யப்பட்டுவிட்டது என்பதைத்தான். ஆனால் அரசியல் சாசன அவையில் ஆட்சிமொழி பற்றி விவாதிக்கப்படவே இல்லை. பல மொழிகள் பேசப்படுகிற ஒரு நாட்டில் எந்த மொழி ஆட்சி மொழியாக அமைய வேண்டும் என்று கூடி விவாதித்துத்தானே ஒரு முடிவு எட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக இந்தியே ஆட்சிமொழி என்று விவாதங்கள் இல்லாமலேயே முடிவு செய்யப்பட்டது. இது எப்படி சாத்தியமானது? காங்கிரஸ் கட்சி அரசியல் சாசன அவையில் தனக்கிருந்த பெரும்பான்மையைப் பயன்படுத்தி, இந்தி பேசாத பெரும்பான்மை மக்களுக்குத் துரோகம் இழைத்தது.

அரசியல் சாசன அவையில் விவாதங்கள் நடந்து கொண்டிருந்த போது அதற்கு இணையாக காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் தனியாகக் கூடி விவாதங்களை நடத்திக் கொண்டிருந்தார்கள். கட்சி உறுப்பினர்கள் கூடி எடுத்த முடிவுகளை நிறைவேற்றிக் கொள்கிற இடமாக அரசியல் சாசன அவையைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அரசியல் சாசன அவையில் விவாதிக்கப்பட்டவை அனைத்தும் எழுத்து வடிவத்தில் இருக்கின்றன. ஆனால் காங்கிரஸ் உறுப்பினர்களின் தனி விவாதங்கள் எதுவும் அந்தக் கட்சியால் பதிவு செய்யப்படவில்லை.

ஆட்சிமொழி பற்றி விவாதிக்கப்படவில்லையென்றால் அரசியல் சாசன அவையில் என்னதான் நடந்தது? எண்கள் தேவநாகரி வடிவத்தில் இருக்க வேண்டுமா இல்லை ரோமன் வடிவத்திலேயே தொடர வேண்டுமா என்பதைப் பற்றி மிக நீண்ட விவாதம் நடந்தது. முடிவில் ஒற்றை வாக்கு வித்தியாசத்தில் ரோமானிய வடிவத்திலேயே எண்களை எழுதுவது என்று முடிவு செய்யப்பட்டது.

ஆட்சிமொழி என்ற வார்த்தை அரசியல் சாசனத்தில் பயன்படுத்தப்படவில்லை. அரசியல் சாசனத்தின் பதினேழாவது அத்தியாயம் அலுவல்மொழி என்ற தலைப்பிலேயே அமைந்திருக்கிறது. தேவநாகரி வரிவடித்தில் அமைந்த இந்தியே அதிகாரப்பூர்வமான மொழி என்கிறது இந்திய அரசியல் சாசனத்தின் 343வது பிரிவு. அதிகாரங்கள் அனைத்தும் நடுவண் அரசின் கையிலேயே இருக்கும் எனில் அதன் அலுவல்மொழியே ஆட்சிமொழி என்பதை தனியே விரித்துரைக்கத் தேவையில்லை. எனவே இந்தி இந்நாட்டின் ஆட்சிமொழியாக ஏட்டளவில் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டது. அதை இந்தி அல்லாத மொழியினரை

ஏற்கச் செய்வதே நடுவண் அரசு எதிர்கொண்டிருக்கும் சவால். அதற்காக இந்தி அல்லாத மற்ற மொழியினரை அமைதிப்படுத்தும் நோக்கத்தில் சேர்க்கப்பட்டதுதான் அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்த பின் பதினைந்து ஆண்டுகள் வரையிலும் ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருக்க வேண்டும் என்ற பிரிவு.

அரசியல் சாசன அவை கூடிய போது காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் தனிப்பட்ட விவாதங்கள் கவனத்துக்கு வராதது போலவே, 1955ல் ஆட்சி மொழி பற்றி நாடாளுமன்றக் குழுவால் விவாதிக்கப்பட்டபோதும் அது பொதுவெளிக்கு வரவில்லை. நாடாளுமன்ற நிலைக்குழுவில் விவாதிக்கப்பட்டவற்றைப் பத்திரிகைகள் பிரசுரிக்கக்கூடாது என்பது விதி. அந்த விதியைக் கட்சி நாடாளுமன்றக் குழுவில் ஆட்சிமொழி பற்றி விவாதிக்கப்பட்டதும் பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டு வராமல் தவிர்க்கப்பட்டது. ஆனால் நாடாளுமன்ற நிலைக்குழுவுக்கு மட்டுமே அந்த சிறப்புரிமையேயன்றி அனைத்து நாடாளுமன்றக் குழுக்களும் அல்ல. அச்சமயம் உள்துறை அமைச்சராக இருந்த கோவிந்த வல்லப பந்த் அவர்களின் செய்தித்துறை அதிகாரி குல்தீப் நய்யார் இந்தப் பிரச்சனையை தாம் தவறான வகையில் கையாண்டதற்காக மன்னிப்பு கேட்டுக் கொண்டிருந்தார். பத்திரிகையாளர்கள் நாடாளுமன்ற விதிமுறைகள் பற்றி அறியாமல் இருந்தது தேசத்திற்கே பெருந்தீங்காய் முடிந்தது.

நாடாளுமன்றக் குழுவின் கூட்டத்தில் இன்னொரு முடிவும் எடுக்கப்பட்டது. அரசியல் சாசனத்தின் 344-ம் பிரிவின்படி ஒவ்வொரு பத்தாண்டுகளுக்குப் பிறகும் இந்தி மொழியின் பரவல் பற்றி ஆய்வு செய்ய ஆணையம் அமைக்கப்பட வேண்டும். அடுத்த ஒரு ஆணையம் அமைக்கப்பட்டால் ஆட்சிமொழிச் சிக்கலை அது மேலும் மோசமாக்கும் என்று தெரிய வந்தது. எனவே அமைக்கப்பட வேண்டும் என்று கட்டாயம் தவிர்க்கப்பட்டு அமைக்கப்படலாம் என்று விருப்ப அதிகாரம் கொள்ளப்பட்டது. அப்படியொரு ஆணையம் அதன்பிறகு அமைக்கப்படவில்லை என்பதே இந்தியின் வலுவை உணர்த்துவதற்குப் போதுமானது.

அரசியல் சாசனம் நடைமுறைக்கு வந்து பதினைந்து ஆண்டுகள் முடிந்த வேளையில் ஆட்சி மொழியாக இந்தி தொடங்குவதற்கு எதிர்ப்பு என்பதைக் காட்டிலும் தொடர்பு மொழியாக ஆங்கிலம் நீடிப்பதை வலியுறுத்தியே தமிழ்நாட்டில் பெரும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அப்போராட்டங்களின் விளைவாக 1968ம் ஆண்டில் குடியரசுத் தலைவரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆட்சிமொழி திருத்தச் சட்டமும் இச்சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வை வழங்கவில்லை. அச்சட்டத் திருத்தம் 1965ம் ஆண்டுக்குப் பின்னும் ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம் என்று மட்டுமே அனுமதிக்கிறது. ஆனால் ஆங்கிலத்தைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று வகை செய்யவில்லை. இந்தி பேசாத மக்களுக்கு ஆங்கிலத்தைத் தொடர்பு மொழியாகப் பயன்படுத்தும் உரிமையை சலுகையாக வழங்கிக் கொண்டிருப்பதாலேயே இந்தி தனது இடத்தை தக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

1956ல் நடந்தது உணர்வுப்பூர்வமான எழுச்சி. அதோடு ஒப்பிடுகையில் 1986ல் ராஜீவ்காந்தி ஆட்சிக்காலத்தில் இந்தி மொழியில் பயிற்றுவிக்கும் நவோதயா பள்ளிகள் தொடங்கப்பட்ட போது தமிழகத்தில் அரங்கேறியதெல்லாம் கருணாநிதிக்கும் ராமச்சந்திரனுக்கும் இடையே இருந்த தனிநபர் பகையின் நாடகக்காட்சிகள்.

அண்ணாதுரை, கருணாநிதி இருவரின் காலத்திலும் அரசியல் சாசனத்தின் 343ம் பிரிவை எரிப்பது ஒரு குறியீடாகக் கையாளப்பட்டது. அது அரசியல் சாசன மீறலாக தண்டிக்கவும் பட்டது. கல்வி, வேலை வாய்ப்பு, நடுவண் அரசு செய்தித் தொடர்புகள் என்று இந்தியை ஆட்சிமொழியாக உள்ளே நுழைகிற போதெல்லாம் எதிர்ப்புகள் கிளம்புகின்றன. அடங்குகின்றன. மீண்டும் மீண்டும் நடுவண் அரசின் முயற்சிகள் தொடர்ந்தபடியே இருக்கின்றன. ஆனால் அரசியல் சாசனத்தின் 343ம் பிரிவு நீடிக்கும் வரைக்கும் ஆட்சி மொழி சிக்கலும் நீடித்துக் கொண்டுதான் இருக்கும்.

348வது பிரிவின்படி மாநில ஆட்சி மொழியானது குடியரசுத் தலைவரின் அனுமதியைப் பெற்று அம்மாநில உயர்நீதிமன்றத்தில் பயன்படுத்தப்படலாம். இப்பிரிவின் அடிப்படையில் இந்தி பேசப்படும் மாநிலங்களில் அம்மொழி உயர்நீதிமன்ற மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தி அல்லாத மற்ற மொழிகளுக்கு இவ்வாய்ப்பு வழங்கப்படவில்லை. இந்தி நீதிமன்ற மொழியாகப் பயன்படுத்தப்படுவது மாநில மொழிகளுக்கான உரிமையின் காரணமாக அல்ல. இந்தியை ஆட்சிமொழியாக நடைமுறைப்படுத்துவதன் ஒரு பகுதியாக. எனவே, சட்டமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும் தீர்மானங்களால் எப்பயனும் விளையப் போவதுமில்லை.

பட்டியல் மொழிகளில் இந்தியில்லாத மொழிகள் இடம் பெற்றிருப்பதால் என்ன பயன்? அம்மொழிகள் பட்டியலிடப்பட்ட மொழிகள் என்ற அடைமொழியை மட்டுமே பெற்றிருக்கின்றன. எட்டாவது பட்டியல் மொழிகளின் பட்டியலே அன்றி ஆட்சி மொழிகளின் பட்டியல் அன்று. இப்பட்டியலில் இடம்பெற்றிருக்கும் மொழிகளில் மாணவர்கள் மிகச் சில அரசுத் தேர்வுகளை எழுதும் வாய்ப்பை பெற்றிருக்கிறார்கள். மேலும் இந்தி அல்லாத இதர மொழியினரின் உரிமைக் கோரிக்கைகளை வேலை வாய்ப்புக்கான ஏக்கமென்று அடையாளப்படுத்துவதும் தொடர்கிறது.

மொத்தத்தில், ஆட்சிமொழி பற்றிய சிக்கல் அரசியல் சாசன அவையிலும் சரி, அதன் பின் நாடாளுமன்றத்திலும் சரி, இதுவரையில் முறையாக அணுகப்படவில்லை. இன்னும் அந்தச் சிக்கலுக்குத் தீர்வு காணப்படவும் இல்லை. ஆட்சிமொழிச் சிக்கலை முதன்மைப்படுத்தி அரசியல் செய்தவர்களோ போர்ப்பரணி பாடுவதே போதுமென்று நிறுத்திக்கொண்டுவிட்டார்கள். மொழித் திணிப்புக்கு எதிராக தங்களைப் பலி கொடுத்துக் கொண்ட ஆன்மாக்கள் அமைதியடையாமல் தான் அலைந்து கொண்டிருக்கின்றன.

நோய்

குமாரநந்தன்



கல்லில் அமர்ந்திருந்த காகம் கல்லைவிட்டுப் பறந்தது. ஜன்னல் வழியே அந்தக் கல்லையே பார்த்துக் கொண்டிருந்தான். கல்லின் மீது காகத்தின் அரூபம் நின்றுகொண்டு இவனைப்பார்த்தது. வெய்யில் தீக்கங்குகளைப்போலக் கனன்று கொண்டிருந்தது. ஏதோ ஒரு புதுமையின் எல்லையற்ற வெளியில் விழுந்து கொண்டிருப்பதைப் போல கடும் அச்சம் தரும் அறிகுறிகள் அவனுக்குள் உண்டாகின. முற்றிலும் அழிந்து போய்விடுவதைப் போல மெல்ல மெல்ல வலுவிலந்துகொண்டும் மறைந்துகொண்டும் காணாமல் போய்க் கொண்டுமான ஒரு செயல் அவனுக்குள் நடந்து கொண்டிருப்பதை அவன் எங்கிருந்தோ எங்கோயோ பார்த்துக் கொண்டிருந்தான். அவனால் அதை நிறுத்தவோ மாற்றவோ முடியவில்லை. ஒன்றும் செய்யமுடியவில்லை

வெய்யில் தாழும் வரை வியர்வையின் தெப்பத்தில் மிதந்தபடி தூங்கினான். சாயந்திரம் எழுந்தபோது அதே உருவத்தில்

முற்றிலும் வேறொருவனாய்த் தன்னை உணர்ந்தான். அன்பினாலும் கருணையினாலும் நிறைந்திருந்தான். அவனுக்குள்ளிருந்து அவை பிரவாகமாகப் பீறிட்டு உலகெங்கும் வழிந்து அண்ட சராசரம் எங்கும் தாவிப் பாய்ந்து கொண்டிருக்கும் அதிசயத்தை வெகுநேரம் கவனித்துக் கொண்டிருந்தான். கடைவீதிக்குப் போய் ஒரு டீ சாப்பிட நினைத்தான். இன்று ஏன் இப்படி ஆகிறது என அவனுக்குத் தெரியவில்லை. அவன் எப்போதும் இப்படி ஆனதில்லை. எப்போதும் இப்படி உணர்ந்ததில்லை. சுமதி வெளியில் எங்கேயோ போயிருக்கிறாள். வீட்டை வெறுமனே தாழிட்டு விட்டுக் கிளம்பினான்.

எங்கும் ஒரே வெளிச்சமாய் இருப்பதைப் போல மகிழ்ச்சியாக இருந்தது. தன்னிடம் பிரசித்தமாய் இருந்த கோபத்தின் தகிப்பு சுத்தமாய்க் காணாமல் போய்விட்டதைக் கண்டு வியந்தான். அந்த இடத்தில் ஒரு குளிர்ந்த புன்னகை செய்யக்கூடிய ஒளிர்வு கொண்ட உருவற்ற பொருள்போன்ற ஒன்று இன்பத்தின் நறுமணத்தை அவன் உடலைத் தாண்டியும் வெகுதூரம் பரவ விட்டுக் கொண்டு அமர்ந்திருந்தது.

என்ன ஆகியிருக்கும்?. போனவாரம் நாய் குறுக்கே வந்தபோது வண்டியை பிரேக் போட்டுத் திருப்பிய வேகத்தில் கீழே விழுந்துவிட்டான். பின் தலையில் பலமாக அடிபட்டுவிட்டது. மயங்கிவிட்டான். ஆனால் உடனே மயக்கம் தெளிந்துவிட்டது. எல்லாம் சரியாக இருப்பதைப் போல இருந்தது. ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும் என்று தோன்றவில்லை. இரண்டு மூன்று நாட்களாய் லேசான தலைவலி இருந்து கொண்டிருந்து பிறகு சரியாகிவிட்டது. இந்த மாற்றத்திற்கும் அந்த சம்பவத்திற்கும் தொடர்பு இருக்க வேண்டும் என்று அவனுக்கு ஏனோ தோன்றியது.

அவன் கண்களும் இதயமும் கருணையின் ஊற்றாக மாறிவிட்டன. ஒரே சமயத்தில் பலவிதமான நினைவுகள் பரபரத்து ஓடும் மனதில் எப்போதும் இல்லாத அமைதி சாந்தம். பெரும் நதியின் மௌன நகர்வு. கடையில் போய் நின்று கொண்டு தனக்கு ஒரு டீ தருமாறு மிகவும் பணிவுடன் கேட்டான். கடைக்காரர் ஒரு கணம் பிரமித்து பிடித்தவர் மாதிரி நின்றிருந்துவிட்டுக் கைகள் நடுங்க டீயை அவன் கையில் கொடுத்தார். அவனுக்குப் பழைய சம்பவங்கள் எதுவும் மறந்துவிடவில்லை. இதே மனிதரை வயதில் மூத்தவர் என்று கூட யோசிக்காமல் ஒருமுறை செவுட்டில் அறைந்ததும் அவர் இயலாமை பொங்க கடவுள் உனக்குரிய கூலியைக் கொடுப்பார் என்னும் தோற்றத்தோடு தேம்பி அழுதபடி நின்றிருந்த காட்சி இப்போது அவனை நிலைகுலைய வைத்தது. அவன் காதில் இப்போது ஒலித்தது பளீர் என்ற அந்த அறை. டீயைக் குடித்து முடித்துவிட்டு மெதுவாக டம்ளரை பெஞ்சின்

மேல் வைத்துவிட்டு சில்லறையைத் துழாவி எடுத்துக் கொடுத்தான். கையேந்தி வாங்கியவரின் கையை அன்பு மீதூறப் பற்றிக் கொண்டான். "நான் உங்ககிட்ட எப்பவும் மோசமா நடந்துகிட்டதுக்கு மன்னிச்சிக்கங்க" என்றான். அவன் கண்கள் கண்ணாடி சித்திரம் போல மின்னியது. அவர் வேகமாகக் கைகளை உதறிக் கொண்டார். "பரவாயில்ல தம்பி" என்றவரின் நாக்கு குழறியது. கடையில் டீ குடித்துக் கொண்டு பேசிக் கொண்டு இருந்த உள்ளூர்க்காரர்கள் தங்கள் பேச்சுக்கு நடுவே இந்த விநோதமான செயலின் காட்சியைக் கண்களில் உறிஞ்சிக் கொண்டனர். அவர்களின் பேச்சுகள் தொடர்ந்து கொண்டிருந்தாலும் அவை சொல்சொல்லாய்ப் பிரிந்து தனித்தலையும் அளவுக்கு தடுமாறிப் போய்விட்டார்கள்.

அவனின் இந்த திடீர் மாற்றம் கடைவீதியெங்கும் ஒரே நிமிடத்தில் செய்தியாய்ப் பரவிவிட்டது. அந்தப் பக்கம் ஏதோ வேலை மாதிரி ஜனங்கள் கூட்டம் கூட்டமாய் தெருவில் திரிந்து கொண்டு ஜாடை மாடையாய் அவனைப் பார்த்தனர். தைரியமாய்ச் சிலர் அவனைப் பார்த்து சிரிக்கவும் செய்தனர். அவன் பல ஆண்டுகளாய்ப் பயிற்சி பெற்று மும்மலங்களைக் கடந்து திரிகரண சுத்தியடைந்த யோகியைப் போல நிர்மலமாய் இருந்தான். அவன் புன்னகை அன்பில் தோய்ந்த மனதின் நறுமணமாய் இருந்தது. சகோதர வாஞ்சையும் மனிதநேயமும் அவன் மனதில் நீரற்ற பாலைவெளியில் சுற்றுப்புறத்தைப் பற்றிக் கவலையில்லாது கள்ளியில் சொட்டும் பாலாய் இடைவிடாமல் வடிந்துகொண்டிருந்தது. அன்பினால் பாரித்துப் போய்விட்ட மனதை அவனால் சுமக்க முடியவில்லை. பெரும் பாரமாய் இருந்தது. எதிர்ப்படும் யாவரையும் கனிவோடு கைகளுக்குள் பொத்திக் கொள்ள வேண்டும் போல இருந்தது. சில இளைஞர்கள் அவனிடம் கைகுலுக்க வந்தபோது அவன் அவர்கள் கைகளை விடாது இறுகப் பற்றிக் கொண்டான். நெஞ்சோடு அணைத்துக் கொண்டான். திடீரென்ற அவனுடைய இந்த வெளிப்பாடு சிலருக்கு மிரட்சியைத் தந்தது.

கோபியின் முன்னால் ராஜி வந்த போது அவன் தன்னிடம் அச்சம் என்ற உணர்வு அறவே இல்லாமல் போய்விட்டதை உணர்ந்து கொண்டான். சென்ற பனிக்காலத்தில்ஏதோ ஓர் தகராறில் இவன் கத்தியால் அவன் வயிற்றை நீளமாய்க் கீறிய சம்பவம் எப்போதும் இருவரும் மறப்பதில்லை. இருவரும் நேருக்கு நேராய் எதிர்ப்படும் போது இருவரின் மனத்திரையிலும் ஓடும் ஒரே காட்சி இப்போதும் ஓடியது. இவர்களைத் தவிர அன்று சாட்சியாய் இருந்த கடைக்காரர்கள் பணியாளர்கள் சில வாடிக்கையாளர்கள் என்று இன்னும் சிலபேரின் மனத்திரையிலும் அதே காட்சி ஓடிக் கொண்டிருந்தது. இதற்கு முன் அவன்

எதிர்ப்படும் போதெல்லாம் ஒரு அலட்சியமான புன்னகை கேலியான இதழ் விரிப்பு என்று அவனை எதிர் கொண்டிருக்கிறான் கோபி. அப்போது ராஜியின் முகத்தின் வெளிச்சமெல்லாம் சுத்தமாய் மறைந்து இருண்டு பாழ்கிணறு போல வெறுமையாய் நின்றிருப்பான்.

இன்று ராஜியின் முகத்தில் ஜீவகளை தெறித்தது. கோபியின் இதழ்களில் விரியும் அந்த அற்புதமான இகழ்ச்சிப் புன்னகை இப்போது அவன் இதழுக்கு இடம் மாறியிருந்தது. ஒருகணம் மாற்றம் நிறைந்த அவனை ஊடுருவிப் பார்த்தவன் பின்னலாய் அவன் முன் முடியைப் பற்றி இழுத்து சுழற்றி ரோட்டில் வீசினான்.

கோபிக்குக் கோபம் வரவில்லை. உருளைதண்டத்தில் உருட்டி விடப்பட்டவனைப் போல மூன்றுமுறை உருண்டு எழுந்து உட்கார்ந்து கொண்டு அவனை அன்பு கனியப் பார்த்தான். இத்தகைய வெளிப்பாடு ராஜிக்குள் ஒரு அக்னிகுண்டத்தை உயிர்ப்பிக்கச் செய்தது.

ராஜியின் அடிகள் கோடை மழையாக அவன் மேல் வலுவாக விழுந்தன. தலையிலும் வயிற்றிலும் முகத்திலும் காட்டுத்தனமான அடிகள். இதே கடைவீதியில் கோபியிடம் அடிவாங்கிய பலரும் கூட்டமாக அவனைச் சுற்றி நின்று பூரிப்புடன் பார்த்துக் கொண்டிருப்பதைப் போல ஒரு காட்சி அவன் மனதுக்குள் தோன்றியது. அவன் சுத்தமாய் மறந்திருந்த பல நிகழ்வுகள் பல முகங்கள் இப்போது நினைவுக்கு வந்தது. துயரத்தின் சாயலோடு அவனுக்குள் பதிவாகியிருந்த அந்த முகங்கள் இப்போது பரவசமாக மாறியிருந்தன. அதைப் பார்க்க இவனுக்கு மேலும் ஆழ்ந்த நிம்மதியும் அமைதியும் உண்டானது. காந்தக் கல்லால் இழுக்கப்பட்டதைப் போல மக்கள் அங்கே குவிந்தனர். போதிய இடம் விட்டு வட்டமாய்ச் சுற்றி நின்றனர். அடித்தலும் அடிவாங்குதலுமாய்ப் பூரணமாய் நடந்துகொண்டிருக்கும் அந்த நிகழ்வு மிகவும் ஒத்திசைந்து காலகாலமாய் முடிவு செய்யப்பட்ட ஒன்றைப் போலத் தீவிரமாய் நடந்து கொண்டிருந்தது. அவன் ஆழ்மனது தூர விழும்போது வட்டம் நெகிழ்ந்து நகர்ந்து தன்னை மாற்றி வடிவமைத்துக் கொண்டது. திடீரென்று வட்டத்தைப் பிளந்துகொண்டு போலீசார் உள்ளே நுழைந்தனர். அவர்கள் கைகளில் நீண்ட லத்திகள் சுழன்று கொண்டிருந்தன. வானத்திலிருந்து கரிய துணி ஒன்று பறந்து விழுந்ததைப் போல கோபியைச் சுற்றிச் சுழன்று விழுந்தது ஆனையம்.

வாசனை கலந்த ஒரு மிதமான காரநெடியைத் தொடர்ந்தொரு அசைவு பச்சையும் வெண்மையும் கலந்ததொரு சுத்தவெளியைக் கொண்டு அவன் தன்னையும்

மருத்துவமனையையும் கடைசியாய் நடந்த நிகழ்வையும் தானாய்த் தொகுத்துக் கொண்டான். கண் விழித்த பின் அமைதியாய் குளுகோஸ் புட்டியில் இருந்து சொட்டும் துளியையும் சீராகச் சுழலும் மின் விசிறியையும் தவிர வேறு எந்த சலனமும் அற்ற ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு சுமதியின் பெருங்குரல் அழுகை ஒரு தலைவலியைப் போல அறையின் காற்றில் கணக்கப் பரவியது. உள்ளே திடும்மென வந்தவள் கோபியின் உடலெங்கும் கூந்தல் சிறகுகள் பரவ அடிபட்ட பறவையைப் போல அவன் நெஞ்சின் மீது விழுந்து துடித்தாள். வெள்ளுடை அணிந்த இளம் யுவதி அவளைப் பலவந்தமாகத் தூர இழுத்தாள். சுமதியின் மீதும் வெள்ளுடை செவிலியின் மீதும் அவனுக்குக் கருணை சுரந்தது.

அவன் காயங்கள் வேகமாகக் குணமாகி வந்தன. ஒன்றுக் கொன்று வித்தியாசமில்லாத ஒரே மாதிரியான ஆறு நாட்களைக் கடந்தபின் அவன் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

இந்த மாற்றம் நல்லதிற்கான அறிகுறி அல்ல வென்றும் யாருக்குப் பயப்படவில்லையென்றாலும் கனகசபைக்குப் பயப்பட வேண்டும் என்றும் அவன் ஒரு மோசமான நச்சுப் பாம்பு என்றும் அவன் இவனைக் கொல்வதற்குச் சபதமேற்றிருப்பதையும் சுமதி வேறு வேறு வார்த்தைகளால் விவரித்துக் கொண்டே இருந்தாள். அவன் தூரத்தில் ஓடும் நதியின் இன்பச் சலசலப்பைக் கேட்பது போல அவள் பேச்சைக் கேட்டுக் கொண்டே இருந்தான். தன்னுடைய எந்த வார்த்தையும் அவனிடம் எந்த மாற்றத்தையும் உண்டாக்கவில்லை என்பதையறிந்தவள் கடைசியாகக் கையறு நிலையின் தவிப்பில் அழ ஆரம்பித்தாள். அவன் அவளைச் சமாதானம் செய்தான். தன்னால் இனி ஒருபோதும் தானாய்ப் பழைய இடத்திற்குத் திரும்பிப் போக முடியாது தன்னைக் கொல்வதனால் யாருக்காவது ஒரு சந்தோசம் உண்டாகும் என்றால் கொல்லட்டும் என்றான். அப்படியானால் என் கதி? இரண்டு வீட்டிலும் என்னைச் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள் நான் ஒரு தேவடியாளாய்த்தான் இந்த வீதியில் திரியணும் என்று கத்தினாள். அவன் அவளைச் சட்டை செய்யவில்லை.

ஊரில் ஒரே வாரத்தில் அவனைப் பற்றிய அபிப்ராயங்கள் எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. அவனைப் பார்க்கப் பழங்களோடும் தின் பண்டங்களோடும் நிறைய பேர் வந்து கொண்டே இருந்தனர். கோபிக்கு ஆச்சரியமாய் இருந்தது. இவர்களுக்கென்ன பைத்தியமாய் இருக்குமா? என்று யோசித்தான்.

இப்போது அவனைப் பார்ப்பவரெல்லாம் புன்னகைக்கிறார்கள். அவனிடம் அடிவாங்கியவர்கள் கூட சுத்தமாய் அதை மறந்துவிட்டவர்களைப் போல இவனைப் பார்த்துச் சிரிக்கிறார்கள். இவன் அவர்களின் கைகளை இறுகப்

பற்றிக் கொள்கிறான். சிலர் அவனைப் பக்தியோடு வணங்குகிறார்கள். இவன் அஞ்சியவனாகக் கைகூப்பி நிற்கிறான்.

அவன் எதுவும் கேட்காமலேயே கடைக்காரர்கள் அவர்களாகவே தங்களுடைய சகோதரனுக்குத் தருவதைப் போல வாஞ்சையோடு திண்பண்டங்களையும் காசு பணத்தையும் அவன் கையில் திணிக்கிறார்கள். அவனுக்கு நிறைவாய் இருந்தது. அவன் கெட்டத் கெட்டத் தித்திப்பான இந்த வாழ்க்கையை இப்படியே வாழ்ந்து தீர்த்துவிடுவது என்று முடிவு செய்துகொண்டான்.



சுமதி கோயிலுக்குப் போய் விளக்குப் போட்டுவிட்டு வந்தாள். யாருக்கும் பயமில்லாமல் போய்விட்டதை நினைந்து ஆச்சரியமாய் இருந்தது. இவன் கோபிதானா அல்லது கோபி மாதிரி இருக்கும் வேறு யாராவதா என்று சந்தேகமாய் இருந்தது. எல்லாம் அப்படியே தலைகீழாக மாறிவிட்ட அதிசயத்தை அவளால் விளங்கிக் கொள்ளவே முடியவில்லை.

வைரம் பாய்ந்த அந்த உடல் கடற்பஞ்சு போல அவ்வளவு மிருதுவாகிவிட்டது. எங்கிருந்திருக்கும் இவ்வளவு மிருது? முகமே சிரிப்பது மாதிரி ஒரு களை எப்படி வந்திருக்கும்? இதைப்போய் எப்படிக் களை என்று சொல்ல முடியும்? முன்பிருந்த முகம் தான் கோபி. பார்த்தாலே பயம் வரும் மாதிரியான கண்கள். இப்போது அந்தக் கண்களில் பால் வடிகிறது. கண்றாவி. யாரைப் பார்த்தாலும் கைகுழக்குவதும் பெண்ணைப் போல மெல்லிதாகப் பேசுவதும் அவளால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. இவன் பழைய மாதிரி ஆவானா மாட்டானா? எதனால் இப்படி ஆகியிருக்கும்? கோபியைக் கேட்டால் நாய் குறுக்கே வந்தது வண்டியில இருந்து கீழே விழுந்துட்டேன் என்கிறான். நாய் குறுக்கே வந்து கீழே விழுந்ததிற்கும் இதற்கும் என்னதான் சம்பந்தம்

இருக்க முடியும்? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடும் கதையாக இல்லையா இருக்கிறது? அடக்கடவுளே நாளை வெள்ளிக் கிழமை கோகிலா சாயந்திர பூஜையில் வாக்காடுவாள். சாமி வாக்கு கேட்டாலாவது என்ன ஏதென்று தெரியுமா? என்று யோசித்தாள். ஒன்றும் புரியவில்லை. மாரியம்மன் கோயில் இருந்த திக்கில் திரும்பி தாயே அவருக்கு சரியாயிடுச்சின்னா இந்த வருஷம் நோம்பியப்ப பால் கொடம் எடுத்துப் பொங்க வைக்கிறேன் என்று நெஞ்சில் கை வைத்து வேண்டிக் கொண்டாள்.

வீட்டுக்கு வந்து திருநீறை கோபிக்குப் பூசிவிட்டாள். யாரோ ஒருத்தர் அவன் கையைப் பிடித்து நெற்றியில் வைத்து கும்பிட்டுக் கொண்டிருந்தார். "உங்களப் பாத்தா மனப் பாரமெல்லாம் குறையுது தம்பி. இப்பேர்ப்பட்ட நிலமை தவமா தவமிருக்கறவங்களுக்குக் கூட வாய்க்கறதில்ல உங்களுக்கு வாய்ச்சிருக்கு இதெல்லாம் ஒரு குடுப்பிணை போன ஜென்மத்து விட்ட குறை தொட்ட குறை". அம்மா என்று சுமதியின் பக்கம் திரும்பிக் கையைத் தலைக்கு மேல் தூக்கிக் கும்பிட்டார். "பத்திரமா பாத்துக்குங்க புண்ணியவதி நீங்க" என்று கண்ணத்தில் போட்டுக் கொண்டார். இது எந்த ஊரு கிறுக்கோ தெரியவில்லை என்று நினைத்துக் கொண்டாள். கோபி கண்கள் கலங்க அவரை வணங்கினான். "என்ன திரும்பவும் அழுவாச்சியா கடவுளே கேவலமா இருக்குது. முதல்ல நாளைக்கி யாரும் உங்கள வந்துப் பாக்கக் கூடாதுன்னு சொல்றேன். ஒருத்தன் கொஞ்சம் இளிச்ச மாதிரி தெரிஞ்சிடக் கூடாதே உடனே வந்துருவாங்களே" என்று சத்தம் போட்டாள்.

"ஜனங்களப் பாக்காம என்னால இருக்க முடியாது சுமதி. நீ யாரையும் பாக்க வரவேண்டாம்னா நான் அவங்களத் தேடிப் போயிருவேன்". "அய்யா சாமி வேண்டாம்பா. இங்கியே இருங்க எவன் வேணாலும் வந்து பாத்துட்டுப் போயித் தொலையட்டும் சீக்கிரமே இதுக்கெல்லாம் ஒரு வழி பண்றேன்."

சூடம் பத்திக்குச்சி சாம்பிராணி வெத்தலை பாக்கு கிள்ளு சரம் தேங்கா பழம் தட்டோடு வெள்ளிக் கிழமை சாயந்திரம கோயில் பூஜைக்குப் போனாள். கோகிலாம்மா இவளைப் பார்த்துப் புன்னகைத்தாள். மடப்பள்ளியில் சின்ன சொப்பில் பச்சரிசி வெந்து கொண்டிருந்தது.

தழுவ சோறு தயாரானதுமே பூசாரி மணியடிக்க ஆரம்பித்தார். கோகிலாவுக்கு உடனே மெரல் வந்துவிட்டது. உஸ் உஸ் சென்று சத்தம் போட்டுக் கொண்டு கைகளைத் தலைக்கு மேலே தூக்கி முறுக்கிக் கொண்டே இருந்தாள். சீக்கரம் போட்றா பூசய என்று நாக்கைக் கடித்தாள். பூசாரி எதையும் கண்டுகொள்ளாமல் மணியாட்டிக் கொண்டே பிள்ளையாருக்கும் நவக்கிரகத்திற்கும் பத்திகுச்சி காட்டிக் கொண்டிருந்தார். சுமதி பயபக்தியோடு தாயே எனக்கு ஒரு வழியக் காட்டு என மனம் உருக வேண்டிக் கொண்டு நின்றாள்.

பூசை முடித்து தீர்த்தம் தெளித்து சுடரைக் கண்ணில் ஒற்றிக் கொண்டு கூட்டம் உக்காருவதற்கு இடம் பார்த்தது. வாக்குக் கேட்க வந்தவர்கள் கோகிலா பக்கம் நகர்ந்தார்கள். முதல் வாக்கு சுமதிக்குத்தான் வந்தது. "பயப்படாத ஒரு சின்ன சோதனை காட்டுனேன். சரி பண்ணிடறேன். தலையில அடிபட்டுதான் புத்தி மாறாட்டமா போயிட்டது. நா உனக்கு சரி பண்ணித் தர்றேன். நீ வந்து கோயிலுக்கு ஒரு வேல் எடுத்து வைய்யி. நாளைக்கி சாயந்திரம் ஆறு மணிக்கி நான் ஒன் வீட்டுக்கு வருவேன். நீ தேங்கா பழம் வச்சி மாவிடிச்சி வச்சி பொங்க வச்சி ரெடியா இரு" என்றது சாமி

வீட்டுக்கு வந்ததும் கோபியிடம் கதை கதையாய் சொன்னாள். "ஏங்க சாமி இல்லன்னு யாரு சொன்னது. எல்லாத்தையும் அப்பிடியே புட்டு புட்டு வச்சது தெரியுமா? நாங்கூட நம்பள ஆனா சாமியே சொன்னது தெரியுமா? தலையில அடிபட்டுதான் உங்களுக்கு இந்த மாறி ஆயிடுச்சாம். நாளைக்கி சாமி இங்க வந்து உங்கள சரி பண்ணி பழைய மாறி பண்ணிக் காட்டறேன்னு சொல்லிச்சிங்க" என்று விழிகள் விரிய சொல்லிவிட்டு "ஆத்தா அப்படி மட்டும் பண்ணிட்டினா நீ கேட்டமாறியே ஓங்கோயிலுக்கு ஒரு வேலு எடுத்து வச்சிர்றேன் தாயி" என்று தெற்கே பார்த்துக் கண்ணத்தில் போட்டுக் கொண்டாள்.

மோடமாய் இருந்தது. சனி மோடம் போட்டால் ஒருவாரத்திற்கும் இப்படியேதான் இருக்கும் என்று சொல்லுவார்கள். பரவாயில்ல இருக்கற வேலைக்கி இன்னும் வெய்யிலும் அடிச்சிகிட்டிருந்தா கஷ்டம்தான் எல்லாம் அந்த மாரியாயோட மகிம என்று நினைத்தவளாய் சுமதி வீட்டைத் துடைத்தாள். துணிகளை அளசிப் போட்டாள். மாவிடித்து பொங்கல் வைத்தாள். காலையில் இருந்து ஒரு நிமிசம் நிக்க நேரமில்லை. "இப்பதான் விடிஞ்ச மாதிரி இருக்குது அதுக்குள்ள மணி அஞ்சி ஆயிடுச்சா" என்று வாயைப் பிளந்தாள். அவன் இதற்கும் தனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்பது போல இருந்தான். அவனைப் பார்க்க ஒருத்தர் மாற்றி ஒருத்தர் வந்து கொண்டே இருந்தனர். வாங்கடி வாங்க இன்னைக்கி ஒண்ணுதானே நாளைக்கி பாரு அவனவன் வேட்டிய இறுக்கிக் கட்டிகிட்டுப் போறத என்று நினைத்துக் கொண்டாள். "ஐயா சாமி உங்க அருள் வாக்கக் கொஞ்ச நேரம் நிறுத்திகிட்டு கைகாலக் கழுவிகிட்டு வந்து ரெடியா இருங்க சாமியாடியம்மா வருவாங்க அவங்க என்ன சொல்றாங்களோ அதுபடி கேட்டு நடங்க தெரியுதா போங்க" என்றாள். அவன் சிரித்துக் கொண்டே போய் கைகால் கழுவிக் கொண்டு வந்தான்.

இடுப்பில் வெள்ளை வேட்டி மீது துண்டைக் கட்டிக் கொண்டு நிற்பதற்கும் வெளியே சத்தம் கேட்பதற்கும் சரியாய் இருந்தது "பூசய ஆரம்பி பூசய ஆரம்பி" என்று சன்னமாய் சொல்லிக்கொண்டே கைகளைத் தலைக்குமேல் கோத்துக்

கொண்டு நின்றாள் கோகிலா. கோபி மெலிதாக சிரித்துக் கொண்டு இரண்டு பேரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான். சுமதி கும்பிட்டு உள்ள வாங்க என்றாள். தெருக்காரர்கள் எல்லாம் வரலாமா வேண்டாமா என்று யோசித்துக் கொண்டு வீதியிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். சுமதி ஓடிப் போய் மரக் கேட்டை இழுத்து சாத்திவிட்டு வந்தாள்.

சுமதிக்கு உடலில் மெல்ல ஒரு நடுக்கம் ஓடிக்கொண்டிருந்தது. பதட்டத்தோடே பத்திக்குச்சி கொளுத்தி வைத்து பூசையென்று என்னவோ செய்தாள். இதற்கு வேறு சாமி கோவித்துக் கொள்ளுமோ என்று நினைத்து மேலும் பதட்டமடைந்தாள். ஆனால் சாமி எதையும் கண்டு கொள்ளவில்லை.


தீபாராதனை முடிந்ததும். "உம்புருசன கிழக்க பாத்த மாதிரி செவுத்தோரமா உக்கார வெய்யி" என்றது சாமி. சுமதி கோபியைப் பார்த்தாள். கோபி போய் சுவற்றோரமாக சம்மணங்கால் போட்டு உட்கார்ந்துகொண்டான்.

"நீ போய் அவன் தலையப் பிடிச்சி பின்னாடி சுவத்தில மூணு தடவ மோது" என்றது. சுமதிக்குக் கைகள் வெளிப்படையாக நடுங்கின. பல்லைக் கடித்துக் கொண்டு போய் கோபியின் தலையை இரண்டு கைகளாலும் பற்றினாள். அவன் சிரித்துக கொண்டே "எதுக்கு சுமதி இப்படிப் பயப்படற சாமிதான" என்றான். அவள் கொஞ்சம் தெம்பு வந்தவளாய் அவன் தலையை மெல்ல சுவற்றில் மூன்று முறை தட்டினாள். அவன் கண்களை மூடி எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே உட்கார்ந்திருந்தான். சுமதி எழுந்து நின்று கைகூப்பியபடி கோகிலாவைப் பார்த்தாள். கோகிலா திடீரென்று மிகவும் ஆவேசம் வந்தவளாய் நாக்கைக் கடித்துக் கொண்டு துள்ளிக் குதித்தாள். கோபியைப் பார்த்துத் திபு திபுவென ஓடி வந்தாள். சுமதியின் கண்கள் பயத்தில் தாமே மூடிக்கொண்டன. டொம் டொம்மென்று திடுக்கிட வைக்கும் சத்தம் தொடர்ந்து கேட்டது. என்னாவய் இருக்கும் என்று தெரியவில்லை. என்னவாயும் இருந்துவிட்டுப் போகட்டும் என்று அவள் கண்களை இறுக்கி மூடிக்கொண்டாள். ஒன்றிரண்டு நிமிடங்கள் எதுவுமே சத்தம் இல்லை. சுமதிக்கு ஒன்றும் புரியவில்லை. மெல்லக் கண்ணைத் திறந்தாள்.

கோபி கீழே சரிந்துகிடந்தான். சுவறெல்லாம் தரையெல்லாம் திட்டுத் திட்டாய் ஒரே ரத்தமாய் இருந்தது. கோகிலா ரத்தத்தை மிதித்தபடி மெல்லியதாய் இன்னும் சாமியாடிக் கொண்டிருந்தாள். அவள் முகத்தில் அந்தப் புன்னகை கொஞ்சம் கூட மாறாமல் இருந்தது.

கண்டராதித்தன்

சாவைத் தள்ளும் சிறுமி



தாளை வேகமாகத்
தள்ளிக் கொண்டிருந்த
சிறுமியிடம் கொஞ்சம்
மெதுவாகத்
தள்ளக்கூடாதா என்றேன்
ஏன் நாளைத்
தள்ளுவது போல
இருக்கிறதா என்கிறாள்

நாளைத் தள்ளுவது
போலிருந்தால்
உங்களுக்காக ஒருமுறை
நிறுத்தட்டுமா என்கிறாள்
என்ன
நிறுத்தச் சொல்லட்டுமா

நாளிற்கும்
தாளிற்குமிடையில்
சிந்தும் மலர்களை
நேரடியாக உங்கள்
சவக்குழியின் மீது
விழுவது போன்ற ஏற்பாடு
அது என்னுடையது.

பந்துக்கள் இல்லாதவன்

ஊரூராய்
ரப்பர் பந்தை
விற்கும் வியாபாரியிடம்
கூந்தலை வடிவுடன்
முடிந்த பெண்
தன் பிள்ளைக்கு
இனாமாக ஒரு பந்தைத்
தருவாயா எனக்கேட்பாள்
அந்தரத்திற்கும்
அந்தரத்திற்குமாய்
பட்டு எகிறும்
பந்தைக் கொடுத்து
எப்போதும்
இந்த உலகம் அழகானது
என்ற பாடலைப்பாடி
அந்த ஊரையும்
பந்துகளோடு கடப்பான்.



அந்த அன்பு என்னுடையதல்ல

வெள்ளை நிறத்தில்
நெஞ்சோடு
நான் சேமித்த
இந்த
அன்பையெல்லாம்
யாரோ யாருக்காகவோ
பறித்துக் கொண்டே
இருக்கிறார்கள்.

தும்பையை
மாலையாகத் தொடுப்பது
நன்றல்ல எனவே
அதன் வெண்மையை
பரிசளிப்பதாகச் சொன்னான்
அந்த அன்பைத்தான்
பழகிய தோள்கள் அனைத்திற்கும்
சூட்டிக் கொண்டிருக்கிறேன்.

வருவோர் போவோரெல்லாம்
வைத்துவிட்டுச் சென்றதுதான்
தாராளமாக
எடுத்துக் கொள்ளுங்கள்
நிறைய இருக்கிறது.

பெருத்த மார்புகளையுடைய ஆணின் கதை

கார்த்திகைப்பாண்டியன்



1

வாழ்நாளில் முதல் முறையாக விடுதியில் அறை எடுத்துத் தங்கியிருந்தான் திருக்குமரன். அவனுக்கு அத்தனை பரிச்சயமில்லாத ஊரில் பேருந்து நிலையத்தின் அருகாமையிலிருந்த விடுதியில் அறை எடுத்துக் கொண்டான். குளிரூட்டப்பட்ட அறை நல்ல விசாலமாக இருந்தது. இரண்டு மெத்தைகளை இணைத்து அதன் மேல் வெண்மையான பெட்ஷீட்டை விரித்திருந்தார்கள். படுக்கையை ஒட்டி சின்னதாக ஒரு டேபிள். அதன் மேல் ஆஷ்ட்ரே. தான் கொண்டு வந்திருந்த பெட்டியை டேபிளின் மீது வைத்துவிட்டு குளியலறைக்குள் நுழைந்தான். கழிவறைக்கோப்பை சுத்தமாக இருந்தது. கண்ணாடித் தடுப்புக்கு அந்தப் பக்கமாக ஷவருடன் கூடிய குளிக்கும் அறை. மேலே தொங்கும் டர்க்கி டவல். நகர்ந்து வந்து கண்ணாடியின் முன்னால் நின்றான். கிட்டத்தட்ட கண்ணாடியின் மொத்தப் பரப்பையும் அவனது உடல் நிறைத்திருந்தது. சீரற்ற வகையில் பொருட்களை இட்டு நிரப்பிய சாக்குப்பையினைப் போல அங்கங்கே பிதுங்கி நிற்கும் பருத்த உடல். எடைக்கற்களால் கட்டி இழுத்தது போல மார்புகள் உடலிலிருந்து தனித்து இருபுறமும் தொங்கிக் கொண்டிருந்தன. அவனுக்குள் ஆத்திரம் பொங்க ஏன் என்ற கேள்வி மூளைக்குள் சுழன்றடித்தது. சத்தமாகக் காறி

உமிழ்ந்தான். கண்ணாடியின் மீது தெறித்த எச்சில் வரைபடத்தின் நதி போல நடமேற்படுத்திக் கொண்டே வழிந்து கீழிறங்கியது. எத்தனை பணமிருந்தும் என்ன பிரயோஜனம். ஒரு கணம் கண்ணாடியை ஓங்கிக் குத்தி உடைத்து விடலாமா எனத் தோன்றியது. வேண்டாம். வெறுப்பை இதனிடம் காட்டக் கூடாது. எனக்கு ஒரு பெண் வேண்டும். அவள் யாராயிருந்தாலும் வரட்டும். என் கோபம் வெறி அத்தனையும் அவள் மேல் தீர்த்துக் கொள்வேன். உனக்கெல்லாம் திருமணம் செய்யும் ஆசை எதற்கு என நேரடியாகக் கேட்டவளின் முகம் நினைவுகளில் இடறியது. அவள் ஒருவள் வெளிப்படையாகப் பேசினாள். மற்றவர்கள் பேசாவிட்டாலும் அவர்களும் தங்கள் பார்வையால் இதைத்தான் உணர்த்திப் போனார்கள். அவன் முற்றிலுமாய் உடைந்து போனான். கார்காலத்திற்காக எறும்புகள் சிறுகச்சிறுக சேமிக்கும் தானியத்தைப் போல பால்யத்திலிருந்து தன் காதலிக்கான அன்பை அவன் சேமித்திருந்தான். ஆனால் அவளைத் தேடிக் கண்டடைவதில் அவன் தோற்றிருந்தான். அவனை நேரில் பார்த்த மறுகணம் பெண்களின் முகத்தில் உண்டாகும் அதிர்ச்சியும் ஏமாற்றமும் அவனால் தாங்கவியலாததாக இருந்தது. தன்னை முற்றிலுமாய்த் தோற்கடித்த பெண்களைப் பழிவாங்க வேண்டுமென உறுதி கொண்டவன் அதற்காகவே இந்த நகரத்தை வந்தடைந்தான். பெண்களை அமைத்துத் தரும் ஆள் ஒருவனிடம் தனது தேவையை சொல்லிவிட்டு காத்திருக்கத் தொடங்கினான்.

2

பரந்த பாலைவனத்தின் நடுவே அவள் அமர்ந்திருக்கிறாள். அவளை உற்று நோக்கியபடியே முன்பாக நின்றிருக்கிறது ஒரு கழுகு. அதன் முகம் அவளுக்கு வெகு பரிச்சயமானதொரு சாயலைக் கொண்டிருக்கிறது. அதன் கண்களுக்குள் கூர்ந்து பார்க்கிறாள். இப்போது கழுகின் முகம் அவளுக்கு மெல்ல மெல்ல புலப்பட ஆரம்பிக்கிறது. அது அவளது குழந்தையின் முகத்தினுடைய சாயலில் இருக்கிறது. அவள் அதனிடம் ஏதோ சொல்ல ஆசைப்படுகிறாள். ஆனால் வார்த்தைகள் உதடுகளிலிருந்து வெளியேற மறுக்கின்றன. அவள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே தனதிரு நீண்ட இறக்கைகளையும் திசைகளை அளக்கும்படியாக கழுகு விரிக்கிறது. கண்களில் அச்சம் பொங்க அவள் வேண்டாம் என்பதாய்த் தலையசைக்கிறாள். அவளது குறிப்புகளை உணராமல் கழுகு வானேறி பறக்கத் துவங்குகிறது பிரகாசிக்கும் ஆரஞ்சு நிறப் பந்தை நோக்கி. தகிக்கும் வெப்பம் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரிக்க சூரியனை நெருங்கி வரும் கழுகின் சிறகுகள் மெழுகைப் போல உருக ஆரம்பிக்கின்றன. தரையிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பவள் செய்வது ஏதுமறியாது துடிக்கிறாள். சிறகுகள் மொத்தமும் உருகிவிட பறக்க முடியாமல்

கழுகு தரையை நோக்கி விழுகிறது. இவள் ஓடிச்சென்று அந்த சதைக்குவியலைத் தன் மடியில் ஏந்திக் கொள்கிறாள். கழுகின் முகம் இப்போது முழுமையாக குழந்தையின் முகமாக மாறியிருக்கிறது. மீறிடும் துயரத்துடன் அவள் கதறியழ ஆரம்பிக்கிறாள்.

லதாரஞ்சனி திடுக்கிட்டு விழித்துக்கொண்டாள். மனதுக்கு படபடப்பாக இருக்க சுற்றுமுற்றும் பார்த்தாள். முழுதாய் இருட்டின் ஆக்கிரமிப்பு. தான் எங்கிருக்கிறோம் என்பது அவளுக்கு சட்டென்று புலப்படவில்லை. குழப்பத்தில் கைகளைத் தலையின் மீது வைத்துக்கொண்டாள். சொதசொதவென வியர்த்திருக்க பின்னங்கழுத்திலும் ஈரமாக இருந்தது. சேலைத்தலைப்பினை எடுத்து துடைத்துக் கொண்டே தன்னிலைக்கு வர முயற்சி செய்தாள். இப்போது இருள் ஓரளவுக்கு கண்களுக்குப் பழகி இருந்தது. தனக்குப் பரிச்சயமான தனதறையில் தான் இருக்கிறோம் என்பதை உணர்ந்து கொண்டாள். மனதுக்கு ஆசுவாசமாய் இருந்தது. தான் சட்டென்று விழிக்கும்படியாக தொந்தரவு செய்தது என்ன என்று யோசித்தபோது கனவின் ஞாபகம் வந்தது. மீண்டும் அதனை யோசிக்க விரும்பாதவளாகத் தலையை வேகமாக சிலுப்பிக் கொண்டாள். முன்பெல்லாம் கனவுகள் வந்தாலும் விழிப்பு வந்தபின் அவை மறந்து போகும். ஆனால் சில நாட்களாகவே அவளுக்கு வரும் தீங்கனவுகள் எழுந்த பின்னும் நினைவில் இருக்கின்றன. அவளை நிம்மதியாக இருக்கவிடாமல் தொல்லை செய்கின்றன. அந்தக் கனவுகள் அனைத்தும் அவளுடைய குழந்தை சார்ந்ததாகவே இருப்பது அவளை இன்னும் அதிகமாக பாதித்தது.

தலையை உயர்த்தி சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தாள். கரடியின் வயிற்றிலிருந்த ரேடியம் முட்கள் மணி ஏழாவதைச் சொன்னது. மெதுவாக எழுந்து விளக்குக்கான ஸ்விட்சைப் போட்டாள். பிறகும் இருட்டாகவே இருந்தது. மின்சாரம் இல்லாது போயிருக்கலாம். ஜன்னலைத் திறக்கலாமா என யோசித்தவள் பிறகு வேண்டாம் என்பதாக முடிவு செய்தாள். வாகனங்கள் ரோட்டில் போகும் சத்தம் கேட்டால் குழந்தை தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்வாள். அதோடு சத்தத்தைக் கேட்டால் தனக்கும் தலைவலி வரும் என சமாதானம் சொல்லிக் கொண்டாள். இருள் இப்போது முழுதாய் கண்களுக்குப் பழகியிருக்க சமையலறைக்குள் சென்று மெழுகுவர்த்தியை எடுத்து வந்தாள். தீப்பெட்டிக்குள் இரண்டு குச்சிகள் மட்டுமே இருந்தன. ஒன்றைப் பொருத்தி மெழுகுதிரியை ஏற்றினாள். மங்கலான மஞ்சள் நிற வெளிச்சம் அறையை நிறைக்க சுவரோரமாகச் சென்று சாய்ந்து அமர்ந்து கொண்டாள்.

வீடு என்று சொல்ல முடியாத சற்றே பெரிய

அறைக்குள்தான் லதாரஞ்சனியின் மொத்தப் புழக்கமும். அதன் ஒரு ஓரத்தை தடுப்புச் சுவர் கொண்டு சின்னதாகப் பிரித்து சமையலறையாக்கி இருந்தாள். வெகு குறைவான பாத்திரங்கள் அதற்குள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. மீதமிருந்த அறையிலும் சொல்லிக் கொள்ளும்படியாக ஏதுமில்லை. ஒரு பெரிய பெட்டி., துணிகள் வைக்க. அவளுடையதும் குழந்தையினுடையதும். சுவரின் வலது பக்கம் ஆணியடித்து மாட்டப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடி. அதனைச் சுற்றி சின்ன சின்ன சாந்துப்பொட்டுகள் ஒட்டியிருந்தன. சிலாபில் கொஞ்சமாய் அலங்கார சாதனங்கள், தினசரி உடுமாத்துக்கான துணிகள். கிட்டத்தட்ட எல்லாவற்றிலும் நூலாம்படை படர்ந்திருந்தது சில நாட்களாகவே அவள் எதையும் பயன்படுத்துவதில்லை என்பதைச் சொல்லிப் போனது.

உள்ளே வரும் கதவிலிருந்து சற்று உள்வாங்கியிருந்த இடத்தில் அறையின் இடது ஓரமாக உத்தரத்தில் இருந்த கம்பியில் தொட்டில் கட்டிப் போட்டிருந்தாள். எழுந்து சென்று மெலிதாக ஆடிக்கொண்டிருந்த தொட்டிலுக்குள் எட்டிப் பார்த்தாள். யாரையோ கொன்னு சொல்வதுபோல இடது கையின் ஆட்காட்டி விரல் மட்டும் நீட்டிக் கொண்டிருக்க குழந்தை அசந்து தூங்கிக் கொண்டிருந்தது. சிரித்துக் கொண்டாள். சேட்டைக் கழுதை. இவளை நல்லபடியாக வளர்க்க முடிந்தால் போதும். இப்படி நினைத்தவுடன் அவளது சிரிப்பு அழுகையாக மாறியது. காற்றிலாடிய தொட்டிலை கட்டிப்பிடித்துக் கொண்டாள். ஏன் எனக்கு மட்டும் இப்படி நடக்க வேண்டும். வாழ்க்கையின் ஒரே பிடிமானத்தையும் பறிகொடுத்துவிட்டு பைத்தியம் பிடித்தவளாய் அலைவதுதான் என் தலையெழுத்தா. அவளை மீறி அழுகை பெரும் சப்தத்துடன் வெடித்தது. சட்டென்று தன் கைகளால் வாயை மூடிக் கொண்டாள். சப்தம் கேட்டால் குழந்தை எழுந்து கொள்வாள். வாயை மூடியபடியே அங்கிருந்து நகர்ந்தாள்.

வெளியே சென்று வெகுநாட்கள் ஆகிவிட்டது அவள் நினைவுக்கு வந்தது. எல்லாவற்றுக்கும் ஒரு முடிவு வந்துதான் தீரும். இன்று கண்டிப்பாக போய் வர வேண்டும். தனக்குள் சொல்லியபடியே எழுந்து கொண்டாள். குளிக்க வேண்டும் போல் இருந்தது. அறையின் ஓரமாகக் கிடந்த வாளியையும் டப்பாவையும் எடுத்துக் கொண்டு கதவைத் திறந்தாள். மெலிதான சத்தத்தோடு அது திறந்து கொண்டது. இவள் வெளியே வருவதற்கும் மின்சாரம் இல்லாமல் வாசலில் உட்கார்ந்து கதை பேசிக் கொண்டிருந்த பெண்களனைவரின் பார்வையும் இவள் மேல் ஒரே நேரத்தில் திரும்புவதற்கும் மிகச்சரியாக இருந்தது. எங்கிருந்து வந்ததெனத் தெரியாமல் வந்த மௌனம் சட்டென்று அனைவரையும் அணைத்துக் கொண்டது. தன்னை ஏன் இவர்கள் விசித்திரமாகப் பார்க்கிறார்கள் என யோசித்தபடியே அவர்களைக் கடந்து சென்று

குளியலைறைக்குள் நுழைந்தாள். கதவைத் தாழிட்டபின்னும் வெளியே இருக்கும் பெண்கள் கிசுகிசுக்கும் குரலில் தன்னைப் பற்றித்தான் பேசிக் கொண்டிருப்பார்கள் எனத் தோன்றியது. குழாயைத் திறந்து விட்டாள்.

வாளிக்குள் விழுந்த சில்லென்ற தண்ணீர் மேலே தெறித்து உடம்பு கூசியது. வேக வேகமாக ஒரு டப்பா தண்ணீரை எடுத்து ஊற்றினாள். உஷ்ணமனைத்தும் வெளியேறுவதாய்த் தோன்ற சோப்பை எடுத்து உடம்பில் தேய்க்கத் தொடங்கினாள். முகத்திலிருந்து கீழிறங்கிய கை மார்பு மேடுகளில் வந்து நின்றது. பால் கட்டிக்கொண்டு கல் போல கெட்டித்துப் போயிருந்தன மார்புகள். இப்போதுதான் அவள் வலியை உணர்ந்தாள். மெல்ல தன் கைகளால் வலது மார்பினை அழுத்தினாள். காம்பிலிருந்து சிறு துளியாய் பால் வழிந்தது. உயிர் போவதான வலி. உடலில் வழிந்த நீரோடு பால்த்துளிகளும் கலந்தன. பொங்கும் அழுகையோடு மேலும் மேலும் அழுத்தத் தொடங்கினாள். பிஞ்சுக்கரங்கள் மாரைப் பற்றியிருக்க ஈர உதடுகள் அவள் மார்பை முட்டி உறிஞ்சின. நெஞ்சின் வலி குறையும்வரை இரு மார்புகளையும் அழுத்தி பாலை வெளியேற்ற ஓரளவு வலி குறைந்தது போலிருந்தது. வாளியில் இருந்து மீண்டும் தண்ணீரை அள்ளி உடம்பில் ஊற்றிக் கொண்டாள். குளித்து முடித்து நிமிர்கையில் கதவின் இடுக்கின் வழியே நிலா தெரிந்தது. சின்னதொரு இடைவெளிக்குப் பிறகு தான் பார்க்கிற நிலவின் வெளிச்சம். குழந்தைக்கு நிலாவைக் காட்டி கதை சொல்ல வேண்டும் என பிரியப்பட்டது நினைவுக்கு வந்தது. தேவை இல்லாதவற்றை எல்லாம் மறக்க முடிந்தால் வாழ்க்கை எத்தனை நன்றாக இருக்கும். அங்கேயே நின்று கொண்டிருக்க விரும்பாமல் குளியலறையில் இருந்து வெளியேறி தனது வீட்டை நோக்கி நடந்தாள்.

குழந்தை இன்னும் தூங்கிக் கொண்டிருந்தாள். தான் வெளியே சென்று திரும்பும்வரை அவள் தூங்கிக் கொண்டிருக்க வேண்டும். நடுவில் எழுந்து கொண்டு விடக்கூடாது. என்ன செய்யலாம் என யோசித்தவளுக்கு இருமல் மருந்தின் ஞாபகம் வந்தது. சிலாபின் மேல்தட்டில் கைகளை நுழைத்துத் துழாவ அந்த நீலநிற மருந்து பாட்டில் அகப்பட்டது. எடுத்துக் கொண்டு தொட்டிலினருகே வந்தாள். வர வர இது ரொம்ப அதிகமாகத் தூங்குகிறது. என்னை முழித்து பார்ப்பது கூடக் கிடையாது. அவளுக்குக் கோபமாக வந்தது. ஆனால் சட்டென்று தன்னைத்தானே சமாதானம் செய்து கொண்டாள். சின்னப்பிள்ளை. அதற்கென்ன தெரியும் பாவம். தொட்டிலுக்குள் கைகளை நீட்டித் தூக்கி மடியில் கிடத்தியவள் மருந்து சீசாவின் மூடியைத் திறந்து தனது வாய்க்குள் சரித்துக் கொண்டாள்.

குழந்தையின் வாயை சேலையின் முந்தனையால் துடைத்தாள். இனி பிரச்சினை இல்லை. குழந்தை நான் திரும்பி வரும்வரை தூங்குவாள். அவளுக்கு சமாதானமாக இருந்தது. குழந்தையைத் தூக்கி மீண்டும் தொட்டிலுக்குள் போட்டாள். அங்கிருந்து நகர்ந்து கண்ணாடி முன்பாக வந்தாள். மெலிதாகத் தன்னை அலங்காரம் செய்து கொண்டாள். வெளியேறும் முன்பாக மீண்டுமொரு முறை தொட்டிலை எட்டிப் பார்த்துக் கொண்டாள். கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்பி அவள் வெளியேறிப் போவதை அருகாமை வீடுகளில் இருந்தவர்கள் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தனர்

3

மற்ற பையன்களைப் போலல்லாது தனது மார்புகள் பெரிதாயிருப்பதை திருக்குமரன் தெரிந்து கொண்டபோது அவனுக்கு பத்து வயதுதான் ஆகியிருந்தது. பள்ளியில கூடப்படிக்கும் மாணவர்களோடு சேர்ந்து கன்னியாகுமரிக்கு போயிருந்தான். சுற்றுலாவின் ஒரு பகுதியாக அனைவரும் திற்பரப்பு நீர்வீழ்ச்சிக்கும் போயிருந்தார்கள். ஆண்கள் குளிப்பதற்காக ஒதுக்கியிருந்த பகுதியில் பையன்கள் எல்லாரும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். திருக்குமரன் தன் உடைகளைக் களைந்து விட்டு அருவிக்குள் இறங்கினான். அப்போது அருகிலிருந்த மாரி தான் இவனுடைய உடம்பை பார்த்து விட்டுக் கதறினான். “இங்க பாருங்கடா.. இவனுக்கு நெஞ்சு பொம்பளப்புள்ள மாதிரி பெரிசா இருக்கு..” மற்ற பையன்களும் சேர்ந்து கொண்டு அவனைக் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள். திருக்குமரனுக்கு அசிங்கமாகப் போனது. இதுநாள் வரை அவன் தனது மார்புகள் பெரிதாயிருப்பதை உணர்ந்திருக்கவில்லை. இப்போது அவர்கள் சொன்ன பின்புதான் கவனித்தான். மற்ற பையன்களின் மார்புகள் தட்டையாய் வழிந்திருக்க இரண்டு மாங்கொட்டைகளை உள்ளே வைத்துத் தைத்த பை போல அவனுடைய மார்புகள் மட்டும் வித்தியாசமாகத் தெரிந்தன. விசயம் பெண் பிள்ளைகளிடமும் பரவியிட இவனைப் பார்க்கும் போதெல்லாம் அவர்கள் தங்களுக்குள் குசுகுசுவெனப் பேசி சிரித்துக் கொண்டார்கள். சுற்றுலாவிலிருந்து திரும்பி வந்த மறுநாள் பள்ளிக்குப் போக மறுத்து விட்டான். அதன்பிறகு அவனது அப்பா கெஞ்சிக் கூத்தாடி அவனை பள்ளியில் கொண்டுபோய் விட்டு வந்தார். இவன் சமாதானமாகாமல் அடம்பிடித்து மருத்துவரிடம் சென்று பார்த்தபோது அவரும் இதில் கவலைப்பட ஒன்றுமில்லை எனச் சொல்லிவிட ஊதிப்பெருத்த மார்புகள் குறித்த கவலைகள் அவனது நினைவுகளை முழுதாய் அபகரித்துக் கொண்டன.

குமரனின் வகுப்பில் படிப்பவர்களில் அசோக்தான் பெரியவன். நல்ல உயரம். அடர்த்தியான கருப்பு நிறம். பார்க்கும் யாருக்கும் அவன் பெரிய ஆம்பிளை என்றுதான் எண்ணத்

தோன்றும். உண்மையில் எட்டாம் வகுப்பு படிக்க வேண்டியவன். ஆனால் மூன்று முறை வெவ்வேறு வகுப்புகளில் பெயிலாகி இவர்களோடு ஐந்தாம் வகுப்பு படித்து வந்தான். வகுப்பில் எப்போதும் கடைசி பெஞ்சில் உட்காருபவன். எதற்காகவும் யாரோடும் ஒத்துப்போகாதவன். அவன் வைத்ததுதான் வகுப்பில் சட்டம் என்பதான நிலை. கேள்வியேதும் கேட்டால் தங்களை அடித்து விடுவான் என்று மாணவர்கள் எல்லோருக்கும் அவனைக் கண்டால் பயம். ஆசிரியர்களுக்கும் அவனைக் கண்டால் எரிச்சல்தான் வரும். ஆனால் அந்தச் சுற்றுலாவிற்குப் பிறகு தானாக குமரனோடு நெருங்கி வந்து பழகத் தொடங்கியிருந்தான். இத்தனை நாட்களாய் தன்னை யாரென்று கூட கண்டு கொள்ளாத ஒருவன் சட்டென்று தன்னோடு நட்பாக விரும்புவது குமரனுக்கும் புரியாத ஒன்றாகத்தான் இருந்தது. ஆனால் மற்ற பையன்கள் தன்னைக் கிண்டல் செய்யாதிருக்க வேண்டுமென்றால் அசோக் தன்னோடு இருப்பது தான் நல்லது என்பதை உணர்ந்து கொண்டான். வகுப்பில் அவனுடைய இடமும் கடைசி பெஞ்சுக்கு மாறியது.

மாரியம்மாள் மிஸ்ஸின் அறிவியல் வகுப்பு நடந்து கொண்டிருந்தது. குமரனுக்குப் பிடித்த வெகு சில ஆசிரியர்களில் ஒருவர். இவன் ஆர்வமாகப் பாடம் கவனித்துக் கொண்டிருந்தபோதுதான் அந்த சத்தம் கேட்டது. என்னவென்று மெதுவாகத் திரும்பிப் பார்த்தான். அருகில் அமர்ந்திருந்த அசோக மெதுவாக இவனைப் பார்த்துச் சிரித்தபடி தனது கால்சராயின் ஜிப்பைக் கழற்றிக் கொண்டிருந்தான். எதற்காக இவன் ஜிப்பைக் கழற்றுகிறான்? இங்கேயே எதுவும் ஒண்ணுக்கு இருக்கப் போகிறானோ? குமரன் குழப்பமாய் பார்த்துக் கொண்டிருக்க அசோக் தனது கருத்த நீண்ட குறியை வெளியே எடுத்து அதனைத் தடவிக் கொடுக்க ஆரம்பித்திருந்தான். குமரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. தனது குறி எப்போதும் நொய்ந்து கிடக்க எப்படி இவனது குறி மட்டும் இப்படி விரைப்பாய் நிற்கிறது? அவன் கண்கள் மெலிதாகக் கிறங்கிக் கிடக்க தனது குறியை வேகமாக அசைத்துக் கொண்டிருந்தான். பயத்தோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தவனை மிஸ்ஸின் குரல் கலைத்தது. "திருக்குமரன்.. இங்க பாடத்தை கவனிக்காம அங்க என்ன பார்த்துக்கிட்டிருக்க." எதிர்பாராது அகப்பட்டுக் கொண்ட திருடனைப் போல எழுந்து நின்றவன் வாயில் வந்ததை சொல்லி சமாளித்து விட்டு அமர்ந்தான். திரும்பிப் பார்த்தபோது அசோக் இவனையே பார்த்து சிரித்துக் கொண்டிருந்தான்.

அன்று மாலை வகுப்புகள் முடிந்த பிறகு அசோக் இவனைக் கூட்டிக் கொண்டு பள்ளியின் பின்புறம் போனான். யாரும் பயன்படுத்தாத சாமான்களைப் போட்டு வைத்திருக்கும்

அறை. இப்படியொரு இடம் பள்ளிக்குள் இருப்பதே குமரனுக்கு இப்போதுதான் தெரியும். மனதுக்குள் மெலிதாய் முளைக்க ஆரம்பித்திருந்த பயத்தோடு உள்ளே நுழைந்தான். மூத்திர நாற்றம் வீசிய அறைக்குள் காலின் ஷூக்களுக்கு அடியில் உடைந்த கண்ணாடிச் சில்லுகள் நொறுங்கின. முகத்தைச் சுழித்தபடி இருட்டுக்குள் தட்டுத் தடுமாறி நடந்து போனான். அங்கே ஏற்கனவே மூன்று பேர் இருப்பது புலப்பட்டது. பெரிய வகுப்பில் படிக்கும் பையன்கள். அவர்கள் எல்லோரும் அசோக்கின் நண்பர்கள் என்பதை இவன் புரிந்து கொண்டான். "நான் சொல்லல.. நம்ம பிரெண்டு.. இவந்தாண்டா.." அசோக் சொல்ல அவர்கள் இவனைப் பார்த்து சிரித்தார்கள். இவனுக்குக் குழப்பமாக இருந்தது. எதற்காக இங்கே வந்திருக்கிறோம் என்பது தெரியாமல் நின்றிருந்தான். "துணியக் கழட்டுடா.." இவன் நடப்பது எதுவும் புரியாமல் என்ன செய்வதென்கிற குழப்பத்தோடு நிற்க அவர்களில் ஒருவன் இவனை நெருங்கி வந்தான். என்னவென்று உணர்வதற்குள் பளாரென்று கன்னத்தில் அறை விழுந்தது. கண்களுக்குள் பூச்சி பறக்க கன்னத்தைத் தடவியபடியே சட்டையைக் கழட்டினான். அருகில் நின்றிருந்தவன் ஆசையாக இவனது மார்புகளைத் தடவிப்பார்த்தான். "நெஜமாவே சூப்பரா இருக்காண்டா.." சொல்லிக்கொண்டே குமரனைக் கீழே தள்ளினான்.

அவர்களில் இருவர் நெருங்கி வந்து குமரனைத் திருப்பி குப்புறப் போட்டு அவனது உடைகளை உருவினார்கள். அசோக் கீழே கிடந்தவனின் முன்பாக வந்து அமர்ந்து கொண்டான். அவனுடைய முகம் கடுமையாக இறுகியிருந்தது. திமிறி அலற முற்பட்டவனின் வாயைத் தன் கைகளால் பொத்தினான். "சத்தம் போட்ட கொன்றுவேண்டா தாயளி.." பின்னால் நின்றிருந்தவன் தனது ட்ரவுசரைக் கழற்றி குறியை வெளியிலெடுத்துக் கொண்டு கிழே கிடந்தவனின் கால்களின் நடுவே அமர்ந்தான். அவனுடைய கைகள் குமரனுடைய இடுப்பை அணைத்து முன்னேறி அவனது மார்புகளை இறுகப்பற்றின. உயிரையே உறிஞ்சுவதுபோல வலி குமரனின் உடம்பில் பரவியது. பின்னாலிருந்தவன் இவனது குதப்பிளவில் வேகமாக இயங்க ஆரம்பித்தான். வாயினை இறுக்கிய கைகளை மீறி அலறவும் முடியாதவனுடைய கண்களில் கண்ணீர்த்துளிகள் தேங்கி நின்றன. சிறிது நேரத்தில் முதலாமவன் எழுந்து கொள்ள இன்னொருவன் குமரனுடைய கால்களின் நடுவில் அமர்ந்தான்.

மூன்றாவதாய் இருந்தவனும் தனது வேலையை முடித்துக்கொண்டு அசோக்கை பார்த்து இளித்தபடி எழுந்தான். வாயை மூடியிருந்த கைகளைத் தளர்த்திக் கொண்டவன் எழுந்து குமரனின் முன்பாக நின்றான். பேசவும் முடியாமல் வார்த்தைகள்

குழறலாய் வெளிவர தரையில் புரண்டு கொண்டிருந்தவனை நிமிர்த்தினான். குமரன் கண்களில் வலியோடு நிமிர்ந்து பார்த்தான். தன்னைப் போக விடும்படியான இரைஞ்சல் அந்தக்கண்களில் தேங்கி நின்றது. அசோக் அவனைப் பார்த்து விகாரமாக இளித்தான். தன் கைகளை குமரனின் இடுப்பில் நுழைத்து திருப்பிப் படுக்க வைத்தான். அறையின் கூரையை வெறித்த குமரனின் கண்களில் பயம் இன்னும் அதிகமானது. சத்தம் போட முயற்சி செய்தும் வார்த்தைகள் வரவில்லை. அசோக் அவனது இடுப்பில் ஏறி சவுகரியமாக அமர்ந்தான். மற்றவர்கள் இப்போது அவனைப் பார்த்து விசமமாகச் சிரித்தார்கள். அவர்களைப் பார்த்து சிரித்துக்கொண்டே தனது கைகளால் இவனுடைய மார்புகளைக் குவித்துப் பிடித்து அதன் பிளவில் தனது குறியைச் செலுத்தி இயங்க ஆரம்பித்தான். சிறிது நேரத்தில் பிசுபிசுவென எதுவோ வெள்ளையாக தன் மார்பில் கிடப்பதை உணர்ந்தான் திருக்குமரன். வெளியே சொன்னால் அடித்தே கொல்வோம் என்றும் தாங்கள் கூப்பிடும்போதெல்லாம் அவன் வர வேண்டும் எனவும் எச்சரித்த பின் அவர்கள் அங்கிருந்து கிளம்பிப் போனார்கள். நெஞ்சில் தெறிக்கும் வலியோடும் கண்களை முட்டும் கண்ணீரோடும் குமரன் எழுந்தான். அன்றோடு அவன் பள்ளிக்குச் செல்வது நின்று போனது.

எல்லாரிடம் இருந்து தன்னை வேறுபட்டவனாகக் காட்டும், முதுகின் பின்னால் ஏளனச் சிரிப்புகளை உதிர்க்கச் செய்யும் மார்புகளை அவன் முற்றிலுமாய் வெறுக்கத் தொடங்கியிருந்தான். தான் விரும்பாத தனது மார்புகளை உடலில் இருந்து அறுத்தெறிய முடியாதென்பது குமரனைப் பெரிதும் வதைத்தது. அவற்றை நீக்க முடியாதென்றாலும் மார்புகள் பெரிதாகத் தனித்து தெரியாமல் இருக்க என்ன செய்வதென்பதுதான் இப்போது அவனுக்கு முன்பிருந்த மிகப்பெரிய கேள்வியாக இருந்தது. வெகுவாக யோசித்தபின்பு இறுதியாக அந்த முடிவுக்கு வந்தான். நிறைய சாப்பிட்டு ஆள் பெருத்து விட்டால் மார்புகள் பெரிதாயிருப்பது தெரியாது. இப்படியாகத்தான் அவன் சாப்பிடத் தொடங்கினான். கண்ணில் பட்ட எதையும் விடாமல் சாப்பிட்டான். உண்டு பெருத்து சதைக்கோளமென மாறி அவற்றினூடாக மார்புகளைத் தொலைத்து விட வேண்டும் என்பது மட்டுமே அவனது ஒரே எண்ணமாய் மாறிப்போனது. உறங்கும் நேரம் தவிர்த்து எந்நேரமும் எதையாவது சாப்பிட்டுக் கொண்டே இருந்தவனின் உருவம் அவன் நினைத்ததைப் போலவே பருக்கத் தொடங்கியது. காற்றால் நிரம்பும் ஊதற்பையென பெருத்துக் கொண்டே வந்தவன் சில வருடங்களில் வேறொரு ஆளாக மாறிப்போனான்.



4

நாகராஜின் வீட்டுக்குள் நுழைந்தபோது அவளுடைய வருகையை அவன் எதிர்பார்த்திருக்கவில்லை. பிள்ளை இறந்த பத்து நாட்களில் அவள் மீண்டும் தொழிலுக்கு வருவாள் என்பதில் அவன் நம்பிக்கையற்றிருந்தான். ஆனால் அவள் வந்து சேர்ந்ததில் அவனுக்கும் மனதுக்குள் சொல்ல முடியாத மகிழ்ச்சிதான். புதிதாய் வந்தவனொருவன் லாட்ஜில் தங்கியிருப்பதாகக் கேள்விப்பட்டு போய்ப் பார்த்தவன் அதிர்ந்து போனான். நான்கு ஆட்களை ஒன்றாய்ச் சேர்த்து வைத்துக் கட்டியது போலிருந்தான் அந்த ஆள். அவன் தனக்கென ஒரு பெண்ணை ஏற்பாடு செய்யச் சொல்ல என்ன செய்வதென்று தெரியாமல் யோசனையில் இருக்கும்போதுதான் மதாரஞ்சனி வந்திருந்தாள். போக வேண்டிய இடத்தை அவளிடம் சொல்லி பார்த்து நடந்து கொள்ளும்படியும் கேட்டுக் கொண்டான். அவள் இது மாதிரியான பலரைப் பார்த்தவள் என்பதால் எப்படியும் சமாளித்துக் கொள்வாள் எனும் தைரியமும் அவனுக்கு இருந்தது. அவள் கிளம்பும்போது பேசிய மற்ற சில வார்த்தைகள்தான் அவனைக் குழப்பத்தில் ஆழ்த்தியது. அன்றைய தினத்துக்கான வருமானத்தை உறுதி செய்ததற்காக நன்றி சொன்னவள் வீட்டில் குழந்தை தனக்காகக் காத்திருப்பதாகச் சொல்லிவிட்டுக் கிளம்பியபோது அவள் என்ன சொல்கிறாள் எனப் புரியாமல் பார்த்தபடி நின்றிருந்தான் நாகராஜ்.

பேருந்து நிலையத்தின் முன்பாக வந்து நின்ற ஷேர் ஆட்டோவிலிருந்து லதாரஞ்சனி இறங்கினாள். நாகராஜ் கொடுத்திருந்த முகவரிச்சீட்டு அவள் கைகளுக்குள் இருந்தது. ஹோட்டல் ராம் விலாஸ். அறை எண்.312. வந்திருப்பவன் என்ன மாதிரி ஆளாக இருப்பான் எனும் எண்ணம் அவளுக்குள் ஓடிக் கொண்டிருந்தது. யோசித்தபடியே டவுன்ஹால் ரோட்டை வந்தடைந்திருந்தாள். அருகிலிருந்த தியேட்டரில் மாலைக்காட்சி முடிந்து மக்கள் கூட்டமாக வெளியேறிக் கொண்டிருந்தார்கள். கூட்டத்தில் கடந்து போனவர்களில் ஒருவன் இவளைப் பார்த்து மெலிதாகச் சிரித்தான். ஏற்கனவே இவளைத் தெரியும் என்பதான சிரிப்பு. பதிலுக்கு இவளும் சிரித்துவிட்டு சந்துக்குள் திரும்பி நடக்கத் தொடங்கினாள். ஹோட்டலின் பெயரெழுதிய பெரிய பலகை கண்களில் தென்பட்டது. உள்ளே நுழைந்தவள் வரவேற்பின் பக்கம் பார்க்காமல் நன்கு பழகிய இடத்தில் நடமாடுவது போல பொறுமையாக நடந்து சென்று லிப்டுக்குள் ஏறிக் கொண்டாள். மூன்றாவது தளத்தில் இறங்கி சொல்லப்பட்டிருந்த அறையின் முன்பாக நின்று அழைப்பு மணியை அழுத்தினாள். கதவைத் திறந்தவனைக் கண்டு ஒரு கணம் அதிர்ந்து போனாள்.

அவனுடைய முகம் மிகத் தடிமனாக இருந்தது. தார்ப்பாலினால் இழுத்து வைத்து இறுக்கி தைத்தது போன்ற முகம். கழுத்து இருக்கும் பகுதியே தெரியவில்லை. கழுத்தின் கீழ் அகலமாக ஆரம்பித்த உடம்பு இடுப்பினருகே குடை மிளகாய் போல விரிந்து விசித்திரமாக இருந்தது. அந்த உடம்புக்கு சற்றும் பொருந்தாத குச்சியான கால்கள். இதுதான் எனச் சொல்லும்படியான எந்த வடிவத்துக்குள்ளும் அடங்காத அந்த உருவம் அவளை சற்றே பயம் கொள்ளச் செய்தது.

வெளியில் நிற்பவள் தன் உருவத்தைக் கண்டு பயந்து போய் நிற்கிறாள் எனபதைத் திருக்குமரன் சடாரென்று உணர்ந்து கொண்டான். அவளை ஓங்கி அறையவேண்டும் போலத் தோன்றியது. அவசரம் கூடாது. அவள் முதலில் உள்ளே வரட்டும். கதவிலிருந்து விலகி நின்றான். அவள் குறிப்பறிந்து உள்ளே வந்தாள். கதவைச் சார்த்தி விட்டு வருவதற்குள் அவள் கட்டிலின் மீது சென்று அமர்ந்து கொண்டாள். இப்போது வெளிச்சத்தில் அவனால் அவனுடைய முகத்தை நன்றாகப் பார்க்க முடிந்தது. ஆளின் பருமனை மீறி அதில் ஒரு குழந்தைத்தனம் ஒளிந்திருந்தது. சற்றே படபடப்பாகவும் பதட்டமாகவுமிருந்தான். கண்டிப்பாக இது அவனுக்கு முதல் முறையாகத்தான் இருக்க வேண்டும். அவனை நிமிர்ந்து பார்த்து மெலிதாகச் சிரித்தாள். “எதுக்கு சிரிக்கிற.. சீக்கிரமா சேலையைக் கழட்டு..” அவன் வார்த்தைகளில் இருந்த கடுமை அதை அவன் சொன்ன விதத்தில் இல்லை. அவள் நிதானமாகத் தன் சேலையைக் களையத் தொடங்கினாள்.

நிமிர்ந்தபோது அவள் முன்பாக அவன் நிர்வாணமாக நின்றிருந்தான். அவனது முகத்தில் ஆர்வத்தையும் அவசரத்தையும் தாண்டி தன்னை நிர்வாணமாகப் பார்ப்பவளின் எதிர்வினை என்னவாக இருக்கும் எனும் எதிர்பார்ப்பே பெரிதாக இருந்தது. அவனை உற்றுப் பார்த்தவள் சிரிக்கத் தொடங்கினாள். மிகப்பெரிய பூசணிக்காயின் முனையிலிருக்கும் சிறிய காம்பினைப் போல பருத்த அவன் வயிற்றின் கீழாக அவனுடைய குறி மிகச் சிறியதாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அவள் உரத்து சிரிக்கத் தொடங்கினாள். அவள் சிரிப்பாள் எனத் துளியும் எதிர்பார்த்திராதவன் கோபம் கொண்டு அவளது கன்னத்தில் ஓங்கியறைந்தான். சிரிப்பு ஒருகணம் உறைந்து நின்றது. உதட்டில் ரத்தம் கசிவதை அவள் உணர்ந்தாள். ஆனால் அவன் அறைந்தது அவளுக்குத் தன் குழந்தை அடிப்பதை நினைவுறுத்தியது. அந்தக் கைகளின் தொடுகை அவளைக் கிளர்த்தியது. மீண்டும் சிரிக்கத் தொடங்கியவளை வினோதமாகப் பார்த்தவன் அவளருகாமையில் நெருங்கி வந்து நின்றான். அவள் முகத்துக்கு நேராக அவனது குறி இருந்தது. தான் என்ன செய்ய வேண்டுமென ஆசைப்படுகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. இருந்தும் அவனை சீண்ட விரும்பினாள். தன் முகத்தை அவனது குறியினருகே கொண்டு சென்றவள் சட்டென விலக்கிக் கொண்டாள். அந்தக் கணத்துக்காகக் காத்து நின்றவன் பதறிப்போனான். "ரொம்ப நாறுது.. போய்க் குளிச்சிட்டு வா.." அவனுக்கு ஆத்திரமாக வந்தது. மீண்டும் அவளை ஓங்கி அறைந்தான். எதுவுமே நடவாதது போலவும் அவன் தன்னை அடித்தது குறித்து எந்தவொரு உணர்ச்சியும் காட்டாமலும் கட்டிலின் மீது அமர்ந்து கொண்டாள். அவளிடம் கடுமையாக வேறேதும் பேச மாட்டாது அவன் குளியலறைக்குள் நுழைந்தான்.

வெதுவெதுப்பான தண்ணீர் ஷவரிலிருந்து அவன் மீது விழுந்து கொண்டிருந்தது. இப்போது அவனுக்குத் தன் மீதே கோபமாக வந்தது. நான் ஏன் அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். நான் அந்தப் பெண்ணை அவமதிக்க வேண்டும். என்னை அலட்சியம் செய்திட்ட அத்தனை பெண்களுக்கு பதிலாகவும். ஆனால் அது என்னால் முடியுமா எனத் தெரியவில்லை. தனக்குள் உரையாடியபடி அவன் வெளியேறி வந்தான். அவள் கட்டிலின் மீது கண்களை மூடி நிர்வாணமாகப் படுத்திருந்தாள். மார்புகள் தளர்ந்து தொங்கிப் போயிருந்தன. மார்புகளைக் கண்டவுடன் இவன் ஆத்திரம் கொண்டான். வேகவேகமாகச் சென்று தனது பையினை எடுத்தான். அதற்குள் இந்த தினத்துக்காகவே இவன் சேகரித்து வைத்திருந்த பொருட்களை எடுத்து வெளியே வைக்கத் தொடங்கினான். சத்தம் கேட்டு அவள் கண்விழித்துப் பார்த்தாள். கட்டிலின் முன்பாக அவன் வைத்திருந்த பொருட்களைப் பார்த்து ஆச்சரியம் கொண்டாள். சாட்டை. நீண்ட இரும்புக்கழி. வளைந்த

கைப்பிடி கொண்ட கத்தி. ஒருகணம் அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. அவளால் அவனோடு இத்தகைய செயல்களைப் பொருத்திப் பார்க்கவே முடியவில்லை. என்றாலும் அவளுக்குத் தெரிந்து போனது. இந்த இரவு மிக நீண்டதாக இருக்கப்போகிறது. ஆனாலும் அவன் மீது அவளுக்கு எந்த வருத்தமும் இல்லை.

அவன் சாட்டையைக் கையில் எடுத்துக்கொண்டு அவளை நெருங்கி வந்தான். அதற்குத் தயாராயிருப்பவளைப் போல அவள் திரும்பி தன் முதுகினை அவனுக்குக் காட்டியபடி படுத்துக் கொண்டாள். இந்த அடி கண்டிப்பாக அவளைக் கோபம் கொண்டு வெகுண்டெழச் செய்யும். அவன் சாட்டையை வீசினான். சாட்டை சுளீரென அவள் முதுகில் இறங்கியது. வலி அவளது உடலின் அத்தனை நரம்புகளிலும் உணர்ந்து தெறித்தது. அவற இருந்தவள் அதனைக் கட்டாயமாக நிறுத்திக்கொண்டு அவனைத் திரும்பிப்பார்த்தாள். குழந்தை ஆர்வமாய் அவள் முகத்தைப் பார்த்திருந்தது. இவளுக்கு ஆனந்தம் பொங்கியது. தன் பிள்ளையை அவனில் மீண்டும் கண்டடைந்திருந்தாள். முகம் சந்தோசப்பரவசத்தில் ததும்பியது. அவன் திடுக்கிட்டான். ஏன் எனக்கு மட்டும் இப்படி நிகழ்கிறது. இவள் இப்போது கதறியழ வேண்டியவள். என் காலடியில் வீழ்ந்து என்னை மன்னித்து விடு எனக் கதற வேண்டியவள். தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியாது அவன் இன்னும் அதிகக் கோபத்தோடும் விசையோடும் அவளை அடிக்கத் தொடங்கினான். ஏதேனும் ஒருகணம் அவளை முற்றிலுமாய் தன்னிடம் சரணடைய வைக்கும் என அவன் நம்பினான். ஆனால் அவனது ஒவ்வொரு அடிக்கும் அவள் எதுவும் நடவாதது போல சிரித்துக் கொண்டேயிருந்தாள்.

அவன் வெறி கொண்டவனாய் சாட்டையை வீசியெறிந்தான. கட்டிலின் மீது தாவி ஏறி அவள் மீது அமர்ந்தான். அவனது மொத்த பாரமும் அவளது உடலின் மீதாகக் கிடந்தது. அவள் எதையும் உணராதவள் போல கண்கள் கிறங்கித் தனக்குள் பேசிக் கொண்டிருந்தாள். அவனது பார்வை அவளது மார்பில் குத்தி நின்றது. வெறி கொண்டவனாக அவளுடைய மார்புகளைப் பிடித்துக் கசக்கவும் கடிக்கவும் செய்தான். அவள் சந்தோசத்தில் முனகினாள். குழந்தை அவளது மார்பில் தன் செல்லப்பற்களால் கடித்து உறிஞ்சுகிறது மார்பிலிருந்து கசியத் தொடங்கிய துளிகள் அவன் முகத்தில் வழிந்தோடின. அதிர்ச்சியடைந்த குழந்தை அவளிடமிருந்து விலக முற்பட்டது. சன்னதம் கொண்டவள் போல அவள் அவனைத் தன் மார்போடு அணைத்துக் கொண்டாள். எதற்காகவும் தன் பிள்ளையை இழக்க அவள் தயாராயில்லை. தன் உயிரனைத்தும் அதற்கெனத் தர அவள் சித்தமாய் இருக்கிறாள். அவனது முகம் அவளுடைய மார்பில் புதைந்து கிடக்க குழறலாக வெளிவந்த வார்த்தைகளில் அவள் அவனைக் கொஞ்சினாள். அவளது வார்த்தைகள் அவனை மீள முடியாத கருந்துளைக்குள் வீசியெறிந்தன.

இதற்கு மேலும் தாங்க முடியாது என்றொரு தருணத்தில் அவளை விட்டு விலகி தரையில் சென்று அமர்ந்தான். உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. தன்னால் எந்தவொரு பெண்ணையும் வென்றெடுக்க முடியாதென்பதை அவன் உணர்ந்திருந்தான். பயத்திலும் ஆத்திரத்திலும் உடல் இன்னுமதிகமாக நடுங்க ஆரம்பித்தது. தன்னை முழுதாய்த் தொலைத்தவனாக சத்தம் போட்டு அழ ஆரம்பித்தான். அவள் கட்டிலில் இருந்து கீழே இறங்கி அவனருகே சென்று அமர்ந்தாள். தாயின் கருணை நிரம்பிய விழிகள் குழந்தையைப் பார்த்து சிரித்தன. ஆதரவாய்த் தன் கைகளால் குழந்தையின் தலையைத் தடவிக்கொடுத்தாள். தன் துயரமனைத்தும் மறந்து அவன் அவளது மடியில் படுத்துக் கொண்டான்.

இதற்கு மேலும் தாங்க முடியாது என்றொரு தருணத்தில் அவளை விட்டு விலகிப் போனவன் கத்தியைக் கையிலெடுத்தான். கட்டிலின் மீது அவள் தன்னிலை மறந்து புலம்பிக் கொண்டிருந்தாள். அவளருகே சென்று அமர்ந்தவன் கத்தியின் கூரிய முனையை அவளது வலது மார்புக்காம்பின் மீது வைத்து அழுத்தினான். பால் வழிந்து கொண்டிருந்த மார்பிலிருந்து இப்போது ரத்ததின் முதல் துளி வெளிப்பட்டது. வலியை உணராதவளாய் அவள் கண்கள் மூடி புலம்புவதைத் தொடர்ந்திருந்தாள். அவன் ஆயுதத்தை இன்னும் ஆவேசத்தோடு அழுத்த அவள் சட்டென்று கண்களைத் திறந்தாள். வலி தாளாது அலற முற்பட்டவளின் வாயை அவன் தன் கையால் இறுகப் பொத்தினான். மற்றொரு கரத்தால் அவளது மார்பினை கரகரவென அறுக்கத் தொடங்கினான். மார்புகள். என் வாழ்வை என்னிடமிருந்த முழுதாய்ப் பறித்துக் கொண்ட மார்புகள். அவள் முகத்தைப் பார்க்காது கண்களை இறுக மூடியபடி அவன் அவளது மார்பை அறுத்துக் கொண்டிருக்க எதிர்ப்பைக் கைவிட்டிருந்தவளின் திறந்திருந்த கண்களின் வழியே கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டிருந்தது. பாலும் ரத்தமும் கலந்த புதியதொரு திரவம் படுக்கையை முழுதாய் நனைத்தது. வலது மார்பை அவன் அறுத்து முடிக்கையில் லதாரஞ்சனி செத்துப் போயிருந்தாள். தனது செயலின் தீவிரம் புரிய திருக்குமரனுக்கு சற்று நேரம் ஆனது. அவளுடைய உடலை மெதுவாக அசைத்துப் பார்த்தான். எந்த எதிர்ப்புமில்லை. அவள் சர்வநிச்சயமாக செத்துப் போயிருந்தாள். நடுக்கத்தோடு முதல் முறையாக அவன் அவளது முகத்தை உற்றுப் பார்த்தான். உதடுகளில் சின்னதொரு புன்னகை தேங்கியிருக்க கண்கள் அமைதியில் உறைந்திருந்தன. அந்தக் கண்களின் அமைதி இனி வாழ்நாள் முழுதும் அவனைத் துரத்தியபடி இருக்கும். மெதுவாக எழுந்து கொண்டவன் அவளருகே படுக்கையில் கிடந்த கத்தியை எடுத்துக்கொண்டு குளியலறைக்குள் நுழைந்தான்.

விசுவின் அறையும் அவர் தம் கவிதையும்

நான் விசுவின் அறைக்கு சில முறை போயிருக்கிறேன். அங்கு எதுவும் ஒழுங்கில் இருக்காது. அறைக்கதவு இரவு நேரங்களிலும் திறந்தே கிடக்கும். ஆனால் நாம் எளிதில் அறைக்குள் நுழைந்து விட முடியாது. யாரோ ஒரு சிற்றிதழ்காரரோ, யாரோ ஒரு குடிகாரரோ அல்லது குடிகார சிற்றிதழ்காரர் ஒருவரோ வாசலை அடைத்த படி படுத்திருப்பார். மேற்சொன்ன முச்சாரரும் எப்போது வேண்டுமானலும் வருவார்கள் எப்போது வேண்டுமானலும் போவார்கள். நான் ஒரு நண்பரை அங்கு அழைத்து சென்ற போது முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இப்படி சொன்னேன்..

"நீங்க ராத்திரில திடீர்னு கண்ணுமுழிக்கும் போது யாரோ ஒருவரின் நெஞ்சின் மேல் யாரோ ஒருவர் அமர்ந்து கொண்டு ஆவேசமாக பாட்டிலை ஓங்கிக் கொண்டிருந்தால் பதறிப்போய் எழுந்துவிடக் கூடாது.. திரும்பவும் கண்ணை மூடிக்கொண்டு நிம்மதியாக தூங்குங்கள்.. நாம் எல்லோரும் காலையில் தேநீர் அருந்தப் போகலாம் ..."

விசுவின் கவிதையும் அவர் அறையைப் போலவே ஒழுங்கற்று , அசுத்தமாக , கெட்ட வார்தைகளால் ஆகியிருக்கிறது. அந்த அறையைப் போலவே அவர் தம் கவிதையும் நீங்காத மது நெடியோடும், குடிகாரர்களோடும் இருக்கிறது. குடிகாரர்களின் உளறல்கள் சம்பந்தமற்று இருப்பது போலவே அல்லது சம்பந்தமற்று நமக்கு தோன்றுவது போலவே இக்கவிதையின் பேச்சுக்களும் சம்பந்தமற்று இருப்பதாக நமக்கு தோன்றுகிறது. ஆனால் ஒரு குடிகாரரின் பேச்சை முழுக்க சம்பந்தமற்றது என்று ஒதுக்கிவிட முடியாது. உளறும் போதும் அவர் கண் முன்னே யாரோ ஒருவர் நிச்சயம் இருக்கவே செய்கிறார்.

"இவற்றின் கத்தரிக்கப்படும் மொழித்தன்மை அர்த்தங்களுக்கு பரிதவிக்கவிடாமல், காட்சிப்படுத்துதலில் பிரக்ஞையற்ற மகிச்சியையும், சில சமயம் அன்றாடத்தை எளிதில் கடந்துவிட முடியாத நம் மீது சாத்வீகமான கேலியையும் சுமத்துகிறது"

யவனிகா பின்னட்டையில் எழுதியிருக்கும் இந்த வாசகங்களை மனப்பாடம் செய்து விட்டு இத்தொகுப்பைப் படிப்பது சாலச்சிறந்தது. நம்மை மிக மோசமாக எரிச்சலூட்டும் புத்தகம் தான் இது. எரிச்சலூட்ட வேண்டும் என்பது தான் நோக்கமும் கூட. பின்நவீனத்துவத்தில் இது எத்தனையாவது பிரிவின் கீழ் வருகிறது என்று எனக்குத் தெரியாது.

"செத்தபிணத்தின் பீ நாற்றம்
அதற்கு
நான்தான் காரணம்"

என்று சொல்லும் விசு இந்த வாழ்வின் மேல் இருக்கும் வஞ்சமும், அசூசையும், கேலியும் சேர்ந்து எழுதிக்காட்டியிருக்கும் சொற்கள் தான் இவை என்று சொல்லலாம்.

'ஒவ்வொரு நாளும்/ ஒரு புதுப்பெண் தான்/ எல்லாப் பிரச்சனைகளையும்/ தீர்த்து வைக்க முடியும் /

என்று துவங்கும் கவிதை,

புதுப்பெண் நடந்து போகும் தெருவிலிருந்து அன்றாடம் ஒரு பிரச்சனை என்று முடிகிறது.

" போலீஸ்காரனின் சந்தேகப் பார்வை
சூரியனின் முழுச்சுற்றல்கள்
யோனியைக் கைது செய்தன.
45 லிருந்து 50 வயதிருக்கலாம்
எக்கச்சக்கமாக வாங்கியதின்
அறிகுறிகள் அப்பட்டமாய்.
ஒரு குழந்தை அப்படியே தெறித்து
விழுமளவுக்கு.. "

என்கிறது மற்றொரு கவிதை..

காதலுக்கு மரியாதை செய்வதாவது நான்கு முறை சுயமைதுனம் செய்வது என்றெழுதிவிட்டு தயவு செய்து நீங்கள் அப்படி புரிந்து கொள்ள கூடாது என்று கேட்டுக்கொள்கிறார்.

"பாதுகாக்கப்பட்ட அரங்கம்" என்ற கவிதைக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் "ஷூ வீசும் காலம்" என்கிற வரியில் இருந்து வீசப்படும் ஷூ செட்டி நாட்டிலும் அமெரிக்காவிலும் விழுகிறது. ஒரு எளிய மனம் அதிர்ந்து போக இத்தொகுப்பில் பக்கத்துக்குப் பக்கம் விசயங்கள் இருக்கின்றன என்று சொல்லும் அதே நேரத்தில் வாய்ப்புக் கிட்டினால் அந்த எளிய மனமும் எதுவும் செய்யும் என்பதையும் நான் மறந்து விடக் கூடாது..

"ஒரு ஒன்பது ரூபாய் நோட்டையும்
ஒரு மூன்று பக்கமுள்ள
நாணயத்தையும் கொடுத்து
அதிர்ந்து பேசாத அடிமை
ஒன்றினை வாங்கி வந்து
வீட்டு வேலையில் அமர்த்தினேன்.
நன்றாகவே வேலை செய்தது.
திடீர் தீடீர் என் எதையாவது
கிறுக்கிக் கொண்டும் இருந்தது.
பரவாயில்லை என விட்டுவிட்டேன்
ஆனால் தேவடியாப் பயல்
என் மனைவியை செய்துவிட்டது "

சமீபத்தில் இப்படி தலைகிறுக்க வைக்கும் தொகுப்பை நான் வாசிக்கவில்லை. விசுவின் விருப்பமும் அதுவே என்பதால் அவருக்கு வெற்றியே கிட்டியிருக்கிறது என்று சொல்லலாம். ஆனாலும் விசு இந்த ஒழுங்கின்மையை இன்னும் கொஞ்சம் ஒழுங்காக செய்திருக்கலாம் என்பது என் எண்ணம்.

— இசை

ஞானத்தின் திறவுகோல்

மா. கணேசன்

இக்கட்டுரை எழுதப்பட்டதற்கான காரணம் :

ஆன்மீகம், ஞானம் என்கிற போர்வைகளில் சில தனிநபர்களும், குழுக்களும், அமைப்புகளும், ஆசிரமங்களும் மக்களை மனோவசியப்படுத்தியும் மூளைச்சலவை செய்தும்—முடிவில் சாதாரணமாக லௌகீகத்திலும் இல்லாமலும் செம்மையாக ஆன்மீகத்திலும் இல்லாமலும் செய்து மக்களை அவர்களது சொந்த மனத்தினுள்ளேயே ஒரு வகைப் பிரமையில் சிறைப்படுத்தப்படுவது நிகழ்ந்தேறி வருகிறது.

சிலர் ஆன்மீகத்தை பெரும் வியாபாரமாகவே மாற்றி விட்டனர்—யாதொரு முதலீடும் இல்லாமலேயே சிலர் உடனடி காப்பி போல உடனடி ஞானம் எனவும் எளிதான ஞானம் எனவும் சொல்லி ஞானமடைதலை ஒரு சில சூத்திரங்களுக்குள் அடைத்து—சிந்திக்கின்ற ஒரு சிலரையும் சிந்திக்க விடாமல் சிதறடித்து முடமாக்கி வருகின்றனர்.

ஆக, இத்தகைய அஞ்ஞானப் போக்குகளையும் ஆன்மீக விரோத போக்குகளையும் இனம் காட்டிடும் வகையிலேயே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இவ்வகையிலேயே இக்கட்டுரையின் முக்கியத்துவம் எழுகிறது.

ஞானமடைதலை எவரும் எளிதாக்கிடவும் முடியாது, அதை மேலும் கடினமானதாகவும் ஆக்கிட முடியாது.



ஞானமடைதலை எளிது, கடினம் என்கிற சொற்களின் வழியே அணுக முடியாது. அது எளிதாக இருந்திருந்தால் நம்மைச் சுற்றிலும் ஏராளமானோர் ஞானிகளாக மலர்ந்திருக்க வேண்டும் — அவ்வாறு இல்லையே அது கடினமானது என்றால் இதுவரை ஒருவருமே ஞானமடைந்திருக்க முடியாது. ஆனால் நம்மில் கோடியில் ஓரிருவர் ஞானமடையவே செய்கிறார்கள். ஏனெனில் கோடியில் ஓரிருவர் மட்டுமே சிந்திக்கிறவர்களாக, வாழ்க்கையின் உட்பொருளைத் தேடுபவர்களாக, தமது உணர்வுக்கு விழித்தவர்களாக உள்ளனர். பிற அனைவரும் வாழ்க்கையின் மேற்புறத்துப் பொருட்களைத் தேடிக் கொண்டு எலிகளையும் தவளைகளையும் போல் வாழ்ந்து செல்கிறோம்.

முதலில் ஞானநிலை அல்லது ஞானமடைதல் என்பது உள்ளது தான் என்றாலும் அந்நிலையை நேரடியாக அணுகிடவோ, அடைந்திடவோ இயலாது. எதையோ ஒன்றைப் பயிற்சி செய்வதன் வழியாகவோ, யாதொரு யுக்தியாலோ ஞானத்தைப் பெற முடியாது.

ஏனெனில், ஞானநிலையை அடைவதற்குரிய அடிப்படை, நோக்கம், காரணம், தேவை, அகத்தூண்டுதல் எல்லோரிடமும் இயல்பாய் அமைந்திருப்பதில்லை. அதோடு, அது இயல்பான விஷயமோ மிக இயல்பாக நாமே எழக்கூடிய ஒன்றோ அல்ல ஞானமடைதல் என்பது ஒருவரது இயல்பில், அமைப்பில் இயல்பாய் எழாத, ஒருவரது இயல்பைமீறிய — மிகக் குறிப்பானதும், பிரத்தியேகமானதுமானதொரு அழைப்பு அல்லது தேவைக்கான பிரத்தியேகமானதொரு பதில் (அளிப்பு) ஆகும்.

ஞானமடைதல் என்பது உயரியதொரு ஆன்மீக அனுபவம், அது மிக அழகானதொரு நிலை, அதை அடைந்தால் ஆனந்தம் கிடைக்கும், நினைத்த காரியங்களைச் சாதிக்கக்கூடிய ஆற்றல் கைகூடும். என்றெல்லாம் பிறரிடமிருந்து ஞானம் பற்றித் தவறாகத் தெரிந்து கொண்டு உடனே எனக்கும் ஞானம் வேண்டும் என பேராசைப்பட்டு ஏதாவதொரு ஆன்மீக அமைப்பில், மார்க்கத்தில் சேர்ந்து கொண்டு ஏதேதோ பயிற்சிகளையெல்லாம் செய்து வருவதால் ஞானம் வந்திடாது.

மேலும், உணவுப் பழக்கத்தை மாற்றியமைப்பதாலும் உடையலங்காரத்தை மாற்றிக் கொள்வதாலும், கண்களை மூடிக்கொண்டு தியானம் செய்வதாலும், பலவித குட்டிக் கரணப் பயிற்சிகளையும், விநோதப் பெயர்களைக் கொண்ட மூச்சுப்பயிற்சிகளைச் செய்து வருவதாலும் ஞானம் வந்திடாது.

மேலும், சமூகத்தின் பார்வையில் நல்லவர் என ஒருவர் பெயரெடுத்தாலும், அல்லது கெட்டுப் போனாலும் ஞானம் வராது. ஒருவரிடம் எல்லா சௌகரிய சம்பத்துக்களும், செல்வமும்

உள்ளன. அதோடு சேர்த்துக் கொள்ள ஞானமும் வேண்டும் என விரும்பினாலும் என்ன விலை கொடுத்தாலும் ஞானம் கிடைக்காது அல்லது உலகியல் வாழ்வில் தோல்வி கண்ட ஒருவர் புகலிடம் தேடியும் ஞானத்திற்கு, ஆன்மீகத்திற்குச் செல்ல முடியாது.

உங்களது சொந்த வாழ்க்கையில் ஏராளமான பிரச்சனைகள், கவலைகள் இருக்கலாம். ஆக, கவலைகளுக்கெல்லாம் தீர்வாக நீங்கள் ஞானத்தை விரட்டிச் செல்ல முடியாது. வாழ்க்கைக்கு நீங்கள் அளிக்க வேண்டிய முறையான பதிலளிப்பைச் செய்யாமல் வாழ்க்கை என்றால் என்னவென்று ஆழமாக புரிந்து கொள்ளாமல் — புரிதலின் வழிச் செல்லாமல் ஞானத்தின் வாலைக் கூட பிடிக்க முடியாது.

உங்களுடைய கனவுகளும், எதிர்பார்ப்புகளும், பேராசைகளும் நிறைவேறாததால் வாழ்க்கை உங்களுக்கு வெறுத்துப் போகலாம். நீங்கள் விரக்தியடைந்திடலாம். ஆனால், வாழ்க்கையின் எதிர்பார்ப்பபையும், அதன் அசலான நோக்கத்தையும் சிறிதும் கவனியாமல் வாழ்ந்து சென்றால் வெறுப்பும் விரக்தியும் தான் விளையுமே தவிர ஞானம் விளையாது.

முதலில், ஆன்மீக நாட்டம், ஞானத்தாகம் என்பது ஒவ்வொருவரின் உள்ளிருந்து தோன்றிட வேண்டும். இதன் அர்த்தம் ஒவ்வொருவரின் உள்ளும் ஆன்மீக நாட்டத்தை தூண்டுவதற்கான மையம் (தூங்கிக் கொண்டு) உள்ளது. அதைத் தட்டி எழுப்பினால் போதும் என்பதல்ல ஏனென்றால், பசி, தாகம், பாலுணர்வு, உறக்கம் ஆகியவற்றைத் தூண்டுவதற்கு உணர்த்துவதற்கு வெவ்வேறு மையங்கள் உள்ளதைப் போல ஆன்மீக நாட்டத்தை, ஞானத் தாகத்தை, மெய்ம்மைத் தேடலை தூண்டுவதற்கு யாதொரு மையமும் மனிதனுள் இல்லை.

ஆம், வாழ்க்கையின் அர்த்தம், உண்மை, மெய்ம்மை ஆகியவற்றைத் தேடும் படியாகத் தூண்டுவதற்கான மையம் எதும் இல்லாத நிலையில் ஒருவர் அவற்றைத் தேடும் பட்சத்தில் உடனே அவருள் (அவரது உணர்வில்) புதிதாக ஒரு மையம் உருவாகிறது. ஆனால் அந்த மையம் தொடர்ந்து நக்கவைக்கப் பட வேண்டும். அதற்கு அவர் உண்மையை, மெய்ம்மையை அறிந்திடுகிற விசாரத்தில் தீவிரமாகவும், பேரார்வத்துடனும், முழுமையாகவும் ஈடுபட்டிருக்க வேண்டும். இவ்வாறு புதிதாகத் தோன்றிடுகிற அந்த மையத்தை நீங்கள் ஆன்மா, கடவுள், பிரபஞ்ச உணர்வு, முழு உணர்வு, இறுதி மெய்ம்மை . . . என்றெல்லாம் அழைக்கலாம்.

இவ்வாறு யாதொரு தூண்டுதலும் தூண்டுதலுக்கான மையமோ எதுவும் இல்லாமலேயே வாழ்க்கையின் உட்பொருளான

அர்த்தத்தை உண்மையைத் தேடுவதற்கு பெயர்தான் விழிப்பு அல்லது உணர்வுக்கு வருதல் என்பதெல்லாம்.

ஒரு வேளை, தூண்டுதல் எதுவும் இல்லாததன் காரணத்தினாலேயே நீங்கள் உணர்வுக்கு வரவில்லை. விழிப்படையவில்லை என போலியாக வருத்தப்பட வேண்டாம். உங்களுக்கு தூண்டுதல்கள் வேண்டுமெனில், உங்களைச் சுற்றியுள்ள இயற்கை, செம்மண் பூமி, நீலவானம், சூரியோதயம், பறவைகளின் பாடல் பசும் மரங்கள், வண்ணப்பூக்கள், இளந்தென்றல், சூரிய அஸ்தமனம், இரவு நட்சத்திரங்கள், நிலா . . . என இவையாவும் நீங்கள் விழிப்பதற்குப் போதுமான தூண்டுதல்கள் தான். என, உங்களது இருப்பே — நீங்கள் இருக்கிறீர்கள் என்பதே விழிப்பதற்கும், உணர்வுக்கு வருவதற்குமான பிரதான அம்சமாகும்.

ஆனால், மனித ஜீவிகளாகிய நாம் இன்னமும் தூண்டுதல்களுக்குப் பதிலளிக்கும் விலங்கு ஜீவிகளாகவே விளங்கிறோம் — இன்னமும் நாம் உணர்வுக்கு வரவில்லை நமக்கு உணர்வு இருக்கிறது. அது பரிணாம இயற்கை நமக்களித்த பரிசு. ஏதோவொரு வகையில் நமக்கு உணர்வு உள்ளது என்பதை நாம் உணரவே செய்கிறோம் — அதை புற விவகாரங்களில் செலுத்தி பயன் அடையவும் செய்கிறோம். ஆனால் நாம் ஒரு உணர்வு தான் என்கிற உணர்வுக்கு இன்னமும் வரவில்லை. ஆம், உணர்வு தான் மனிதன்

உண்மையில், ஞானம் ஞானமடைதல் யாவும் மனிதன் உணர்வுக்கு வருவதையே சார்ந்திருக்கின்றன. இருப்பிற்கு மனிதன் அளிக்கின்ற முழுமையான பதிலளிப்பின் விளைவே ஞானமடைதலாகும். இருப்பிற்கு முறையாக, முழுமையாக பதிலளிக்காமல் நேரடியாக ஒரு போதும் ஞானத்தை அணுகவோ அடையவோ முடியாது.

மனித ஜீவிகள் புற—இருப்பு (இயற்கை, உலகம் ஆகியவற்றை) நோக்கி மட்டும் விழித்தால் போதாது. இந்த விழிப்பை நாம் புற— விழிப்பு என்றழைக்கலாம். இந்த முதல் விழிப்பையடுத்து மனிதன் உடனடியாக தனது சொந்த இருப்பு நோக்கியும் விழித்தாக வேண்டும். இதை நாம் அக—விழிப்பு அல்லது இரண்டாவது விழிப்பு என்றழைக்கலாம். இந்த இரண்டாவது விழிப்பு தான் மனிதனை மனிதனாக்கும் விழிப்பு ஆகும்.

தொடர்ந்து, இருப்பிற்கு எவ்வாறு முறையாகவும், முழுமையாகவும், பதிலளிப்பது என்பதைப் பற்றி பார்ப்பதற்கு முன் ஞானமடைதல் என்பதற் பொருள் விளக்கத்தைப் பார்ப்போம். ஆம், ஞானம் ஞானமடைதல் என்பது மிகவும் நேரடியாக புரிதலுடன் தொடர்புடையதாகும். ஆக

ஞானமடைதல் என்பது ஞானத்தை, புரிதல் நிலையைக் குறிப்பதாகும். புரிதல் எனும் போதும் அது எதைப்பற்றிய புரிதல் எனக் கேட்டால் அது வாழ்க்கையைப் பற்றிய புரிதலே. வாழ்க்கையை அதன் சாரத்தில் முழுமையாகப் புரிந்து கொள்ளும் நிலையே ஞானநிலை அல்லது ஞானமடைதல் என்பதாகும்.

ஆனால், புரிதல் என்பது இரண்டும் இரண்டும் நான்கு என்பதைப் போன்ற கணித வகைப்புரிதல் அல்ல. அது மிகவும் மேலோட்டமானது. அதாவது கணிதவியல் புரிதலைக் கொண்டு நாம் பல வகைப்பட்ட பயன்களைப் பெறலாமே தவிர கணிதவியல் புரிதலோ அல்லது விஞ்ஞான வகை, தத்துவ வகை மற்றும் கவிதை வகைப் புரிதலோ எதுவும் மனித—உணர்வை (பிரக்ஞையை) மாற்றமுறச் செய்திடாது ஆம், புரிதலிலும் படி நிலைகள் உள்ளன. ஆனால் நாம் இங்கு சொல்கிற வகையில், வாழ்க்கையை அதன் சாரத்தில் புரிந்து கொள்கிற வழிமுறையில் மனிதனின் உணர்வு அல்லது பிரக்ஞையானது மாபெரும் மாற்றத்திற்கு உட்படுவதாகிறது. அதாவது ஞானம் என்பது மிகவும் நேரடியாக புரிதலுடன் தொடர்பு கொண்டதாயுள்ளது. அதே வேளையில், புரிதல் என்பது நேரடியாக உணர்வின் படி நிலைகளுடன் தொடர்பு கொண்டதாயுள்ளது. ஆம், உணர்வு இல்லாமல் புரிதல், அறிவு என்பதில்லை. உணர்வின் வெவ்வேறு தளங்கள் அல்லது படி நிலைகள் வெவ்வேறு தரத்திலான புரிதலைத் தருகின்றன.

நாம் குறிப்பிடும் ஞானம் என்பது இறுதி நிலைப் புரிதலாகும். இந்த இறுதியான அல்லது சாரமான புரிதலை உயரிய உணர்வுநிலை மட்டுமே அளிக்க இயலும். ஆம், ஞானமடைதல் என்பது உண்மையில் இறுதியான முழு—உணர்வு நிலையை அடைதலே. மனித ஜீவிகளான நமக்கு பரிணாம இயற்கை அளித்துள்ள உணர்வானது மிக மெலிய ஆரம்பநிலை உணர்வு மட்டுமே. இந்த சிற்றுணர்வைக் கொண்டு பல ஆயிரம் ஆண்டுகளாக 'நான்', 'நான்' என்று நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு உலவி வருவதைத் தவிர இந்த நான் என்பது எத்தகைய மெய்ம்மை, அது எத்தகைய பரிணாம உச்சத்தை, முழுமையை அடையக்கூடும் என்பதை ஒரு சில ஞானிகளைத் தவிர பிற மனிதர்கள் அடைந்தபாடில்லை. அந்தத் திசையில் சிறிதும் நாம் சிந்திக்கவும் இல்லை.

ஆகவே தான், மனிதன் இயல்பாகப் பெற்றுள்ள இந்த அரையுணர்வை அல்லது சிற்றுணர்வை "அகந்தை உணர்வு" என்கிறோம். ஆயினும் இந்த அகந்தை உணர்வும் இல்லையெனில் மனிதன் ஒரு எலியைப் போலவோ, தவளையைப் போலவோ தான் இருப்பான். ஒரு வகையில், உணர்வு இருந்தும் நம்மில் பெரும்பாலான மனிதர்கள் இன்னமும் எலியையும் தவளையையும்

போலத்தான் வெறுமனே உயிர் — வாழ்தலை நடத்திச் செல்கின்றோம்.

ஏனெனில், நாம் உயிரோடிருக்கின்றோம் என்பதை மட்டுமே நன்கு அறிகிறோம், உணர்கிறோம். ஆகவே தொடர்ந்து உயிரோடிருப்பதற்காக என்னென்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்கிறோம். ஆனால், நாம் எதற்காக உயிர் வாழ்கிறோம்? வாழ்க்கையின் குறிக்கோள், இலக்கு யாது? வாழ்க்கை என்றால் என்ன?.... என்றெல்லாம் நம்முள் கேட்பதில்லை, சிந்திப்பதில்லை. ஆனால், வாழ்க்கை என்றால் என்னவென்று அறியாமலேயே வாழ்ந்து செல்வதும் மரணம் என்றால் என்னவென்று அறியாமலேயே மாண்டு போவதும் விலங்கினத்துக்குரிய விதியாகும். உணர்வுள்ள மனிதர்கள் இவ்வாறு வாழ்ந்து செல்லலாகாது என்பதை நாம் உணருவதேயில்லை. இந்நிலையில் நம்மில் பலர் ஞானமடைதலைப்பற்றி பேசுகிறோம், கனவு காண்கிறோம்.

சிலர் எளிய ஞானம், உடனடி ஞானம் என்றெல்லாம் தத்துப்பித்து என்று உளறிக்கொண்டு புத்தர், ரமணர், ஜே.கிருஷ்ணமூர்த்தி போன்ற உண்மையான ஞானாசிரியர்களையெல்லாம் குறை கூறி கொச்சைப்படுத்தி வருகின்றனர். ஞானமடைதலை ஒரு ஒற்றை யுக்தியின் மூலம் சாதித்திடலாம் எனவும் பிதற்றி வருகின்றனர்.

ஏற்கனவே குறிப்பிட்டபடி ஞானத்தை குறுக்கு வழியில் யாதொரு பயிற்சியாலோ, யுக்தியாலோ அணுகவோ அடையவோ முடியாது. அதற்கு யாதொரு வழியுமில்லை. மாறாக , வாழ்க்கை என்றால் என்ன? என்று தனக்குள்ளேயே கேட்பதற்குரிய விழிப்பு எப்போது ஒருவருள் துளிர்க்கிறதோ அப்போது அக்கேள்வியுடன் தொடரும் இடையறாத விசாரத்துடன் மட்டுமே அசலான மனித வாழ்க்கையும், உண்மையான ஆன்மீக நாட்டமும், ஞானத்தேடலும், ஞானமடைதலும் தொடங்குகிறது. அதற்கு முன்னர் வேறு வழிகளில் ஒரு போதும் தொடங்குவதில்லை.

ஆம், வாழ்க்கை என்றால் என்ன என்று புரிந்து கொள்வது தான் உண்மையான ஆன்மீகம், ஞானம் எல்லாம். வாழ்க்கையைப்புரிந்து கொள்ளுதல் என்பதுடன் மட்டுமே உண்மையான ஆன்மீக நாட்டம், ஞானதேடல் தொடங்குகிறது. வாழ்க்கையைப் புரிந்து கொள்வதைத் தவிர்த்து விட்டு நேரடியாக ஞானத்தைத் தேட முடியாது. அப்படியொரு ஞானம் வாழ்க்கைக்கு வெளியேயோ வேறெங்குமோ எதுவுமில்லை.

இன்னும் "வாழ்க்கை என்றால் என்ன?" என்கிற கேள்வி எழுந்து விட்டபோதே இயல்பாக இதுவரை நாம் வாழ்ந்து வந்திட்டது உண்மையான வாழ்க்கையல்ல என்பதும் நிரூபணமாகி விடுகிறது.

இத்தகையதொரு கேள்வி புத்தருக்குள் எழுந்ததனாலேயே அவர் அதுவரை தாம் வாழ்ந்து வந்த வாழ்க்கையையும், அதனுடைய சூழலையும் சேர்த்தே உதறிவிட்டு (துறந்து விட்டல்ல) வாழ்க்கை எனும் புதிரை விடுவிக்கும் பொருட்டு காட்டிற்குச் சென்றார். வாழ்க்கை பற்றிய கேள்வி இல்லாமல் புத்தரும் இல்லை, அவருடைய ஞானமும், நிர்வாணமும் இல்லை.

ஆம், வாழ்க்கையை முழுமையாக அதன் சாரத்தில் புரிந்து கொள்ளும் அந்தப் புரிதலே ஞானமும், முழுமையான இருப்பும், வாழ்க்கையும் ஆகும். ஆம், வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் செயல்பாடு தான் உண்மையான வாழ்தல் ஆகும். இதற்கு மாறான பிற நடைமுறை விவகாரங்கள், பிற நாட்டங்கள், சொந்த லட்சியங்கள், இலக்குகள் யாவும் உயிர்—வாழ்தல் எனும் கோளத்தை மட்டுமே சேர்ந்தவை. ஏனெனில் வாழ்க்கை என்பது உணவு, உடை, உறையுள் மற்றும் உறவுகள் குறித்த விவகாரங்கள் அல்ல. அது ஒரு அற்புதப் புதிர் அப்புதிரை விடுவிப்பதே உண்மையான வாழ்தலும், வாழ்க்கையின் மிக அசலான உன்னத இலக்கும் யாவும் ஆகும்.

இப்போது, இருப்பிற்கு (வாழ்க்கைக்கு) எவ்வாறு முறையாக, முழுமையாக பதிலளிப்பது என்பது குறித்துப் பார்ப்போம்.

பொதுவாக, நாம் அனைவரும் மிக இயல்பாக பசி, தாகம், பாலுணர்வு, பாதுகாப்புணர்வு ஆகிய இயல்பூக்கிகளுக்கு பதிலளிப்பதையே வாழ்க்கை என நெடுங்காலமாக வாழ்ந்து வந்துள்ளோம். மிகப் பிரதானமாக, இயல்பூக்கிகளின் வழியாக மட்டுமே இருப்பை, வாழ்க்கையை அணுகி வந்துள்ளோம். அப்படியானால் நாம் நமது சிந்திக்கும் திறனை, அறிவை பயன்படுத்தவேயில்லையா? என சிலர் கூக்குரலிடலாம் இதற்குப் பதில், பயன்படுத்தியுள்ளோம், இன்னும் பயன்படுத்தியும் வருகிறோம். ஆனால் இயல்பூக்கிகளின் வாழ்க்கைக்குச் சேவை புரியும் விதத்தில் மட்டுமே நாம் நமது அறிவை, சிந்தனையை பயன்படுத்தி வருகிறோமே தவிர வாழ்க்கையை ஆழமாகப் புரிந்து கொள்ளும் விஷயத்தில் இல்லை.

அதாவது, நமக்குப் பசிக்கிறது உணவு உட்கொள்கிறோம் — உணவு, உடை, உறையுள் ஆகியவற்றைப் பெறுவதற்காக உழைக்கிறோம், உத்தியோகத்தை தேடுகிறோம். உத்தியோகத்திற்காக உயர் பதவிக்காக, உயர் சம்பளத்திற்காக, உயர் கல்வி கற்கிறோம். சக மனிதர்களுடன் கடுமையாக போட்டியிடுகிறோம். . . பாலுணர்வு தோன்றியதும் இணையைத் தேடி உறவு கொள்கிறோம், உறக்கம் வந்ததும் உறங்கி விடுகிறோம். உறங்கி எழுந்ததும் அதே சுற்றுத்தான் தினம் தினம். இவ்வாறு இயல்பூக்கிகளுக்கு பதிலளிப்பது என்பதே இருப்பிற்கு வாழ்க்கைக்கு அளிக்கிற முழுமையான பதிலளிப்பாகிடாது.

ஏனெனில், நாம் விலங்கு ஜீவிகள் அல்ல — இயல்பூக்கிகளின் வழியே மட்டும் வாழ்க்கையை அணுகுவதற்கும் பதிளிப்பதற்கும். நம்மிடம் மனம் உள்ளது, சிந்திக்கும் திறன் உள்ளது. முக்கியமாக "நான் சிந்திக்கிறேன் ஆகவே நான் இருக்கிறேன்" என்று சொல்லுகிற உள் அமைந்த சுயவுணர்வு உள்ளது. ஆகவே நாம் ஒவ்வொருவரும் (நமது பசிக்கு உணவு உட்கொள்வது போல) வாழ்க்கையைப் பற்றிச் சிந்தித்திடவும், ஆழமாகப் புரிந்து கொள்ளவும் உணர்வுப் பூர்வமாக வளர்ந்திடவும் (பரிணமித்திடவும்) வேண்டும். ஆக இவ்வாறு அறிதல், புரிதல் செயல்பாட்டின் வழியே அதற்குரிய சிந்தனை, அறிவு ஆகிய கருவிகளைக் கொண்டு வாழ்க்கையை புத்தி பூர்வமாக அணுகுவதே வாழ்க்கைக்கு, இருப்பிற்கு முறையாக பதிலளித்தல் என்பதாகும். இதை புரிதல் வழி அல்லது விசார வழி என்கிறோம்.

இந்தப் புரிதல் பூர்வமான அணுகுமுறையை பதிலளிப்பை ஒதுக்கிவிட்டு வெகுபலர் செய்வது போல தியானம், யோகா, பிராணாயமா போன்ற பயிற்சிகளை செய்வதன்மூலம் ஞானத்தைப் பெற முடியும் என்றால் எலிகளும், தவளைகளும் கூட இப்பபயிற்சிகளின் மூலம் ஞானத்தை அடைந்துவிடக்கூடும் எனலாம். ஆனால் புத்தி பூர்வமான, புரிதல் பூர்வமான அணுகுமுறையில்லாமல் எலிகள் தவளைகள் மட்டுமல்ல மனிதர்களும் ஞானமடைய இயலாது.

ஆனால், இருப்பிற்கு (வாழ்க்கைக்கு) பதிலளித்தல் எனும் விஷயத்தில் இருப்பு அல்லது வாழ்க்கையானது மனிதனிடமிருந்து அப்படி எதை பதிலாகக் கோருகிறது. என்றால் உணர்வைத் தான் — இன்னும் சொல்லப் போனால் முழு உணர்வைத் தான் — அது கோருகிறது. ஏனெனில், முழு உணர்வு தான் பிரபஞ்ச இருப்பு எனும் மாபெரும் இயக்கத்தின் முழுமையும் அடைவிடமும் ஆகும்.

பரிணாம இயற்கை அல்லது இருப்பானது மனிதனுக்கு சிற்றுணர்வை அளித்துள்ளதன் உண்மையான நோக்கம் சிற்றுணர்வு எனும் சிறிய மீனைப் போட்டு பேருணர்வு அல்லது முழு உணர்வு எனும் பெரிய திமிங்கிலத்தை எட்டிப் பிடிப்பதற்கே!

ஆக மனித ஜீவியானவன் முதல் நிலையில் இயல்பூக்கிகள் அல்லது புலன்களின் வழியே பதிலளிப்பதுடன் நில்லாமல்; இரண்டாவது கட்டமாக வாழ்க்கையைப் புரிந்து கொள்ளும் நோக்கில் மனம், சிந்தனை, அறிவு, ஆகிய கருவிகளைக் கொண்டு பதிலளிப்பதுடன் மூன்றாவது கட்டமாக ஒருவர் தமது இருப்பை தாம் இருக்கிறோம் எனும் நிஜத்தை வெகுசுலபமாக எடுத்துக் கொண்டு உடனேயே உயிர் இருப்பின் அன்றாடத் தேவைகளைத் தேடிச் சென்றிடுவதாக அல்லாமல், "தாம் இருக்கிறோம்!" எனும் நிஜத்தை, சுயவுணர்வை மிக ஆழமாக உணர்வு கொள்வதையே இருப்பிற்கு முழுமையாக பதிலளிப்பது எனக் குறிப்பிடுகிறோம்.

இவ்வாறு, ஒருவர் "தாம் இருக்கிறோம்!" எனும் அற்புதப் புதிரை நின்று நிதானித்து தரிசிப்பாரெனில் அதன் தொடர்ச்சியாக அவர் தமது உணர்வின் கருவிகளான மனம், சிந்தனை, அறிவு ஆகியவற்றைக் கொண்டு வெறுமனே வாழ்க்கையின் அன்றாட மேற்புறத் தேவைகளை (உணவு, உடை, உறையுள் ஆகியவற்றை) மட்டுமே தேடிக் கொண்டிராமல் வாழ்க்கையின் உட்பொருளையும் (வாழ்க்கையின் அர்த்தம், சாரமான உண்மை, குறிக்கோள், இலக்கு ஆகியவற்றையும்) தீவிரமாகத் தேடத் தொடங்கிடுவார். இவ்வகையில் அறிதலும் உணர்வும் இணைந்து செல்வதாகின்றன. அதாவது இருப்பிற்கு முழுமையாக பதிலளித்தல் என்பதும், வாழ்க்கை என்றால் என்ன என்று புரிந்து கொள்வதும், இன்னும் ஞானமடைதல் என்பதும் ஒன்றே.

ஆம், இவ்வழியில்லாமல் வேறு எவ்வழியாகவும் எவரும் ஞானமடைய இயலாது. அதில் 'வாழ்க்கை' என்றால் என்னவென்று புரிந்து கொள்வதற்கு முதலில் ஒருவர் வாழ்க்கையை நேரே காணவும் — அதாவது தேவைகளின், சூழ்நிலைமைகளின், நிகழ்வுகளின் வழியாக அல்லாமல் காணவும் — இவைகளைக் கடந்து வாழ்க்கையுடன் பொருந்திடவும் (தொடர்பு கொள்ளவும்) வேண்டும். இவை வெறுமனே புலன்களின் வழியாக மட்டுமல்லாமல் உணர்வின் வழியாக, உணர்வு பூர்வமாக நிகழ்த்திடல் வேண்டும்.

வாழ்க்கையை நேரே காணுதல் என்றால் வாழ்க்கையைப் பற்றிய யாதொரு இடையீடும் — யாதொரு கோட்பாடும், நனவிலிரீதியான சாய்வும், தெரிவும், கருத்தும், கற்பனையான சித்திரமும், தத்துவமும், முன்முடிவும் எதுவுமில்லாமல் காணுதலே.

இந்தக் காணுதலையே இன்னும் ஆழமாக்கிக் காணும்போது. அதாவது ஒருவர் தனது இருப்பிற்கு "தாம் இருக்கிறோம்!" எனும் நிஜத்திற்கு முழுமையாக தனது உட்பொதிவின் உள்ளாழத்திலிருந்து — தன்னைத் திறப்பொரெனில், விழிப்பாரெனில், அந்நிஜம் ஒரு மாபெரும் அற்புதமாக பொங்கி வழியும் அனுபவமாக — இருப்பதை தரிசிக்க முடியும். ஒருவர் தமது இருப்பை ஒரு அற்புதமாக உணரவில்லையெனில் மிகவும் முக்கியமான ஒன்றை அவர் இழந்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். ஆம், வேறு எதைக் கொண்டும் அல்லது இன்னும் எல்லாவற்றையும் கொண்டும் ஈடு செய்ய முடியாத அரிய பொக்கிஷத்தை அவர் தமது கவனக் குறைவினால் (உணர்வுக் குறைவினால்) கண்டும் காணாமல், உணர்ந்தும் உணராமல் கடந்து சென்று விட்டார். — அவர் இழந்தது "எதை" என்பதைக் கண்டுபிடிப்பதற்குள் அவரது ஆயுள் முடிந்தே விடும். மேலும் எவரும் அது பற்றி எடுத்துச் சொல்லாமல் அவரால் ஒரு போதும் அதைக் கண்டு பிடிக்க இயலாது. எடுத்துச்

சொல்லியும் அதை அவர் கண்டுபிடிக்க இயலாமல் போய் விடலாம். அவ்வாறு அவர் இழந்தது, கண்டுபிடிக்கத் தவறியது, உணரத் தவறியது — ஒட்டு மொத்த இருப்பின் மலர்ச்சியான இருப்பும் உணர்வும் ஒன்றாகிப் போன முழு உணர்வு எனும் முழுமையான இருப்பாகிய "வாழ்க்கை" யைத் தான்! வாழ்க்கை, முடிவும் முழுமையான வாழ்க்கை என்பது புறத்தே எங்கும் இல்லை. புற இருப்பிற்கு அக இருப்பாகிய (மனித) உணர்வு தரும் முழுமையான பதிலளிப்பில் அகம், புறம் (இரண்டும் ஒன்றாகி) இரண்டையும் கடந்து வெளிப்படுவது தான் விழிப்பு நிலை, ஞானநிலை, பிரம்மம், கடவுள், முக்தி, மோட்சம், காலாதீதம், நித்திய ஜீவன், ஆன்மா மற்றும் ஆல்ஃபாவும், ஓமேகாவுமான முழு உணர்வு எனும் பெருவெடிப்புக்கு முந்தைய) மூல மெய்ம்மையும் ஒவ்வொரு மனிதனும் அடையக்கூடிய, அடைந்ததாக வேண்டிய இறுதி மெய்ம்மையும், முழுமையான வாழ்க்கையுமாகும்.

ஆக, வாழ்க்கையை நேரே காணுதல் அல்லது தரிசித்தல் என்பதற்கு வேறு பெயர்கள் தான் விழிப்படைதல் உணர்வுக்கு வருதல் எல்லாம் இன்னும் துல்லியமாகச் சொன்னால் வாழ்க்கை என்பதும் உணர்வுக்கு வருதல் என்பதும் ஒன்றுதான்.

ஏனெனில் மனித ஜீவியைப் பொறுத்த வரையில் உணர்வில்லையேல் வாழ்க்கையே இல்லை. உணர்வில்லாத வாழ்க்கை தவளையின் தாத்திற்கு கீழிறங்கி வெறும் உயிர்—இருப்பாக மட்டுமே விளங்கிடும். இன்னும் தவளையின் நிலைக்கும் கீழே இறங்கினால் அது ஒரு கல் அல்லது பாறையின் வெறும் சட — இருப்பாகச் சுருங்கி விடும். மிகவும் உணர்வுக் குறைவான — கிட்டத்தட்ட உணர்வற்ற — இருப்பு சடப் பொருட்களின் இருப்பே

பரிணாமம் என்பது உணர்வுப் பரிணாமமே பரிணாமத்தில் பரிணமிப்பது உணர்வே. உண்மையில் இருப்பு தான் இருப்பை (தன்னைத்தானே) உணர்வு கொள்வதாக ஆகிறது. ஆனால், உணர்வு கொள்ள உணர்வு வேண்டும். ஆகவே தான் சட—இருப்பாகத் தோன்றிய பௌதீக அணுத்துகள்களின் பிரபஞ்சம் உயிர்—இருப்பு எனும் புலன் உணர்வாக விலங்குஜீவியினுள் வெளிப்பட்டது. அதையடுத்து, மனிதனுள் மனமாக — புறத்தை மட்டுமல்லாமல் தன்னைத்தானே உணர்வு கொள்ளும் சுயவுணர்வாக இருப்பானது உயர்ந்துள்ளது.

ஆனால், விலங்கியல்புகளிலிருந்து இன்னும் விடுபடாத நிலையில் மனித ஜீவிகளோ தம்மைத் தாமே உணர்வு கொள்ளாமல் வாழ்க்கையை புறத்தே ஏதேதோ பொருட்களில், மதிப்பீடுகளில் தேடிக் கொண்டுள்ளனர். அதில் சில அறி

புத்திசாலிகள் வாழ்க்கை என்றால் என்னவென்ற கேள்வியே இல்லாமலும் வாழ்க்கையைப்புரிந்து கொள்ளும் தேவையையும் உணராமல் நேரடியாக ஞானத்தைத் தேடிக் கொண்டுள்ளனர்.

ஆக, யாதொரு தெளிவும் உண்மையான தேடலும் இல்லாத இந்நிலைமையில் ஆயிரத்தெட்டு ஆன்மீக அமைப்புகள், ஆசிரமங்கள், பாதைகள் குழம்பிய குட்டையை மேலும் குழப்பிட நெடுந்தாடியுடன் ஞானிகள் என்ற பெயரில் வியாபாரிகள், தாறுமாறான தத்துவங்கள், வழிகாட்டல்கள்!

ஞானத்திற்கு வழிகாட்டுவதாகச் சொல்லும் பள்ளிகள் பலவகைப்பட்டவையாக இருந்தாலும் அவைகளை நாம் மூன்று வகைகளில் அடக்கி விடலாம்.

முதலாவது, புராதனமானது, பாரம்பரியமானது, அதை நாம் "சக்தி வழிப் பள்ளி" **(Energetic School)** எனக் குறிப்பிடலாம். ஆன்மீகத்தின் உச்சமான ஞான நிலையை அடைவதற்கு சக்தி வேண்டும் என்கிறது இப்பள்ளி ஆகவே இப்பள்ளிகள் குண்டலினிச் சக்தியை கீழிருந்து மேலேற்றுதலுக்கான பயிற்சிகளையும், தியானம், மூச்சுப் பயிற்சி போன்றவைகளையும் வழிகளாகக் காட்டுகின்றன, சொல்லித் தருகின்றன.

ஆனால், ஞானமடைவதற்கு பெரிதான சக்தி எதுவும் தேவையில்லை. உண்மையான ஆன்மீக அக—மாற்றம் அல்லது உணர்வு—நிலை மாற்றத்திற்கு பிரத்யேகமாக சக்தி எதுவும் தேவையில்லை. ஏனெனில் உணர்விலேயே சக்தி இணைந்திருக்கிறது. எது முக்கியத் தேவை எனில், வாழ்க்கை எனும் புதிரை அவ்வளவு தீவிரமாக நேசிப்பதும், அப்புதிரை விடுவிக்க வேண்டும், புரிந்து கொள்ள வேண்டும் என்கிற பேரார்வம் மட்டுமேயாகும். ஏனெனில் பேரார்வம் தான் மூல மெய்ம்மையின் சாரமும், அனைத்து சக்தியின் ஊற்றும் ஆகும்.

இரண்டாவது வகைப் பள்ளியை நாம் "யுக்தி வழிப்பள்ளி" எனலாம். சக்தி வழிப் பள்ளிகள் ஞானத்தை அடைய சக்தியை மையமாகக் கொண்டு தவறான முனை அல்லது தொடங்கு புள்ளியிலிருந்து அதாவது உடலைக் கொண்டு — பயிற்சி செய்வதாயுள்ளன என்றால் இந்த இரண்டாவது வகையைச் சேர்ந்த யுக்தி வழிப்பள்ளிகள் ஞானத்தை யாதொரு அடிப்படையுமில்லாமல், அடித்தளமுமில்லாமல் குறுக்கு வழியில் ஞானத்தை எட்டும் முயற்சியாக சில மனோவியல் யுக்திகளை போதிக்கின்றன.

ஞானமடைதலை ஒரு மனோவியல் பிரச்சனையாகச் சுருக்கி — அதாவது கவலைகளற்று இருப்பது தான் ஞானநிலை எனவும், சுய — முரண்பாடற்ற, போராட்டமில்லாத, இன்பங்களைத் தக்க வைக்க முயற்சிக்காத, துன்பங்களை

அப்புறப்படுத்த முயற்சிக்காத மனதைப் பெறுதல் எனவும் சொல்லி ஆகவே தேடுவதை நிறுத்தி விடுங்கள் — அகத்தளவில் நாம் செய்வதற்கோ, அடைவதற்கோ எதுவும் இல்லை, எனப் புரிந்து கொள்வது தான் ஞானம் எனவும், ஞானமடைதல் என்பது மிக எளிதான சாதாரண விஷயம் நீங்களும் ஞானியாகலாம் இந்த பாணியைப் பின்பற்றி ஏற்கனவே 100க்கும் மேற்பட்டோர் ஞானமடைந்து விட்டனர் . . . என்றெல்லாம் கூசாமல் விளம்பரம் செய்து வருகின்றனர். அதாவது ஏற்கனவே தவறான நோக்கங்களுக்காக, தவறான தேடல்களிலும், பாதைகளிலும் பயணித்து வந்த போலியான ஆன்மீக நாட்டம், ஞான நாட்டம் கொண்டவர்களை — இந்த யுக்தி வழியானது தடுத்து (அவர்களது தவறான தேடுதல்களை நிறுத்தி) ஆட் கொண்டுவிட்ட நிலையில் உடனேயே அவர்கள் அனைவரும் ஓரிரவிற்குள்ளாகவே ஞானபழங்களாகிவிட்டதான பிரமையில் ஆழ்த்தப்பட்டுள்ளனர்.

ஆனால், உண்மையில் இனிமேல் தான் அவர்களுடைய உண்மையான ஆன்மீக நாட்டமும், ஞானத் தேடலும் சரியான திசையில் தொடங்கப்பட வேண்டும். ஏனென்றால், மனிதர்களை உளவியல் ரீதியாக மீண்டும் ஆதி—மனிதர்களாக — தாம் இருப்பது தெரியாமல் இருக்கின்ற இருப்புணர்வு நிலைக்குத் திரும்பச் செல்லவைப்பதல்ல அசலான ஆன்மீகம், இது அகந்தை நிலைக்கும் முந்தைய (Pre-Personal State) ஆதி மனிதனின் நிலையாகும். மாறாக உண்மையான ஆன்மீகம் என்பது அகந்தை நிலைக்குப் பிந்தைய, அதாவது அகந்தை நிலையைக் கடந்த (Trans - Personal State) உணர்வு — நிலையை அடைவதேயாகும்!

மூன்றாவது பள்ளி, ஞானத்திற்கு மிகச் சரியான வழியை வழியற்ற வழியை) காட்டுகிற இப்பள்ளியை நாம் புரிதல் — வழி பள்ளி (Congitive School) எனலாம். இப்பள்ளியானது, முதல் இரண்டு பள்ளிகளான சக்தி வழிப் பள்ளி, யுக்தி வழிப்பள்ளிகளிடமிருந்து முற்றிலும் வித்தியாசமானது. புத்தர், இயேசு, ரமணர், ஜே. கிருஷ்ணமூர்த்தி போன்றவர்கள் இப்பள்ளியின் முன்னோடிகள். அதே வேளையில் இவர்களைப் பின்பற்றுபவர்கள் ஏராளமானவர்களாய் இருந்தாலும் இவர்களது தத்துவங்களை, உபதேசங்களைப் புரிந்து கொண்டவர்கள் மிகச் சிலரே. ஏனெனில், அவை அவ்வளவு எளிதானதல்ல. ஆகவே தான் உலகில் பல வகைப்பட்ட புத்தமதங்களும், கிறிஸ்தவ மதப் பிரிவுகளும் மலிந்து காணப்படுகின்றன — "புத்த உணர்வு" அடைந்தவர்களும், "கிறிஸ்து—உணர்வு" அடைந்தவர்களும் மிக அரிதாகவே காணப்படுகின்றனர்.

ஒரு சிறுவனைப் பார்த்து அவனிடம் நீயும் ஒரு இளைஞனாக, நன்கு வளர்ந்த மனிதனாக ஆகலாம் என்று சொல்வதைப் போல அபத்தமானது மனிதர்களைப் பார்த்து

அவர்களிடம் நீங்களும் ஞானியாகலாம் என்று சொல்வது. மனித ஜீவியாகப் பிறந்த ஒவ்வொருவரும் ஞானியாக மலர்வது என்பது ஒவ்வொருவரின் விருப்பத்தையோ, தெரிவையோ பொறுத்த விஷயமல்ல. மாறாக அது ஒவ்வொருவரின் கட்டாயப் பரிணாமக்கடமையாகும். ஏனெனில், ஞானமடைதல் என்பது மனித வாழ்வின் இலக்கும் முழுமையும் மாத்திரமல்ல — அதுவே அர்த்தபூர்வமாக வாழும் வழியும், மனிதத்தரத்திற்குரிய வாழ்தலும் ஆகும்.

ஆனால், ஒரு சிறுவன் பிரத்யேகமாக எதுவும் செய்யாமலேயே — இறுதிவரை உணர்வுக்கு வராமலேயே — ஒரு வாலிபனாகவும், பிறகு வளர்ந்த மனிதனாகவும் ஆகிடுவதைப் போல எவரும் தாமே, தானியங்கித் தனமாகவோ, அல்லது தமது விருப்பத்தின் விளைவாகவோ, நெடிய பயிற்சியின் மூலமாகவோ, அல்லது உடனடிக்காப்பி போல யாதொரு யுக்தியின் மூலமாகவோ ஞானயாகிட முடியாது.

ஞானமடைதல் என்பது ஆனந்தத்தைத் தேடுவதோ உங்களது துன்பங்கள், கவலைகளுக்கெல்லாம் தீர்வு தருவதோ. வாழ்க்கையிடமிருந்து தப்பியோடுபவர்களின் புகலிடமோ, அல்லது வாழ்க்கையென நீங்கள் கருதுகின்ற உணவு, உடை, உறையுள் மற்றும் உறவுகள் குறித்த விவகாரங்களில் உழல்வதன் மூலமாக கண்டடையக் கூடிய விஷயமோ அல்ல.

ஞானம் என்றால் புரிதல், குறிப்பாக வாழ்க்கை பற்றிய புரிதல். ஆகவே வாழ்க்கைக்கு வெளியே தனியே ஞானமும் இல்லை. இன்னும் வாழ்க்கையென பொதுவாக நீங்கள் வாழ்ந்து வருகின்ற விவகாரங்களிலும் அது இல்லை. மாறாக, வாழ்க்கை என்றால் என்ன என்று புரிந்து கொள்ளுதலில் மட்டுமே ஞானம் அடங்கியுள்ளது.

வாழ்க்கை என்றால் என்ன? என்பது வெறும் அறிவு ஜீவியக் கேள்வி மட்டுமல்ல. மாறாக இக்கேள்வியைக் கேட்பதற்குரிய அடிப்படை விழிப்பும், அவ்விழிப்பின் உணர்வும் தான் ஞானத்திற்கான திறவுகோல் ஆகும்.

இக்கேள்வியைக் கேட்பதற்குரிய அடிப்படை விழிப்பு உங்களுக்குள் துளிர்த்து விட்டால், அதன்பிறகு நீங்கள் ஞானியாவதை எந்தச் சக்தியும் தடுக்க முடியாது. மேலும் ஞானத்தைத் தேடி நீங்கள் ஆசிரமம் ஆசிரமமாய் எங்கும் அலைய வேண்டாம். எந்த ஞானியையும் தேட வேண்டாம், நாட வேண்டாம்.

அதே வேளையில், இக்கேள்வியைக் கேட்பதற்குரிய அடிப்படை விழிப்பு உங்களுக்குள் துளிர்க்கவில்லையெனும்

பட்சத்தில் அதற்கு ஒரேயொரு மாற்று வழி உள்ளது. அது என்னவென்றால் வாழ்க்கை என்றால் என்ன? எனும் கேள்வியை உங்களுக்குள் எழுப்பி தீவிரமாகவும், சிரத்தையோடும், பேரார்வத்துடனும் வாழ்க்கை பற்றிச் சிந்திப்பது, விசாரத்தில் ஈடுபடுவது மட்டுமே அந்த மாற்று வழி.

இவ்விடத்தில் ஒரு முக்கியக் குறிப்பைச் சொல்லியாக வேண்டும். "சென்ற நூற்றாண்டின் தலைசிறந்த ஞானி" என ஆன்மீக உளவியல் மேதை கென்வில்பர் **(Kenwelber)** அவர்களால் பெரிதும் போற்றப்பட்ட ரமண மகரிஷி "நான் யார்?" என ஆத்ம விசாரம் செய்யச் சொன்னார். ஆனால் இக்கட்டுரையில் "வாழ்க்கை என்றால் என்ன?" என்று வாழ்க்கை விசாரம் செய்யச் சொல்கிறோம் என்பதில் எந்த முரண்பாடும், அதிகப் பிரசங்கித் தனமும் இல்லை உண்மையில் "நான் யார்?" எனும் விசாரம் ரமணர் காலத்திற்கு மட்டுமல்லாமல் இனி வரும் எல்லாக் காலத்திற்கும் பொருந்துகிற, தவிர்க்கவியலாத மையமான கேள்வியும் விசாரமும் ஆகும். ஒருவர் எந்த அடிப்படைக் கேள்வியின் வழியாகச் சென்றாலும் நான்யார்? எனும் கேள்வியைச் சந்திக்காமல் ஞானமடைய இயலாது.

ஆக, "நான் யார்?" எனும் கேள்வி மிகவும் மையமானது என்பதைப் போல "வாழ்க்கை என்றால் என்ன?" எனும் கேள்வி மிகவும் அடிப்படையானது அதாவது வாழ்க்கை விசாரத்தின் வழியே சென்றாலும் ஒரு கட்டத்தில் நான்யார்? எனும் விசாரத்தை ஏதாவதொரு வடிவத்தில் மேற் கொள்வது தவறாமல் நிகழ்ந்தேறிடும்.


ஆனால், திடீரென முளைத்து தமிழகத்தில் தற்போது தலையெடுத்து வரும் போலி ஞானி ஒருவர் ரமணருடைய "நான் யார்?" விசாரத்தின் வழியே ரமணரே கூட ஞானமடைந்திருக்க முடியாது என்பதாகச் சொல்லியும் புத்தகத்தில் எழுதியும் ரமண வழியைக் கொச்சைபடுத்துவதன் வழியாக தமக்கு விளம்பரம் தேடிக் கொள்ளும் கயமைத் தனம் கடும் கண்டனத்திற்கு உரியதாகும். இத்தகைய போலி ஆசாமிகளையும் அவர்களது வழிகாட்டல்களையும் குறித்து வாசகர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காகவே இதைக் குறிப்பிடுகிறோம்.

முக்கியமாக ஞானமடைதலுக்கு யாதொரு எளிய வழியும், யுக்தியும், தந்திரமும், மந்திரமும் கிடையாது. அசலான ஆன்மீகமும், ஞானமடைதலும் ஒருவரது விழிப்பைச் சார்ந்தவையாகும். ஆகவே மன—இயக்கத்தையோ, அல்லது எண்ண ஓட்டத்தையோ, அல்லது வேறு எதையுமோ, தடையின்றி ஏற்று அனுமதித்தல், என்பதாயினும், மறுப்பற்று இருத்தல், என்பதாயினும் அல்லது வேறு யாதொரு யுக்தியாயினும், இவை எதுவுமே விழிப்பைக்

கொண்டு வராது. ஏனெனில் விழிப்பை எவ்வகையிலும் பயிற்சி செய்ய முடியாது அல்லது உங்களது மன இயக்கத்தில் சிறு மாற்றம் செய்வதன் வழியாகவும் விழிப்பு ஏற்படாது.

விழிப்பு பற்றியதொரு விசேடமான அம்சம் என்னவெனில், விழிப்பைத் தவிர விழிப்புக்கு மாற்றாக வேறெதுவுமில்லை என்பதே.

விழிப்பு என்பது காரணம், விளைவு எனும் சங்கிலித் தொடரின் இன்னுமொரு நிகழ்வு அல்ல. மாறாக, அது அச்சங்கிலித் தொடரின் மற்றும் அனைத்துவித இயக்கங்கள், பிரவாகங்களின் முடிவைக் குறிக்கின்ற அற்புத மலர்வாகும்.





ராணிதிலக் கவிதைகள்

ஜென்ம விமோசனம்

நான்
சின்னஞ்சிறு குற்றங்கள் செய்வேன்
சின்னஞ்
சிறு
மலர்களாகப் பிறப்பேன்.

கூழாங்கல்

கடற்கரையோரம், ஆற்றுப் படுக்கை எனக் கூழாங்கல
கிடைக்கிறது.
குடமுருட்டி ஆற்றிலிருந்து நான் கொண்டு வந்த இந்தக்
கூழாங்கல்
அவ்வளவு சாதாரணமானது, வழவழப்பு குறைந்திருப்பது,
என்றாலும்
பாதுகாப்பாய் வைத்திருக்கிறேன் பேழையில் ஆற்று மணலுடன்.
எப்போதாவது இந்தப் பேழையைத் திறந்து
இது
அபூர்வம்
என்று
காலம் கடந்து யாராவது
சொல்லும் ஒரு சொல்லுக்காக.

எழுத்துகள்

எழுதுவதற்கும் எழுதும் இடத்திற்கும் சம்பந்தமில்லை என்றுதான் தோன்றுகிறது. ஆனால் அப்படி சொல்லமுடியுமா என்றும் தெரியவில்லை. சமீபத்தில் வெகு மாதங்களுக்குப் பிறகு ஒரு மலைக்கு அடியில் அமர்ந்து எழுதி முடித்த கவிதை ஒன்றைத் திரும்ப வாசிக்க முயற்சித்தேன். திருத்த முயற்சித்தேன் என்பதுதான் நிதர்சனம். ஆனால் சற்றேறக்குறைய அனைத்து எழுத்துக்களும் கனத்த பாறைகளாகிவிட்டிருந்தன. அவற்றின் துக்கமும் சந்தோஷமும் குற்றங்களும் என் உள்ளங்கைகளில் ரேகைகளாகி விட்டன.

கல்வளையங்கள்

சிறு குளத்தில் யாரோ கல் எறிந்து போய்விட்டார்கள்.
காலங்காலமாக வளைய வளையமாகப் பெருகிக்கொண்டிருக்கும்
குளத்தில்
தலை மூழ்கி வெளி ஏறுகிறேன்.
குளம் அடங்கிற்று.
மனதின்
உள்
கல் மூழ்கிக்கொண்டே இருக்கிறது.

குதிரையின் வால்

ஒரு பழுப்புக் குதிரை சமீபகாலமாக இந்தக் கிராமத்தில் சுற்றித் திரிகிறது. இது வழக்கமானது இல்லை என்றாலும் வழக்கமாகிவிட்டது. ஆனால் அது ஒரு வீட்டின் முன்நிற்பதோ, சாக்கடைக்கு நெருங்கிச் செல்வதோ, தெருவில் கிடப்பதை உண்பதோ இல்லை. அது திரிந்தபடிதான் இருக்கிறது. ஆனால் அதன் வால் ஒரு தூவியைப்போல் அசைந்தபடி இருக்கிறது. குளிர்ச்சி பொருந்திய இந்தப் பனிக்காலத்தைக் கடக்க உதவும் அக்குதிரையின் வாலின் நடனத்தையும் பிடரிமுடியின் அசைந்தாடும் அழகையும் ஆராதிக்கிறேன்.

இராகவன்

சிறுகதை

காமன் டயறி



07.12.2009

தனது வீட்டில் தங்கியருக்க எனக்கு ரூம் தந்த விஜய அன்ரிக்குத் தோத்திரம். ஜெர்மனியிலிருக்கும் விஜயா அன்ரியின் கணவனுக்குத் தோத்திரம். நேர்சறிக்குச் செல்லும் விஜயா அன்ரியின் ஐந்து வயது மகனுக்குத் தோத்திரம், எனக்கு விரிவுரை வகுப்பேதும் நடைபெறாத முற்பகலுக்குத் தோத்திரம். என்னைத் தனியே ரூமில் விட்டகன்ற அந்த மூன்று நண்பர்களுக்குத் தோத்திரம். விஜயா அன்ரியின் பென்னம்பெரிய முலைகளுக்கும் தோத்திரம். கொத்துக் கொத்தாய் மயிரடர்ந்து பூத்துப் போயிருந்த விஜயா அன்ரியின் யோனிக்குத் தோத்திரம், என்னைக் குளியலறைக்குள் அழைத்த விஜயா அன்ரிக்குத் தோத்திரம். குளியலறைச்சுவரில் ஒட்டி நின்ற புலிநகச் சிலந்திக்குத் தோத்திரம். அதை அடித்து வீழ்த்த உதவிய துடைப்பத்திற்குத் தோத்திரம். குளியலறையை விட்டு வெளியேறாமல் என்னைக் கட்டியணைத்த விஜயா அன்ரியின் கைகளுக்குத் தோத்திரம். மார்புக்குக் குறுக்கே விஜயா அன்ரி கட்டியிருந்த வெள்ளைத் துணிக்குத் தோத்திரம். அதைக் களைந்து விஜயா அன்ரியின் பென்னம் பெரிய முலைகளை ஆசைதீரப் பிசைந்த என் கைகளுக்கும் சுவைத்துத் தீர்த்த என் வாய்க்கும் தோத்திரம். எனது தலையைத் தனது அடிவயிற்றை நோக்கித் தள்ளிய விஜயா அன்ரியின் கைகளுக்குத் தோத்திரம். கொத்துக் கொத்தாய் மயிரடாரந்து பூத்துப்போயிருந்த விஜயா

அன்ரியின் யோனியைப் பிரித்து உணர்வு மொட்டை வருடி உட் துழாவிய என் நாக்குக்குத் தோத்திரம். என் கோசத்தை இதமாகப் பற்றிப்பிடித்து உருவிய விஜயா அன்ரியின் கைகளுக்குத் தோத்திரம். என் கோசத்தை அடித்தொண்டை வரை புகுத்துச் சிவைத்த விஜயா அன்ரியின் வாய்க்குத் தோத்திரம். இளங்குமரியும் தோற்கும் விஜயா அன்ரியின் நாற்பத்தைந்து வயது உடலுக்குத் தோத்திரம். யோனியைப் பிரித்து உணர்வுமொட்டை வருடி உட்துழாவ என் நாக்குக்கு வசதியளித்து அகல விலந்த விஜயா அன்ரியின் தொடைகளுக்குத் தோத்திரம். இனித்தொடர்ந்தோடும் எல்லாக் கதைகளுக்கும் தோத்திரம். தோத்திரம்.



நான் விஜயா அன்ரியின் யோனியைத் துழாவுவதை வேகப்படுத்தினேன். இளஞ்சூடான உப்புகரைசலெனச் சுரோணிதம் பீறிட்டது. கூழ் பருகுவதைப் போல் உறிஞ்சி உறிஞ்சிக் குடித்தேன். விஜயா அன்ரி என் தலையை அழுத்தி மேலும் மேலும் தூண்டிக் கொண்டிருந்தாள். நான் மேலுயர்ந்து அவளது கரிய உதட்டினைக் கவ்விக் கடித்தேன். அவள் என்னைத் தரையில் சாய்த்துக் கோசத்தை புகுத்தி இயங்கத் தொடங்கினாள். நான் முலைகளை ஏந்திப் பிசைந்தேன். யோனி துடித்தடங்கியதும் அவள் என் மீது சாய்ந்து உதட்டைக் கவ்விக் கடித்தாள். இருவரும் சேர்ந்து குளித்தோம். மிகுதியை இரவுக்கு வைத்துக் கொள்வோமெனக் கன்னத்தில் கிள்ளினாள். நான் மீளவும் அவளது முலைகளைப் பிசைந்து சுவைத்தேன். அவள் என் தலையை வருடிக் கண்ணேணங்கியப்படி, நீ இங்கே வந்த முதல்நாளே என் மீது தீராத மையல் கொண்டு விட்டதை நன்கறிவேன். விரைவில் நீயென்னைத் தீண்டுவாய் என எதிர்ப்பார்த்து இத்தனை நாளாய் ஏமாந்துவிட்டேன். என்னால் இனி தாங்க முடியாது. உன் மீது பைத்தியமாகிவிட்டேன். சனி, ஞாயிறு வீட்டுக்கு போய்விடாதே. இங்கேயே தங்கியிரு என முனகினாள். இது என் வாழ்வில் மறக்கமுடியாத நாள்.

16.01.2010

அன்றைய தினத்தின் பின் நானும் விஜயா அன்ரியும் வீட்டில் தனித்திருக்கக்கூடிய சந்தர்ப்பமே வாய்க்கவில்லை. இருவரும் தவிப்பினைக் கண்களில் தேக்கிவைத்து அலைந்து கொண்டிருக்கிறோம். எனக்குப் பகல் முழுக்க விரிவுரை வகுப்புகள் நடைபெறுகின்றன. ரூமுக்குத் திரும்பிவர மாலையாகிவிடுகிறது.

நண்பர்களும் எனக்கு முன்பாகவே ரூமுக்குத் திரும்பி வந்துவிடுகின்றனர். எனக்கு விரைவுரை வகுப்புகளில்லாத பகல்களிலும் யாராவது ஒரு நண்பன் ரூமில் இருந்து கொண்டியிருக்கிறான். என்றுமில்லாதவாறு விஜயா அன்ரியுடனான கலவிக்கு மனம் பொங்கியது. குளியலறைக்குள் புகுந்து தாழிட்டு கரபோகம் செய்து தணித்துக் கொண்டேன். நள்ளிரவில் மீளவும் கலவிக்கு மனம் பொங்கியது.

படுக்கையை விட்டெழுந்து மலசலகூடம் போனேன். உள்ளே விஜயா அன்ரி நின்று கட்டியணைத்தாள். கண்ணீர் மல்கி முத்தமிட்டுக் கொண்டோம். அவளது யோனியைப் பரபரப்போடு அளைந்தேன். ஈரங்கசிந்திருந்தது. குனிந்து ஆடை விலக்கி உணர்வு மொட்டை மென்மையாகக் கடித்து பீறிட்ட ரசத்தை உறிஞ்சிக் குடித்தேன். போதிய அவகாசமின்றி அந்தரத்தில் கலவி செய்துவிட்டு வெளியேறினோம். தாகம் தணிந்ததைப் போல ஆசுவாசமடைந்து நிம்மதியாக உறங்கினேன்.

25.03.2010

இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. விஜயா அன்ரியுடன் கலவிக்கு ஏங்கித் தவிக்கிறது மனம். இப்போது நான் இரவில் எழுந்து மூத்திரமடிக்க சென்றால் கூட ரூம் நண்பர்கள் என்னைக் கண்காணிப்பதாகத் தோன்றுகிறது. அவர்களுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டுவிட்டதாகவே உணர்கிறேன். இடைக்கிடையே பொடிவைத்துப் பேசுகின்றனர். சிநேகபூர்வமாக பேசுவதைத் தவிர்த்து என்னையோர் அந்நியன் போல் கருதத் தொடங்கிவிட்டனர்.

07.04.2010

இன்று படையினர் சுற்றி வளைப்பொன்றை நடத்தினர். எங்களது ரூமினுள் புகுந்து சல்லடை போட்டுத் தேடிய படையினர் பிரபாகரனின் படமொன்றை மேசை இழுப்பறைக்குள் கண்டெடுத்தனர். ரூமிலிருந்த எங்கள் நால்வரையும் விஜயா அன்றியையும் கோண்டாவில் படை முகாமுக்கு அழைத்துச் சென்று காலை பத்துமணியிலிருந்து மாலை ஐந்து மணிவரை உருட்டியுருட்டி விசாரித்தனர். விசாரணை முடிவில் நாளையிலிருந்து அந்த ரூமில் நாங்கள் தங்கக் கூடாதென்றும் விஜயா அன்றிக்கு இனிமேல் பல்கலைக் கழக மாணவர் எவருக்கும் ரூம் வாடகைக்கு விடக் கூடாதென்றும் எச்சரித்து அனுப்பினர். திரும்பிவரும் போது விஜயா அன்றி உங்களை நம்பி ரூம் தந்தத்திற்கு நல்ல பரிகாரம் செய்துவிட்டீர்கள் என்று சொன்னார். எங்களுக்கு உண்மையில் இதைப்பற்றி எதுவும் தெரியாது என நாங்கள் விஜயா அன்ரியிடம்

எவ்வளவோ சொல்லியும் அவள் நம்பவில்லை. இன்றிரவே நீங்கள் ரூமை விட்டு வெளியேறினால் நல்லது என்னு மட்டும் சொன்னாள். எனக்கு மனம் வெறுத்துவிட்டது. ரூம் நண்பர்கள் மூவரும் இன்றிரவு தமக்குத் தெரிந்தவர்களோடு கைப்பேசிகளில் தொடர்பு கொண்டு ரூம் ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டனர். இருவர் தங்கக்கூடிய ரூம்தான் கிடைக்கக்கூடியதாக இருந்தது. கடைசியில் இருவேறு இடங்களில் தங்கக் கூடியதாக ரூம்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

08.04.2010

இன்று காலை நால்வரும் ரூமை விட்டு வெளியேறினோம். விஜயா அன்ரியின் தலைக்கறுப்பைக் கூடக் காணவில்லை. எனக்கும் இன்னொரு நண்பனுக்கும் கொக்குவில் பகுதியில் ரூம் கிடைத்தது. மற்றிருவரும் கோண்டாவிலுக்குச் சென்று விட்டனர். இப்போது எங்களுக்குக் கிடைத்த ரூமின் அன்ரியும் இன்றே என்னைக் கிறங்கடித்துவிட்டாள். கண்ணுக்கு நிறைய மை தீட் டியிருந்தாள். விஜயா அன்ரியைப் போலனிற்கி கைக்கடக்கமான முலைகள். நல்ல சிவப்பி வயதான தாய் கிழவியுடனிருக்கிறாள். திருமணமானவள். கழுத்தில் தாலி தொங்குகிறது. கணவன் வெளிநாட்டிலிருக்கலாம். இவள் என்னை நேருக்கு நேராகப் பார்க்கவில்லை. நிலத்தைப் பார்த்துத்தான் கதைத்தாள். விஜயா அன்ரியைப் போல் இவள் எனக்கு படிந்துவிடமாட்டாள் எனத் தோன்றுகிறது.

16.04.2010

இன்று நான் மட்டும் ரூமிலிருந்தேன். வீட்டுக்காரி குளியலறைக்குள் செல்வதைக் கண்டேன். அவள் தாழிட்டுக் கொள்ளும் சத்தம் கேட்டது. பின்தொடர்ந்து செல்லக் கால்கள் பரபரத்தன. இருந்தாலும் அடக்கிக் கொண்டேன். இங்கே தனித்திருக்கக் கூடாதெனவும் தோன்றியது.

25.04.2010

காலையில் எனக்கு விரிவுரை வகுப்புகளேதுமில்லை. ரூம் நண்பன் வெளியில் சென்றுவிட்டான். வீட்டுக்காரி அன்ரி குளிக்க ஆயத்தமானாள். எனக்கோ கால்கள் பரபரக்கத் தொடங்கவிடுகின்றன. அவள் குளியறைக்குள் புகுந்து கதவைத் தாழிட்டுக் குளிக்கத் தொடங்கிய சத்தம் கேட்டவுடன் அறையை விட்டு வெளியேறிப் பூனைப்போல் நடந்து குளியலறை நோக்கி போனேன். கதவின் மெல்லிய நீக்கலுக்கூடாக அவள் குறிப்பதை பார்த்தேன். அம்மணமாக நின்று குளித்துக் கொண்டிருந்தாள். இது வரை ஒரு பெண் அம்மணமாக நின்று குளிப்பதை நான் நேருக்கு நேராக பார்த்ததில்லை. இதுதான் முதல் அனுபவம். கோசம் துடித்து நிமிர்ந்து ஆசைநீர் சுரந்து ஒழுகியது. தளிசைக் கட்டிகள் போன்று இறுக்கமான முலைகள். முந்திரி கைவற்றலென முலைக்காம்புகள். மயிர் சிரைக்கப்பட்ட இளம்பச்சை படர்ந்த யோனி, பளிங்குத் தூண்களெனத் தொடைகள் எல்லாமும் சேர்ந்து என்னை வதைத்துக் கிறக்கத்திலாழ்த்தின.

அவள் சவர்க்காரத்தை யோனிக்குள் நுழைத்து வெளியே பிதுக்கியெடுத்தத்தை பார்த்து மனம் பேதலித்தேன். இன்று இருதட கரமைதுனம் செய்தும் பதற்றமடங்கவில்லை.

07.05.2010

விஜயா அன்ரியின் வீட்டிலிருந்து வெளியேறி ஒருமாதமாகிறது. என்றுமில்லாதவாறு கலவிக்கு ஏங்குகிறது மனம். நாளுக்கு மூன்று தடவையாவது கரமைதுனம் செய்கிறேன். இந்த வீட்டுக்கார அன்ரி வேறு என்னை நாளுக்கு நாள் பதகளிக்கச் செய்கிறாள். நேற்றிரவு நடந்ததெல்லாம் கனவு போலிக்கிறது. இரவு பதினொரு மணியளவில் ஒரு மோட்டார் சைக்கிள் வீட்டு முற்றத்தில் வந்து நிற்கிறது. வீட்டுக்காரி அன்ரி வந்தவரை உள்ளே அழைத்துச் செல்கிறாள் என்பது தெரிகிறது. உள்ளே வெளிச்சமேதுமில்லை. சற்று நேரத்தின் பின்பாக கட்டில் கொறிக்கும் சத்தம் தெளிவாகக் கேட்கிறது. அதைத் தொடர்ந்து முனகல் ஒலி விட்டுவிட்டுக் கேட்கிறது. பிறகு எதுவும் கேட்கவில்லை. சிறிது நேரத்தின் பின் இடுப்புப்பட்டி கலகலப்பது போன்றதொரு சத்தம். அதனைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிள் புறப்பட்டுச் செல்லும் சத்தம். வீட்டுக்காரி அன்ரி கதவைத் தாழிட்டுக் கொள்வதும் தெளிவாகக் கேட்கிறது. காலையில் இது குறித்து நண்பனிடம் விசாரித்த போது தனக்கு எதுவும் தெரியாதென்றும் தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைக்கவேண்டாமென்றும் சொன்னான்.



20.05.2010

விஜயா அன்ரி மொபைலில் அழைத்து உடனடியாகத் தனது வீட்டிற்கு வரச்சொன்னாள். முதலில் போவதில்லையென்று

தானிருந்தேன். ஆனால் அவளது பென்னம் பெரிய முலைகள் என்னைப் பாடாய்படுத்தின. மதிய நேரம் போனேன். நான் வீட்டினுள் நுழைந்ததும் தாவியணைத்துக் கொண்டாள். நான் முலைகளை வலுவடன் பிசைந்தேன். ஒருமாதமாக என்ன செய்து கொண்டிருந்தாய்? எனக்கேட்டுச் சிரித்தாள். ரூம் மேசை இலாச்சிக்குள் பிரபாகரனின் படத்தை வைத்தது அவள் தானன்றும் என்னைத் தனிமைப்படுத்த தனக்கு வேறுவழி தெரியவில்லையென்றும் சொன்னாள். அதைக் கேட்டதும் நான் அதிர்ந்துவிட்டேன். அவளது மகன் நேர்சறியிலிருந்து வந்துவிட்டதால் இன்று கட்டித்தழுவுவதுடன் நிறுத்திக் கொண்டோம். நான் புறப்படும் போது கூடிய விரைவில் தனது வீட்டிற்கு வந்துவிடுமாறும் இப்போது நான் தங்கியிருக்கும் வீட்டுக்காரியான சசிரோக மாற்றுக்குழுத் தோழர் ஒருவரின் வைப்பாட்டியென்றும் அவளுடன் கவனமாக நடந்து கொள்ளுமாறு சொன்னாள்.

25.05.2010

இன்றிரவு விஜயா அன்ரி வீட்டில் தங்குவதாக ஏற்பாடு. ரூம் நண்பனிடம் குரூப் ஸ்ரெடிக்காக ஒரு நண்பனின் ரூமிக்குச் செல்வதாகச் சொல்லிவிட்டு புறப்பட்டேன். விஜயா அன்ரி என்னைக் கண்டதும் பூரித்துப் போனாள். இரவுணவை ஆளுக்காள் மாறி மாறி யூட்டினோம். அவள் ஒரு புதிய ஏற்பாட்டினைக் கண்டுபிடித்திருந்தாள். ஒரு கரண்டியில் தேனைவிட்டு யோனி மீது ஊற்றச் சொன்னாள். பிறகு நான் ஒரு கரண்டி தேனை முலைக்காம்புகளின் மீது ஊற்றினேன். அவள் சிரித்துக் கொண்டே என் கன்னத்தில் கிள்ளினாள். தேன் வழிந்து கொண்டிருந்த முலைக்காம்புகளைச் சப்பத் தொடங்கியதும் மலைகள் பொங்கித் திண்மையுற்றன. முலைகளைப் பிசைய பிசைய விஜயா அன்ரி உணர்ச்சி மேலிட்டுத் துடித்தாள். அழுவதைப் போன்றிருந்தது அவள் முனகல். வழமைப்போல் என் தலையை அடிவயிற்றை நோக்கித் தள்ளினாள். முலைகளைப் பிசைந்து கொண்டே கீழே நகர்ந்து யோனியை சுவைக்கத் தொடங்கினேன். தித்திப்பாக இருந்தது. சுரோணிதமும், தேனும் கலந்த புதுச்சுவை. விஜயா அன்ரி நெளிந்து கொண்டே தொடைகளை அகல விரித்துக் கால்களை எனது தோள்களின் போட்டாள். நான் தொடர்ந்து நாவினால் யோனியின் உட்புறமெங்கும் துழாவிக் கொண்டிருந்தேன். அவளுக்கு துடிப்புத் தொடங்கியதும் கோசத்தைச் சொருகி இயங்கினேன். அவள் ஏய், ஏய் எனக் கெக்கலித்து முனகினாள். விந்து பீறிடவுள்ள நிலையில் கோசத்தை வெளியிழுத்து அவள் வயிற்றில் பெய்து ஓய்ந்தேன். இவ்விதம் விடிவதற்கிடையில் புதுமணத் தம்பதிகளைப் போல் மூன்று தடவைகள் கலவியில் திளைத்தோம். இந்த நாளையும் மறக்க முடியாது.

07.06.2010

இப்படி நடக்குமென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. விஜயா அன்ரி அதிகாலையில் மொபைலில் அழைத்து ஜேர்மனியிலிருந்து தனது கணவன் நேற்றிரவு வந்துவிட்டதாகவும் சில நாட்களுக்குத் தனது வீட்டுப்பக்கம் தலைகாட்ட வேண்டாமென்றும் சொன்னாள். பல

நாட்களின் பின் இன்று கலவித் தவிப்பை அடக்க முடியாமல் இருதடவை கரபோகம் செய்து கொண்டேன்.

16.06.2010

இன்று வீட்டிற்கு வருவதற்காக யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் தரித்து நின்ற 750 இலக்கச் சிற்றுந்தில் ஏறி இரண்டாவது ஜன்னலோர இருக்கையில் அமர்ந்து கொண்டேன். வழமையாக முதலாவது ஜன்னலோரத்தின் இருக்கையின் விளிம்பில் பெண்கள் எவரும் அதிகநேரம் சாய்ந்திருப்பதில்லை. அவர்களுக்குப் பெரும்பாலும் இரண்டாவது ஜன்னலோரத் தனியிருக்கை விளிம்புதான் சாய்ந்திருக்க வசதியாயிருக்கும். இருக்கைகள் நிறைந்த பின்னர் சில இளம் பெண்கள் சிற்றுந்தில் ஏறினர். அவர்களிலொருத்தி நான் அமர்ந்திருந்த இருக்கையின் விளிம்போடு வந்து ஒட்டிக்கொண்டு நின்றாள். நான் மெதுவாக நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவளது முலைப்பாகம் என் தலையில் மெதுவாக உரசிக்கொள்ள கோசம் இதமாகத் துடிக்கவாரம்பித்தது. அந்த உரசலை விரும்பாதவன் போல சற்று நேரம் தலையை ஜன்னலோரம் சாய்த்து உட்கார்ந்து கொண்டேன். சிற்றுந்து வேகமெடுத்து புறப்படத் தொடங்கியதும் பழையபடி நிமிர்ந்து உட்கார்ந்தேன். அவளது முலைப்பாகம் இப்போது வலுவுடன் என் தலையில் மோதியது. கோசம் துடித்து எழுந்தது. என் முழங்கையை மடித்துச் சற்றே மேலுயர்த்த அவளது யோனிமேட்டில் மெதுவாக உரசியது. அது தற்செயலானதெனக் காட்டிக் கொள்ள எத்தனித்தேன். சற்று நேரத்தின் பின்பாக அவள் மெல்ல முன்னகர்ந்தாள். அதனால் எனது முழங்கை மூட்டு அவளது யோனி மேட்டுடன் வாகாகப் பொருந்தியது. அவள் தொடைகளை விரித்து வைத்துக் கொண்டு நின்றாள். நான் தொடர்ந்து மூட்டினால் உரசிக்கொண்டிருக்க அவள் உறக்கத்திலாழ்ந்தவள் போல் கண்களை மூடிச் சிலிர்த்தாள். நான் இடது கையை மடக்கி வலது கை மூட்டில் வைத்து விரல்களை மெல்ல உயர்த்தி யோனியின் உணர்வு மொட்டை மெதுவாக வருடத் தொடங்கினேன். அவள் இன்னும் நெருங்கி வந்து நின்றாள். இப்போது முலைகள் என் கன்னத்தில் பதிந்தன. கோசம் ஆசை நீரை சுரந்து கக்கியது. எனது கை விரல்கள் அவளின் தொடை இடுக்கினுள் புகுந்ததும் அழுத்திப் பிடித்துக் கொண்டாள். அடுத்தடுத்த தரிப்பிடங்களில் இன்னுமின்னும் ஆள்கள் ஏறிக்கொள்ள சிற்றுந்தினுள் நெரிசல் அதிகரித்தது. அவள் என் மீது விழுந்து விடுவது போல் குனிந்து நின்றாள். நான் வலது கையை எடுத்து மெதுவாக நகர்த்து அவள் குண்டியை அழுத்தித்தடவிக் கொடுத்தேன். இதற்கிடையில் அவள் இறங்க வேண்டிய தரிப்பிடம் வந்துவிட்டது. முன்னகரும் பாவனையில் அசைந்து கொடுத்தவள் தள்ளாடுவது போல் குனிந்து என் கன்னத்தில் முத்தமிட்டு விலகிப் போனாள். இன்று முழுவதும் அவளை நினைத்து மூன்று தடவை கரபோகம் நிகழ்த்தி விந்துத் துளிகளை அவளுக்கு மானசீகமாக சமர்ப்பணம் செய்தேன்.

07.07.2010

தலைமைத் துவப்பயிற்சிப்பட்டறையொன்று நாளை வவுனியாவில் நடைபெறவிருப்பதால் இன்று மதியம் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டேன். அரசு பேருந்தென்பதால் இருக்கை கிடைத்தது.

வினொச்சியில் இளம்பெண்ணொருத்தி மறித்து ஏறிக்கொண்டாள். அடுத்ததரிப்பிடத்தில் எனக்கருகே இருந்தவர் இறங்கிக் கொள்ள அவள் அமர்ந்து கொண்டாள். என் மனம் அலைபாயத் தொடங்கியது. முதலில் எனது தோள் மூட்டை அவளுடன் உரசினேன். அவளிடமிருந்து எதிர்ப்பேதுமில்லை. அதனால் மெதுவாகத் தோள்மூட்டை அவளது முலைப்பாகத்துக்கு இயல்பாக நகர்த்தினேன். அவள் தனது தோள்பட்டையை எனது தோளோடு சொருகிக் கொண்டு நெருங்கி வர என் முழங்கை மூட்டு அவளது இடது முலையில் அழுத்தமாக பதிந்தது. நான் தொடர்ந்து அழுத்திக் கொண்டேயிருக்க அவள் சலனமேதுங்காட்டாமல் அமர்ந்திருந்தாள். நான் எனது பயணப் பையைச் சரித்து வைத்து மறைப்பை ஏற்படுத்தி இடதுகையில் அவளது முலையை வருடத் தொடங்கினேன். வவுனியாப் பேருந்து நிலையத்தில் அவள் இறங்கிச் செல்லும் வரை இது தொடர்ந்தது. அவளைப் பின்தொடர்ந்து கைத்தொலைபேசி இலக்கத்தையாவது கேட்டு வாங்கலாமென நினைத்துப் பேருந்தை விட்டிறங்கி அவளைத் தேடிய போது மாயமாய் மறைந்துவிட்டாள். எனது ஜட்டி ஆசை நீர் சுரந்து ஈரலித்துப் போயிருந்தது.

08.07.2010

பயிற்சிப்பட்டறைக்கு வந்திருந்தோருக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தங்குமிடம் எனக்கு பொருந்தி வரவில்லையென்பதால் வவுனியா நகரப்பகுதியிலுள்ள விடுதியொன்றில் நாளுக்கு 300 ரூபா வீதம் வாடகைக்கு தனியறையெடுத்துத் தங்கினேன். அந்தி சாய்ந்து இருள் கவியத் தொடங்கியதும் நடுத்தர வயதுடைய ஜம்பர் அணிந்த ஒருவன் விடுதிவாசலில் நின்று வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருந்த என்னை நெருங்கி இரவுக்கு பெம்பிளை வேணுமா? ஐந்நூறு வெட்டினால் போதுமென்று கேட்டான். நானிதை எதிர்ப்பார்க்கவில்லை. மௌனமாக நின்றேன். அவன் எந்தப்பிரச்சினையும் வராதென்றும் தங்கியிருக்கும் அறையின் இலக்கத்தை மட்டும் சொன்னால் போதுமென்றும் விடாப்பிடியாக நின்றான். நானும் அறை இலக்கத்தை மெதுவாக அவனிடம் சொல்லிவிட்டு வந்து அறையை தாழிட்டு இருப்புக் கொள்ளாமல் படுத்திருந்தேன். பத்துப் பதினைந்து நிமிடங்கள் கழித்து அறைக்கதவு மெதுவாகத் தட்டப்பட அடிமேல் அடிவைத்துப் போய்த் திறந்தேன். முக்காடிட்ட பெண்ணொருத்தி உள்ளே நுழைந்தாள். நான் கதவை தாழிட்டேன். அவள் முக்காட்டை விலக்கி கொண்டாள். நேற்றுப் பேருந்தில் எனக்கருகில் அமர்ந்து வந்தவள்தான் அவள். என்னைப் பார்த்து உள்ளார்த்தத்தோடு சிரித்தாள். கட்டிலில் அமர்ந்திருந்தபடியே உடைகளை ஒவ்வொன்றாகக் களைந்து போட்டாள். எனக்கு கோசம் துடித்தெழுந்து கெம்பியது. அவளது முலைகளை வருடிய போது தையலிட்ட தழும்பு நெருடியது. தொடைகளிலும் தழும்புகள் பரவிக் கிடந்தன. யோனிக் குழலின் அடர்த்தி குறைந்திருந்தது. வாய் வைத்து உணர்வு மொட்டைப் பற்றினேன். அவளிடம் சலனமில்லை. அவள் கால்களைத் தோளில் தூக்கி வைத்துக் கலவி செய்த போதும் அவளிடம் சிலிர்ப்போ முனகலோ எதுவுமில்லை. கலவி முடிந்தவுடன் அவசரஅவசரமாக ஆடைகளை அணிந்து கொண்டாள். நேற்று மதியம் பேருந்தில் என்னுடன் வந்தது

ஞாபகமிருக்கிறதா? எனக் கேட்டேன் அதற்கவள் இன்று பிற்பகலில் மட்டுமல்ல உன்னை ஏற்கனவே சந்தித்திருக்கிறேன் என்பது நீ எனது முலைகககளை வருடிய போதுதான் தெரிந்தது என்றாள். அவள் சொன்னது எனக்குப் புரியவில்லை. அதையும் அவளே சொன்னாள். 1991ல் காலப்பகுதியில் நீ நெல்லியட்டி மத்திகாவித்தியாலத்தில் நடைபெற்ற முத்தமிழ் விழாவுக்கு வந்திருந்தாய் அல்லவா? எனக்கேட்டாள். 1991 காலப்பகுதியில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் விடுதலைப் புலிகள் ஏற்பாட்டில் முத்தமிழ்விழா நடந்த இரவை என் வாழ்க்கையில் மறக்க முடியாது. அன்றிரவு முத்தமிழ் விழாவுக்கு நண்பர்களுடன் சென்றிருந்த நான் எதிர்பாரத வேளையில் மின்சாரம் தடைப்பட்ட போது அருகே நின்றிருந்த பெண் போராளியின் முலைகளைக் கிள்ளிவிட்டு ஒளிந்து கொண்டேன். மின்சாரம் வந்த போது புலிப்போராளிகள் நாலாபுறமும் என்னை வலைவிரித்துத் தேடிக் கொண்டிருந்தனர். குறித்த பெண் போராளியால் என்னைக் குறிப்பாக அடையாளங்காட்ட முடியாமையால் நான் தப்பித்துக் கொண்டேன். வேறு சில இளைஞர்களை சந்தேகத்தின் பேரில் தடுத்து வைத்து பச்சையேட்டையடி விழுந்தது. அதையேன் இவள் இப்போது கேட்கிறாள்? அவள் தொடர்ந்து பேசினாள். அன்றிரவு மின்சாரம் தடைப்பட்டபோது ஒருவன் என் மார்பகங்களைக் கிள்ளிவிட்டான். பரபரப்பான அந்த நேரத்திலும் வெகுநிதானமாக என் முலைக்காம்புகளைக் கிள்ளியது நீதான் என்பதை இப்போது நீ என் முலைக்காம்புகளைக் கிள்ளியபோது மின்னல் வெட்டியதைப் போல் உணர்ந்தேன். அன்றிலிருந்து உன்னைத் தேடிக் கொண்டேயிருந்தேன். ஒருவேளை 2009 காலப்பகுதிக்குமுன் உன்னைச் சந்தித்திருந்தாள் மண்டையில் போட்டிருப்பேன். எல்லாம் தலைகீழாகிவிட்டது. என் முலைகளிலும் தொடைகளிலும் யுத்தத்தின் வடுக்களை நீ உணர்ந்திருப்பாய். நான் விழுப்புண் பட்டு மருத்துவமனையிலிருந்த போது படையினரால் வன்புணர்வுக்கு உள்ளானேன். அவர்களால் இத்தொழில் ஈடுபட நிர்பந்திக்கப்பட்டேன். கடைசிக் கட்டச் சண்டையில் கை, கால்களை இழந்த தகப்பன், வயதுக்கு வந்துவிட்ட இருதங்கைகள், நோயாளியான தாய் இவர்களையெல்லாம் காப்பாற்ற இதைவிட்டால் எனக்கு மாற்று வழியேதுமில்லை என்றாகிவிட்டது. கோழி குருடானாலும் குழம்பின் ருசிக்காக என்னைப் பலரும் நாடி வருகின்றனர். முன்னர் தமிழீழத்திற்காக போராடினேன். இப்போது வாழ்வாதாரத்திற்காக போராடுகிறேன். புலிகளின் தாகம் தமிழீழத்தாயகம் எனக் கூறிவிட்டு நான் கொடுத்த பணத்தை வாங்கிக் கொண்டு போய்விட்டாள். நான் பேயறைந்தவன் போலானேன். வெகுநேரம் உறக்கமின்றித் தவித்தேன். அவள் என்னை ஆள்நடமாட்டமற்ற ஓரிடத்திற்கு அழைத்துச் சென்று உடைகளைக் களைந்து நிர்வாணமாக்கி முழந்தாழிடவைத்து தலையில் சுட்டுக் கொல்வதாகக் கனவுக் கண்டு திடுக்கிடடு அலறி விழித்த போது பொழுது விடிந்து விட்டது.

18.08.2010

இன்று பிற்பகல் விரிவுரை வகுப்பு முடிந்து வரும் போது நீர்வேலியில் வசிக்கும் நண்பன் சசிகரனுடன் கதைத்துக் கொண்டு வந்தேன். அவன் தனக்குப் பக்கத்து வீட்டுப் பெண்ணொருத்தி நீர்வேலி

படைமுகாம் பொறுப்பதிகாரியுடன் நெடுங்காலமாக உடலுறவு வைத்துள்ளதாகவும் சில தினங்களுக்கு முன் அவளைத் தனிமையில் சந்தித்த போது உனக்கு சிங்களச் சுண்ணிதான் பிடிக்குமோ? எனத் தாறுமாறாக ஏசியதாகவும் சொன்னான். நான் உனக்கு இது தேவையற்ற வேலை. வீண் வம்பில் மாட்டிக் கொள்ளாதே எனச் சொன்னேன்.

25.08.2010

சசிகரனைக் கடந்த பத்து நாட்களாகக் காணவில்லையென அவனது பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைபாடு செய்துள்ளனர். இப்படி ஏதாவது நடக்குமென எதிர்ப்பார்த்திருந்தேன். அவன் பெரும்பாலும் சைக்கிளில்தான் போய் வருவான். ரூம் எடுத்துத் தங்கும் வழக்கமில்லை. இன்று சசிகரனின் வீட்டிற்கு போனேன். அவன் வீட்டிற்கு ஒரே பிள்ளை தாய் அழுது கொண்டேயிருந்தாள். தந்தைதான் என்னோடு கதைத்தார். அவன் என்னோடு கதைத்துவிட்டுப் பிரிந்து சென்ற தினம்தான் காணாமல் போயிருக்கிறான். அவன் என்னிடம் சொன்ன சங்கதியை அவனது தந்தையிடம் நான் சொல்லவில்லை. வீண் வம்பில் மாட்டிக் கொள்ள நான் தயாரில்லை. இதுபற்றி விஜயா அன்ரியிடம் பேசிப்பார்க்கலாமென அவளது கைத்தொலைபேசிக்கு அழைப்பெடுத்தேன். அவள்தான் பேசினாள். கணவன் வீட்டிலிருப்பதாகவும். வசதியான நேரத்தில் அவளே அழைப்பெடுப்பதாகவும் சொன்னாள்.

26.08.2010

இன்று காலை விஜயா அன்ரி அழைப்பெடுத்தாள். சசிகரன் தொடர்பான விவரங்களை அவளிடம் சொன்னேன். இன்றிரவிற்குள் முடிவு சொல்வதாகச் கூறி அழைப்பினைத் துண்டித்தாள். சொன்னபடி இன்றிரவு விஜயா அன்ரி அழைப்பெடுத்து தேவையற்ற விடயங்களில் மூக்கை நுழைக்காதே. இது மேலிடத்து விவகாரம். நல்ல பிள்ளையாகப் பொத்திக் கொண்டு இரு. வேறு எதுவும் கேட்காதே என்று சொல்லி அழைப்பினைத் துண்டித்தாள். எனக்கு ஒரே குழப்பமாக இருந்தது. வெகுநேரமாக உறக்கமின்றிப் புரண்டு புரண்டு படுத்தேன்.

27.08.2010

நேற்றிரவு விஜயா அன்ரி தொலைபேசியில் கதைத்திருந்த விடயத்திற்கு இன்று அர்த்தம் புரிந்தது. சசிகரன் படுகொலை செய்யப்பட்டுவிட்டான். தலை கோப்பாயிலும் முண்டம் கைதடியிலும் கிடைத்தது. நினைத்துப் பார்க்க முடியாத பயங்கரம். உடல் அழுகிவிட்டது. கண்களை காகங்களை கொத்தியெடுத்துவிட்டன. உருக்குலைந்த சடலத்தை இனங்கான அவனணிந்திருந்த ட்ரவுசரே உதவியது. அனைத்து மாணவர்களும் மலர் வளையத்துடன்போய் அஞ்சலி செலுத்திவந்தோம். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் சசிகரனின் படுகொலைக்குக் கண்டனம் தெரிவித்தது. நாளையும் நாளை மறுதினமும் படுகொலையைக் கண்டித்து விரிவுரை வகுப்புகளைப் பகிஷ்க்கரிக்கத்

தீர்மானமெடுக்கப் பட்டது. அவ்வளவுதான். இனி விஜயா அன்ரி சொன்னது போல் நல்லபிள்ளையாக பொத்திக் கொண்டிருக்க வேண்டும்.

07.09.2010

யாழ் கோட்டை முனியப்பர் கோவில் வீதியில் மாலை வேளையில் தென்னிலங்கையிலிருந்து வந்திருக்கும் சிங்கள விலைமகளிர் உலாவுவதாகக் தகவல் கிடைத்து இன்று மாலை சைக்கிளில் அங்கே போனேன். என்னைப் போலவே இன்னும் சிலர் அந்தக்கண் கொள்ளக் காட்சியைக் காண வந்திருந்தனர். அங்கே நான்கைந்து சிங்களயுவதிகள் முலைகள் பிதுங்கி வெளித்தள்ளக் குட்டைப் பாவாடைகளுடன் நடைபயின்று கொண்டிருந்தனர். முச்சக்கர வண்டியில் வந்திறங்கிய கடுக்கன் குத்தியிருந்த சில இளைஞர்கள் அவர்களை நெருங்கி எதோ பேசினர். முடிவில் அவர்கள் தங்களுடன் இரு யுவதிகளை முச்சக்கர வண்டியில் எற்றிக் கொண்டு காங்கேசன் துறை வீதியை நோக்கிச் செல்ல அவ்வண்டியின் இலக்கத்தை வீதியில் நின்றிருந்த படையினரில் ஒருவன் தனது குறிப்புப் புத்தகத்தில் மெதுவாக எழுதுவதும் தெரிந்தது. எனக்குக் கூப்பிடுத் தொலைவில் நின்ற இரு இளைஞர்கள் பேசிக்கொள்வது காதில் விழுந்தது. எப்பிடி மச்சான் சிங்கள அரசரக்குகள்? ஒரு மணித்தியாலத்துக்கு மூவாயிரமாம். எங்களுக்குக் கட்டுப்படியாகுமா? பேசாமல் பாத்திட்டு இரவுக்கு கையில் அடிக்க வேண்டியதுதான். இவகளின்ரை பாச்சியாளுக்கும் குண்டியளுக்கும் எங்கடை தமிழ்பெட்டையள் எந்த மூலைக்கு? இன்றிரவு அந்த சிங்கள விலைமாதரின் முலைகளையும் குண்டிகளையும் மானசீகமாக நினைத்து கரபோகம் செய்த பின்பே உறங்க முடிந்தது.

16.10.2010

கடந்த சில தினங்களாக மேகலா மச்சாள் எங்கள் வீட்டில்தான் தங்கியிருக்கிறாள். ஒரு வருடத்திற்கு மேலாக வவுனியா மெனிக்பாம் புனர்வாழ்வு முகாமிலிருந்தவள் அண்மையில்தான் விடுவிக்கப்பட்டாள். வள்ளிப்புனத்தில் இடம்பெயர்ந்திருந்த போது கட்டாய ஆட்சேர்ப்பில் அவளை இயக்கம் பிடித்துச் சென்றதாம். இதற்கு முன் 2004 நடுப்பகுதியில் எங்கள் வீட்டிற்கு வந்த மேகலா மச்சாள் 6 மாதங்கள் தங்கியிருந்தாள். அப்போது இடுப்பைத் தாண்டித் தொங்கும் கூந்தல் அழகியாக இருந்தாள். கட்டாய ஆட்சேர்ப்பில் பிடித்துச சென்ற இயக்கம் முதலில் அவளது கூந்தலைத்தான் ஒட்ட நறுக்கியதாம். தப்பியோடினாலும் எளிதாகப் பிடித்துவிடுவதற்காகத்தான் இந்த எற்பாடு. சண்டை உக்கிரமடைந்த போது மேகலா மச்சாள் இயக்கத்திடமிருந்து தப்பி ஓட்டமும் நடையுமாக புது குடியிருப்புக்கு வந்து தமக்கையின் குடும்பத்தோடு சேர்ந்துவிட்டாள். பிறகு சனத்தோடு சனமாக அங்கிருந்து வெளியேறி இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிக்கு வந்து புனர்வாழ்வு முகாமில் தங்கி இப்போது எங்களது வீட்டிற்கு வந்துள்ளாள். இங்கே தங்கி சனி, ஞாயிறு தினங்களில் யாழ் நகருக்கு கணினிப் பயிற்சி வகுப்புக்கு சென்று வருகிறாள். என்னைக் காணும் போதெல்லாம் கிறங்கடிக்கும் கள்ளப்பார்வை பார்ப்பாள். விஜயா அன்ரிக்குப் பிறகு என்னை முலைகளால் பித்தனாக்கியவள் மேலா

மச்சாள்தான். அபாரமாக முலைகளை வளர்த்து வைத்திருந்தாள். இன்று பிற்பகல் வீட்டில் என்னையும் மேகலா மச்சாளையும் தவிர யாருமில்லை. அவள் மேசையிலிருந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தாள். நான் பின்புறமாக நெருங்கிப் போய் அவளது முலைகளை வாகாகப் பொத்திப் பிடித்தேன். அதை எதிர்ப்பார்த்திருந்தவள் போல் சிலிர்த்துப் பெருமூச்செறிந்தாள். நான் முலைக்காம்புகளைத் தொடர்ந்து நிமிண்டினேன். அவள் கதிரையை விட்டு எழுந்து என்னைக் கட்டியணைத்து முத்தமிட்டாள்.

18.10.2010

வீட்டில் எல்லோரும் உறக்கத்திலாழ்ந்துவிட்டனர். மேகலா மச்சாள் சமையலறைக்குள் செல்வது தெரிந்தது. நான் பூனை நடையில் பின் தொடர்ந்தேன். அவள் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பிய போது கட்டியணைத்தேன். பின்னர் அவளது சட்டையை மேலுயர்த்தினேன். செம்மஞ்சள் நிறத்தில் மார்புக்கச்சு அணிந்திருந்தாள். முலைகளை வெளியே பிதுக்கினேன். முலைக்காம்புகள் விடைத்துப் பளபளத்தன. மாற்றி மாற்றிச் சுவைத்தேன். இதன் பின்னர் எனது படுக்கையறைக்கு அவளைக்கூட்டிச் சென்று கட்டிலில் கிடத்தி உள்ளாடையைக் கழற்றி விட்டு தொடைகளிரண்டிலும் அழுத்தமாக முத்தமிட்டு யோனியைச் சுவைக்க எத்தனித்தேன். மூத்திரவாடை நாசியைக் கிறங்கடித்தது. யோக்குழல் ஈரமாக இருந்தது. அடிக்கடி சவரஞ்செய்வாளோ? ஒருமயிர் என் உதட்டில் சிக்கிக்கொண்டது. இதற்கிடையில் அவள் என்னைத் தள்ளிவிட்டு எழுந்து உள்ளாடையை அணிந்து கொண்டு வெளியே சென்றுவிட்டாள். அவள் திரும்பி வருவாளென எதிர்ப்பார்த்தேன் வரவில்லை. கரபோகஞ்செய்துவிட்டு உறங்கினேன்.

25.10.2010

அன்றைய இரவுச் சம்பவத்தின் பின் மேகலா மச்சாள் என்னைத் தவிர்த்து வந்தாள். நேற்று மேகலா மச்சாளின் மூத்த தமக்கை மோகனா மச்சாள் வவுனியாவிலிருந்து வந்திருந்தாள். மேகலா மச்சாளுக்குக் கனடா மாப்பிள்ளையொன்று ஒழுங்காகி விட்டதாம். இன்று காலை தமக்கையுடன் மேகலா மச்சாள் வவுனியாவுக்குப் பயணமானாள். போய் வருகிறேன் என என்னிடம் ஒரு வார்த்தைக்கூடச் சொல்லவில்லை.

07.11.2010

விஜயா அன்ரியின் கணவனை நேற்று யாரோ வீதியில் வைத்து வெள்ளைவேனில் கடத்திவிட்டார்களாம். இன்று காலை விஜயா அன்ரி எனது கைப்பேசிக்கு அழைப்பெடுத்துத் தகவல் சொன்னாள். அவள் குரலில் ஒருவிதமான உற்சாகமிருந்தது போல் தோன்றியது. பொலிஸ், இராணுவம், மனித உரிமைகள் ஆணைக்குழு என எல்லாவிடமும் முறைப்பாடு செய்துவிட்டாளாம். பேசும் போது இடையிடையே அழவும் செய்தாள். வீட்டிற்கு வருவதாகச் சொன்னேன். வேண்டாமென மறுத்துவிட்டாள்.

தேவ பேரின்பன்

மார்க்சிய மானுடவியல்

(குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்னும் நூலை முன் வைத்தது)



மார்க்ஸ், ஏங்கல்ஸ் படைப்புகளில் மிகச்சிறந்தவகைகளில் ஒன்றாக குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்ற நூல் விளங்குகிறது. இது மார்க்சியத்தைக் கற்பதற்கான அடிப்படை நூல்களில் ஒன்று. வரலாற்றியல் பொருள் முதல்வாதத்தைப் பயில்வதற்கான முதல் பாடநூல்.

புனிதப்படுத்தப்பட்ட பலவகைப்பட்ட மத நம்பிக்கை கருத்துகளாலும், கற்பனை யூகங்களாலும், அறிவியலுக்குப் பொருந்தாத மாயாவாத விளக்கங்களாலும் மிகுதியும் குழப்பப்பட்ட பிரச்சினைகளாகவே குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவை குறித்த வரலாற்று வளர்ச்சி பல நூற்றாண்டுகளாக முன் வைக்கப்பட்டன. எங்கல்ஸின் இந்த நூல் பாய்ச்சிய புதிய வெளிச்சம் காரணமாக அவையாவும் பொலிவிழந்து காலாவதியாயின. மானுடவியல் ஆய்வுகளிலும், அரசு குறித்த வரலாற்றியலிலும் புதிய கட்டம் துவங்கியது.

எல்லாவற்றுக்கும் மேலாக, சோசலிஸத்தை நோக்கிய மாற்றத்தைச் செயல்படுத்துவதற்கு முதலில் இந்த பிரச்சினைகள் குறித்த தெளிவினை மார்க்சியம் வழங்க வேண்டி இருந்தது. வர்க்கப் போராட்ட வரலாறுதான் மனிதகுலத்தின் வரலாறு என்ற கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் பிரகடனத்துக்கு இந்த நூல் வெளிவந்த பிறகுதான் ஏட்டிலேறிய வரலாறு அனைத்தும் வர்க்கப் போராட்டங்களது வரலாறே என்ற திருத்தத்தை மேற்கொண்டது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் 1888-ஆம் ஆண்டு ஆங்கில பதிப்புக்கு ஏங்கல்ஸ் எழுதிய குறிப்பில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

வரலாற்றுக்கு முற்பட்ட சமுதாயம் குறித்து, அதாவது எழுத்தில் பதிவாகியுள்ள, வரலாற்றுக்கு முன்பு நிலவிய சமூக ஒழுங்கமைப்பு குறித்து 1847ல் அனேகமாய் ஏதும் அறியப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பிற்பாடு, ஹாக்ஸ்த்ஹாவுசன் ருஷ்யாவில் நிலம் பொதுவுடைமையாய் இருந்ததெனக் கண்டுபிடித்தார். டியூட்டானிய குடிகள் யாவுமே நிலத்திலான பொதுவுடைமையாகிய இந்த சமூக அடித்தளத்திலிருந்துதான் வரலாற்றை ஆரம்பித்தன என்று மௌரார் நிரூபித்துக் காட்டினார். இந்தியாவிலிருந்து அயர்லாந்துவரை எங்குமே நிலத்தை பொதுவுடைமையாகக் கொண்ட கிராம சமுதாயங்கள் சமுதாயத்தின் தொன்மையான ஆதிவடிவாய் இருக்கிறது அல்லது இருந்திருக்கிறது என்பது நாளாவட்டத்தில் தெரியலாயிற்று. இவற்றுக்கு எல்லாம் மணிமுடி வைத்தாற்போல், கணம் என்பதன் மெய்யான தன்மையையும், அதற்கும் பூர்வக்குடிக்கும் உள்ள உறவையும் மார்கன் கண்டுபிடித்ததானது, இந்த தொன்மைக் கம்யூனிச சமுதாயத்தின் உள்ளமைப்பை அதன் தூய வகையிலான வடிவில் தெளிவாய் புலப்படுத்துகிறது. இந்த தொன்மை சமுதாயங்களின் சிதைவைத் தொடர்ந்து சமுதாயமானது பாகுபாடுற்று தனித்தனியான, முடிவில் ஒன்றுக்கொன்று பகைமையான வர்க்கங்களாகப் பிரிய முற்படுகிறது. இந்தத் சிதைவு நடந்தேறிய நிகழ்ச்சிப் போக்கினை குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்ற நூலில் நான் விவரித்துக் காட்ட முயன்றிருக்கிறேன்.

ஒவ்வொரு நாட்டின் வரலாற்றுக்கு முந்தைய சமூக ஏற்பாட்டையும், அவற்றின் உள்ளமைப்பையும், அவைகளின் சிதைவைத் தொடர்ந்து வர்க்கங்கள் எவ்வாறு தோன்றியது என்பதை அறிந்து தெளிவுபடாமல் அந்த நாட்டின் வர்க்கப் போராட்ட சிறப்பியல்புகளைக் கண்டறிய இயலாது. அத்தகைய சிறப்பியல்புகளைக் கண்டறியாமல் சமகால வர்க்கப் போராட்டத்தை சோசலிஸத்தை நோக்கி முன்னெடுத்துச் செல்லவும் முடியாது.

எனவே, இந்த நூல் மிகுந்த நடைமுறை முக்கியத்துவம் வாய்ந்த மார்க்சிய மூல நூல்களில் ஒன்றாகத் திகழ்கிறது. மார்க்ஸ் மரணமடைந்த சிறிது காலத்துக்குப் பிறகு மார்கன் எழுதிய புத்தகத்தைப் பற்றி மார்க்ஸ் தயாரித்திருந்த இன வரைவியல் குறிப்பேடுகளைப் பயன்படுத்தி ஏங்கல்ஸ் இந்த நூலை 1884 மார்ச் மற்றும் மே மாதங்களுக்கிடையில் எழுதினார்.

அமெரிக்க மானுடவியல் அறிஞர் லூயி ஹென்றி மார்கன் எழுதிய பண்டைய சமுதாயம் (1877) என்ற நூலில் மனித இனத்தின் தொன்மையான வரலாற்றை அதன் முதல் படிகளை மானுடவியல் ஆய்வுகளின் வழியே எடுத்துரைத்தது. அந்த நூலுக்கு முன்பு குடும்பம், அரசு ஆகியவை குறித்த வரலாற்று ஆய்வுகள் எதுவும் வெளிவரவில்லை. மார்கன், தனது மானுடவியல் ஆய்வுகளின் வழியே குடும்பத்தின் வரலாறு சொத்துடைமை உருவாக்கத்தோடு இணைந்ததாகவே உள்ளது என்ற முடிவுக்கு வந்தார். ஆதி பொதுவுடைமைச் சமூகத்தின் சிதைவிலிருந்து தோன்றிய தனிச் சொத்துடைமை ஆக்கத்தோடு புதிய வகைப்பட்ட (ஒருதார) குடும்பமும், அரசு என்ற புதிய நிறுவனமும் தோன்றியது என்ற முடிவுக்கு வந்தார்.

மார்க்சிய மூலவர்கள் வரலாற்றுப் பொருள் முதல்வாதம் மூலம் ஏற்கனவே வந்து சேர்ந்த முடிவுகளுக்கு அருகே மார்கன் மானுடவியல் ஆய்வுகள் மூலம் வந்து சேர்ந்தார். இயற்கையின் இயக்கவியல், டூரிங் மறுப்பு முதலிய நூல்களில் மனித சமுதாயத்தின் வரலாறு குறித்த மார்க்சியத்தின் அடிப்படைகள் தெளிவுப்படுத்தப்பட்டிருந்தன. ஆயினும் ஒருதார மண உறவின் அடிப்படையிலான குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவை எவ்வாறு தோன்றியது என்பது பற்றிய பிரச்சனை தெளிவு படுத்தப்படாமலேயே இருந்தது. மார்கனின் நூல் அத்தகைய தெளிவை பெறுவதற்கு உரிய அடிப்படை நூலாக அமைந்தது. மார்க்சியத்தின் உருவாக்கத்துக்கு சார்லஸ் டார்வின் எழுதிய உயிரினங்களின் தோற்றம் என்ற நூல் எவ்வளவு முக்கிய பங்காற்றியதோ அவ்வளவு முக்கிய பங்கை மார்கன் எழுதிய பண்டைய சமுதாயம் என்ற நூலும் ஆற்றியது.

மார்க்சிய மூலவர்கள் டார்வினையும், மார்கனையும் அப்படியே தமது அமைப்புக்குள் பிரதியெடுத்து பொருத்திக் கொள்ளவில்லை. அவ்விரு பேரறிஞர்களின் கண்டுபிடிப்புகளை வரலாற்றியல் பொருள் முதல்வாத கண்ணோட்டத்துக்கு உட்பட்டு அதற்கு இசைவாக வளர்த்தனர்.

சமுதாயத்தின் ஆதி அலகு குலம் என்று மார்கன் கண்டுபிடித்தது மிக முக்கியமான கண்டுபிடிப்பாகும். குலச் சமூகத்தின் உள்ளமைப்பையும், பொருளாயத மாற்றங்களால் அது சிதைவுறுவதையும் மார்கன் விளக்கினார். இவற்றினை மார்கன் வெறும் அறிவுத்துறை ஆராய்ச்சியாகவே நடத்தினார். அதற்கு மேல் போகவில்லை. உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் இயங்கியலாக ஒரு சமூக அமைப்பின் இயக்கத்தைப் பார்க்க மார்கனால் இயலவில்லை. ஏங்கல்ஸ் வர்க்கநிலையிலிருந்து மார்கனை ஆராய்ந்து குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவை குறித்து துல்லியமான மார்க்சிய நிலைகளை உருவாக்கினார்.

தனது நூலின் உருவாக்க காலத்தில் காவுத்ஸ்கிக்கு எழுதிய கடிதமொன்றில் ஏங்கல்ஸ் கீழ்க்கண்டவாறு குறிப்பிடுகிறார்.

மார்கனை விமர்சன ரீதியாக அணுகாமல், புதிய ஆய்வு முடிவுகளைப் பயன்படுத்தாமல், நமது கண்ணோட்டத்தோடு அவரது கருத்துகளை இணைத்து வழங்காமல் அவரது நூலைப் பற்றிய ஒரு காய்தல் உவத்தலற்ற அறிக்கையை நான் அளிப்பதில் பொருளேதுமில்லை. அதனை என்னால் செய்யவும் இயலாது (ஏங்கல்ஸ் காவுத்ஸ்கிக்கு 1884 ஏப்ரல் 26ல் எழுதிய கடிதம். **Marx - Engels selected correspondence)**

மார்கன் தனது நூலில் மனித குலத்தின் ஆதிவரலாற்றை காட்டுமிராண்டி காலம், அநாகரிக காலம், நாகரிக காலம் என வகுத்துக் கொண்டார். இந்த வரையறுப்பை தற்போதைய மானுடவியல் அறிஞர்கள் ஏற்பதில்லை. ஏங்கல்ஸ், மார்களின் வரையறுப்பையே தனது நூலிலும் கடைப்பிடிக்கிறார். ஆனால் அவைகளுக்கு வரலாற்றியல் பொருள் முதல்வாத அடிப்படையில் புதிய விளக்கமும், உள்ளடக்கமும் வழங்குகிறார். காட்டுமிராண்டி காலத்திலும் அநாகரிக கட்டத்திலும் மார்கன் முன்வைத்த சிலவகைக் குடும்ப வடிவங்கள் கற்பனையானவை என்றும், பொருத்தமற்றவை என்றும் இன்று நிராகரிக்கப்பட்டுள்ளது. அந்த வடிவங்களை ஏங்கல்ஸ் தனது நூலிலும் விளக்குகிறார். விவரங்கள் என்ற அடிப்படையில் அவை பொறுத்தமற்று போனாலும், ஏங்கல்ஸின் நூலின் முக்கியத்துவம் இதன் காரணமாகவே கரைபட்டுப் போய்விடவில்லை. ஏனெனில், ஏங்கல்ஸ் பயன்படுத்திய முறையியல் இயங்கியல் முறையாகும். வரலாற்றியல் பொருள் முதல் வாத அடிப்படைகளை விளக்கிடும் தன்மையில் அவரது நூல் அமைகிறது. அவரது நூல் மார்க்சியத்தின் முந்தைய நூல்களின் தொடர்ச்சியாகவே விளங்குகிறது.

1.

1876ஆம் ஆண்டு மனிதக்குரங்கு மனிதனாக மாறிய இடைநிலைப்படியில் உழைப்பின் பாத்திரம் என்ற கட்டுரையை எழுதினார். இயற்கை வரலாற்றின் நீட்சிதான் மனித வரலாறு என்ற மார்க்சின் வரையறுப்புக்கு இந்த கட்டுரை மகத்தான பங்களிப்பைச் செய்தது. இயற்கைக்கும், மனிதனுக்கும் இடையிலான உறவும், மனிதர்களுக்கு இடையிலான உறவும் ஆரம்பகால ஆதிமனித வாழ்வில் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்பது குறித்த மிகச்சிறந்த மார்க்சிய ஆய்வு இது.

உழைப்பு மனிதனையே உருவாக்கியது என்று கூறவேண்டிய அளவுக்கு அது மானுடவாழ்வு முழுவதற்கும் முதன்மையான அடிப்படையாக உள்ளது என ஏங்கல்ஸ் அக்கட்டுரையில் விவாதத்தை துவக்குகிறார். மிருகத்தின்கரம் மனிதனின் கரமாக சுதந்திரம் பெற்றது உழைப்பின் வழியேதான். கை உழைப்புக்கான உறுப்பு மட்டுமல்ல உழைப்பின் விளைபயனும் அதுவே. முதலில் உழைப்பு, அடுத்து பேச்சு என்னும் இரண்டு முக்கியமான காரணிகள்தான் மனிதக்குரங்கின் மூளை மனித மூளையாக மாறுவதற்கான காரணிகள் என்றார் ஏங்கல்ஸ்.

வாழ்வதற்கு அவசியமானவைகளை உற்பத்தி செய்வதில் இருந்தே மனித வாழ்க்கை துவங்குகிறது. அத்தகைய உற்பத்தி உழைப்பு வழியாகவே சாத்தியம். உழைப்புக் கருவிகளை செய்வதிலிருந்தே உழைப்பு ஆரம்பமாகிறது. கைகள், பேச்சு உறுப்புகள், மூளை இவற்றின் ஒருங்கிணைப்பான செயல் ஒவ்வொரு சமூகத்தின் உற்பத்தி சக்தியின் அடிப்படையாகிறது. இவை மனிதன் சமூக உறவுகளோடு மட்டுமே வளர்ச்சியடைவதைக் கட்டியமாக்கியது.

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்ற நூலை எழுதும் போது உழைப்பின் பாத்திரம் என்ற தனது கட்டுரையின் நீட்சியாகவே காட்டுமிராண்டி காலத்து மனித சமூக அமைப்பை விளக்குகிறார். மனிதன் மிருக நிலையிலிருந்து மனிதனாக மாறிய போக்கின் இறுதிக்கட்டத்தில் ஆதி மனித கூட்டு வாழ்க்கை அமைந்தது. வேட்டையாடுவதில் வில், அம்பு ஆகியவற்றின் வளர்ச்சி, தீயைப் பயன்படுத்துதல் மற்றும் மொழியின் ஆரம்பம் போன்றவை வெறும் அறிவு முயற்சியின் விளைவுகள் அல்ல. உற்பத்திச் சக்திகிளின் வளர்ச்சியின் முதல்படிகள். இந்த முதல்படிகளை முன்வைத்துதான் மார்கனைக் காட்டிலும் மேலான விளக்கங்களை ஏங்கல்ஸ் வழங்கினார்.

மார்கன் காட்டுமிராண்டி காலகட்டத்தை ஆரம்பகட்டம், இடைநிலைக் கட்டம், வளர்ச்சியடைந்த கட்டம் என மூன்று கட்டங்களாக பிரிக்கிறார். காட்டுமிராண்டி கால கட்டத்தின் முதல் இரண்டு கட்டங்கள் பற்றி உழைப்பின் பாத்திரம் என்ற கட்டுரை வழியே ஏற்கனவே ஏங்கல்ஸ் மிகச்சரியாக சொல்லிச்செல்கிறார்.

ஏட்டில் எழுதப்பட்ட வரலாற்றுக்கு முந்தைய மானுடவியல் மனிதனின் உடலியல் ரீதியான பரிணாம வளர்ச்சியை ஆராய்கிறது. வரலாற்றுக்கு முந்தைய தொல்லியலோ உழைப்பின் மூலம் மனிதன் எவ்வாறு மானுடத்தன்மையை அடைகிறான் என்பதை ஆராய்கிறது. ஒவ்வொரு உழைப்புக் கருவியும் சமூகக் கருவிதான். ஒவ்வொரு மனிதனும் சமூக உயிரிதான் என்றார் கோர்டான் சைல்டு. வேட்டையாடும் வாழ்நிலையில் இருந்து கால்நடை மேய்த்தல் என்ற தொழிலுக்கு மாறுவது உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சி மூலம் மட்டுமே சாதிக்கப்பட்டது. இதிலிருந்து வேளாண்மைக்கு மனித சமூகம் மாறியது.

உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பழைய கற்காலம், புதிய கற்காலம், உலோக காலம் என வரலாற்றுக் கட்டங்களை தொல்லியலாளர்கள் பிரிக்கின்றனர். குடும்பம், உடைமை, நிர்வாகம் முதலியவை இந்த காலங்களில் எவ்விதமாக வளர்ச்சியடைந்தது என்ற மானுடவியல் ஆய்வுகள் இன்று ஏங்கல்ஸின் அடிப்படையான வரையறுப்புகளை உறுதி செய்துள்ளன.

ஏங்கல்ஸ் மார்கனுடைய ஆராய்ச்சி முடிவுகளுக்கு பொருள் முதல்வாத கண்ணோட்டத்தில் விளக்கம் அளிப்பதோடு நிற்கவில்லை.

வரலாற்றியல் பொருள் முதல் வாதத்தின் முக்கியமான விதிகளை நிலைநாட்டுவதில் வெற்றியும் கண்டார். உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி மனித சமூக வளர்ச்சிக்கு அடிப்படை என்பதையும், அவை எவ்வாறு தனிச்சொத்து, வர்க்கங்கள். வர்க்க மோதல்கள் மற்றும் அரசை தோற்றுவித்தன என்பதையும் தனது நூலின் வழியே நிலைநாட்டினார். மார்கனிடம் இந்த புரிதல் இல்லை.

தாய்வழி குலமரபுதான் ஆதி மனித சமூகத்தில் சுய ஒழுங்கமைப்பின் ஆரம்ப வடிவம் என மார்கன் கண்டுரைத்ததை ஏங்கல்ஸ் ஏற்றுக் கொண்டார். தாய்வழிச் சமூகம் தந்தை வழிச் சமூகமாய் மாறும் நிகழ்வுப் போக்கில் இரத்த உறவு மற்றும் திருமண குடும்ப உறவுகள் ஆகியவற்றில் ஏற்படும் முரண்பாடுகள் பற்றிய ஆய்வுகள் ஆரம்ப நிலையில் இருந்த காலத்தில் ஏங்கல்ஸ் முன்வைத்த ஆய்வுரைகள் பலவும் இன்றும் இன்னும் போற்றப்படுவதற்கு அவற்றின் அறிவியல் தன்மைகளே காரணம்.

ஏங்கல்ஸ் குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்ற நூலை எழுதுவதற்கு ஆதாரக் குறிப்புகளை கார்ல் மார்க்ஸ் தனது கடைசி காலத்தில் எழுதிய இனவரைவியல் குறிப்பேடுகள் **(Ethnological Note Books)** பெரிதும் உதவின. ஏங்கல்ஸின் நூல் பெரும்பாலும் மார்க்சின் வரையறுப்புகளை ஒட்டியே எழுதப்பட்டது.

2

காரல் மார்க்ஸ் 1883ஆம் ஆண்டு காலமானார். 1880-82 ஆம் ஆண்டுகளில் அவர் கடைசியாக எழுதியதுதான் இனவரைவியல் குறிப்பேடுகள். அது ஒரு நூலாக எழுதப்படவில்லை. மார்க்ஸ் தனக்குள்ளேயே ஒரு விவாதம் நடத்தும் பழக்கம் கொண்டவர். இனவரைவியல் குறித்த அவருடனான அவரின் விவாதக் குறிப்புகளே இந்த குறிப்பேடுகள் ஆங்கிலம், ஜெர்மனி, பிரெஞ்சு, கிரேக்கம், லத்தீன் ஆகிய ஐந்து மொழிகளில் குறிப்பேடுகள் எழுதப்பட்டுள்ளது. மார்கன் உள்ளிட்ட அந்நாளைய மானுடவியல் அறிஞர்களின் நூல்கள் மீதான மார்க்சின் விமர்சனக் குறிப்புகள் இவை. இந்த குறிப்புகளின் ஒரு பகுதியைத்தான் ஏங்கல்ஸ் தனது குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்ற நூலில் பயன்படுத்தினார். ஆனால் முதலாளித்துவத்துக்கு முந்தைய சமூக அமைப்புகளைப் பற்றிய ஏராளமான விவரங்களும், தெளிவான மார்க்சிய நிலைகளும் அந்த குறிப்பேடுகளில் காணக்கிடக்கின்றன. மார்க்ஸிய மூல இலக்கியத்தின் முக்கியமான நூலாக இது விளங்குகிறது.

ஆனால், இந்த நூல் மார்க்சிய ஆய்வாளர்களால் போதுமான அளவுக்கு விளக்கப்படவில்லை. 1949ல் ருஷ்ய மொழிபெயர்ப்பு வெளியிடப்பட்டது. ஆங்கிலத்தில் 1972ம் ஆண்டுதான் வெளியிடப்பட்டது. லாரன்ஸ் கிரேடர் என்ற போர்த்துகீசிய பேராசிரியர் மிகச்சிறந்த முன்னுரை ஒன்றை எழுதி இந்நூலை முழுமையாக ஆங்கிலத்தில் வெளியிட்டார்.

மார்கன் எழுதிய பண்டைய சமூகம் என்ற நூலின் மீது விரிவான விமர்சனத்தை முன்வைக்கும் மார்க்ஸ், சர் ஜான் பியர், சர் ஹென்றி மெய்னே (இவர் இந்திய காலனிய ஆட்சியின் சட்டங்களை வகுப்பதில் பெரும் பங்காற்றியவர்), சர் ஜான் லூபாக் ஆகிய மானுடவியல் அறிஞர்களின் ஆய்வுகள் மீதும் வலுவான விமர்சனங்களை முன் வைக்கிறார். அவர்களது நூல்களில் காணப்படும் கிறித்துவ மாற்று, காலனிய காலத்து இனவாதம் போன்றவைகளை உறுதியாக நிராகரிக்க மார்க்ஸ் மெய்னேவை மூளையற்ற அற்பவாதி எனவும் லூபாக்கை நாகரீகக் கழுதை எனவும் சாடுகிறார். ஆனால் மார்கனோடு அவருக்கு நிறைய விஷயங்களில் உடன்பாடு இருந்தது. மார்கனின் கடவுளின் கருணையால் மனித இனம் வளர்ச்சியடைந்தது என்ற கற்பனையை மார்க்ஸ் ஏற்கவில்லை. அதே சமயம் தொல்குடி சமூகத்தின் வளர்ச்சிப் போக்கில் தனியுடைமை தோன்றி குடிச் சமூகம் அழிந்ததோடுதான் அரசு தோன்றியது என்று மார்கன் தனது சொந்த மானுடவியல் ஆய்வுகள் மூலம் வந்த முடிவை மார்க்ஸ் போற்றினார். மார்க்ஸ் வளர்த்த பொருள் முதல் வாதம் மார்கனின் கண்டுபிடிப்புகளை தனது சொந்த வழியில் தனதாக்கிக் கொண்டது.

மார்க்ஸின் கடைசி காலம் தற்போது வளரும் நாடுகள் என்று அழைக்கப்படும் நாடுகளின் சமூக அமைப்பு, வரலாறு, குறித்த தேடலில் கழிந்தது. அதற்காக அவர் இந்தியா, சீனா, ஜாவா, எகிப்து போன்ற நாடுகள் குறித்த நூல்களைப் பயின்றார். ருஷ்ய கிராம சமூக வாழ்வு குறித்த ஆய்வுகளை மேற்கொண்டார். இவையாவும் வெறும் ஆய்வு ஆர்வம் கருதி அவர் செய்யவில்லை. சோசலிஸ சமூக அமைப்பு குறித்த அரசியல் அவசியம் கருதியே இத்தகைய ஆய்வு நடத்தப்பட்டது.

அத்தகைய அரசியல் அவசியம் 1871 பாரீஸ் கம்யூன் புரட்சியின் தோல்வியிலிருந்து உருவானது. பாரீஸ் நகரைச் சுற்றி இருந்த விவசாயிகள் தொழிலாளி வர்க்கப் புரட்சியிலிருந்து தனிமைப்பட்டு இருந்தனர். விவசாயிகளோடு அணி சேரவேண்டிய அவசியம் புரட்சிக்கு ஏற்பட்டது. அதற்கு விவசாய சமூகங்களைப் புரிந்து கொள்ள வேண்டியது தேவையானதாகும். அதோடு சோசலிஸ அமைப்பில் தனியுடைமை ஒழிப்பு ஒரு அடிப்படையான நிகழ்ச்சி நிரலாகும். அதனை முதலாளித்துவத்தின் கட்டுமான அமைப்பிலிருந்து பெறமுடியாது. சோசலிஸ கூட்டு வாழ்வுக்கான உடைமை முறையைப் புதியதாகத்தான் உருவாக்க வேண்டும். வர்க்க சமூகத்தின் வரலாற்றில் அதற்கான முன்மாதிரி எதுவும் இல்லை. ஆனால், ஆதி பொதுவுடைமைச் சமூக அமைப்பில் தனியுடைமையும், அரசும் இல்லாத பொதுச் சமூக நிர்வாகம் நிலவியது. அவற்றை ஆராய வேண்டியது சோசலிஸ கட்டுமானத்துக்கான அரசியல் அவசியமாகிறது.

மார்க்ஸின் ஆரம்பகால எழுத்துகளிலேயே புனிதக் குடும்பம் போன்ற நூல்களிலேயே தனி உடைமையற்ற ஆதி பொதுமை

சமூகத்திலிருந்து வர்க்க சமூகமாக சமுதாயம் மாறியது குறிப்பிடப்படுகிறது. வரலாற்றியல் பொருள் முதல் வாதத்தின் அடிப்படைகளில் இது ஒன்று. முதலாளித்துவத்துக்கு முந்தைய சமூகங்கள் குறித்த மார்க்ஸிய வளர்ச்சி தொல்குடிகள், இனக்குழுக்கள் குறித்த வளர்கிற நாடுகளின் சமூக ஆய்விலிருந்து பெறப்பட்டது. இந்தியா உள்ளிட்ட இந்த நாடுகளின் சமூகங்கள் காலனிய ஆட்சியாளர்களால் நாகரீகமற்றவை, மூடத்தனமானவை என வர்ணிக்கப்பட்டு இழிவு படுத்தப்பட்டுடிருந்தது. காலனியச் சுரண்டல் இந்த நாடுகளை நாகரீகப்படுத்துவதாக ஒரு மானுடவியல் உருவாக்கப்பட்டது. அதற்கான இனவாதம் **(Racism)** கோட்பாடு ரீதியாக வளர்க்கப்பட்டது. மார்க்ஸ் இவைகளை உறுதியாக நிராகரித்தார். இனவெறிக் கோட்பாடுகளையும், மதத்தையும், காலனியத்தையும் வலுவாகச் சாடினார்.

இந்திய கிராம சமூகத்தை ஆரிய சமூகமாக பீயர் போன்றவர்கள் வர்ணித்ததை மார்க்ஸ் ஏற்கவில்லை. இந்துக்களை ரோமானியர்களோடு இணை வைத்து தந்தை வழிக்குடும்பங்களின் கூட்டு நிர்வாகமே இந்து ஏற்பாடு என்று விளக்கம் கொடுத்த மேய்னேவின் நிலைகளை மார்க்ஸ் மறுத்தார். ஆரிய இனம் என வரும் இடங்களில் **Arian Race (Again this nonsense)** என மார்க்ஸ் குறிப்பிட்டார். **The devil take this Aryan cant! (Ethnological note Books** பக்கம் *323)* என ஆரிய இனக்கோட்பாட்டை முன்வைத்தவர்களை மார்க்ஸ் சாடினார். இந்திய கூட்டுக் குடும்பம், ஸ்தீரிதானம், வரதட்சணை, சாதிகள் போன்றவைகளைக் கொண்ட இந்திய சமூக அமைப்பின் மீது மார்க்ஸ் தனது குறிப்பேடுகளில் வலுவான கருத்துகளை முன் வைத்துள்ளார். சாதிகள் பற்றிய கோட்பாடுகள் அனைத்தும் பிராமணிய தோற்றுவாயிலிருந்தே பிராமண சாதி மட்டும் இருப்பதை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்படுவதை மார்க்ஸ் ஏற்கவில்லை. காலனிய மானுடவியல் அறிஞர்களின் இத்தகைய சாதி பற்றிய ஆய்வுகளை மார்க்ஸ் நிராகரித்தார். சாதி அமைப்பில் இனக்குழு கூறுகளோடு குடும்பம், சொத்துமுறை, சமூக வேலைப் பிரிவினை போன்ற பல அம்சங்களையும் இணைத்துப் பார்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இந்திய சமூகம் குறித்து மார்க்ஸ் செய்த ஆய்வுகளில் குறிப்பேடுகள் முக்கியமானது ஆகும். ஆனால், குறிப்பேடுகள் குறித்து இன்றுவரை போதுமான அளவு பேசப்படுவதில்லை.

மார்க்ஸின் ஆய்வுகளில் துவக்கப் புள்ளியாய் அமைவது தொல்குடிகளின் இனக்குழு சமூகத்தில் குலம் அல்லது கணம் வகிக்கும் பங்கு பற்றியது. இந்த குலம் அல்லது கணம்தான் சாதியாகவும், வர்க்கமாகவும் மாறியது என்பது மார்க்ஸின் நிலையாகும். ஒரு குலத்தில் மாண்டவரின் வாரிசுரிமை குலத்துக்குள்ளேயே பகிர்ந்து அளிக்கப்பட்டது என்பதில் இருந்துதான் தனியுடைமையின் கருமுளை **(Worm in the bud)** உள்ளது என மார்க்ஸ் குறிப்பிட்டார். **(Note Books** பக்கம் *128)* அத்தகைய கண வாழ்வில் குடும்பம் என ஒன்று இன்னமும் உருவாகி விடவில்லை. சொத்துடைமை முறையின் வளர்ச்சியிலிருந்துதான் குடும்பம் உருவாகிறது. அதனைத் தொடர்ந்து அரசு என்ற நிறுவனம் ஏற்படுத்தப்படுகிறது.

மார்கனின் இருகுவாய் இனங்கள் மீதான ஆய்வுகளில் இருகுவாய் பெண்கள் மிகுந்த சமூக நிர்வாக ஈடுபாடும், சுதந்திரமும் கொண்டு விளங்கியதைப் போற்றிய மார்க்ஸ் எந்த நாகரீக நாட்டைக் காட்டிலும் மிகவும் முன்னேறிய ஒன்று இது எனப் போற்றினார். சோசலிஸத்துக்கான புதிய சமூக அமைப்பு தொல்குடி சமூக மாடல்களிலிருந்து மேம்பட்ட அவற்றின் மறுமலர்ச்சியாக **(Revival)** இருக்கும் (குறிப்பேடுகள் பக்கம் 107) என்று மார்க்ஸ் குறிப்பிடுவது மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். சோசலிஸத்துக்கான மானுடவியல் ஆய்வுகளின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது. கீழ்நிலையிலிருந்து உயர்நிலைக்கு பொதுவுடைமை முறையை மறு ஆக்கம் **(Revival)** செய்வது என்ற மார்க்ஸின் இந்த வரையறுப்பு வளர்முக நாடுகளின் சோசலிஸத்துக்கு அவசியமானதாகும். இவை இழந்த சுவர்கத்தை மீட்பது என்ற அடிப்படையில் அமையாமல் முதலாளித்துவத்தைக் காட்டிலும் மேலான சமூகத்தை, சமத்துவ சமூகத்தைக் கட்டியமைப்பது பற்றிய நடைமுறை அறிவியல் பிரச்சினையாகும்.

இந்தியாவை ஆங்கிலேயர் காலனியாக ஆக்கியது, சீனாவைப் பிடித்தது, அல்ஜீரியாவை பிரான்ஸ் காலனியாக்கியது, அமெரிக்க தொல்குடிகள் அழிக்கப்பட்டது போன்றவைகளை மார்க்ஸ் தன் வாழ்நாளிலேயே கண்ணுற்றார். மூலதனத்தின் நலனுக்கு இவை எவ்வாறு சேவை செய்ய கட்டாயப்படுத்தப்பட்டன என்பதை ஆராய்ந்தார். நாகரிகம் பற்றிய முதலாளித்துவப் புரட்டுகளும், கொடுமைகளும் நிரம்பிய வரையறுப்புகளை மறுத்து நாகரிகம் பற்றிய கம்யூனிஸ்ட் கோட்பாடுகளை விளக்க ஆதி சமூகத்தின் வாழ்நிலையிலிருந்து தனது ஆய்வுகளைத் தொடங்கினார். உற்பத்தியையும் விநியோக முறையையும் கூட்டுறவுத் தன்மையோடு செய்திட பழைய இனக்குழு வாழ்வின் வழிமுறைகளை துவக்கமாகக் கொண்டு சோசலிஸ திசை வழியில் வளர்க்கவேண்டும் என மார்க்ஸ் 1881ல் எழுதினார்.

1881 மார்ச் 8ல் ருஷ்ய புரட்சியாளர்களில் ஒருவரான வேரா ஜாசுலிச்சுக்கு எழுதிய கடிதத்தில் அத்தகைய முயற்சியில் எச்சரிக்கை தேவை என குறிப்பிட்டார். தொல்குடி சமூக வாழ்வின் தீமைகள் களையப்பட்டு இயல்பான வளர்ச்சிக்குரிய சரியான நிலைகளை உறுதி செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தினார். பழைய ஆதி பொதுமை சமூக அமைப்பை மீட்டமைப்பதோ அல்லது பாதுகாப்பதோ இங்கு முன் மொழியப்படவில்லை. அத்தகைய சமூக அமைப்பு ஏற்கனவே அழிக்கப்பட்டுவிட்டது. முதலாளித்துவத்தால் சிதைக்கப்பட்ட வடிவங்களே தற்போது உள்ளவை. அவைகளின் வரலாற்று முக்கியத்துவம் அவற்றின் கூட்டுறவு கூறுகளில் **(Collective element)** உள்ளது.

மார்க்ஸின் குறிப்பேடுகள் மானுடவியல் ஆய்வு முறையியலுக்கு பெரும் பங்களிப்பு செய்கிறது. வெனிசுலாவின் கடலோரப் பழங்குடிகள் தொடங்கி தென்னிந்தியப் பழங்குடிகள் வரை உலகெங்கும் உள்ள

பழங்குடிகள் பற்றிய குறிப்புகளை மார்க்ஸ் தனது குறிப்பேடுகளில் ஆராய்கிறார். குலக்குறிகள், பழங்குடி மொழிகள், நம்பிக்கைகள், வழிபாடுகள் குறித்தெல்லாம் குறிப்பேடுகள் பேசுகிறது. புதிய கண்டுபிடிப்புகள் தனது பழைய கருத்தை மாற்றிக் கொள்ள நிர்பந்திக்குமானால் மார்க்ஸ் எந்த தயக்கமுமின்றி உடனடியாக அறிவியலுக்கு தலைவணங்கினார். இனக்குழுவாழ்வில் கண (குல) வாழ்க்கைத்தானே தவிர - குடும்ப வாழ்வு என ஒன்று இல்லை என்ற மார்கனின் கண்டுபிடிப்பு காரணமாக அவர் குடும்பம் பற்றிய தனது முந்தைய கருத்தை மாற்றிக் கொண்டார். மார்க்சியத்தின் உள்ளாற்றல்களில் இதுவும் ஒன்று.

3

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் எனும் நூல் ஒன்பது அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. முதல் அத்தியாயம் வரலாற்றுக்கு முந்தைய கட்டங்கள் என்ற தலைப்புடையது. காட்டுமிராண்டி நிலை, பண்பாடற்ற நிலை ஆகியவற்றின் வழியே பண்பாட்டு நிலைக்கு மனிதகுலம் மாறியதாக மார்கன் வகுத்த முறையை ஏங்கல்ஸ் அப்படியே எடுத்துக் கொள்கிறார். மார்கன் இத்தகைய வளர்ச்சியை இறைவனின் அருளால் ஏற்பட்டது என்கிறார். இவை உற்பத்தி முறையின் வளர்ச்சிப்போக்கில் நேரடியாக பெறப்பட்டவை என ஏங்கல்ஸ் விளக்குகிறார். காட்டுமிராண்டி கட்டத்திலிருந்து பண்பாட்டு கட்டத்துக்கு மாறி செல்லும் மனித குலத்தின் பயணத்தை விளங்குவதற்கு இவை மட்டும் போதாது. அதற்குரிய அறிவியல் மேலும் வளர வேண்டும் என ஒப்புக் கொண்ட ஏங்கல்ஸ் வரலாற்றுக்கு முந்தைய மூன்று கட்டங்களையும் கீழ்கண்டவாறு விளக்குகிறார்.

காட்டுமிராண்டிக் கால கட்டம்	-	பூர்வீக கூட்டு வாழ்வின் தோற்றமும், வளர்ச்சியும்
பண்பாடற்ற நிலை	-	குல மரபுச் சமூகத்திலிருந்து வர்க்கங்களை நோக்கிய மாற்றம்.
பண்பாட்டு நிலை	-	இயற்கையின் பொருட்கள் மீது உழைப்பை செலுத்துவதில் முன்னேற்றம், கலையும், தொழிலும் வளர்ச்சியடைந்த வர்க்க சமூக அமைப்பு நிலை பெற்ற கால கட்டம்.

இரண்டாவது அத்தியாயம் குடும்பம் பற்றியது. மந்தை வாழ்விலிருந்து சமூக வாழ்வுக்கு மனிதன் மாறிய கால கட்டத்தில் குடும்ப அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்து ஏங்கல்ஸ் விளக்குகிறார். குடும்பம் என்ற அமைப்பின் வரலாறு ஒருதார மணத்தை நோக்கிய அதன் பயணம் இந்த அத்தியாயத்தில் விளக்கப்படுகிறது. பண்பாட்டு கட்டத்தில் வளர்ச்சியடைந்த சமூக நிறுவனங்கள் குறித்த வரலாற்றோடு குடும்பத்தின் வரலாறு எவ்வாறு இணைந்து சென்றது என்பதை விளக்குகிறார்.

முதலாளித்துவ புரட்சிகளின்போது சுதந்திரமான சமத்துவமான மனிதர்களைப் படைப்பதே முதலாளித்துவத்தின் நோக்கமாக அறிவிக்கப்பட்டது. ஆனால், முதலாளித்துவ உற்பத்தி முறையின் கீழும் வர்க்கப் போராட்டம் நிலவுவதன் காரணமாக திருமணங்களும் வர்க்கத் திருமணங்களாகவே அமைந்துவிடுகின்றன என்றார் ஏங்கல்ஸ். தனது துணையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை சுதந்திரம் முதலாளித்துவ சொத்துமுறைகளை சோசலிச அடிப்படையில் மாற்றியமைப்பதில்தான் உள்ளது என்றும் பெண்ணின் சமத்துவம் இதிலேதான் உருவாகும் என்றும் இந்த அத்தியாயம் கூறுகிறது.

அடுத்த மூன்று அத்தியாயங்கள் குலமரபுமுறை பழங்குடிகள் மத்தியில் நிலவும் கணங்கள் பற்றியும் கிரேக்க சமுதாயத்து கணங்கள் பற்றியும் ஆய்வு நடத்தப்படுகிறது. இனக்குழு அமைப்பின் நிர்வாக ஏற்பாடுகள் விவாதிக்கப்படுகிறது. கிரேக்க சமூகத்தில் பழங்குடிகள் ஒன்றிணைத்து ஒரு நாடாக மாறிய வளர்ச்சிப்போக்கு, தாய்வழி உரிமைச்சமூகத்தில் இருந்து தந்தை வழி உரிமைச் சமூகமாக மாறியதன் பொருளாதார அடிப்படைகள் ஆகியவை விளக்கப்படுகின்றன. ரோமபுரி அரசு குல மரபின் சிதைவிலிருந்து எவ்வாறு தோன்றியது என்பதும் விளக்கப்படுகிறது.

அடுத்து வரும் மூன்று அத்தியாயங்கள் கிரேக்கர்கள் (ரோமானியர்கள்) மத்தியிலும், ஜெர்மனியிலும் அரசு எவ்வாறு தோன்றியது என்பது விளக்கப்படுகிறது. அரசு எந்திரத்தின் உள்கட்டமைப்புகளின் தோற்றுவாய்கள் விளக்கப்படுகின்றன. குலத்தின் வெவ்வேறு உறுப்புகளில் இருந்து அரசு தோன்றியது. சமூகம் குல அமைப்பிலிருந்து அரசியல் அமைப்புக்கு மாறியது. இவை உடைமை முறையில் மாற்றம் ஏற்பட்ட தோடும், சமூகத்தின் உபரியை பகிர்வது பற்றியதோடும், வர்த்தகத்தின் வளர்ச்சி பற்றியதோடும் இணைந்தே வளர்ந்தது. வரலாற்றில் ஆதிக்க வர்க்கம் ஒன்று தோன்றியபோது அதற்கு அரசு அவசியமாக இருந்தது. இரும்புக்காலம் வேளாண்மையை வளர்த்ததோடு, அரசு அதிகாரத்துக்கான கொலை ஆயுதங்களையும் படைத்ததன் மூலம் இனக்குழு தன்மைகளில் இருந்து விடுபட்ட படை ஒன்று உருவாக வழி ஏற்படுத்தியது.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியின் விளைவாக பழைய குலச்சமூக ஏற்பாடு அழிந்து அதிலிருந்து வர்க்கச் சமூக ஏற்பாடு முகிழ்ந்தது. இந்த வர்க்கங்களுக்கிடையே ஆன பகைமைகள் இணக்கம் காண முடியாதவை ஆனதன் விளைவும் வெளியீடுமே அரசு எங்கே, எப்பொழுது, எந்த அளவுக்கு வர்க்கப் பகைமைகள் புறநிலைக் காரணங்களால் இணக்கம் காணமுடியாதவை ஆகின்றனவோ அங்கே, அப்பொழுது, அந்த அளவுக்கு அரசு உதித்தெழுகிறது என்றார் லெனின். அரசு பற்றிய புரட்சிகர கண்ணோட்டம் இந்த நூல் வழியே வளர்க்கப்பட்டது என லெனின் இந்த நூலை வெகுவாகப் புகழ்ந்தார்.

நூலின் கடைசி அத்தியாயம் பண்பாடற்ற நிலையில் இருந்து பண்பாட்டுக் கட்டத்துக்கு மனித சமூகம் மாறிச் சென்றதின் அடிப்படைக் காரணியான பொருளாதார வாழ்க்கையின் வளர்ச்சிப் போக்கை எடுத்துரைக்கிறது. கால்நடை மேய்ப்புச் சமூகங்கள் அதற்கு முந்தைய சமூகங்களில் இருந்து பிரிந்தது வரலாற்றில் முதலாவது பெரும் சமூக வேலைப் பிரிவினையாகும். துணி நெசவும், உலோகத் தொழிலும் இக்காலத்தில் வளர்கிறது. வர்த்தகம் தோன்றியது. கால்நடை வளர்ப்பு வேளாண்மை, கைவினைத் தொழில்களின் வளர்ச்சியின் விளைவாக சமூகம் வர்க்கங்களாக பிளவுபட்டது. உழைப்பின் உபரியை ஆண் அனுபவித்தான். பெண் அடிமையாக்கப்பட்டாள். கைவினைத் தொழில் வேளாண்மையில் இருந்து பிரிக்கப்பட்டு நகர கிராம வேறுபாடு தோன்றியது. அரசும் தன் உள்ளமைப்புகளும் தோன்றியது. அரசும் அதன் உள்ளமைப்புகளும் தோன்றின. எனவே, அரசு எக்காலத்திலும் இருந்ததொன்றல்ல, அரசு இல்லாமலேயே சமூகங்கள் இயங்கிய காலமும் இருந்தது. அரசு நீடித்து இருப்பதற்கான அவசியம் வர்க்கங்கள் நிலவுவதோடு தொடர்புடையது. வர்க்கங்கள் அற்ற ஒரு மேலான சமூகத்தில் (கம்யூனிச சமூகம்) அரசு இல்லாமல் போய்விடும் என ஏங்கல்ஸ் பிரகடனப்படுத்துகிறார்.

4

இரத்த உறவுமுறையிலிருந்தே குடும்பத்தின் வரலாறு தொடங்குகிறது. வரைமுறையற்ற பாலுறவு என்ற மிருகக் குடும்பத்திலிருந்து முழுமையாக பூர்வீக மனித சமூகம் தன்னை விடுவித்துக் கொண்டதிலிருந்து குடும்பம் என்ற நிறுவனத்தின் வரலாற்றை ஏங்கல்ஸ் முன் வைக்கிறார். மிருக உலகத்திலிருந்து சமூக உலகத்துக்கு மாறிச் செல்வதற்கு பூர்வீக மனிதர்கள் நீண்ட மாறுதல் கட்டத்தில் வாழ்ந்தனர். இந்த கட்டத்தை வலியுறுத்துவதற்காக குழுமண முறையைப் பற்றி தனது நூலின் மறுபதிப்பு 1891ல் வெளிவந்த போது இணைத்தார். மார்கன் முன்வைத்த ஹவாய் தீவுகளில் காணப்பட்ட இரத்த உறவு குடும்பங்கள், இணைக்குடும்பங்கள், ஏங்கல்ஸ் முன் வைத்த குழுமண முறை போன்றவைகள் மானிடவியல் ஆய்வுகளின் வளர்ச்சியால் புதிய விளக்கங்களுக்கு உள்ளாகியுள்ளது. சில மானுடவியல் அறிஞர்கள் ஏங்கல்ஸ் செய்த தவறுகள் பற்றி உரக்கப் பேசினாலும் அவை சிறுவிவரத் தவறுகளே ஆகும். குடும்பம் என்ற நிறுவனத்தின் வரலாறு சொத்துடமையின் வளர்ச்சியோடும், சமூக வேலைப் பிரிவினையின் வளர்ச்சியோடும் (உற்பத்திச் சக்தி மற்றும் உற்பத்தி உறவுகள்) நேரடி தொடர்பு கொண்டது என்பதை இன்றைய மானுடவியல் அறிவு வலுப்படுத்தியுள்ளது.

வேட்டையாடும் சமூகத்தின் பெண்ணுக்கும், வேளாண் சமூகத்தின் பெண்ணும் இடையிலான பெண்மை வேறுபாடு உற்பத்திமுறை பற்றியதாகவே உள்ளது. ஆதி வேளாண் சமூகம்

வரையிலான மனித சமூகத்தின் வளர்ச்சியில் உற்பத்தியிலும், மறு உற்பத்தியிலும் பெண் மையமான இடத்தில் இருந்தாள். ஆனால், பெருவீத விவசாயம், நகரங்கள் வளர்ச்சி, இனக்குழு வாழ்விலிருந்து வர்க்க வாழ்வுக்கு மாறுதல் ஆகியவை காரணமாய் ஏற்பட்ட மாற்றத்தால் தாய்வழிச் சமூகம் மறைந்து ஆணாதிக்க தந்தை வழிச் சமூகம் உருவானது. ஆண் வழி ஒருதார மணம் மீதான குடும்பம் ஏற்பட்டது. பெண் என்றென்றைக்கும் அடிமையாக்கப்பட்ட நிகழ்வுப் போக்கு தொடங்கியது. உற்பத்திச் சாதனங்களின் வளர்ச்சி குடும்ப வடிவங்களிலும், பெண் மீதான ஒடுக்குமுறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியது. அடிமைச் சமுதாயத்திலும், நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலும் நிலவிய குடும்ப வடிவங்கள் அந்த சமூக ஏற்பாட்டின் பொதுவரையறைக்கும், பொருளாதார நலனுக்கும், வர்க்க வாழ்நிலைக்கும் உட்பட்டதேயாகும். ஆண், பெண் பற்றிய சமூக மதிப்புகள் இதிலிருந்தே தோன்றுகின்றன.

மார்க்சியத்தின் இந்த பொதுவான வரையறை ஏங்கல்ஸ் முன் வைத்தது. அது இன்றைய மானுடவியல் ஆய்வுகளின் வளர்ச்சியால் பெரிதும் உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போதைய பெண்ணியவாதிகளின் கோரிக்கைகள் உலகமய முதலாளித்துவ வளர்ச்சி பின்னணியில் புரிந்து கொள்ளப்பட வேண்டும். பெண்மையின் நீண்ட வரலாற்றுப் பயணத்தின் இன்றைய கட்டமாக புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

பெண்கள் மீதான ஒடுக்குமுறை உலகம் முழுவதும் எல்லா சமூகங்களிலும் ஒரே மாதிரியாக அமையவில்லை. ஒவ்வொரு பகுதியிலும் இருந்த இனக்குழு சமூகங்களின் வளர்ச்சி நிலை, தனித்த இயல்புகளுக்கு ஏற்ப வர்க்க சமூகம் ஏற்படும் போது பாலின ஒடுக்குமுறையும் பலவகை வடிவங்களை அடைந்தது. எனவே, வேறுபட்ட தன்மையிலான குடும்ப வடிவங்களையும், அறியமுடியும். அவை உடைமை வடிவங்களோடு தொடர்புடையதாகவே அமைந்தன. இனக்குழு மற்றும் கூட்டு சமூகத்தைச் சேர்ந்த வடிவங்கள் பின்னர் குடும்ப மற்றும் தனி உடைமை வடிவங்களாக வளர்ச்சியடைந்தன.

ஏங்கல்ஸ் காட்டுமிராண்டி நிலையின் உடைமை உறவை குலமரபு உடைமையாகவும், பண்பாடற்ற நிலையின் உடைமை உறவைத் தனியாக பிரிக்கப்பட்ட உடைமையாகவும், நாகரிக நிலையில் தனி உடைமையாகவும் வகைப்படுத்துகிறார். ஏங்கல்ஸ் முன்வைக்கும் தனியாக பிரிக்கப்பட்ட உடைமை என்ற சொற்றொடர் கூட்டுடைமை மற்றும் தனியுடைமைக்கு இடையில் இருக்கும் ஒன்றாகும். கால்நடை வளர்ப்புச் சமூகத்திலிருந்து வேளாண் சமூகத்துக்கு மாறிச் செல்லும் போக்கில் புதிய உற்பத்தித்துறைகளின் வளர்ச்சியால் இப்படியானதொரு இடைப்பட்ட உடைமை உறவை ஏங்கல்ஸ் முன்மொழிகிறார். பரிவர்த்தனையின் வளர்ச்சி இதனை ஊக்குவித்தது. இவை தனியுடைமையை நோக்கி, சிறு தனித்த குடும்பங்களின் வளர்ச்சியை நோக்கி நகர்ந்தன.

உபரியான உற்பத்தியும், சந்தைக்கான உற்பத்தி நோக்கமும் பழைய குலமரபு அமைப்பில் பிளவுகளை உண்டாக்கியது. இங்கே

தனிப்பட்ட குடும்பம் ஒரு பொருளாதார சக்தியாகிவிட்டது என்கிறார் ஏங்கல்ஸ். இதுதான் தாய்வழிக்குலத்திலிருந்து தந்தை வழி குடும்பத்துக்கு மாறுவதற்கான பொருளாதார முன் நிபந்தனை ஆயிற்று.

பண்டையத் தமிழ்ச் சமூகத்தின் வரலாறு இந்த கட்டத்தின் வளர்ச்சியைச் சங்க இலக்கியங்கள் வழியே சிறப்பாக வெளிப்படுத்துகிறது. சங்க இலக்கியங்கள் தமிழ்ச் சமூகம் வர்க்க சமூகமாக மாறுகிற மாறுதல் காலத்தின் பிரச்சினைகளையே முன்வைக்கிறது. இனக்குழுவின் குல மரபு அழிவும் அதனிடத்தில் தனியுடைமையின் தோற்றமும் அவற்றில் விவரிக்கப்படுகிறது. அதே சமயத்தில் ஒருதார மணம், தனிக்குடும்பம் என்பதை நோக்கிய நீண்ட போராட்டம் சங்க காலத்தில் துவக்கி வைக்கப்படுகிறது. சங்க இலக்கியங்கள் மற்றும் சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள் போன்றவை வழியாக தமிழ்ச் சமூகத்தின் ஒருதாரமான குடும்ப ஆக்கத்துக்கான போராட்டத்தை அறிய இயலும். சங்க இலக்கியங்களில் முன்வைக்கப்படும் அகவாழ்வும், புறவாழ்வும் உடைமைமுறை, குடும்ப முறையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு நெடிய போராட்டமே பதிவு செய்யப்படுகிறது. சமண, பௌத்த இலக்கியங்கள் தமது அறக்கோட்பாடுகள் படியே சிலவற்றை நெறிப்படுத்த முயன்றன. இந்த போராட்டத்தின் இறுதியில் குலச் சமூகம் அழிந்து சாதிய, வர்க்க சமூகம் உதித்தெழுந்தது. இவை உற்பத்தி முறையின் தனித்தன்மைகளுக்கு ஆதாரமாயின.

5

குடும்பம் பற்றிய பிரச்சினை மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோரின் ஆரம்பகால படைப்புகளிலேயே ஆராயப்படுகிறது. அவை, அவர்கள் எதிர்கொண்ட முதலாளித்துவ சமூகத்தின் குடும்ப உறவுகள் பற்றியதாகவே அமைந்தது. புனித குடும்பம், இங்கிலாந்தில் தொழிலாளர் வர்க்கத்தின் நிலை முதலிய நூல்களில் குடும்பத்தின் அழிவு பற்றி அவர்கள் குறிப்பிட்டிருந்தாலும் பின்னாளில் அவை தவறானவை என ஏங்கல்ஸ் குறிப்பிட்டு நிராகரித்தார். வரலாற்றியல் பொருள் முதல்வாதத்தின் வளர்ச்சியில் குடும்பம் பற்றிய பிரச்சினையில் தெளிவு ஏற்பட மார்கனின் நூல் வெளியிடப்படும் வரை காலம் தேவைப்பட்டது.

1848 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் முதலாளித்துவ உறவுகளின் விளைவாக குடும்ப உறவுகள் எவ்வாறு சிதைக்கப்பட்டன என்பது குறித்தும் பெண்களை பொதுவுடைமையாளர்கள் ஆட்சியில் பொதுவுடையாக்குவார்கள் என்ற முதலாளித்துவ அவதூறுக்கும் பதிலடியாகவும் கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றன.

குடும்பத்திடமிருந்து முதலாளித்துவ வர்க்கம் அதன் உணர்ச்சி நய முகத்திரையைக் கிழித்தெறிந்து குடும்ப உறவை வெறும் பண உறவாய் சிறுமையுறச் செய்துவிட்டது?

இக்காலத்துக் குடும்பத்துக்கு, முதலாளித்துவக் குடும்பத்துக்கு அடிப்படையாய் அமைவது எது? மூலதனம்தான். தனியார் லாபம் தான்.

இந்தக் குடும்பம் அதன் முழு வளர்ச்சியாலுமான வடிவில் முதலாளித்துவ வர்க்கத்தையே மட்டும்தான் இருந்து வருகிறது. ஆனால் இந்த நிலைமையின் உடன் நிகழ்வாய் குடும்ப வாழ்வு பாட்டாளிகளிடத்தே அனேகமாய் அற்றுப் போயிருப்பதையும், பொதுநிலையிலான விபச்சாரத்தையும் காண்கிறோம்.

முதலாளித்துவக் குடும்பத்தின் உடன் நிகழ்வு மறையும் போது கூடவே முதலாளித்துவக் குடும்பமும் இயல்பாகவே மறைந்து போகும் மூலதனம் மறையும் போது இரண்டும் மறைந்துவிடும்? (கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கை)

பதினெட்டாம் நூற்றாண்டு குடும்பத்தின் உள் உறவுகளாலான பாகம், கீழ்படிதல், மணஉறவின் உறுதித்தன்மை முதலியவை சரக்கு உற்பத்தி முறையில் நொறுங்கிவிட்டது? என்றாலும் குடும்பத்தின் உண்மையான அமைப்பாக விளங்கும் சொத்துடைமை உறவுகள், பிற குடும்பத்தின் மீதான அணுகுமுறை, குழந்தை வளர்ப்பு முதலியவை நகரங்களின் வளர்ச்சியாலும், மூலதனத்தின் வளர்ச்சியாலும் மாற்றியமைக்கப்பட்டுவிட்டது என்று மார்க்ஸ் அந்த சமயத்தில் எழுதினார்.

மார்க்சும், ஏங்கல்சும் எந்த கட்டத்திலும் குடும்பம் என்ற அமைப்பின் அழிவுப்பற்றி பேசவில்லை. அவர்கள் பேசியதெல்லாம் நிலப்பிரபுத்துவ குடும்பம் முதலாளித்துவத்தால் அழிவது பற்றியும், முதலாளித்துவத்தின் கீழ் குடும்பத்தின் பெற்றோர் கடமை பற்றிய புரிதல் பொருளாதார அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்பதும் தான்.

முதலாளித்துவ சமூகத்தின் சமூக ரீதியான உற்பத்தி நடவடிக்கையால் வீட்டுக்கு வெளியே பெண்களும், குழந்தைகளும் பெருவீத தொழில் முறையால் வேலை வாங்கப்படும் போது பழைய குடும்பமுறை மிக மோசமான முறையில், மிகக் கொடூரமான முறையில் உடைத்து நொறுக்கப்பட்டு விடுகிறது. அதனிடத்தில் பாலினங்களுக்கு இடையிலான புதிய வகை உறவுகளுக்கும், மேலான குடும்ப வடிவத்துக்குமான புதிய பொருளாதார அடித்தளம் உருவாக்கப்பட்டுவிடுகிறது. அதனால்தான் கிறித்துவ டியூடானிய குடும்ப வடிவத்தையோ, செவ்வியல் தன்மையான ரோமானிய குடும்ப வடிவத்தையோ அல்லது செவ்வியல் கிரேக்க குடும்ப வடிவத்தையோ அல்லது கீழைய தேயங்களின் குடும்ப வடிவங்களையோ முழுமையானது எனக் கருதுவது மடமையானதாகும். அவை எதுவும் வரலாற்றுப் பூர்வமான தொடர்புகளால் வளர்ச்சியடைந்தவையே ஆகும். (மூலதனம், தொகுதி 1, பக்கம் 460, முன்னேற்றப் பதிப்பகம், ஆங்கில பதிப்பு)

ஏங்கல்ஸ் குடும்பம் பற்றிய நுலை எழுதுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே மார்க்ஸ் இவ்வாறு குறிப்பிட்டு உள்ளதை கவனத்தில் கொள்ளாமல் குடும்பம் பற்றிய பிரச்சினையில் மார்க்சியத்துக்கு

தவறான பார்வையே இருந்ததாக இன்னமும் சில மேதாவிகள் குற்றம் சாட்டவே செய்கின்றனர்.

வரலாற்றியல் பொருள் முதல் வாதத்திலும், அரசியல் பொருளாதாரத்திலும் குடும்பம் பற்றிய பிரச்சனையின் அடிப்படைகள் போதுமான அளவு மார்க்சிய நிலையில் வளர்க்கப்பட்டிருந்தன. ஆனால் அது துல்லியமான தெளிவையும், போதுமான வளர்ச்சியையும் அடைந்தது மார்கனின் மானுடவியல் ஆய்வுகள் வெளி வந்த பிறகுதான்.

குடும்பத்தின் தோற்றுவாய் குறித்த ஏங்கல்சின் நூல் குடும்பம் பற்றிய மானுடவியல் ஆய்வுக்கு கீழ்க்கண்ட அடிப்படை கருத்தியல்களை வழங்கியது.

குடும்பம் என்பது ஒன்றும் தெய்வீகமான இயற்கையான நிறுவனமல்ல. அது நெகிழ்வுள்ள மாறும் தன்மையுடைய பண்பாட்டு வரலாற்றின் விளைவே ஆகும்.

குடும்பத்தின் வடிவமும், செயல்பாடும் காலத்துக்கு காலம், நாட்டுக்கு நாடு, வர்க்கத்துக்கு வர்க்கம் வேறுபட்டதாகவே இருக்கும். சமூகம் குடும்பத்தின் மீது சுமத்தும் கடமைகளையே அது செய்கிறது. குடும்பத்தின் சமூக பொருளாதார, உற்பத்தி தொழில்நுட்ப, சட்ட மற்றும் சமய அமைப்புகளின் உள்ளடக்கத்தோடுதான் ஆராயவேண்டும்.

உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றங்களால் உற்பத்தி உறவுகளில் மாற்றம் ஏற்படுகிறது. அதனைத் தொடர்ந்து குடும்பம் உள்ளிட்ட சமூக உறவுகளில் திருத்தங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

குடும்ப உறவுகளின் வகைகள் விரைவான மாறுதலுக்கு உட்படாதவை. அவை உற்பத்தி உறவுகளின் மாற்றங்களுக்கு ஏற்ப தகவமைத்துக் கொள்ளவே செய்யும், முந்தைய காலத்தின் பழக்கங்களையும், மரபுகளையும் அதில் தொடரவே முயலும்.

குடும்பத்தில் காணப்படும் பாலினங்களுக்கிடையே ஆன உழைப்புப் பிரிவினை எல்லா சமூகங்களின் பொது இயல்பு ஆகும்.

குடும்பத்தில் காணப்படும் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான அதிகாரம், கடமைகள், உடமைகள் உறவுகள் போன்றவை உற்பத்தி போக்கில் அவர்கள் வகிக்கும் இடத்தைப் பொறுத்தே அமைகிறதுழ. இவை உற்பத்திக் கருவிகள் மீதான உடமையைச் சார்ந்தே உள்ளது.

ஆணுக்கும் பெண்ணுக்குமான சமூக உழைப்பில் சமநிலை காணப்படும் போது பாலின சமத்துவம் நிலவுகிறது. ஆரம்பகால சமூகத்தில் இதுவே நிலை.

மிருகங்களைப் பழக்கப்படுத்துவது, கால்நடைகளை அபிவிருத்தி செய்வது, ஆதி வேளாண்மை முதலியவை தோன்றிய போது தந்தைவழிச் சமூகம் உருவானது. இவை புதிய சமூக உறவுகளை உருவாக்கியது. குடும்பத்தில் ஏற்பட்ட புதிய உழைப்பு பிரிவினை காரணமாக ஆண்கள்

உற்பத்திக் கருவிகள் மற்றும் செல்வங்களின் உடைமையாளர்கள் ஆனார்கள். பெண்கள் அடிமை ஆனார்கள்.

ஆணாதிக்க சமூகத்தின் குடும்பத்தில் சுதந்திரமான தனிமனித காதல் அரிதானவே ஆகும். தந்தை வழி ஒருதாரக் குடும்பம் ஆணை தலைவனாக்கும் பொருளாதார நோக்கத்தைக் கொண்டதே ஆகும். செல்வமும், குழந்தைகளும் அவனுடைய உடைமைகளே.

குடும்ப விதிகள் என்பது கடந்தகால, நிகழ்கால உடைமை உறவுகளின் பண்பாட்டு பிரதிபலிப்பே ஆகும்.

பெண் விடுதலை என்பது உடைமை மீதான அதிகாரத்தில் பெண்களின் பங்கு பற்றிய பிரச்சினையிலிருந்தே தொடங்குகிறது. தொழில்நுட்ப வளர்ச்சியின் விளைவாக ஏற்படும் சமூக உழைப்பு பிரிவினையின் மாற்றங்கள் ஆண்களுக்கு மட்டுமே ஆன துறைகளை அழிப்பதோடு குடும்ப உறவுகளில் அது பிரதிபலிக்கவும் செய்கிறது.

பெண்களின் முழு விடுதலை பொருளாதார நிபந்தனைகள் எதுமில்லாத காதல் அடிப்படையிலான உண்மையான ஒருதார மணத்தை உருவாக்கும்.

குலம், இனம் ஆகியவற்றின் வழியே தனியுடைமை தோற்றம் மற்றும் அரசு ஆக்கம் போன்ற வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் ஊடே தான் குடும்பம் என்ற நிறுவனம் நிலை கொள்கிறது. நிலப்பிரபுத்துவ காலம் வரை பொருளாதாரமல்லாத உறவுகளால் மாபுகளால் பிணைக்கப்பட்ட குடும்ப உறவுகள் முதலாளித்துவ சமூகத்தில் சரக்கு, பண உறவின் தாக்கத்தால் வெளிப்படையான பொருளாதாரத் தன்மையைப் பெறுகிறது. பொது உடைமையின் வளர்ச்சி மேலான குடும்ப வடிவத்துக்கு வழி ஏற்படுத்துவதோடு சுதந்திர மனிதர்களின் காதல் அடிப்படையிலான ஒருதார மண குடும்பங்களுக்கு உரிய சகாப்தமாகவும் ஆகிறது.

மார்க்சிய மானுடவியல் முன்வைக்கும் இத்தகைய கருத்தியல்கள் குடும்பம் பற்றிய மானுடவியல் ஆய்வுகளுக்கு தேவைப்படும் அறிவியல் அணுகுமுறையை வழங்குகிறது. பண்பாடு குறித்த பொருள் முதல்வாதப் பார்வையை வழங்குகிறது.

5

குலம் என்ற அமைப்பின் சிதைவில் இருந்து அரசு தோன்றியது. குலத்தின் வெவ்வேறு உறுப்புகளில் இருந்து அரசு அதிகாரம் உருவானது என்பது அரசின் தோற்றுவாயின் ஓர் அம்சம் மட்டுமே. வர்க்க, சமூக இணைப்பு பல குடும்பங்களை ஒருங்கிணைத்தது. கைத்தொழில்களின் வளர்ச்சி, வேளாண்மையைத் தனித் தொழிலாக பிரித்தது. இவை காரணமாக இரத்த உறவுமுறைகள் பலவீனமடைந்தன. பொருளாதார அடிப்படையில் மக்கள் புதிய குழுக்களாக பிரியத் தொடங்கினர். இதன் வழியே வர்க்கங்கள் தோன்றின. இந்த வர்க்கங்கள் மோதிக் கொண்டன.

உடைமை பற்றிய பிரச்சினையிலும் உபரியை தமதாக்கிக் கொள்ளும் பிரச்சினையிலும் மோதல்கள் நிகழ்ந்தன. குலமரபு பொது நலன் பின்னுக்குத் தள்ளப்பட்டு வர்க்க நலன் முன்னுக்கு வந்தது. இதற்கு அரசு தேவைப்பட்டது. வர்க்கங்களுக்கு மேலாக தன்னை காட்டிக் கொள்ளும் நிர்வாக எந்திரம் ஒன்றும் தேவைப்பட்டது.

இவை மனித சமுதாயத்தில் சமூக வகைப்படுத்தல் தீவிரமாக ஏற்பட்ட போது உருவானது. புதிய கற்காலப் புரட்சியின் மூலம் இனக்குழுக்களும், குலங்களும் புதிய உற்பத்தி சக்திகளின் வளர்ச்சி காரணமாய் தகர்ந்தது. இரும்பு யுகம் இதனைத் துவக்கி வைத்தது. குலமரபு அமைப்பு ஏற்படுத்திய சமூக வகைப்பாடு அழிந்து உடைமை மற்றும் சமூக வேறுபாடு அடிப்படையில் மக்கள் வகைப்பாடு அமைந்ததை நிலைநாட்டிட அரசு தேவைப்பட்டது. இவை யாந்திரீகமாக நிகழ்த்தப்படவில்லை. உற்பத்திச் சக்திகள் மற்றும் உறவுகளின் வளர்ச்சித் தகுதியை ஒட்டி மரபுகளின் தொடர்ச்சியாகவும், புதியனவைகளின் ஆக்கமாகவும் கீழை தேயங்களில் அரசு ஆக்கம் பெற்றது. இவை ஆசியபாணி அரசு வடிவங்களை உருவாக்கியது.

அரசு தோற்றுவாயின் மற்றுமொரு முக்கிய அம்சம் பிரதேச அடிப்படையில் மக்கள் திரட்டப்படுவதும் அரசியல் ரீதியில் நிரந்தரமாக குடியிருக்கும் இடத்தின் அடிப்படையில் உற்பத்தி மற்றும் விநியோக நிர்வாகமும், சமூக நிர்வாகமும் ஆகும்.

உற்பத்தியில் மற்றும் பரிவர்த்தனையில் ஈடுபட்டவர்களின் மோதல்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான பொது நிர்வாகம் என்ற முறையில் அரசின் வரி வசூலிக்கும் அதிகாரம் அரசு தோற்றுவாயின் மற்றுமொரு குறிப்பான அம்சமாகும். குலமரபு சமுதாயத்தில் இத்தகைய வரிவிதிப்பு ஏதுமில்லை. அரசு முன் வைத்த வரிவிதிப்பு கட்டாய வரிவிதிப்பு ஆகும். சமூகத்தின் உற்பத்தியில் உபரி என்ற ஒன்று உருவான சூழலிலேயே இவை சாத்தியமாயின.

அரசு என்பது வெளியிலிருந்து சமுதாயத்தின் மீது திணிக்கப்பட்ட ஒரு சக்தியல்ல. ஒரு குறிப்பிட்ட வளர்ச்சி கட்டத்தை எட்டிய சமுதாயத்தின் விளைபொருள் அது. இந்த சமுதாயம் தீர்வுகாணமுடியாத ஒரு சுய முரண்பாட்டில் பகைமைகளாக பிளவு பட்டுவிட்டது என்றும் அவற்றைப் போக்கும் சக்தி தனக்கில்லை என்றும் ஒப்புக் கொள்வதே அது என ஏங்கல்ஸ் குறிப்பிடுவது அரசு தோற்றுவாய் பற்றிய வரலாற்றுப் பிரச்சினையை தெளிவுப்படுத்துகிறது. இந்த வர்க்க சமூக மோதலுக்கு மேலாக நிற்பதாக தன்னைக் காட்டிக் கொண்டு மோதலை ஒழுங்கு படுத்துவதாக நிர்வாக தலையீட்டை மேற்கொள்வதும், அதற்குரிய சட்ட, இராணுவ அங்கங்களை உருவாக்கிக் கொள்வதும் அரசு உருவாக்கத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் ஆகின்றன. இந்த அரசு உடைமை வர்க்கங்களின் ஆதிக்க சமூகப் பிரிவுகளின் அரசாகவே வர்க்க சமூகத்தின்

வரலாறு முழுவதும் இருந்தது. அடிமைச் சமூகத்தில் அடிமை சொந்தக்காரர்களின் அரசு, நிலவுடைமை சமூகத்தில் நிலப்பிரபுக்களின் அரசு, முதலாளித்துவ சமூகத்தில் முதலாளிய வர்க்கங்களின் அரசு.

வர்க்கப் பகைமைகள் இணக்கம் காணமுடியாதவை ஆனதன் விளைவும் வெளியீடுமே அரசு. எங்கே, எப்பொழுது, எந்த அளவுக்கு வர்க்கப் பகைமைகள் புறநிலைக் காரணங்களால் இணக்கம் காண முடியாதவை ஆகின்றனவோ அங்கே, அப்பொழுது, அந்த அளவுக்கு அரசு உதித்தெழுகிறது என அரசும் புரட்சியும் என்ற நூலில் லெனின் வர்க்க சமூக ஆக்கத்தில் பல வகைப்பட்ட தன்மையுடைய பலப்பல அரசுகள் தோன்றுவதற்கு உரிய அடிப்படைகளை விளக்கினார். அரசின் தோற்றுவாய்ப் பற்றிய பிரச்சினையில் லெனின் முன்வைத்திருந்த வரையறுப்பு அரசு பற்றிய வரலாற்றியலுக்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்பாகும். வர்க்க முரண்பாடுகள் ஐரோப்பிய நிலைகளில் துல்லியமாக வெளிப்பட்டதால் அங்கெல்லாம் அரசு ஆக்கம் துல்லியமான வடிவங்களைப் பெற்றது ஆனால் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளில் குல மரபு எச்சங்களின் தாக்கம் மேலோங்கிய நிலையில் இருந்ததால் அங்கு ஏற்பட்டவர்க்க ஆக்கம் சிக்கலான தன்மைகளையும், வடிவங்களையும் பெற்றுள்ளது. அதன் காரணமாகவே பலதனித்தன்மைகள் கொண்ட வேறுபட்ட அரசு வடிவங்களை அங்கு காணமுடியும். ஐரோப்பிய நாடுகளின் அரசு மாதிரியை வைத்துக் கொண்டு பாரம்பரிய ஆசிய, ஆப்பிரிக்கா சமூகங்களின் அரசு தோற்றுவாயை ஆராயக்கூடாது என்பதை மார்க்சியம் வலியுறுத்துகிறது.

இந்த பிரச்சனையின் மீதான மார்க்சியம் பற்றிய புரிதலில் மிகுந்த குழப்பம் ஏற்பட்டுள்ளது. அரசின் தோற்றுவாய் பற்றிய ஆய்வாளர்கள் வரலாற்றியல் பொருள் முதல் வாதம் முன் வைக்கும் அரசு அமைப்பின் தோற்றுவாய் ஐரோப்பியத் தன்மையைக் கொண்டதாக மட்டுமே இருப்பதாகக் கருதிக் கொண்டு ஆசிய, ஆப்பிரிக்க அரசுகளின் தோற்றுவாய்க்கு அது பொருந்தாது என வாதிடுகின்றனர். மார்க்சியம் குறித்த இயக்கவியல் மீது தனது முடிவுகளை அமைத்துக் கொள்ளாமல் மார்க்சிய வாய்ப்பாடுகளின் மீது தனது முடிவுகளை அமைத்துக் கொள்வதால் இப்பிழைகள் ஏற்படுகின்றன.

அரசு வெறுமனே வர்க்க மோதலை நிர்வகித்து ஒழுங்குப்படுத்தும் அமைப்பு மட்டுமல்ல அது. வர்க்க சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்யும் ஒருங்கிணைப்புக் கடமையையும் செய்கிறது. இந்த ஒருங்கிணைப்பு, உற்பத்தி சக்தி மற்றும் உற்பத்தி உறவுகளின் நலனை அடியொற்றியது. அரசின் தோற்றுவாய் பற்றிய பிரச்சினையில் இந்த சமூக ஒருங்கிணைப்பு அம்சம் ஒரு அடிப்படையான அம்சமாகும்.

அரசு என்ற அமைப்பின் தோற்றுவாய் குறித்த மார்க்சிய ஆய்வுக்கு இத்தகைய அம்சங்களை ஒருங்கிணைத்து பார்க்கக்கூடிய கண்ணோட்டம் தேவை.

அரசு என்பது வர்க்கங்களின் இருப்போது தொடர்புடையது. வர்க்கங்கள் தோன்றியது அரசு தோன்றுவதற்கான அவசியம் எழுந்தது. அது போலவே வர்க்கங்கள் மறையும் போது அரசு உர்ந்து உதிர்வதற்கான தேவை எழுந்துவிடும் என்பது மார்க்சியத்தின் திட்டமான முடிவாகும். வர்க்க ஆக்கத்தோடு அரசு ஆக்கத்தையும் இணைத்து அணுகுவது மார்க்சிய அணுகுமுறையாக உள்ளது.

அரசு பற்றிய தெளிவு ஒவ்வொரு மார்க்சிய செயல் வீரருக்கும் அவசியமான தேவையாகும். சோசலிஸத்துக்கான போராட்டத்தில் அரசு அதிகாரம்தான் கேந்திரமான இடத்தைப் பெறுகிறது. வர்க்கப் போராட்டம் இறுதியில் அரசு அதிகாரத்தைப் பெறுவதற்கான அரசியல் போராட்டமாகவே முடிகிறது. இதன் காரணமாகவே ஒவ்வொரு சமூகத்தின் வர்க்கம், அரசு ஆகியவற்றின் தோற்றுவாய் பற்றிய திட்டவட்டமான, துல்லியமான வரலாற்று அறிவு தேவைப்படுகிறது.

7

குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவைகளின் தோற்றம் என்ற நூலின் முக்கியத்துவம் ஏங்கல்ஸ் எழுதிய காலத்திலும், லெனின் பயன்படுத்திய காலத்திலும் நிலவியதைக் காட்டிலும் கூடுதல் முக்கியத்துவத்தை இன்று பெற்றுள்ளது.

பாலின சமத்துவத்துக்கான விடுதலைப் போராட்டத்துக்கான பெண்ணியக்கத்தின் வரலாற்றியல் மற்றும் நடைமுறை பிரச்சினைகளுக்கு இந்த நூல் சிறந்த வழிகாட்டி நூலாக அமைகிறது. இந்த நூலின் உதவியின்றி பெண்ணியம் என்ற கிளர்ச்சி தனக்குரிய கருத்தியல் அடித்தளத்தை வளர்த்துக் கொள்ள முடியாது.


குலமரபு மற்றும் தந்தை வழி கூட்டு சமூக உறவுகள் பெரிதும் மேலோங்கியுள்ள நாடுகளின் சமூக, வர்க்கச் சேர்மான இயக்கவியலை புரிந்து கொள்ள இந்த நூல் மிகச்சிறந்த கை விளக்காக விளங்குகிறது. குறிப்பாக, இந்திய சமூகத்தின் தனித்தன்மையாக விளங்கும் சாதி அமைப்பை மார்க்சிய வழியில் புரிந்து கொள்ளச் செய்யப்படும் முயற்சிகளுக்கு இந்த நூல் கட்டாயமான முதல் பாடநூலாகும்.

இன்றைய உலகமயச் சூழலில் முதலாளித்துவ வர்க்க அரசியல் கடைபிடிக்கும் உத்தி இன, சாதிய, வட்டார அரசியல் மோதல்களை வளரும் நாடுகளில் முதன்மைப்படுத்தி உழைக்கும் மக்களைப் பிளவுப்படுத்தி மோத விடுவதில் வெற்றி பெற்றுவிடுகிறது. வர்க்க உறவுகள் மீதான சமூக உணர்வு ஆக்கத்துக்கு மாற்றாக தொப்புள்கொடி உறவுகள் மீதான சமூக உணர்வு ஆக்கத்துக்கு உரிய ஆய்வுகளும், அரசியல் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை இன்றைய ஏகாதிபத்தியத்தின் நலனை வளர்முக நாடுகளில் வளர்த்தெடுப்பதற்கான கருத்தியல் முயற்சிகளாகவும் அமைகின்றன.

அடையாள அரசியல், வேர்களைத் தேடுதல் முதலிய பண்பாட்டு அரசியலின் பின் இருக்கும் வர்க்க அரசியலை அடையாளம் கண்டு அம்பலப்படுத்த வேண்டிய அவசியம் மார்க்சியர்களுக்கு உண்டு. வர்க்கமாக பிளவுப்பட்டுவிட்ட ஒரு சமூகத்தில் பண்பாடும், மரபு வேர்களும் வர்க்க நலன் அடைப்படையிலேயே மறுபடியும் மறுபடியும் ஆக்கம் கொள்கிறது என்பதை மார்க்சிய மானுடவியல் நமக்கு எடுத்துரைக்கிறது. முதலாளித்துவம் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை. இவை ஜனநாயகத்தின் பிரச்சினைகளாக இன்று உருவாகியுள்ளன.

குல - இன மரபு பிரச்சினைகள் யாவும் வர்க்க அரசியலின் பிரச்சினையாக தீர்ப்பதற்கான முயற்சிகள் உறுதியாக வளர வேண்டிய அவசியம் இன்று உள்ளது. மதம், குலம், இனம் போன்றவை மீதான தாலிபானிய அராஜகம் மேலோங்கிய சூழலில் வளர்முக நாடுகளின் தேசியமும், வர்க்கப் போராட்டத்தின் அவசியமான கூறுகளாகின்றன.



தொடர்புக்கு: **கோணங்கி**

6/1700, இந்திரா நகர், கோவில்பட்டி - 628 502

ள்

மீ கதை

இராகவன்

ள்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து மின்னார் செஞ்சடைமேல்
உஷ் உஷ் உஷ் ள் ஆபத்தான சீருடையணிந்துள்ளார்
உஷ் உஷ் உஷ் தக்க ள் பிழைக்கும்
சங்கிளொடு சக்கரங்கள் வாள் வில் வேல் மழு அங்குசமாம் எண்ணிலாப் படைக்கலந்தாங்கிய பெரியோன் ள்
முறக்காதுகளில் விழுந்து விடப்போகிறது எச்சரிக்கை எச்சரிக்கை
ஏன்? ஏன்? இதெல்லாம் நிகழ்ந்த அற்புதங்கள் இல்லையென்றாகுமா?
நிகழ்ந்த அற்புதங்கள் மிக நன்றாகவே நிகழ்ந்தன. இனி நிகழப் போகும் அற்புதங்களும் மிக மிக நன்றாகவே நிகழும்
நிகழப் போகும் அற்புதங்களென்றால் ஒன்றாவது உரைக்கலாமே?
காற்றுமோர் ஒற்றாள். சுவாசம் கூட சந்தேகம் துளிர்ப்பிக்கும் அப்போ ள் நிலை யென்ன?
முன்னரே உரைத்தது போல் தக்கள் பிழைக்கும்
ள் ஒன்றே யொன்றுதான் ள் எல்லாம் வல்லது ள் எங்கும் நிறைந்தது
ள்
செம்மைதான் உண்மைதான் ள் ஒன்றேயொன்றுதான் அதைத்தான் இன்று தக்கள் எனப் பெயரிட்டழைக்கிறோம்.
விங்கா உரை பகர வேண்டாம் ள் சகல வல்லமையுடையது. தன்னை மணக்காத நூறுபுதல்வியரை முதுகு முறித்துக் கூனிகளாக்கிய வல்லமை தெரியாதோ? சுக்கிரனைக் குருடாக்கிச் சனியை முடமாக்கிய காதையும் பொய்யோ? பெரும் ஊழிக்கூத்தாடிவரும் நிலையும் தவறாமோ?

செத்தார் எலும்பணியும் பேராண்மை கொண்டுதான் ள் என்றுணர்க.
உணர்ந்தும் மென்ன இது ள் பற்றிய பழங்கதைகள் என்றுரைப்பார்கள்.
அவ்வாறெனில் யாதுரைப்பதாய் உத்தேசம்?
மெய்யுரைக்கக்கேள். நீ கருதும் ள் இப்போ தக்கள்
அல்ல. பொன்னார் மேனியன் இப்போ புலித்தோலை
அரைக்கசைக்க இயலாது. அது தண்டனைக்குரிய குற்றம்
இதற்காகவே உனது ள் தேடப்படும் குற்றவாளியாகலாம்.
சங்கினோடு சக்கரங்கள், வாள், வில், வேல், மழு, அங்குசம்
எனும் எண்ணிலாப் படைக்கலங்கள் தாங்கிய ள் இருந்த தும்மெய்யே. ஆனால் இப்போ அவ்வெண்ணிலாப் படைக்கலங்கள் தாக்குதிறனற்றவை. அதைத் தாங்குள் ஒரு ஜோக்கர் போன்றவர். நூறு புதல்வியரை முதுகு முறிததுக் கூனிகளாக்கிய ள் இன்று ஒரு பெண்ணின் விரலையேனும் அசைக்க முடியாதவர். சுக்கிரனைக் குருடாக்கிய ள் இன்று தானே குருடாகிப் போனார். சனியை முடமாக்கிய கதை இன்றோ வெறுங்கற்பிதமாயிற்று. இன்று பெரும் ஊழிக்கூத்தாடி வரும் ள் நீ குறிக்கும் ள் அல்ல அதுதான் தக்கள்
தக்க ள் கொண்ட தோற்றப் பொலிவு யாதாகும்?
மிக நன்றேயுரைப்போம் கேள் மின்னார் செஞ்சடையில்லை. பிறையில்லை. கங்கை நதியில்லை சிகை சிரைக்கப்பட்ட நிலை. மொட்டை ஒளித்தெறிப்படையும் முழுமொட்டை. பல்கரமில்லை படைக்கலங்கள் யாதுமில்லை தியானநிலை. புலித்தோல் அணியவில்லை. முழு உடல் மூடிய காவியுடை ஆனால் செத்தார் எலும்பணிவதும் சுடலைப் பொடிபூசி உள்ளங்கவர் கள் வராவதும் தொடர்ந்து நடக்கிறது. நிலத்தை எங்கே அகழ்ந்தாலும் எலும்புக் கூடுகளை விளைவிக்கக் கூடியவர்தான் தக்கள் நீ குறிக்கு ள் என்பது இப்போது வெறும் கற்பிதம் உணர்ந்து கொள்
இப்போது வெறும் கற்பிதமான ள் யாதாகலாம்?
மூன்றாகலாம் முதலில் வெறும் கற்பிதமான ள் தக்கள் ஆகலாம்
தக்கள் ஆக விரும்பாவிடின் கூர்மமாகிவிடலாம். இது ஈருலக வாழ்வைச் சாத்தியமாக்கும். கூர்மமாகவும் விரும்பாவிடில் நத்தையாகிவிடலாம் எதனோடும் தொடர்பின்றி பன்னெடுங்காலம் எங்காவது ஓட்டிக் கொண்டு மோன நிலைகுட்படலாம்.



உலகின் முதல் துக்கம் அல்லது மிகுந்து வரும் பாதரசம்

- யவனிகா ஸ்ரீராம்



ஒருமுறை முடுக்கி விட்டால் தானியங்கியாகச் சுழலும் இயந்திரங்களைக் கண்டு பிடிப்பதற்கென முன்னூறு வருடங்களைச் சோதனைச் சாலையில் கழித்துவிட்ட பூமியில், தன்னைத் தானே சுற்றியும் கூடவே சூரியனையும் சுற்றிவரும் கோளத்தில் வசிக்கிறோம் என்பதைப் பலரும் கேளிக்கையாக அறிந்திருந்தார்கள். இப்படியான மனிதன் தன்பக்கவாட்டில் சுழலும் அனைத்தையும் வெளியின் கண்ணாடிக் கோளத்தினுள் நுழைந்து உருள்பவனாக பாவமன்னிப்பின் பொருட்டு யுகங்களில் முடங்கியிருந்தான். சக்கரங்களை உருவாக்கத் தெரிந்த காலம் முதல் வழியெங்கும் அதைத் தோள் கொடுத்து மாற்றி சீர் செய்து உடைந்த பகுதிகளை நீக்கிச் சேர்த்து கடக்க முடியா தூரத்தின் நெம்புகோல் வாழ்க்கையில் பிறவியை இழுத்துவர, கரடுமுரடான பாதைகளோ அவனைத் தத்துவத்தின் இறுதியில் மல்லாத்தியது. வியர்வைகளின் பேரிரைச்சலைத் தாண்டிச் தாவரங்கள் பீட பூமியை தன்னுணர்ச்சியுடன் வேடிக்கை பார்த்த வண்ணமிருந்தன. இப்படித்தான் மனிதன் எப்போதும் தன்னைத்தானே சுற்றும் தானியங்கியாக இருந்தான்.

யுவதியின் கைப்பிடியில் இருந்த தேனீர்க்கெட்டிலில் மஞ்சள் வானம் குப்புறக் கிடந்தது. சிறிய பூனைகள் சுற்றிவரும் கழிவடைந்த கொல்லைகள் அல்லது பால்மர வேர்கள், கூரைச் சுவர் பிளந்து அவளது குளிர்காலப் படுக்கையறையை பற்றிப் படர்ந்து கிடக்க, வஞ்சகத்துடன்

வந்து அறிவுரைத்துவிட்டுப் போகும் அவளின் நோயுள்ள தாயார், இன்னுமின்னும் சாலைகளில் பயணித்துப் போகும் உணவு மற்றும் இச்சையுற்ற மனிதர்கள், கழிந்து கொண்டிருக்கும் அவளது பருவ காலங்கள் மீன்காரக் கறிகள், இதற்கிடையே அவளது கரங்களைப் பிடித்து, இருக்கும் ஒரே வாய்ப்பான காதலைச் சொல்ல நினைத்த பயணி, இருப்பிலிருக்கும் காசம், மேலும் தனது ஆண்மையின் நினைவிழப்பிற்கிடையே, வறண்ட கோதுமை ரொட்டிகளை தேனீரில் தோய்த்து விழுங்கிக் கொண்டிருந்தான். வெளியே நூலகங்கள் பயணப் பைகள் விற்கும் அங்காடிகள், பழம் நாணயங்கள் இறைந்து கிடக்கும் சந்தை அல்லது திருடுவதற்கோ, தன்கைக்கு கிடைப்பதற்கோ அவன் போயாக வேண்டும். யுவதியோ தன் வெளிறிய முலைகளை அசிரத்தையாக காட்டிக் கொண்டு, சோபை இழந்த கண்களோடு சுற்றுப்புறத்தை தூய்மை செய்யும் பாவனையிலிருந்தாள். அந்த நகரத்திற்கான கட்டணம் அவளது கோதுமை ரொட்டிக்கும், ஒரு குவளை தேனீர்க்கானது மட்டும்தான் என்றளவில் அவளது நறுமண எண்ணெய் ஊட்டப்பட்ட சருமத்தின் வாசனையை சுவாசத்துடன் கொண்டு பயணி வெளியேறினான்.

அக்காலத்தில் எல்லா நிலங்களும், குடியிருப்புகளும், மூங்கில் காகிதங்களில் வரைப்படங்களாய் இருந்தன. தானியங்கள், கூடைகள் உருக்கு மண்வெட்டிகள் யாவற்றும் பதிலாக காகிதங்களின் மதிப்பு கூட்டப்பட்டிருந்தது. எல்லோரின் அலமாரிகளிலும் காகித பண்டல்கள் வரிசையிடப்பட்டு தகரக் குழாய்களில் முத்திரைத் தாள்கள் சுருட்டி, அடைக்கப்பட்டு, எல்லோரின் பெயர்களும் பிறப்பது முதல் இறப்பது வரை, பழுப்பு நிற முனை உடையும் காகிதங்களில் சேகரிக்கப்பட்டிருந்தன. தேச வருமானத்தின் கேட்பு நிதி வன்முறையாக சூழ்ந்திருந்தது. காகிதங்களில் பொம்மை செய்பவர்கள், கக்கத்தில் வைத்தபடி வாதம் செய்பவர்கள், வரவேற்பறையில் காகிதங்களைக் குவிக்கும் வழக்கம் என அனைத்தும் மரக்கூழ்த்தாள்களில் உறுதி செய்யப்பட்டன. பல முதியவர்கள் அத்தகைய புகையடர்ந்த காகிதங்களுக்கு உள்ளேயே தேங்கி இறந்தும் போனார்கள். கட்டளைகள், ஆணைகள், மனுக்கள் என ஒரு நூற்றாண்டே இயங்கும் காகித உலகமாக இருந்தது என வரலாற்றில் குறிப்பிடப்பட்டதும் நடந்தது. காகிதப் பட்டுவாடா பொருட்களுக்குச் சமமானது என்றதுதான் உலகின் முதல் துக்கம் என்று கூறியவர் தன் காகிதங்களை அகிலமெங்கும் பறக்கவிட்டார். போகப் பெருங்கடலில் வந்திறங்கும் பொருட்களாய், சரும வியாதியுடன், வதந்திகளால் சூழப்பட்ட நகரங்களில் சஞ்சலமற்ற காமத்தால் பீடிக்கப்பட்ட மனநோயாளிகள், திணை சார்ந்த பழம் பாடல்களைக் கொச்சையாக மொழிந்து கொண்டிருந்தார்கள். அவ்வளவு ஆர்வமில்லாத சடங்கு சார்ந்த விழாக்களை நடத்துவதில் சோர்ந்து போன துன்பமிகு மக்கள் கடுக்கும் குழந்தைகளின் பொருட்டு போலியாக உற்சாகம் காட்டுவதில் இயல்பானவர்களாய், அனைத்தையும் நிறைவேற்றுவதில் தீவிரமடையும் போது புதிய ஆண்டறிக்கைகளை எல்லாத் துறைகளும் வெளியிட்டு இருந்தன.

1848 என்ற புதிய வகை மது அறிமுகமாகி இருந்தது. அது போலந்து எனும் தேசத்தில் கடல் இருந்த காலத்தில் உருவானது. மிக மோசமான பனி உறையும் காலத்தில், வழி தவறி வந்த ஒரு பாய்மரக் கப்பல், கரையில் மாட்டிக் கொண்டு உறையும் பனியால் நகர இயலாமல் தவிக்க, போலந்தியர்கள் அக்கப்பலைச் சூழ்ந்து அதில் வந்த மனிதர்களை மீட்டெடுத்தார்கள். அவர்கள் மேற்கு மத்திய மிசிசிபிச் சதுப்புகளில் இருந்து வந்தவர்கள் எனவும், ஒரு குறிப்பிட்ட மதுவகையைப் பாரம்பரியமாக தயாரிக்கும் இனக்குழுவினர் என்றும் தெரிந்த பின் கௌரவமான வரவேற்பையும் சில மது வடிப்புச் சாலைகளையும் அத்தேசத்தார் கட்டிக் கொடுத்தனர். இதில் இருந்து ஒரு நூற்றாண்டிற்கு போலந்தில் கடல் மறைந்தும் போய்விட்டது. பயணிகள் அங்கேயே தங்கி 1848 என்கிற பிரசித்திப் பெற்ற மதுவை தயாரிக்கும் இனமாக வம்சாவளியாக வாழ்ந்து வந்தார்கள். பெண்களோடு வரவில்லை யாதலால் அக்குழுவின் ஆண்கள் பொலிந்திப் பெண்களை மணந்து கொண்டாலும், பிள்ளைகள் தேசத்திற்குச் சொந்தம் எனவும், மதுவைக் கொடுத்து விட்டு மிகச் சீக்கிரமே தங்கள் இனக்குழு அடையாளங்கள் முடித்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தப்பட்டிருந்தார்கள். கடைசி சதுப்பு நில மனிதன் தனது தொண்ணூற்றெட்டாவது வயதில் மீண்டும் போலந்தில் கடல் தோன்றிவிடும் என்ற நம்பிக்கையில் அங்கே மிஞ்சியிருந்தான்.

பல்வேறு மிருகங்களை வேறு வேறு இனங்களோடு உடலுறவு கொள்ள வைத்து ஆய்வு நடத்தும் பண்ணை ஒன்றை அதன் உடமையாளர் மரணத் தறுவாயில் இருந்த போது கண்டுபிடிக்கப்பட்டது. பல எலிகள் யானைகளைப் பிரசவிக்க முடியாமல் வயிறு கிழிந்து இறந்து கிடக்க, வெள்ளாடு ஒன்று ஒட்டகச் சிவிங்கியின் நீண்ட கழுத்தினை தூக்கி நிற்கமாட்டாமல், தலையை நிலத்தில் கிடத்தி அரற்றிக் கொண்டிருந்தது. அங்கே சிங்கமுக முயல்களையும், பின்புறம் சேவலின் வண்ணச் சிறகுகள் அடர்ந்த நரிக்கூட்டத்தையும், வேலை தப்பி ஊர்ந்து போய்க்கொண்டிருக்கும் பூனைத் தலைப் பாம்பினையும் குஞ்சுபொரிக்கும் உண்ணித் தாவரங்களையும், குதிரையின் குளம்படிகள் கொண்ட ஒரு பெண்ணையும் மீட்டெடுத்தார்கள். கோழிகளை குதத்தில் புணரும் பண்ணையின் இரகசிய வாடிக்கையாளர்களை ஊருக்குள் தேடியலைந்த மக்கள் கூட்டம் பண்ணையைத் தீக்கிரையாக்கியது. அதிர்ச்சியில் இறந்தவிட்ட கிழவன் மார்பில் இரண்டு இளம் முலைகள் குவிந்து கருத்த முலை வட்டத்தில் ரோமங்கள் முளை விட்டிருந்தன.

இப்படியாக மேல்மாடித் தளங்களில், பால்கனிகளில், தாவரம் வளர்ப்பவர்கள் பெருகி இருந்தார்கள். செடிகொடிகளில் காய்கறிகள் உயிருடன் துள்ளி அண்டை வீட்டு வாசல்களில் விழுந்து நெளிந்து அணில்களைப் போல வீட்டிற்குள்ளும் வந்து அலைவதாக முறையிடப்பட்டது.

விரால் மீன் வடிவத்தில் இருந்த புடலங்காய் தன்கைப்பிடியில் துள்ளித் தண்ணீர்த் தொட்டிக்குள் விழுந்ததாய்ப் பெண்மணி ஒருத்தி இறீச்சிட்டாள். தக்காளித் தோல்களை சதா உரித்து நொந்து போன சைவ

உணவு உண்ணும் மூதாட்டி, முதலைத் தோலைப் பயன்படுத்தி தக்காளிகளைப் பயிரிடும் முறையைக் களைய வேண்டும் எனப் பிராது கொடுத்திருந்தாள். கொஞ்சம் பேர் தொப்புள் குழியில் அருகம் புற்களைப் பயிரிட்டு செல்லமாய் வளர்த்துக் கொண்டிருந்தார்கள். இளைஞர்கள் பலரும் தங்களது பின்புறத் தொடையில் இருக்கும் பிளவிற்குள் புற்றுப் போல வளரும் காலிப்பிளவர் மற்றும் மக்காச்சோளக் குருத்துகளை அறுவடை செய்து அவ்வப்போது தேவைக்குச் சமைத்து உண்ணத் தொடங்கினார்கள். அதில் மாமிசப் புரதம் அதிகம் இருப்பதாகவும் சுவை கூடியதாக, தங்கள் உடலிலேயே வளர்த்துக் கொள்வதால் சிக்கனமாகவும் இருப்பதாய் குதூகலித்தார்கள். தேவைக்கு மேல் வளர்த்து விற்பனை செய்தால் அரசுக்கு கட்டணம் செலுத்த வேண்டும் என ஆணையிடப்பட்டிருந்தது.

தன்னை யுகங்களுக்கு முன்பான மனிதன் என்று சொல்லிக் கொண்டிருப்பவன், வெள்ளை மற்றும் நீலம் சிவப்பு வண்ணக் கற்களை வைத்து நடத்தும் எதிர்காலக் கூறுமுறையில், ஆற்றை அதன் போக்கிலிருந்து திருப்பி தனது மாளிகையைச் சுற்றி ஓடவிட்ட பழம் மன்னன் ஒருவனின் செய்கையாலே இத்துயரம் படிந்த வரலாறு மக்கள் மீது சுமத்தப்பட்டது என்றும் தங்கள் நிலத்தின் கீழே ஓடிக் கொண்டிருக்கும் நீர்ச் சுனைகளை வெளிக் கொணரும் பழக்கம் தொடர்ந்தால் அம்மண்ணின் சாபம் பெண்களை ஆண் துணையில்லாமல் சினைப் பெருக்கம் செய்யவும், கடலில் இருந்து வெளிவரும் பொருட்கள் மற்றும் உயிர்கள் பலவும் வீட்டின் கழிவறைப் புரைகள், இங்கு இடுக்குகள், சாமான் வைப்பறைகள், சாக்கடைகள் அனைத்தும் பெருகி பூஞ்சைகள் போல வளரும் என்றும் தன் சிவப்புக்கல்லின் மீது சத்தியம் செய்து அறிவித்தான். மிகுந்த கோபத்துடன் பகுத்தறிவு வாதிகளால் அது நிராகரிக்கப்பட்டது. வெள்ளை பச்சை மற்றும் நீலக்கல் சார்ந்த உண்மைகளைக் கூறும் முன் அம்மனிதனைத் தூக்கிலிட்டுக் கொல்லும்படி வான சாஸ்திரிகள் தண்டனைத் துறைக்கு விண்ணப்பம் சமர்ப்பித்தார்கள்.

மாரிஜ்வானா என்பது ஒரு பெண்ணின் பெயரா நகரமா, போதைப் பொருளா, பாலைவனப் புயலா, சதுப்பு நில ஜல மண்டலமா அல்லது பழைய நாடகக் கதாப்பாத்திரமா தெரியவில்லை. உடலில் ஊசிகளால் துளையிட்டு நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் வைத்தியரிடம் வந்திருந்த ஒரு விசித்திரமான நோயாளியின் உடலில் அவர் துளைக்கும் ஊசிகள் சட்டென உள்ளிழுக்கப்பட்டு மறைந்து போவதைக் கண்டு மருத்துவர் திகைத்துப் போயிருந்தார். இத்தாலியக் குடியிருப்புகளில் இப்போதெல்லாம் புதிதாகக் குழந்தைகள் பிறப்பதில்லை என்றும் அங்கு நடமாடும் எல்லோரும் பழைய கல்லறை மனிதர்கள் தான் என்றும் ஊர்ஜிதமானது. நீண்ட அங்கிகளும் தலைப்பாகைகளும் மட்டுமே தெரிவில் உள்ளீடு அற்று நடமாடிக் கொண்டிருப்பதாய் பீதியைக் கிளப்பினார்கள். கடவுளைப் பார்க்காமல் கடவுள் இருக்கிறார் என்று நம்புவதைப் போல மரங்களைப் பார்க்காமலேயே மரங்கள் இருப்பதாக மக்கள் நம்புவதில்லை என்கிறார் மரத்தை மாமதயானையாக பார்த்த

வரும், யானையை மரமாகப் பார்த்தவரும் உலகின் தலைப்பகுதி பேராசை கொண்ட பைத்தியக்காரர்களால் நிறைந்தது என ஒரு நீர் மேல் நடக்கும் ஒரு கீழைத் தத்துவவாதி சொன்ன போது இந்தோனேசியப் புயல் இருபத்தி இரண்டாயிரம் முறையாகக் கரையைக் கடந்தது. பழைய தீபகற்பப் பகுதிகளில் தென்னை மரங்கள் நோய் பிடித்து அருகி வருவதற்கு மண்ணில் பாதரச மிகுந்து விட்டது தான் காரணம் என்று சொன்ன விவசாயி ஒரு துளிப் பாதரசத்தை எடுத்துக் கொண்டு போய் சுவற்றில் வைத்து மட்டம் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இம்மாதிரி சமயங்களில் மக்கள் கடலை மீன் தொட்டி போல பாவிக்கிறார்கள். புரதயுத்தம் நடக்கும் காலங்களில் வெடிப்புகையிட்டு மயக்கமடையச் செய்த மீன்கள் லட்சக்கணக்கில் நீர்மேல் மிதக்க, அவற்றைக் கவ்வும் பறவைகள் வானில் வெடித்துச் சிதறுவதையும், ஊர்க் காடுகளில் மீன் மழை பெய்வதையும் அந்நாட்களில் வயலில் பல கூடைகள் என்கிறாள் ஒரு கால்நடை மேய்ப்பவள். ஒரு காலத்தில் சூரிய ஒளிய்யைத் திருடிய குற்றத்தால் நீர் நிலைகள் மறைந்து போனதாகவும் கர்ப்ப காலத்தில் விலகும் பெண்களின் இடுப்பு எலும்புகளோடு அதன் வலியும் பயிர்களின் கதிர்முனை, புராதானச் செப்புப் பாத்திரங்கள் யாவும் களவுப்போய் விட்டதாகச் சொல்லி தங்கள் காதலிகளின் மார்பில் கற்சிற்பபமாக முகம் புதைத்துக் கிடந்தனர் சிலர். கனவுகளில் வாழ்ந்ததை நிஜத்தில் வாழ முடியாமலும் கனவு மட்டுமே இன்னும் காட்சி வசப்படமுடியாத உலகத்தில் காட்சியில் உறங்கி காட்சியில் எழும் அன்றாடம் தொடங்கியிருந்தது. அவரவர் காட்சிக்கு பார்வையாளர்களை தயார் செய்யவும், ஒலியே பார்வையாளர்களாகவும், நடித்துக் கொண்டிருக்க வானத்தில் இருந்து ஜோடிஜோடியாகக் காலணிகள் ஆங்காங்கே கட்டிடங்கள், தெருத்திண்ணைகள், நடைபாதைகளில் மீது சீந்துவராற்று வீழ்ந்த வண்ணம் இருப்பதைப் பார்த்தபடியே குப்பைக் கூளங்களிடையே குளிர்கால கால்நடைகள் எதையோ அசை போடுகின்றன.






ஃபைசால்

ஓடும் நீர்

ஓடிக்கொண்டிருக்கிறது
யார் விரட்டுகிறார்? என்று தெரியாது
எதிரே வந்த குளத்திற்குள் இறங்கிவிட்ட தண்ணீர்
குமிழிகளாகிக் குதித்து தன்னை அறிமுகம் செய்கிறது
ஒருவரின் காலுக்கு மிதிப்பட்டு நேரம் சென்று
கடைசியாக இறங்கியது
குதிக்கும் போது
குளத்திற்குள் ஒரு தண்ணீரை தனியாக பார்க்க முடிந்தது.



வலை


கால்களை விடுவித்துக் கொண்டு பறந்தாலும்
மரத்திலே சிக்கிக் கொண்டன பறவைகள்
இந்தக் காட்டுக்குள்ளிருக்கும் மரங்களை
ஏமாற்றக் கற்றுக் கொடுப்பதாகக் கூறிய
புலியொன்றுக்கு இரையான
பறவையின் சத்தத்தில் சிக்கிக் கொண்டன சில மரங்கள்
பறவை தப்பித்துவிட்டது
புலியின் வயிற்றுக்குள் மரங்களில்லை
மரங்களுடனான நினைவை மீட்டி
ஓயாமல் பறக்கிறது
புலியின் வயிற்றுக்குள் ஆகாயமில்லை
ஒருநாள்
மரத்தில் சிக்கி
களைப்பில் உறங்கியது புலி
குதம் வழியாக வெளியேறிய பறவை
மற்றொரு மரத்தில் சிக்கிக் கொண்டது.



பா. தேவேந்திரபூபதி

பிரிவின் மறுபக்கம்

இலந்தைகள் பொறுக்க ஆளற்று
பாலையில் எறும்புகள் திரிகின்றன
பிரிவென்ற சொல்லிப்போன அந்தியின் குறும்பு
அதிகாலைச் சூரியனாய் வெட்கித்து உதிக்கிறது
உன்னை ஒரு பழம்பாடலில் நினைவுக்கொண்டு
திரும்பிய என் அன்றாடங்கள்
நீர்க்கத் துவங்கிவிட்டன
புளிப்பான பழங்கள், அலுப்பூட்டும் தினசரித்தாள்கள்
வந்து நின்றுவிட்டேன்
உன் பிரிவின் மறுபக்கம்
சொல்வது யாருக்கும் எளிது
காரணங்களின் பொருட்டு கிணற்றுத்தவளைகூட
கரைக்கு எம்பி விடுகிறது
பாலையில் பாம்பென இல்லை நண்பா
சிறிய விட்டிலாய்
ஒருதளிர் இலையாய்
வலைகளற்ற மீனவனாய்
இன்னும் நான் இருக்கிறேன்
பிரிவென்பது காதலில் ஒரு ஊடலறிவு
தெள்ளிய மணல் போல் உலர்ந்து விட்டது
என் இதயம்
திரும்புவாய் எனில்
ஆரிப்பரிக்கத் துவங்கிவிடும் என் பாலைத்தனிமை



பகற்கனவு

சின்னஞ்சிறு உயிர்களுக்கு
கனவு உண்டா
பகலின் கனவில் இரவின் தோற்றப்பிழை
நாய்களின் கனவில் நெடுஞ்சாலை
களைச்செடிகளுக்கு வயலின் கனவு
மரத்திற்கும் ஊற்றின் கனவு இருக்கலாம்
என் கனவின் இலைகள்
உன் முத்தத்தின் உதிர்காலத்தில் இருக்கிறது
நிலம் விரிகிறது
வருவதும் போவதுமாய் தூரங்களை
இமைப்பொழுதில் கடக்கும் இந்த யுகத்தில்
உன்னிடமே இருக்கிறது என் பேரீச்சைமரம்
கூடவே ஒரு சிறிய நன்னீர்நிலை
உன் கனவில் என் சிறுசொல் வெடித்திருக்கலாம்
சிறிய வீட்டுவேலை கவிதை எழுதவும்கூட
இப்பிறவி நம்மை அனுமதிக்கிறது
கனவுகள் பறந்துகொண்டிருக்கும் வெளியில்
அதைத்தட்டிவிடாமல்
என் கனவில் நீ நுழைகிறாய்
காயங்களைப் பழங்களைப் போல அன்பே
உரித்து காத்திருக்கிறேன்
பிரபஞ்சத்தில் இது எத்தனையாவது முறை.

சூன்யப்பிறவி

வாழைமரம் என்று என்னைச் சொல்லலாம்
பூக்கும் முன் இலை வெட்டினார்கள்
பூத்தபின் சருகுகள் உதிர்த்தேன்
குலைதள்ளவும், கன்று வளர்க்கவும்
வாழையடி வாழைதான் நான்
பழங்களுக்கு குரங்குகள்
நார்களுக்கு மலர்கள்
தண்டுகளுக்கு சமையல்
அடிக்கிழங்கில் இருக்கிறது என்மூளை
நிலம் கிளர்த்தி அடியூன்றி காற்று தாங்கி
வானில் ஏகும் என் தாபம் நீர்மையானது
நிழலுக்கு ஆவேனா தெரியாது
ஒரு தலைமுறைக்கு ஒருமுறை உயிர்ப்பேன்
என் பரிணாமத்தில் குரங்குகள்
மனிதனாவதைப் பார்த்தேன்
மனிதர்கள் கடவுளானதையும் பார்த்தேன்
பார்க்கவில்லை பேராலமர விதைகளை
அதன் சூன்யத்தை
பின்பு ஒரு பலனும் அற்ற பிறவியை

நிலமனிதன்

குதிரை பிறக்காத கண்டத்தில்
ஓர் பனிமலை உயர்ந்து நிலவும்
கடலின் நாதமும் பள்ளிச்சரிவுகளின் ஓலமும்
வயலோடிய பனியாறுகளின் இரைச்சலும்
இசையாகும் பூமியில்
நானொரு நில மனிதன்
எனக்கு நானூறு தெய்வங்கள்
முப்பத்து முக்கோடி உறவுகள்
வீடுபேறும் நிலைபேறும் நீதியும்
நிறைந்ததோர் பழங்காலத்தில்
அவதரித்தேன்
பயணமாகும் எம்மனிதரின்
பாதைகள் தோறும் பண்டங்கள் உண்டேன்
இரவும் பகலும் இங்கேதான் சுற்றுகிறது
என்னோடு பயணித்தவர்களின்
இரங்கற்பாடல்கள் கடவுளின் முணுமுணுப்பு
கால்நடைகளின் புல்வெளி
ஆயினும் ஒரு குதிரைதான்
அது என்னை சுமந்து செல்கிறது.



றியாஸ் குரானா

சொக்கத்துக் கனி

நாங்கள் கண்ட நிழலுக்குரிய பறவை
சிறகுகளை நீவி
பறப்பதற்குத் தயாராகிறது
ஏவாள் சாப்பிட்ட கனி
தற்போது காயாக இருக்கிறது
இப்படி முடிவடைய இருக்கிற கதையை
அடுத்து வாசிக்கப் போகிறீர்கள்

மனதின் விளம்பிற்கு வந்து நின்று
எட்டிப்பார்த்தாள்
பெரும் பாதாளம்
சுதாரித்துக்கொண்டு
பயத்திலிருந்து மீண்டவள்
அங்கிருந்து மெல்ல குதித்தாள்
அடித்தளமற்ற அந்தப் பாதாளம்
அவளை விழுங்கிக் கொண்டிருந்தது
விழுந்து கொண்டிருக்கும் போது
இடைவழியில் என்னைச் சந்தித்தாள்
குதித்த கதைகளை பகிர்ந்துக் கொண்டோம்
அந்நேரம், பாடல்களைச் சுமந்துகொண்டு
சில பறவைகளின் நிழல்கள்
எம்மைக் குறுக்கறுத்து பறந்துகொண்டிருந்தன
பறவையின் நிழல்களின் இறக்கையிலிருந்து
ஒரு இறகு வேண்டுமென்றால்
உடனே உதிர்ந்தது
எம்மை நோக்கி மிதந்து வந்தது
உயிரைத் தழுவுகிற நேரமது
விரிவாகப் பேச நினைத்தபோது
இருவரும் அருகருகே
மனதின் விளிம்பில்
உட்கார்ந்திருந்தோம்
அதன் பிறகுதான் இதுவரை சொன்னவை
நிகழ்ந்திருந்தது
நான் முந்தியும்
என்னை பின்தொடர்ந்து அவளும்
குதிக்க வேண்டிவந்தது
காதலில் இறங்குவதாக நினைத்து
செய்த இந்த தற்கொலை முயற்சி
இரண்டு மழைக் குதிரைகளை
காற்றுவிரட்டிக் கொண்டிருந்தது
அங்குமிங்கும் பாய்ந்து திரிந்தன
ஓரிடத்தில் இரண்டும் சந்திக்கவில்லை
இது நடந்தது
தாமரை இலையில்.



ஸ்ரீநேசன்

ஐஸ்கிரீம்

நீங்கள் ஏதேனும் அபூர்வமாக உண்ண நேர்ந்தால்
உங்களுக்குக் குழந்தைகளின் ஞாபகம் வருகிறதா
தன் குழந்தையையேனும் நினைவில் கொள்வோர்
தந்தையின் தகுதியில் பூரணமடைவர்
மாநகரத்தின் புகழ்பெற்ற ஐஸ்கிரீம் கடையொன்றில்
நண்பர் வாங்கித் தந்ததை
குழந்தைகளை எண்ணமிட்டு
வாயருகில் கொண்டு செல்லும் நேரம்
எதிரில் வந்து நிற்கிறான் என்மகன்
உருவத்தில் ஒரு பிள்ளையாசகன்
எங்கேயும் சிறுவர்களுக்கு ஐஸ்கிரீம் என்றால் உயிர்ப்பித்து
வேண்டும் என அடம்பிடிக்கும் சூழலில்தான்
வேண்டாம் வேண்டாம் எனக் கூறித் தடுக்கிறது
வாழ்வின் கை
வாங்க வாய்ப்பளித்த இத்தருணம்
பெற்று கையேந்தியவனுக்குத் தருகிறது
முகத்தில் ததும்பும் ஐஸ்கிரீம் போல அத்தனை மகிழ்ச்சி
எனக்கும்
இதோ இங்கே இவன் உண்ண உண்ண
அங்கே ருசியின் திளைப்பில் அவன் ஆழ்ந்திருப்பானென.

(ராஜமாணிக்கத்துக்கு)



வாகாஹ்

எல்லைக்குப் போனபோதுதான்
எனக்கும் தெரிந்தது
நாமும்
முள்வேலி சந்திப்பில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்
உயரப் பறக்கும் கொடிகளுக்கிடையே அதுபாட்டுக்கு
பறந்து விளையாடிக் கொண்டிருந்தது ஒரு புறா
பொற்கோயில் புறா அல்லது பாட்ஷாஹி மசூதிப்புறா
அதன் சிறகுகளுக்குக் கீழான காற்று கூட
பதற்றம் கொண்டுதான் வீசுகிறது
கொடிக்கம்பங்களும் அருகில் கிடத்தி விடப்படும்
கோஷம் ரோஷம்
எறும்புகளுக்கும் எலிகளுக்கும் கூட
இங்கு எல்லை உண்டு
மீறினால்
மகரந்ததைக் கடத்துவதாக வண்ணத்துப்பூச்சியும்
வாசத்தைக் கடத்துவதாக மெல்லிய காற்றும்
பசுமையைக் கடத்துவதாக கிளிகளும்
வண்ணங்களைக் கடத்துவதாக வானவில்லும் கூட
இங்குச் சுட்டு வீழ்த்தப்படலாம்
அன்பைக் கடத்த முயலும் ஒரு சிறுவன் சிறைப்படுத்தப்படலாம்
குடிகாரனும் தன் அற்ப சாகசத்தால் தீவிரவாதியின் பிணமாகலாம்
இங்கு தேசப்பற்று உணர்ச்சி வேக உச்சம் பெறும்போது
அச்சமாக இருக்கிறது
வெளிச்சத்தைக் கடத்துவதாக சூரியனே சுடப்படலாம்
அப்புறம் நிலவு பிஞ்சாக இருந்தால் என்ன
பிறையாக இருந்தால்தான் என்ன.

லீனா மணிமேகலை

நனைந்திருந்த நாட்குறிப்பொன்று



13.03.2009

எல்லா நாட்களின் தாள்களையும் நிரப்ப முடிவதில்லை. பதிவு செய்து வைத்துக் கொள்ளும்படி எதுவும் நடந்தால் தானே? ஆனால் இன்று எழுதத் தான் வேண்டியிருக்கிறது. நள்ளிரவு தாண்டிவிட்டது. ஆனால் இந்த நாளை முடித்துக் கொள்ள முடியவில்லை.

தனிமை கிடைத்த அடுத்த நிமிடத்தில், அவன் கேட்ட முதல் கேள்வி உனக்கு ஒரு முத்தம் தரலாமா?

அவனை எனக்கு பிடித்தே இருந்தது. அசட்டையாக வளர்ந்திருந்த தாடியையும், கண்ணில் அவ்வப்போது பட்டு மறையும் மார்பு மயிரையும், பேசும்போது சுருங்கியபடி இருக்கும் புருவங்களையும் பக்கவாட்டில் பார்த்துவிட நேரும் போது கூட கவனத்தைக் கலைக்கவே செய்தது. "கழுத்தில் தந்தால் பிடிக்கும்" என மனம் சொல்லிமுடிக்கும் முன்னே, காதோரத்தில் குறுகுறுவென ஈரம் படர்ந்தது. புலன்கள் வழிவிடும் முன்னே வியர்வை கலந்த சிகரெட் நாற்றமும், சட்டையின் மொடமொடப்பும் ஒரு மெல்லிய தடையை ஏற்படுத்திய நினைவு. பிடிமானமில்லாமல் அலைந்துக் கொண்டிருந்த என் கைகளை எடுத்து தன்னை சுற்றிக்கொண்டான். சற்று

குறுகி வளைந்துக் கொண்டிருந்த உடல் அவன் கைகளுக்கு மெல்ல வசப்பட்டன. குத்திட்டு நின்ற உடலின் பூனை மயிரால் மூச்சுக்காற்று பட்ட இடமெல்லாம் சொரசொரத்தது. அவசர தீண்டல்களில் சிக்கல் விழுந்து தலைமுடி அங்குமிங்கும் மாட்டுப்பட்டு வலித்தது.

வாய்மூடி பற்கள் கிடுக்கிய முத்தத்தில் தான் உடல் ஒரு அந்நிய உடலை உள்வாங்கத் தொடங்கியது. எச்சிலில் தான் அறிதல் தொடங்குமா என்ன? நாக்குகளில் உயிர் உரசியது. வறண்டுபோன தொண்டை கழன்று விழுந்துவிடுமென தோன்றியது. தொடுதலில் காலமும் இடமும் ஏவலும் பொருளும் கரைந்துக் கொண்டிருந்தன. சற்று விழித்துப்பார்க்கையில், அவன் கண்களை மூடியபடியே முத்தமிட்டுக் கொண்டிருந்தது ஆறுதலாய் இருந்தது. மூர்க்கமான அவனின் மோகம் சிறிது அச்சமூட்ட மீண்டும் கண்களை மூடிக்கொண்டேன்.

உதட்டிலிருந்து பிரியாமலேயே, தன் சட்டையை கழற்றி எறிந்தான். சட்டென தாக்கிய அவனின் உடலின் வெப்பத்தில், தலையெல்லாம் வியர்த்துவிட்டது. என் ஒவ்வொரு அணுவையும் அலசிக் கொண்டிருந்தன அவன் விரல்கள். அவனின் கறுத்த உடலை ஆதுரமாய் தடவுவதும், பின் திகைப்பதுமாய் என் விரல்கள் தத்தளித்தபடியிருந்தன. மனம் பதைத்துக் கொண்டிருக்கும் போது உடல் மட்டும் அவனின் தொடுதலில் நிறைந்து ததும்பியதை என்னால் மொழிபெயர்க்கவே முடியவில்லை. எப்போதுமில்லாது கனத்து தளும்பின முலைகள். என் மேலாடையை கழற்ற அவன் திணறிக்கொண்டிருந்தது தெரிந்தும் உதவுவதில்லை என்பதில் பிடிவாதம் பிடித்தது உள்ளுணர்வு. ஆனால் உடல் கண்டுகொண்டுவிட்ட ஆசை நிர்வாணத்தையே விரும்பியது.

இப்போது இருவரிடமும் மேலாடை இல்லை. காற்றுக்குப் பயந்துக்கொண்டு என் மார்புகள் அவன் மார்போடு அட்டைப்போல ஒட்டிக் கொண்டே இருந்தன. அதற்குள் வயிறின் உப்புசமும், சிரைத்திடாத அக்குளின் வாசமும், தோலின் காய்ப்புகளும், வெட்டப்படாத நகங்களும், தழும்புகளும், இன்னும் அவனின் உடலின் புள்ளிவிவரங்களை என் தொடுதல்கள் குறிப்பெடுத்திருந்தன. அவன் மூளையில் எந்த நரம்பில் என் உடலின் விவரங்கள் பதியப்பட்டிருக்குமோ என்ற யோசனையும் கேள்வியும் வந்து போனது.

"புணரலாமா?" என்று அவன் கேட்ட அந்த நிமிடத்தில், எல்லாமும் திக்கித்தது. மேல் சட்டையைத் தேடத்தொடங்கியது என் கண்கள். திசைக்கொன்றாய் சுருட்டி வீசப்பட்ட உடைகள் கைகள் எட்டக்கூடிய இடத்தில் இல்லை. சுருங்கிப்போன உடலை அள்ளி எடுத்து தன்மேல் படரவிட்டுக் கொண்டு என் முகத்தை நிமிர்த்தினான். அவன் கண்களை சந்தத்தவுடன் நான் கேட்ட "முதல் கேள்வி.
என்னைக் காதலிக்கிறாயா?"

புருவத்தை, இமையை, இமை முடியை, கண்ணின் மணியை என தனித்தனியாக ஈரப்படுத்தி, பின் வலமிருந்து இடம் நகர்ந்து, பொறுப்பாக மீண்டும் அதையே செய்யத் தொடங்கிய அவனின் கன்னத்தை தட்டி மீண்டும் கேட்டேன்.

"என்னைக் காதலிக்கிறாயா"

முதுகெலும்பின் ஒவ்வொரு முடிச்சையும் நீவிக்கொண்டிருந்தன அவன் கைகள். தீண்டிய இடமெல்லாம் கன்றிப்போவதற்குள்

நானென்றால் அவனுக்கு உயிர் என சொல்லிவிட மாட்டானா என்று இறைஞ்சியது மனம். அழுதுவிடுவேன் போலிருக்கிறது.

"இதற்கு முன்னாடி காதலித்திருக்கிறாயா?"

என் குரல் எனக்கு அணுக்கமற்று இருந்தது.

"முதலில் காதலிச்ச பொண்ணு ஏற்கனவே கல்யாணமானவ."

என்னை சற்றும் அகலாது, என் கைகளை எடுத்து தன் தலையைக் கோதவிட்டான்.

"இரண்டாவது காதலிச்ச பொண்ணுக்கு ஏற்கனவே காதலன் இருந்தான்."

என் காதுகளை மெல்லக் கடித்த அவனை என்னால் விலக்கவே முடியவில்லை.

"அப்புறம் காதலிச்ச பொண்ணு வேற பையனைக் கல்யாணம் பண்ண உடனே என்னைப் பார்க்கிறத தவிர்த்துட்டா."

இந்த தடவை, அவன் கவ்வியது தொண்டை வரை நனைத்தது. உடலுக்குள் எப்போதும் ஒரு பசித்த மிருகம் உறங்கிக் கொண்டிருக்கும் போலும். அதிர அதிர திளைத்தன அங்கங்கள்.

இடுப்புக்கு கீழே களையத் தொடங்கிய போது தடுத்து எனக்கு மாதவிடாய் என்றேன்.

"ஒன்பது மாசம் அம்மாவின் தூமையைக் குடிச்சுதானே வளர்ந்தோம்." என்ற இறங்கிய அவன் முத்தத்தில் சிதறியது என் உடல். ஒவ்வொரு துண்டாய் பொறுக்கி மீண்டும் தன் முத்தத்தாலே ஒன்று சேர்த்தான். தலையெது, காலெது, என்ற நினைவை இழந்து, பறக்க முடியாமல், தரையை ஓங்கி ஓங்கி அடித்துக் கொண்டிருந்தது உடல். நான் பிரசவித்த குழந்தை அழுவதையெல்லாம் நிறுத்திவிட்டு ஆவேசமாய் என்னை முயங்கத் தொடங்கியது போலிருந்தது அவன் முகம். மரத்துப்போய்க் கொண்டிருந்த கால்களை தன் தோள்களில் சாத்திக்கொண்டு சொடக்கெடுத்தபடி இருந்தான். முனகல்களில் ஒருவருக்கொருவர் தீர்க்கமாய் பெயர்களை அழைத்துக் கொண்டோம். இதயம் வரைத் துளைத்த அவனின் சிறு உடல் நிமிடங்களில் நழுவியதை நான் சற்றும் விரும்பவில்லை என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அகன்றும் அகலாமல் இருந்த அவன் தற்போது கனத்து தெரிந்தான்.

உடலின் நீரெல்லாம் ஆறாய் ஓட, தவித்துப்போனது வாய். தோள்கள் கழன்று தொங்கின. முதன் முதலாய் நான் அவனை முத்தமிட்டேன். சாரைகளாய் நாக்குகள் மீண்டும் பின்னிக்கொண்டன. அவன் அணைப்பின் பிடிமானத்தில், பாதங்கள் தரையிலிருந்து ஒருபடி மேலெழும்பியிருந்தது. முடிந்ததும் கேட்டான்.

"நீ என்னை காதலிக்கிறாயா?"

"முதலில் காதலித்தவன் என் பெரியப்பா பையன். எனக்கு அண்ணன் முறை"

எங்களின் விரல்கள் இன்னும் தொட்டுவிடாத உடலின் மூலை முடுக்குகளைத் தேடிக் கொண்டிருந்தன.

"இரண்டாவதாய் காதலித்தவன் ஒரு பார்ப்பன வீட்டுப் பையன். என்னை மட்டமாக நடத்திவிடுவானோ என்ற பயத்தில் அவனை விட்டு விலகிவிட்டேன்."

என்னைப் பின் பக்கமாய் சாய்த்து, என்னைத் தாங்கிக் கொண்டு தலைமுடிக்கு கீழே முத்தமிட்டான்.

"மூன்றாவதாய் காதலித்தவன் கேட்டதெல்லாம் வாங்கித் தந்தான். ஆனால் என்னை மகள் மாதிரியே நடத்தினான். சாய்ந்திருந்தான். சரிவரவில்லை." என் நெஞ்சோடு இப்போது.

"இப்போது என் கணவனை காதலிக்கிறேன்"

அறையின் ஒளி இப்போது தான் உறைத்து கண்கள் கூசியது.

மீண்டும் உடல் நொறுங்க அணைத்துக் கொண்டோம். கூடு திரும்பியது போல மனம் அடங்கியது.

பிடிச்சிருக்கா? என்றான்

பிடிச்சிருக்கு! என்றேன்.

இதுக்கு நாம் காதலிக்கவோ, உன் கணவனாக இருக்கவோ, உன் குழந்தைக்கு அப்பாவாகவோ வேணுமா என்ன? அவன் கேள்விக்குப் புன்னகைத்தேன்.

மீண்டும் தொடங்கியிருந்தது முத்தம். அந்த முத்தம் வேறு கேள்விகளுக்குத் தாவியிருந்தது.

சரி உனக்கு என்னை எவ்வளவு பிடிக்கும்


"இவ்வளவா? அவ்வளவா!!...

06.05.2013

அன்றைய இரவுக்குப்பிறகு இன்று மீண்டும் அவனை சந்திக்க நேர்ந்தது. ஆனால் நாட்குறிப்பில் எழுதுமளவுக்கு எதுவும் நடக்கவில்லை.

ஆனால் 13.03.2009 என்ற தலைப்பில் ஒரு கவிதை எழுதினேன்.

இரண்டு உதடுகள் சந்தித்துக் கொள்கின்றன
ஒன்றுக்கொன்று உராய்ந்துவிடாமல்
மெதுவாக
மென்மையாக
கதியற்று
அருந்த அருந்த ஊற்றெடுக்கின்றன சுரப்பிகள்
மேலண்ணங்களும் கீழண்ணங்களும்
தாகம் பெருக்குகின்றன
ஈறுகளின் சிவப்பில் பற்கள் வெளிறி மின்னுகின்றன
பேசப்படாத வார்த்தைகளின் வடிவங்களில் வாய்கள்
குவிந்து விரிகின்றன
உப்பு கூடிய நாக்குகள் தொண்டைக் குழியை
எட்டித் துழாவுகின்றன
விரையும் மூச்சுகளில் இசை கூடுகின்றது
நீளும் காலங்களில் வெளி சுருங்குகிறது
ஒரு கோடாகின்றது உடல்கள்
முன்னுக்கும் பின்னுக்கும் நடுவில் நடக்கின்றது
மீண்டும் நடக்கின்றது
இன்னும் மெதுவாக
மேலும் மென்மையாக





தனிச்சுற்றுக்கு மட்டும்